SERIES 2.

SARASANATRI

An Interesting Tamil Novel

BY

C. R. Govindaraja Mudaliar,

TAMIL PANDIT,

PACHAPPA'S COLLEGE.

PUBLISHED BY

Mendu, Padmanaba Naidu,

23, General Muthaya Mudaly Street,

Sowcarpet, Madras.

(SECOND EDITION)

1915.

[Price Annas 12.

Title-page Printed at the Sivarahasyam Press, Madras.

நித்யகல்யாணி சீரியஸ்—2.

ஸ்ரீராமஜெயம்

சாரசநேத்ரி.

இது

பச்சையப்ப முதலியார் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்,

கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

மெண்டு. பத்மநாப நாயுடு அவர்களாற்

பிரசுரிக்கப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு.)

சென்னை,

தனியாம்பாள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915

price As. 12. விலை அணா. 12.


T. S. R&Co EGMORE. MADRA

ஸ்ரீ

முகவுரை.

தமிழில் எழுதப்பட்டுள்ள முற்காலக் கதைகளிற் சிலகதைகள் நீதிகளைப் போதிப்பனவாகியும், சில கதைகள் யுக்தியையும் வியப்பையுந் தோற்றுவிப்பன வாகியும், சில கதைகள் இயற்கைக்கு மாறாய்க் கல்வியில்லாதார் மாத்திரம் படித்து வியந்து களித்தற்குரியன வாகியும் இருக்கின்றன.

இப்பொழுது எழுதப்படுங் கதைகளோ இயற்கைக்கு மாறுகொள்ளாமல் உலக இயல்களைத் தமக்குள் அமைத்துக்கொண்டு கற்றோரும், மற்றோரும் சந்தோஷிக்கும் வகையின் அமைகின்றன.

எங்ஙனமாயினும் எல்லாக் கதைகளிலுங் காணப்படுங் கதைத் தலைவர்களும் மற்றோரும் இல்லதும், இனியதும் நல்லதும் எனப் புலவரால் காட்டப்பட்ட மூன்றனுள் இல்லதாகிய புனைந்துரை வகையாற் றோன்றினோரே.

உலக இயல்களை ஆய்ந்துணர்வான் ஒருவன் தான் உணர்ந்த உலக வியல்களை முறைப்படுத்தி அவற்றை ஒரு கதையினிடமாக அமைத்து, அக்கதையினை முற்சொன்ன புனைந்துரை வகையாற் றோன்றிய அவர்தஞ் சரித்திரம்போல எழுதுதலே இக்காலத்து எழுதப்படும் கதைகளின் இலக்கணமாகும்.

இங்ஙனங் கதை எழுதுமுறை "புதியன புகுதல்" ஆகத்தோன்றியதேயாம்.

இம்முறை தமிழர்களே கண்டதோ? வேறு மொழியிலிருக்கக் கண்டு தமிழர் தம்மொழியில் அமைத்துக்கொண்டதோ? எனின் வேறுமொழியிலிருக்கக்கண்டு தம்மொழியில் அமைத்துக்கொண்டதேயாம். எம்மொழியில் கண்டமைத்தனரெனின் ஆங்கில மொழியிற் கண்டமைத்தன ரென்பது. தமிழர்களேயல்லாமல் தெலுங்கர் முதலியோரும் இம்முறையை அநுசரித்து எழுதுவராயினர்.

இங்ஙனம் எழுதப்படும் இக்கதைகளுக்குப் பெரும்பாலாராலும் இடப்பட்ட பெயர் 'நவீனம்' என்பது; இஃது ஆங்கிலத்திலுள்ள 'நாவல்' என்பதன் மொழி பெயர்ப்பாகும்.

நவீனம்—புதுமை; அது பண்பாகு பெயராய்ப் புதுவதாகத் தோன்றுங் கதை மேனின்றது.

இங்ஙனமாயினும் அவ்விதக் கதைகளை ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்ப்பார் பலரும், அவ்வித இலக்கணங்களமைத்துநம்முடைய நாட்டியல்கள் தோன்றும்படி தாமே கதையினைக் கற்பித்தெழுதுவார் சிலருமாகவே இருக்கின்றனர்.

அவ்விரு வகையினருள் பிற்பகுதியினர் வழியையே பின்பற்றி யான் இந்தச்சாரசநேத்ரி என்னுங்கதையினை எழுதினேன்.

இக்கதை கருணை நகை,உருத்திரம், சாந்தமுதலிய சுவைகளையும், உவமை உருவக முதலிய அணிகளையும், சில அகப்பொருட்டுறைகளின் கருத்துகளையும், செய்யுளிற்போல மோனை எதுகை முதலிய தொடைகளையும், அமைத்துச் சந்தர்ப்பத்துக்கேற்றசில மேற்கோள் செய்யுள்களைச்சேர்த்து அங்ஙனமே பதுமபந்தமுதலியசித்திரகவிகளையும் வேறு செய்யுள்களையும் புதியனவாகப் பாடிக் கூட்டி எழுதப்பட்டிருக்கின்றது.

இதில் அன்பின் தன்மையும், நடப்பின் தன்மையும், கற்புடைய மங்கையரியல்பும் தீச்செயலால் வருங்கேடும், கல்வியினால் உண்டாகு மேன்மையும், பெரியோரைச் சேர்ந்திருத்தலால் வரும் பயனும், சிறந்த கல்வியுடைய பெண்களின் நல்லொழுக்கமும், அவர்களுக்குள்ள சமயத்துக்கேற்ற சாதுரிய புத்தியும் ஆகிய இவை முதலிய அரிய விஷயங்கள் கதையின் போக்கில் வெளிப்படையாகவும், குறிப்பாகவுங் கூறப்பட்டிருக்கின்றன. இக்கதையின் முக்கிய நோக்கமாவது பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் அவரவர்கள் விரும்பிய நாயகரையும் நாயகியரையும் மணஞ்செய்விக்க வேண்டுமேயன்றிப் பெற்றோரும் பிறரும் தம்மிஷ்டம்போல் அவர்களுக்கு நாயகரையும் நாயகியரையும் பார்த்து மணந்து கொள்ளும்படி அவர்களை வற்புறுத்துதலாகாதென்பதாம்.

இக்கதை என்னால் மூன்றாவதாக எழுதப்பட்டதாகும். இதற்குமுன் என்னால் எழுதப்பட்ட கதைகள் "மதன மனோகர்" என்னுஞ் சிறு கதையின் முதல் பாகமும், மீனாம்பாள் என்னுஞ் சிறுகதையுமாகும்.

இளைஞர் முதல் எல்லோரும் படித்தின்புற வேண்டுமென்னும் நன்னோக்கங்கொண்டு இந்நூலை வெளியிட்ட தமிழ் பாஷாபிமான சீலர் ம-ா-ா-ஸ்ரீ, மெண்டு பத்மநாபநாயுடு அவர்களுக்கு மிக்கவந்தனங் கூறுகின்றேன்.

இதில் என் சிற்றறிவினால் உண்டாய்க் காணப்படுங்குறைகளை நல்வகையினால் தெரிவிக்கும் அறிஞரிடத்து யான் மிக்க நன்றியுடையேன். இக்கதையின் முதற்பதிப்புக் காப்பிகள் செலவாய் விட்டமையின் இவ்விரண்டாம் பதிப்புக் காப்பிகள் பதிப்பிக்கப் பட்டன.

இங்ஙனம்,

கா. ர. கோ.



ஸ்ரீ

சாரசநேத்ரி.

முதல் அத்தியாயம்

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு."

யார் யார்க்கும் அன்புற்றமர்ந்த இடமே நன்புற்றிருப்பதற் குரியதாகின்றது. 'காக்கையும் தன் குஞ்சைப் பொன் குஞ்சாகக்' கருதுகின்றது. தமது அன்புக்குரியராகாதார் இடத்தில் எவ்வளவு சிறந்த குணங்களிருப்பினும் அவற்றால் ஒருவர்க்குமின்பமுண்டாவதில்லை. தமது அன்புக்குரியாரிடத்திலுள்ள குற்றங்களைக் காணுதற்குரிய கண் பெற்றவர் கிடைப்பது அருமையினும் அருமையே. கடவுளுந்தன் அன்புக்குரியரானாரிடத்திலுள்ள குற்றங்களைக் கருதாதவராகின்றார். "தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்குமேல்; என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்றுசெய்தா ரென்பர்" என்றருளிய பெரியார் வாக்கே அதற்குச் சான்றுபகரும். அன்பின் வழியது உயிர்நிலை. அத்தகைய அன்பிற்குரியார் துன்புற்றிருக்கக் கண்டால் யார்மனந்தான் சகிக்கும்? மணிகண்டனுக்குக் கஜகர்ணனைக் கண்டமாத்திரத்தில் மனங்கரைந்துபோயிற்று. ஏன்? கஜகர்ணனுடைய முகம் மிகவும் வாடியிருந்தது. ஒருநாளும் அவன் முகம் அவ்வளவு வாடியிருந்ததில்லை. அவன் எப்பொழுதும் உல்லாசமாய்த் திரிபவன். சிறுவயது முதற்கொண்டு விளையாட்டிலேயே காலங்கழித்தவன். அத்தகைய அவன் முகம் அங்ஙனம் வாடியிருத்தலைக் கண்டால் யார் மனந்தான் சகிக்கும்.

மணிகண்டன் கஜகர்ணனை நோக்கி "நண்ப! நீ இவ்வளவு வாட்டமுற்றிருப்பதற்குக் காரணமென்ன? என்றும் சந்தோஷத்திற்கே இருப்பிடமாயிருந்த நீ இன்று துயரத்துக்கு இடமான விதம் யாது? கரையிலெடுத் தெறியப்பட்ட தாமரைப் பூவைப் போல உன் முகம் பொலிவுகுன்றி இருக்கும்படி உனக்கு யாது துன்பம் நேர்ந்தது"? என்றான்.

கஜகர்ணன் :—"நண்ப! என்னைப்போன்றவர் இவ்வுலகில் இருப்பதனாற் பயனென்ன?

மணிகண்டன் :—உன்னைப்போன்றவர்கள் இவ்வுலகில் இருப்பதனாற் பயனில்லையா?

கஜகர்ணன் :—ஆம் இல்லை.

மணிகண்டன் :—என் அப்படிச் சொல்லுகின்றாய்?

கஜகர்ணன் :—'வாழ்விலாச்சங்கடத்திற் சாவதே நன்று' என்பதை நீ கேட்டதில்லையா?

மணிகண்டன் :—அப்படி உனக்கொரு கஷ்ட மிருப்பதாக எனக்குத் தோற்றவில்லையே. நீ பிறந்தது முதல் இதுவரையிலும் சோற்றுக்குங் கூரைக்குஞ் சோர்ந்து நின்றவனல்லை. அது மாத்திரமா? கை நிறையப் பணங்களை வாரிக்கொண்டு வந்து உன் இஷ்டம்போலச் செலவிட்டுத் திரிந்தவனல்லையோ?

கஜகர்ணன் :—ஆம் அதிலொரு குறைவுமில்லை."

மணிகண்டன் :—அதிகமாக நாம் படிக்கவில்லையே என்னும் ஏக்கமா?

கஜகர்ணன் :—நீ மிகவும் பைத்தியக்காரன்! அதிகம் படித்தவனிடத்தில்தான் அவ்வளவுக் கேடு இருக்கும். அதிகம் படித்தவனுக்குத்தான் புத்தியு மட்டாயிருக்கும். பி. ஏ. பாஸ் செய்தவர்க

னெல்லாம் பதினைந்துரூபாய் உத்தியோகத்திற்குத் திண்டாடுவதை நாம் பார்த்துக்கொண்டுதானே இருக்கின்றோம். நான் நான்காம் பாரம் வரையிலுமே படித்திருந்தாலும் அதைக்கொண்டே யெல்லாம் வென்றுவிடுவேன். என் புத்தியும், என் யோசனையும் ஒருவருக்கும் இரா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

மணிகண்டன்:—மற்றென்ன உத்தியோக மில்லை என்னும் வருத்தமோ?

கஜகர்ணன்:—உத்தியோகமா? “தொழுதூண் சுவையின் உழுதுண்ணினிது” என்பதை நீ கேட்டதுமில்லையா?

மணிகண்டன்:—மற்றெந்தக் குறையினால் இப்படி வாடி இருக்கின்றாய்?

கஜகர்ணன்:—நீ ஒன்றுமில்லாதவன். உனக்கு உண்பதும் உடுப்பதுந் தவிர வேறொன்றுந் தெரியாது.

மணிகண்டன்:—மற்றென்ன தெரியவேண்டும்?

கஜகர்ணன்:—ஆம்; சாப்பிடத்தான் தெரியவேண்டும். வேறென்ன தெரியவேண்டும்.

மணிகண்டன்:—நீ சொல்வது இன்னதென விளங்கவில்லையே!

கஜகர்ணன்:—ஆம்; நீ ஐந்துவயது பாலகன். உனக்கு ஒன்றும் விளங்காதுதான்.

மணிகண்டன்:—(‘சிந்தித்து’) தெரிந்துகொண்டேன்; தெரிந்துகொண்டேன். இதோ உங்கள் தந்தையாரிடஞ்சொல்லி உன் மனவருத்தந் தீரும்படி ஏற்பாடு செய்துவிடுகின்றேன்.

கஜகர்ணன்:—ஆம், நீ தெரிந்துகொண்டது போலவே இருக்கும் நீ யேற்பாடு செய்துவிடுவதும்.

மணிகண்டன் :- அது வென்ன அப்படிச் சொல்லுகின்றாய்?

கஜகர்ணன் :—நான் சொல்வதும் அப்படித்தான். நீ சொல்வதும் அப்படித்தான். உன் சொல்லுக்கும் என் சொல்லுக்கும் சம்பந்தமே கிடையாது.

மணிகண்டன் :—நீ சொல்வதொன்றும் விளங்கவில்லையே.

கஜகர்ணன் :—ஆம், நான் சொல்வதொன்றும் உனக்குவிளங்காது; நீ சொன்னது இன்னதென முன்னமே எனக்கு நன்றாய் விளங்கிவிட்டது.

மணிகண்டன் :—உனக்கு விளங்கியதை எனக்குத் தெரியச் சொல் பார்ப்போம்.

கஜகர்ணன் :—உனக்கு முன்னாகவே எங்கள் தகப்பனார் எங்கள் தாயாரைப்பார்த்து, "பையனுக்கு வயது வந்துவிட்டது; இனி சும்மா இருப்பது கூடாது" என்றார். அதைக்கேட்ட எங்கள் தாயார் "அவன் நமது ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளமாட்டான். அவன் கருத்து வேறு. இக்காலத்துப் பிள்ளைகளோ பெரியவர்களாகப்பார்த்து, வார்த்த கூழைக் குடித்துவிட்டுப் பேசாமலிருப்பவர்கள்? அதுவெல்லாம் உங்கள் காலம். மிஞ்சி நாமே ஏதேனும் ஏற்பாடு செய்வோமானால் அது விபரீதமாகமுடியும்" என்றார்.

மணிகண்டன் :—அதற்கு உங்கள் தகப்பனார் என்ன சொன்னார்?

கஜகர்ணன் :—"அவன் எட்டாததையெல்லாம் எட்டப்பார்ப்பான். அது ஒருகாலுமாகாது. அவன் சங்கதி தெரிந்ததுதானே பிறகு அவனிஷ்டப், உன்னிஷ்டம்" என்று சும்மா இருந்துவிட்டார்.

மணிகண்டன் :—அப்படியா? ஆனால் உன் கருத்துதானென்ன?

கஜகர்ணன் :—உலகத்தில் எவன் மனமொத்த நண்பர்களைப் பெற்றிருக்கின்றனோ அவனே சுகமுடையவனாகின்றான். அவ்வித நண்பர்களைப் பெறாதவன் வாழ்க்கையாற் பயனில்லை.

மணிகண்டன் :—ஆனால் நானுனக்கு மனமொத்த நண்பனல்லேனோ? ஆ! ஆ!! நீ யென்விஷயத்தில் இப்படி யெண்ணிக்கொண்டிருக்கின்றாயென்று நான் இதுவரையினும் அறியாமற்போனேனே. நான் உன் விஷயத்தில் எண்ணிக்கொண்டிருப்ப தொன்று. நீ யென் விஷயத்தில் எண்ணிக்கொண்டிருப்ப தொன்று. ஆகா! என்ன எனது அறியாமை" என்று சொல்லி எழுந்துவிட்டான்.

கஜகர்ணன் :—(உடனே அவனது கையைப் பற்றிக்கொண்டு) ஒருவர் சொல்வதை முற்றுங்கேட்டுப் பிறகு அதிற் குற்றமிருந்தால் கோபிப்பது நியாயமாகும். நீ யதை முற்றுங் கேளாதமுன் கோபித்துக்கொள்வது தகுதியாமா?

மணிகண்டன் :—நீ இப்பொழுது சொன்னது குற்றமல்லவோ?

கஜகர்ணன் :—நான் பின் சொல்லவிருப்பதைச் சொல்லாவிடின் இப்பொழுது சொன்னது குற்றமாகத்தான் முடியும்.

மணிகண்டன் :—அப்படியா? ஆ! நான் என்ன இப்படி அவசரப்பட்டேன். நண்ப! நான் அவசரப்பட்டதைப் பற்றி என்னை மன்னிக்கவேண்டுகின்றேன்.

கஜகர்ணன் :—உன்னைச்சொல்லவேண்டியதில்லை. என்னுருயிர் நண்பனாகிய உன்னையும் இப்படி அவசரப்படும்படி செய்த என் விதிவலியையே நோகவேண்டும்.

மணிகண்டன் :—(கண்ணில் நீர் ததும்ப) நண்ப! அப்படிச் சொல்லாதே. நீ வருந்துவதைக்கண்டால் என் மனஞ் சகிக்காது.

கஜகர்ணன்—(அவனைக்கட்டிக்கொண்டு) நண்ப! ஆண்பாலரில் உன்னையன்றி மற்றொருவரை என் நண்பராக்கிக்கொள்ள விரும்பு

வேனோ? விரும்பினும் உன்னைப்போல எனக்கிஷ்டமானவர்கள் கிடைப்பதும் அருமையே.

மணிகண்டன்:—ஆனால், பெண்பாலரில் ஒருவர் அவ்விதநண்புடையார் வேண்டுமென்கின்றாயோ.

கஜகர்ணன்:—அப்படி வேண்டுவது நியாயந்தானே?

மணிகண்டன்:—அதைச் சொல்லவா இவ்வளவு கஷ்டம். ஏன், நீ அப்படி ஒரு துணைவியைத் தேடிக்கொள்வது தானே. அதற்கு நீ இப்படி முகம்வாடி இருப்பானேன். உன் மனத்திற்கிசைந்த பெண் புலப்படவில்லையோ?

கஜகர்ணன்:—முன்னமே புலப்பட்டிருக்கின்றாள். புலப்பட்டென்ன பயன்?

மணிகண்டன்:—அஃதென்ன அப்படிச் சொல்லுகின்றாய்?

கஜகர்ணன்:—“காதலிருவர் கருத்தொக்க வாதரவுபட்டதே யின்பம்” என்பதுபோல 'நானெப்படி என்மனத்திற்கிசைந்தவளாக எண்ணி விரும்பினேனோ அப்படியே என்னால் விரும்பப்பட்ட அவளும் என்னை எண்ணி விரும்பினாலன்றோ நலம் உண்டாகும்?

மணிகண்டன்:—பெண்களெல்லாம் புது மனிதர்களைக் கண்டால் நாணத்தினால் விலகியே இருப்பார்கள். யார் அடுத்தடுத்து நெருங்கிப் பழகுகின்றார்களோ அவர்களிடத்துத் தான் தங்கள் அன்பைக் காட்டுவார்கள். நாம் எட்ட எட்ட இருந்தால் அவர்களும் எட்ட எட்டவே இருப்பார்கள். நாம் மனங்கலந்துறவாடினால் அவர்களும் மனங்கலந் துறவாடுவார்கள். இது தெரியாதா உனக்கு?

கஜகர்ணன்:—நன்றா சொன்னாய்! என்னால் விரும்பப்பட்ட பெண் சிறுவயதிலிருந்து என்னோடு பழகி இருப்பவளே. ஆனால் அவள்யாது பாவமோ என்னை வெறுத்திருந்தாள். அப்படி அவள்

என்னை வெறுத்துவந்தாள் என்பது, இப்பொழுதுதான் நிச்சயமாகவும் நன்றாகவும் விளங்கியது ?

மணிகண்டன் :—சாரச நேத்ரியாரோ ?

கஜகர்ணன் :—ஆம்.

மணிகண்டன் :—அப்பெண்மணி உன்னை வெறுத்து வருகின்றார் என்பது உனக்கு இதுகாறும் விளங்காமல் இப்பொழுதே விளங்கியதற்குக் காரணமென்ன ?

கஜகர்ணன் :—அவள் என்னைப் பல்காலும் வெறுத்துவந்தாளாயினும் சில சமயங்களில் நான் நல்ல உடைகளை உடுத்துக்கொண்டு, உயர்ந்த மூக்குக்கண்ணாடியைப்போட்டுகொண்டு, வெள்ளிப் பூண்போட்ட பெரம்புத்தடியைக் கையிற் பிடித்துக்கொண்டு அன்னநடந்து நிமிர்ந்து பார்த்துக்கொண்டு கம்பீரமாகப் போவதை கண்டால் மெதுவாகச் சிரிப்பாள். நான் திரும்பிப்பார்த்தால்மாத்திரம் பாராதவள்போல் போய்விடுவாள். அதனால் அவள் நம்மிடத்துள்ள விருப்பினாலேயே அப்படியெல்லாஞ் செய்கின்றாளென எண்ணிக்கொண்டிருந்தேன். அதனால் எனக்கு விருப்பம் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. அவள் பரிமளாச்ரயத்தில் வநசாக்ஷியுடன் நேற்றுக்காலையில் உலவிக்கொண்டிருந்தாள். அவளை அச்சோலையிற் கண்டவுடன் அவளிடத்தில் எனக்கு அதிக காதல் பெருகியது. அதனால் அவளிடம் ஒரு பேச்சாகிலும் பேசுவோம் என்று அருகிற் சென்றேன். அவள் என்னைக் கண்டது மிக்க கோபத்துடன் வீட்டுக்குப் போய் விட்டாள்.

இன்று எங்கள் தகப்பனார் என்னை அழைத்து "நீ எனக்குத் தாழ்வை யுண்டாக்கப் பிறந்த பிள்ளையேயன்றி மேன்மையை யுண்டாக்கப்பிறந்த பிள்ளையல்லை, எவ்வளவு சொந்தமானாலும் புத்தியறிந்த பெண்கள் தனித்திருக்கையில் அவர்களிடத்திற்குப் புருஷர்கள் போவது தகுதியாமா ? அடே பாவி ! நீ யேன் எனக்குப் பிள்ளையாகப் பிறந்தாய் ? உன்னைப்பிள்ளையாகப்பெற்ற எனக்குத் துக்கமே யன்றிச் சுகஞ் சிறிதுங் கிடையாது. இனி நீ இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வாயானால் உன் முகத்தையே பார்க்க மாட்டேன்" என்று இப்படியெல்லாம் என்னைத் திட்டினார்.

மணிகண்டன்:—நண்ப! "கிட்டாதாயின் வெட்டென மற" என்ற பெரியோர் வாக்கியத்தை மனத்தில் வைத்து இனி நீ அந்நங்கையின் ஆசையை விட்டுவிடவேண்டும். இனிக் கனவிலும் அம்மாதை நினையாதே. தன்னை விரும்பாத ஒரு மாதை விரும்பி ஏங்கி நிற்கும் புருடன் அறிவில்லாதவனேயாவன். "காதலிருவர் கருத்தொக்க ஆதரவுபட்டதே யின்பம்" என நீயே கூறினையே அதையறிந்திருந்தும் உன்னை விரும்பாத அந்நங்கையை நீவிரும்பி வருந்துவது தகுதியாமோ? நீயே யோசித்துப் பார்.

கஜகர்ணன்:—நண்ப! அவள் என்னை விரும்பாமற்போனதற்குக்காரணம் எனது தந்தையாரே.

மணிகண்டன்:—அஃதென்ன?

கஜகர்ணன்:—நாம் பள்ளிக்கூடத்திற் படிக்கும்போது விடுமுறைக்காலங்களில் வீட்டுக்குவருவது வழக்கமல்லவா? நான் வீட்டுக்கு வந்தபோது எனது தந்தையார் கண்டால் என்னை விரும்பி உபசரிக்கமாட்டார். எனது தாயார் சென்று 'குழந்தை வந்திருக்கின்றான் அழையுங்கள்' என்றால், "நீ அவன் பேச்சைக்கொண்டு வந்து என் காதிற் போடவேண்டாம்; அவன் பரமதடியன். ஏதேனும் ஒரு வகுப்பில் ஒரு வருஷம் தப்பி நின்றுவிடுவது சில பிள்ளைகளுக்குச் சகஜந்தான். அவன் ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருஷங்களுக்குக்குறையாமல் தங்கியிருக்கின்றானே. சச்சரித்ரனைப் பெற்றவர்களுடைய வயிறும், கண்களும் மிகவும் பூாக்கியஞ் செய்தவைகள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்"

என்றபடி தன் மகனை யாவரும் புத்திசாலி என்று சொல்லுதலைக் கேட்டுச் சந்தோஷிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றவர் அவனைப்பெற்ற வேதவல்லியாரே. அவன் ஒரு வகுப்பிலேனும் ஒரு வருஷமேனுந்தங்கி இருந்ததுண்டா? அவனைப்பெற்றோர் அவனுக்குத்தக்க வயது வரும்வரையினும் இருந்து அவனுடைய மேன்மைகளையெல்லாம் கண்டு களித்தற்குரிய பாக்கியஞ்செய்யாமற்போய்

விட்டனர். "தகப்பனில்லாதபிள்ளை தறிதலை" என்பார்களே, அப்படி ஏதேனும் அவன் ஆடுகின்றானு? அப்படி யாடினால் அவனைத் தடுப்பார் யார்? நீ யவ்வித பாக்கியத்தைப் பெற்றவளல்லை. நீ யெல்லா நற்குணங்களுமமைந்தவளா யிருந்தும் உனக்கு இப்படிப் பட்ட பிள்ளை பிறந்ததற்குக் காரணம் ஏதோ நீ முற்பிறப்பிற் செய்த பாவமா யிருக்குமேயன்றி வேறன்று. அந்தோ ஒரு விஷயத்திலும் உன்னை வெறுக்காத நான் இப்பொழும் பிள்ளையின் விஷயத்தால் வெறுக்கும்படி நேர்ந்ததே! என்ன செய்வேன்; என் தலைவிதி!" என்பார்.

சாரசநேத்ரி இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பாள். சில சமயங்களில் எனது தந்தையார் சச்சரித்ரனைக் குறித்துப் பேசும்போது "அந்தோ! இவ்வளவு அருமையானபிள்ளை இச்சிறு வயதிலேயே தாய்தந்தையர்கள் இருவரையும் இழக்கும்படி நேர்ந்ததே பாவம்!" என்பார். அப்பொழுது சாரசநேத்ரிக்கு முக முற்றும் வாடிப்போகும். அப்பொழுதே எனக்குச் சந்தேகந் தான். ஆயினும் எனது மூடப்புத்தியால் அவள் என்னை விரும்பி யிருக்கின்றாள் என்று எண்ணி இருந்தேன்.

மணிகண்டன்:—இனி அப்பெண்மணியாரைப்பற்றிப் பேசுவதனுற் பயனில்லை.

கஜகர்ணன்:—அவளைப்பற்றிப் பேசுவதிற் பயனில்லையானுல் நானுயிரோடிருப்பதினும் பயனில்லை.

மணிகண்டன்:—நண்ப! இப்பயனற்ற விஷயத்தில் ஏன் இப்படி மனதை வீணே செலுத்துகின்றாய்?

கஜகர்ணன்:—நான் செலுத்தவில்லை! அதுதானே சென்று என்னையும் இழுக்கின்றதே! நான் என் செய்வேன்!

மணிகண்டன்:—மனத்தை அது செல்லும் வழியில் விடாமல் அடக்குவதன்றோ அறிவுடைமை?

கஜகர்ணன் :—அருந்ததிமுதலி புத்தலாகளும் அவளைக்கண்ட மாத்திரத்தில் அவளுக்குத் தங்கள் மனத்தைப் பறிகொடுத்துத் திகைப்பார்கள் என்றால் அஃது என்னுடைய முடிவு வந்ததில்லையம்?

மணிகண்டன் :—ஆனால் என்னதான் செய்ய இருக்கின்றாய்?

கஜகர்ணன் :—நண்ப! "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு"

என்றபடி எனக்கு இடுக்கணுற்றபொழுதெல்லாம் உடனுற் றுதவிபுரியும் என்னருப்பெறல் நண்பனாகிய உன்னைவிட்டு நான் செய்யுங் காரியமென் உளது?

மணிகண்டன் :—நண்ப! உன் மனம் அதிலே உறுதியாக நிலை கொண்டுவிட்டபின் அதற்கேற்ற முயற்சிகளை யன்றி வேறாக நான் செய்தற்குரியது என்னுளது? சரிவருக, நாழிகை ஏழரையாய்விட்டது, குளிக்கப்போவோம்.

என்று இவ்வனம் மணிகண்டன் சொன்னதைக்கேட்டவுடன் கஜகர்ணன து முகம்அன்று மலர்ந்த தாமரை எனப்பொலிவுற்றது. உடனே அவன் மணிகண்டனோடு ஒரு தோட்டத்திற் குளிக்கப் போய்விட்டான்.

உ-ம் அத்தியாயம்.

"வாருங்கள், வாருங்கள். இந்த நாற்காலியில்உட்காருங்கள். நேற்றுக்காலைப் பத்துமணியி லிருந்து உங்களை யெதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். நேற்று உங்களைப்பார்த்து வரும்படி நாலைந் துமுறை ஆட்களையனுப்பினேன். வீட்டி லெல்லையோ இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டுப்போனீர்களாம். மாலைநாலுமணிக்குமேல் யாரோ ஒரு ஆள்வந்து அவர் நாளைய திங்காலையில் வருவார் என்று உங்கள் வீட்டிற்சொல்லிச்சென்றானும். நீங்கள் எங்குப்போயிருந்தீர்கள்" என்று சந்திரபிரகாசம்பிள்ளை கேட்க, ராஜவைத்தியப்பெருந்தயாஜம்பிள்ளை "இல்லை இங்கேபக்கத்திலுள்ள குறுஞ்சேரி கிராமமிருக்கிறதல்லவா?"

ச-பிள் :—ஆம் இருக்கிறது.

வைத்தியர் :—அதிலே ஒரு கவிராயர் இருக்கின்றாரே தெரியுமல்லவா?

ச-பிள் :—ஆம் தெரியும், மஹா வீரதீரகம்பீர ஸ்பாவ-திம்மி சாமிக்கவிராஜ பண்டித சிரோன்மணி என்பது அவர் பெயர்.

வைத்தியர் :—அல்ல, அல்ல. அவருடைய ஊர் மதுராந்தகமல்லவோ?

ச-பிள் :—எங்கள் மைத்துனர் சென்றமாதம் அந்தக்கிராமத்துக்குப் போயிருந்தபோது அவரோடு பேசினதாகச் சொன்னாரே

வைத்தியர் :—சென்றமாதம் அவர் அங்கு வந்திருந்தார்

ச-பிள் :—ஆனால் அவர் இப்போது மதுராந்தகத்தில் தான் இருக்கிறாரோ?

வைத்தியர் :—அவர் ஒரே ஊரில் இருக்கின்றார் என்பதே கிடையாது.

ச-பிள் :—அஃதேன்? அப்படி?

வைத்தியர் :—அவரென்ன வித்துவான். அவரைப் பல ஊரில் விருப்பவர்களும் அழைத்துக்கொண்டே இருப்பார்கள். அவர் தமக்கு எங்குப்போக இஷ்டமோ அங்குப்போய் விடுவார். அவரால் அநேக அச்சாபீஸ்காரருக்கு நல்ல வருவாயல்லவா?

ச-பிள் :—அஃதெப்படி?

வைத்தியர் :—அவர் நினைத்த மாத்திரத்தில் கீர்த்தனைகளும், அம்மானைகளும், கொம்மிகளும், சிந்துகளும், அற்புதமான கதைகளும் எழுதி விடுவார். அவற்றையெல்லாம் அச்சாபீஸ்காரர்களுக்கு மிகவுஞ் சலபவிலைக்குக்கொடுத்து விடுவார். அவர்கள் அவற்றை வாங்கிக்கொண்டு அச்சிட்டு நல்ல பணஞ் சம்பாதிப்பார்கள். அவர் எழுதத்தொடங்கியபின் அநேக வித்துவான்களுக்கு வருவாய்இழுப்புத் தானே.

ச-பிள் :—அவர் ஒரு முறையெழுதி அச்சுக்குக் கொடுத்து விட்டால் மறுபடியும் பிழைதிருத்தம் பார்க்கவேண்டிய அவசியமே கிடையாதாமே!

வைத்தியர் :—ஆம்; அதற்காக்ஷேபணை என்ன?

ச-பிள் :—எழுத்து அவ்வளவு விளக்கமாக இருக்குமோ?

வைத்தியர்:—ஒரு எழுத்து மாத்திரமா? விஷயங்களும் அப்படித்தான்.

ச-பிள்:—பண்டிதர்கள் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். மற்றப்புலவர்களெல்லாம் அப்படி இல்லை. என்னமோ எழுதுவதும், திருத்துவதும், முன்னும் பின்னும் பார்ப்பதுமாய் இருப்பார்கள். அதைக்கண்டால் எனக்கும் எரிச்சல்தான். உம் சரி, குறஞ்சேரிக் கிராமத்திலிருக்கும் கவிராயர் பெயரென்ன?

வைத்தியர்:—ஒப்பிலாமணிப் பண்டிதர்.

ச-பிள்:—ஒப்பிலாமணிப் பண்டிதரா? இந்தப்பெயரை நான் எப்பொழுதோ கேட்டிருப்பதாகத் தோன்றுகின்றதே. (யோசித்து) அவர் யாரிடம் படித்தவர்?

வைத்தியர்:—இராம கவிராயரிடம் படித்தவர்.

ச-பிள்:—என்ன இப்பொழுது சென்னையி லிருக்கின்றாரே அந்த ராம கவிராயரிடத்திலா?

வைத்தியர்:—ஆம், அவரிடத்தில் தான்.

ச-பிள்:—அப்படியானால் நீங்கள் சொல்லுகின்றவித்துவான் மிகச் சிறந்தவராகத்தான் இருப்பார். வைத்தியரே! அந்த ராம கவிராயர் எப்படிப்பட்டவர் தெரியுமா?

வைத்தியர்:—சொல்லக் கேள்வியேயொழிய எனக்கு நேராகத் தெரியாது.

ச-பிள்:—ஆ! ஆ!! எத்தனை செய்யுட்கள் பாடியிருக்கின்றார்!! எத்தனை பேர்களுக்குக் கல்வி கற்பித்திருக்கின்றார்!! அவரிடம் போய் உட்கார்ந்தால் எத்தனை பழையபாட்டுகளைச் சொல்வார் தெரியுமா? ஆயிரக்கணக்கான பாட்டுகள் அப்படியே அவருக்கு மனப்பாடம். அவர் பொன்னேரிப் புராணம் என்னும் ஒரு நூலையும் பாடியிருக்கின்றார். உலகத்தில் அப்படிப்பட்டவர்களையெல்லாம் அவதார புருஷர்களென்று சொல்லவேண்டும். உம்! இருக்கட்டும் நீங்கள் சொல்லத் தொடங்கியதைச் சொல்லுங்கள்.

வைத்தியர்:—அவர் மனைவியார் பிரசவித்து நான்கு தினங்களாயின. நேற்றையதினம் தேகம் அதிகப்பட்டதென்று ஆளை யனுப்பினர். அதனால் அவ்விடத்திலேயே இருக்கும்படி நேர்ந்தது

அமிர்தவல்லி:—என்னுங்கோ, உங்களோடு பேசுகின்றவர் வைத்திய அண்ணுவா?

ச-பிள்:—ஆம்! ஆம்.

அமிர்தவல்லி:—(அங்கு வந்து) அண்ணு! நேற்றுப் பண்டிதர் வீட்டுக்குத்தான் போயிருந்தீர்களோ?

வைத்தியர்:—ஆம், அம்மா.

அமிர்தவல்லி:—அவர் மனைவிக்கு மிகவுந்தொந்தரவாக இருக்கிறதென்று சொன்னுர்களே, எப்படியிருக்கிறது?

வைத்தியர்:—குணந்தான், ஒன்றும் பாதகமில்லை.

அமிர்தவல்லி:—போகட்டும், அந்தம்மாள்மிகவும்நல்லவர்கள். அவர்கள் நான் சிறியவளாயிருக்கும்போது எங்கள் தாயாரிடம் அடிக்கடிவருவார்கள். அப்பொழுதுபார்த்திருக்கிறேன். அவர்கள் மிகவுஞ் சாந்தமானவர்கள். அவர்கள் பேசுவது பக்கத்திலிருப்பவர்களுக்குந் தெரியாது. அவர்கள் நன்றுய்ப் படித்தவர்கள். அவர்கள்அவ்வளவு படித்தவர்களாயிருந்தும் ஒன்றுக்குமுன்வந்து தம்மைப்படித்தவர்களாகக் காட்டிக்கொள்ளமாட்டார்கள். அவர்களை எப்பொழுதேனும் பாட்டுசொல்லும்படி எங்கள் தாயார் கேட்பார்கள். அப்பொழுது அவர்கள் சில அருமையான பாட்டுகளைச் சொல்வார்கள். அ! ஆ!! அவர்கள் பாட்டு சொல்வதைக் கேட்டால் எப்படியிருக்குந் தெரியுங்களா? அவர்களுடைய குரல் குயில் குயில்தான். அடடா, அந்தமாதிரி பாடுகின்றவர்களை நான் இதுவரையிலும் பார்த்ததேயில்லை.

வைத்தியர்:—பிள்ளைவாள்! தெருவிலே ஏதோ பண்டிவந்து நின்ற சப்தங்கேட்டது. யார் பண்டியென்று பார்க்கச்சொல்லுங்கள்.

ச-பிள்:—இதோ எங்கள் அத்தான்வருகிறுர்கள். அத்தான்! வாருங்கள் வாருங்கள்.

வந்தவர்:—வைத்தியரே! க்ஷேமந்தானு?

வைத்தியர்:—வைத்தியநாதர் நீங்களிருக்கையில்வைத்தியாது க்ஷேமத்திற் கென்ன குறைவு?

ச-பிள்:—அத்தான்! கடிதங்கூடப் போடாமல் இப்படித்திடீரென்று வந்தீர்களே, என்ன சமாசாரம்?

வைத்தியநாதம்பிள்ளை:—எல்லாம் நல்ல சமாசாரந்தான். உங்களைப்பார்க்க வேண்டுமென்கிற சமாசாரத்தைவிட வேறென்ன விசேஷ சமாசாரம் இருக்கப்போகிறது?

ச-பிள்:—சரி, சிரம்குளிக்க எழுந்திருங்கள். வைத்தியரே! உங்களுக்குக்கூட இன்று இங்குதான் சாப்பாடு. இன்று நீங்கள் வீட்டுக்குப் போக முடியாது. என்றுசொல்ல அவர்களும் எழுந்தார்கள். இதற்குள் வேலையாட்கள் அவர்களுக்குவெந்நீர்கொண்டு வந்துவைக்க அவ்விருவருங்குளித்துத் தங்கள் தங்கள் கடவுளாராதனையைச்செய்து முடித்துக்கொண்டார்கள். சந்திரபிரகாசம் பிள்ளை உடனே அவர்களோடிருந்து ஆனந்தமாகச் சாப்பிட்டனர்.

சந்திரபிரகாசம்பிள்ளை விருந்தின்றிச் சாவா மருந்தெனினும் உண்ணப் பிரியப்படார். அவர் வீட்டடுப்பில் நெருப்பின்றியிருந்த நிமிஷமொன்றுமிடையாது. அவர் எப்பொழுதும் வந்த விருந்தினர்க்கு வேண்டிய உபசாரங்களையெல்லாஞ்செய்து பின்வரும் விருந்தினரை எதிர்பார்த்து அவர்களோடு உண்ண இருப்பவர். ஆதலால் அன்று அவர்களுக்குமுன்வந்து அவரால் உபசரிக்கப்பெற்றுச் சந்தோஷமாகச் சென்ற விருந்தினர் பலர்.

அம்மூவருஞ் சாப்பிட்டபின் தாம்பூலந் தரித்துக் கொண்டு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து 'உண்ட இளைப்புதீரப்படுத்துக் கொண்டார்கள். "உண்ட இளைப்பு தொண்டருக்கும் உண்டு,, அல்லவா? சற்றேறக்குறைய இரண்டுமணிநேரம் உறங்கி எழுந்தார்கள். அவர்கள் எழுந்தபொழுது ஏறக்குறைய மூன்றரைமணியிருக்கும். உடனே வேலைக்காரர்கள் மூன்று பெரிய செம்புகளில் வெந்நீர்கொண்டுவந்து வைத்தார்கள். அம்மூவரும் அந்நீரால் கைகால்களைச் சுத்தஞ்செய்துகொண்டு அங்கு ஒருவட்டமான மேஜையைச்சுற்றி இடப்பட்டிருந்த நாற்காலிகளிற் சென்றுட்கார்ந்தார்கள். உடனே வேலையாட்கள் மூன்று வெள்ளித்தட்டுகளில் இனிய பல சிற்றுண்டிகளைக்கொண்டு வந்து வைத்தார்கள். அவர்கள் அச்சிற்றுண்டிகளை யுண்டபின் அம்மாளிகைக்குச் சிறிது தூரத்திலுள்ள தோட்டத்திற்குச் சென்றார்கள். அப்போது வைத்தியர் சந்திரபிரகாசம் பிள்ளையைப்பார்த்து "ஐயா! தங்களால் அமைப்பிக்கப்பட்ட இந்தப்பூங்காவானது இந்த மணிபுரத்துக்கோர் முடியணிபோல் விளங்குகின்றது. இந்த ஊருக்கு வருகின்றவர்களில் இந்தத் தோட்டத்தை வந்து பாராமற் செல்கின்றவர்கள் ஒருவருமிலர். இத்தோட்டத்திலமைப்பிக்கப்பட்ட இவ்விசித்திரமாளிகையானது அம்முடிமணியின் நடுநாயகம்போலவிளங்குகின்றது. இம்மாளிகையைக்கண்டு சென்றவர்களிற் பலர்தங்கள் தங்கள் தோட்டங்களில் இவ்விதமான மாளிகையை அமைப்பிக்க வேண்டுமென முயல்வாராயினர்" என்றனர்.

ச-பிள் :—இந்தத் தோட்டத்தையும், மாளிகையையும் இப்பொழுது நான் புதிதாக அமைப்பித்ததற்குக்காரணம்யாது தெரியுமா உங்களுக்கு?

வைத்தியர் :—அவ்வளவு தெரியாதா எனக்கு? குழந்தைச் சாரசநேத்ரியின் பொருட்டுத்தான்.

வைத்திய நாதம்பிள்ளை :—வைத்தியரே! நீங்கள் சொல்வது தப்பான காரணம். குழந்தை இன்னும் கலியாணமில்லாமலிருக்கின்றாள். கலியாணம் பண்ணிக்கொண்டவர்கள் உல்லாசமாயிருத்தற்கல்லவோ இது ஏற்றதாவது. என்ன, கொஞ்சமும் ஆலோசிக்காமல் சொல்லிவிட்டீர்களே! நமது மைத்துனர் இலேசானவரென்று எண்ணுகிறீர்களா என்ன? அவர் சில நாளைக்கு அப்படிஇ கொஞ்சம் ஷோக்காய் இருக்கலாம் என்றல்லவோ இதை அமைப்பித்தார்? நீங்கள் அதைத் தெரிந்து கொள்ளாமல் என்னமோ சொல்லிவிட்டீர்களே.

ச-பிள் :—ஆமாம், "தான் திருடன் அசல் வீட்டுக்காரனை நம்பான், கூத்திக்கள்ளன் பெண்டாட்டியை நம்பான்" என்பது உலகத்தில் சகஜந்தானே!

வைத்தியர் :—அதென்ன அத்தானை அப்படி இலேசாகச்சொல்லி விட்டீர்களே!

ச-பிள் :—அடடா! நான் மாத்திரம் சொல்வதாகவா நினைக்கின்றீர்கள். கும்பகோணத்திற்போய்க் கேட்டால் எல்லாருமே சொல்வார்களே அவருடைய வேடிக்கைகளை. அடேயப்பா! அவரென்ன, கொஞ்சமான ஆட்டம் ஆடினவரா. நாங்கள் அடிக்கடிப் போய்ப் பேசாததும்பேசி அவர் சாயத்தைவெளுக்கடித்ததனாலே யல்லவா அடங்கிவிட்டார். இல்லாவிட்டால் இன்னும் அந்த ஆட்டந்தானே ஆடிக்கொண் டிருப்பார்.

வைத்திய நாதம்பிள்ளை :—வைத்தியரே! முன் நான் இவர் முன்னோர்கள் வண்ணார்களா யிருக்கவேண்டும் என்று சொன்னால் நீங்கள் நம்பாமற் போனீர்களே! இப்பொழுதேனும் நிச்சயமாய் விட்டதா? இவர் முன்னோர்கள் வண்ணார்களாய் இல்லாவிட்டால் இவருக்கு வெளுக்க அடிக்குஞ் சக்தி எப்படி வந்திருக்கும்?

வைத்தியர் :—அப்படியானால் தாங்கள் எப்படி இவருடைய தங்கையைக் கொண்டீர்கள்?

வைத்தியநாதம்பிள்ளை:—என்னமோ எங்கள் தாயாரும், தகப்பனாரும் அவர்கள் நமக்குஇப்படிப் பாத்தியம், அப்படிப் பாத்தியம் என்றுசொல்லி ஏற்பாடுசெய்துவிட்டார்கள். நான் அப்பொழுதே. அவர்கள் பெரியோர்களெல்லாம் வண்ணார்களாமே; அவர்கள் எப்படி, நமக்குப்பாத்தியமுடையவர்களாவார்கள், என்றுசொன்னேன். அவர்கள் நான் என்ன சொல்லியுங் கேட்கவில்லை. நான் என்னசெய்வது? பெரியவர்கள் பேச்சைத்தட்டலாமா? இந்தக்காலத்துப்பெண்களும், பிள்ளைகளும் பெற்றோர்கள்சொல்லைக்கேளாமல் தங்களிஷ்டப்படி ஆடுகின்றார்களே! அப்படியா அந்தக்காலம்? என்னமோ மிஞ்சிப்போய்விட்டது. இப்பொழுதுஅதைப்பற்றிப் பேசுவதனால் என்னலாபம்?

வைத்தியர்:—என்னமோ முன்னேதான் தெரியாமற் போய்விட்டது. இனிமேல் இவர்களோடுசம்பந்தஞ்செய்யமாட்டீர்களே!

வைத்தியநாதம்பிள்ளை:—செச்சே! இனிஇவர்களோடா! கனவிலும் நினைப்பேனா? ஆனாலொன்று. எங்களவள் இருக்கிறாளே. அவளால் பார்க்கிறேன்.

வைத்தியர்—ஏன் அந்த அம்மாள் என்ன சொல்லுகிறார்கள்.

வைத்தியநாதம்பிள்ளை—'எங்கள் தாயார்வீட்டுப் பாத்தியம் போய்விடுகிறதே! எங்கள்தாயார்வீட்டுப் பாத்தியம்போய்விடுகின்றதே' என்று என்பிராணனை வாங்கிவிடுகின்றாள். பையனுங்கூடத் தன் தாயார் பேச்சைக் கேட்பவனாய் இருக்கின்றானே யல்லாமல் என்பேச்சைக் கேட்பவனாயில்லை. அதற்குத்தான் பார்க்கிறேன். இல்லாவிட்டால் தாகசாந்தியுங்கூடப் பண்ணமாட்டேன்.

ச-பிள்:—வைத்தியரே! இதனாலேயே அத்தான் சமாசாரம் விளங்கிவிட்டதல்லவா? அத்தான் யோக்கியதையைத்தான் முன்னமேசொன்னேனே. "வித்தொன்றுபோட்டால் மற்றொன்று முளைக்குமா"? தகப்பனைப்போற் பிள்ளை. பையன் எங்கேயோதடுமாட ஆரம்பித்துவிட்டான். அதைக்கண்டு அத்தான் "ஏதேது இனி இவனுடைய யோக்கியதை நம்முடைய யோக்கியதையைவிட மிஞ்சிப்போகும், என்றஞ்சி இங்கு ஓடிவந்திருக்கின்றார். வந்தவுடன் அதைச்சொன்னால் பிகுவுகெட்டுப்போகும் என்று இவ்வளவு நேரம் தாமதித்து மிகவும் பிகுவுடன் சொல்லத் தொடங்கினார். "பிகுவுடன் சப்பாத்தி யிரண்டிலே பிழுத்தார்" என்பது எங்கேனுந் தப்புமா?

வைத்தியநாதம்பிள்ளை :—இதுதான் பெண்கள் பேச்சைக் கேட்டுவருவதால் உண்டாகும் பயன். என்னமோ எனக்கென்ன உங்கள் தங்கை சொன்னதனால் வந்தேன். அதிகமாகப் பேச வேண்டிய அவசியம் எனக்கொன்றும் இல்லை அவள் "எங்கள் தாயாருக்கும் ஒரே பெண் எனக்கும் ஒரே பிள்ளை. ஆகையால் நான் வேறிடத்திற் சம்பந்தஞ் செய்யமாட்டேன்" என்கின்றாள், அதைத் தெரிவிக்கத்தான் நான் வந்தேன்.

வைத்தியர் :—ஆனால் தங்களுக்கு இஷ்டம் அவ்வளவாக இல்லையோ?

வைத்தியநாதம்பிள்ளை :—அவ்வளவாக என்பது என்ன? பூராகவாகவே இல்லை.

வைத்தியர் :—ஏன்?

வைத்தியநாதம்பிள்ளை :—நான்தான் முன்னமே சொன்னேனே. அவர்கள் வண்ணார்கள் என்று, அதனாலேதான். ஆனால் ஒன்று குழந்தைச் சாரசநேத்ரியைப் பார்க்கும்போது மாத்திரம் எனக்கு மிகவும் அன்பு பெருகும். அப்பொழுது நான் "இவ்வளவு அருமையான பெண் இவர்கள் வீட்டிலெப்படியோ தவறிப் பிறந்துவிட்டதே! இது நமதுவீட்டிலிருந்தால் மிகவும் நன்றாயிருக்குமே அன்றியும் பலான வண்ணாருடையபெண் என்றுசொல்லப் பெறுவதைக் காட்டிலும். பலான பிள்ளையவர்களின் மருமகள் என்றுசொல்லப்பெறுவது அதற்கு மிகவும் பெருமையாக இருக்குமே" என்று எண்ணுவது மாத்திரம் உண்டு.

வைத்தியர் :—(சந்திரபிரகாசம் பிள்ளையை நோக்கி) என்னங்கோ உங்களை அத்தான் அப்படி யடிக்கடி சொல்லுகின்றாரே?

ச-பிள் :—அவர் சொல்வதெல்லாஞ் சொல்லட்டும். வண்ணாரிடத்து முன்னே சம்பந்தம் பண்ணியதனோடு நில்லாமல் மறுபடியும் சம்பந்தம்பண்ண நினைக்கின்றமையால் அவர்களும் வண்ணாராகத்தான் இருக்கவேண்டும். இருக்கட்டும் இப்பொழுது அத்தான் சொன்ன விஷயத்தில் அவருக்கு முன்னாகவே எனக்கு எண்ணந் தான். அப்படி எனக்கு எண்ணம் உண்டு என்பதில் அத்தானுக்கும், உங்களுக்குஞ் சந்தேகமிராதென்றே நான் நம்புகின்றேன். ஆனால், அதுவிஷயத்தில் எங்கள் அமிர்தத்தைச் சரிப்படுத்துவதுதான் கஷ்டமாயிருக்கின்றது.

வைத்தியர் :—ஒவ்வொருவருக்குந் தங்கள் தங்கள் இரத்தக் கலப்பானவர்களிடத்தில் மனஞ்செல்வது இயல்புதான். அப்படியே அந்த அம்மாளுடைய மனநாட்டமும் இருக்கலாம். ஆகையால், அது குற்றமாகாது. ஆனால் அந்த அம்மாளுக்கு அப்படி விருப்பமிருந்தாலும், தாங்கள் சொன்னால் தங்கள் பேச்சைத் தட்டி மூர்க்கத்தனமாய்ப் பிடிவாதஞ் செய்பவர்களல்லர்.

ச-பிள் :—அதுவில்லை. ஆனாலும் கொஞ்சம் வருத்தமாகத் தானே இருக்கும்.

வைத்தியர் :—அதற்கென்ன செய்வது? எவ்வளவு உத்தமர்களாயிருந்தாலும் இரண்டுபேருக்கும் ஒரே இடத்தில் நாட்டமுண்டாகாமல் வெவ்வேறான இரண்டிடத்தில் நாட்டமுண்டாகுமானால் அது அவ்விருவருக்குள் ஒருவருக்கு வருத்தத்தை உண்டாக்கித் தான் தீரும்.

ச-பிள் :—அதுமாத்திரமா! எங்கள் மைத்துனருடைய விநோதத்தையுமல்லவோ நான் பொறவேண்டியவனாகிறேன். அவர் இப்படிப்பட்டவர் என்பது தங்களுக்குத்தான் தெரியுமே.

வைத்தியர் :—ஆ! பரமசாதுவான குணமுடையவரல்லரோ? ஏன்? அவரைப்பற்றித் தங்கள் அத்தான் அவர்களுக்குத் தெரியாதா என்ன?

வைத்தியநாதம்பிள்ளை :—அடடா! அவரைப்பற்றியாருக்குத் தெரியாது? அவருடைய குணங்களைப்பற்றித் தீய ஒழுக்கமுடையவர்களுங்கூடப் புகழுவார்களென்றால் மற்றியாவர் அவர் குணத்தைப்பற்றிப் புகழாதவர்? அவர் எதையும் ஆழ்ந்து யோசிப்பவர். எது நடந்தாலும் "எல்லாம் பகவானது கட்டளையின்படி நடக்கின்றது" என்றிருப்பவர். அவரைப்பற்றி எனக்கு நன்றாய்த் தெரியுமே.

ச-பிள் :—"பகவானது கருணையால் எனக்கு எல்லாரும் நல்லவர்களாகத்தான் அமைந்தார்கள். ஆகையால் யான் இதுவரையிலும் யாதொரு கவலையும் இல்லாமலிருந்தேன். இப்பொழுது குழந்தையைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கிய பிறகுதான் எனக்குக் கவலைகள் அதிகப்படுகின்றன. (ஆலோசித்தவர்) சரி இருக்கட்டும். எல்லாம் பகவானது கருணை போலாகட்டும். மேலும் அதைப்பற்றிய செய்தியை அத்தானவர்கள் முன்னிச்செய்துவிட்டார்கள். ஆகையால் எங்கள் மைத்துனர் அதைப்பற்றி எதுவுங் கேட்டா

லும் பதில் சொல்ல அது வொருசாக்கு எனக்கு அகப்பட்டது. அத்தான்! இனித்தாங்கள் அதைப்பற்றியொன்றும் யோசிக்கவேண்டாம். நேரமாய்விட்டது. வாருங்கள் வீட்டிற்குப்போவோம்" என்று கூறி அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றார்.

வைத்தியநாதம்பிள்ளை:—தமது மைத்துனராகிய சந்திரபிரகாசம்பிள்ளைவீட்டில் ஐந்தாறுதினங்களிருந்து தஞ்சைக்குப்போய்ச் சேர்ந்தனர்.

மூன்றாம் அத்தியாயம்.

"சச்சரித்ரா! வருக, வருக. உன்நண்பன் சதாநந்தனெங்கே" என்று வைத்தியர் கேட்டார்.

சச்சரித்ரன்:—வைத்தியரை வணங்கி நின்று என்னோடு வந்திருக்கின்றான். வண்டிக்காரனுக்கு வண்டிச்சத்தங்கொடுப்பதற்காக ஒரு ரூபாய் சில்லரை மாற்றிக்கொண்டுவரப் போயிருக்கின்றான். இதோ வந்துவிட்டான்.

வைத்தியர்:—சதாநந்தா! வருக, வருக. நண்பர்களாயிருந்தால் உங்களைப்போலிருக்கவேண்டும். பாலொடு பழஞ்சேர்ந்தது போன்றது உங்கள் நட்பு. கடவுளருளால் உங்களுக்கு மாசிலாப் புகழும், நிறைந்த செல்வமும், தீர்க்காயுளும் உண்டாகுவனவாக.

சதாநந்தன்:—(இவனும் வைத்தியரை வணங்கி நின்று) ஐயா! உத்தமர்கள் யாவரும் துதிக்கத்தக்க பெருந்தகைமை வாய்ந்த பெரியவர்களாகிய தங்களுடைய அன்பை முற்றும் பெற்ற எங்கட்கு நன்மையன்றித் தீமை யெய்துமோ? ஒருகால் விதிவலியால் எய்தினும் சூரியன்முன் பனிபோல் தங்கள் ஆசியின் வலியால்நீங்கிப் போவதன்றி எங்களிடம் நிற்கும் வன்மையுடையதாமோ?

வைத்தியர்:—"மக்காள்! முன்னைப்பிறப்பில் நமக்குள் யாது உறவு இருந்ததோதெரியவில்லை. உங்களை நான் நினைக்காத நாளே கிடையாது. உங்களைக் கண்டபோதெல்லாம் என்மனம் உங்களை என்னருமைப் புதல்வர்களாகவேகருதுகின்றது. சற்றேறக்குறைய இருபது தினங்களுக்குமுன் நமது வயலுக்குச் சென்றிருந்தேன். அங்கொரு வரப்பின் பக்கத்திற் சில மரங்களும் ஒரு சிறு புதரும்

இருக்கின்றன. அப்புதரின் ஓரமாகச்செல்கையில் அங்குக்கீசுக்கீச்சென்ச் சில பறவைக்குஞ்சுகளின் சப்தங்கேட்டது. உடனே நான் அப்புதரை எட்டிப்பார்த்தேன். அப்புதருக்குள் இரண்டு சிறுபறவைக்கூடுகளும், ஒவ்வொருகூட்டிலும் *இவ்விரண்டுகுஞ்சுகளும் இருக்கக்கண்டேன். ஆனால், அவற்றின் தாய்ப்பறவைகளைக் காண்கிலேன்; ஆதலால், "இவற்றின் தாய்ப்பறவைகள் இருக்கின்றனவா? இருந்தால் இரைக்காகப்போயிருத்தல்வேண்டும். அங்ஙனம் போயிருந்தால் இன்னுஞ் சிறிது நேரத்திற்கெல்லாம் வரும் அல்லவா? அவற்றைப்பார்த்தே நாம்செல்லுதல்வேண்டும்" என்று அங்கொரு மரத்தின் மறைவாக இருந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு தாய்ப்பறவை தன் (அலகுநிறையச் சில தானியங்களை யெடுத்துக் கொண்டுவந்து அப்புதருக்குள் நுழைந்தது. அதன்பிறகு இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் மற்றொரு தாய்ப்பறவையுந் தானியங்களை யெடுத்துக்கொண்டுவந்து அப்புதருக்குள் நுழையுந்தருணத்தில் திடீரென ஒரு பெரியபருந்தானது வந்து அதை அடித்துக்கொண்டு போய்விட்டது. அதைக்கண்டபோது எனக்குண்டான துயரத்துக்கு ஓரளவே கிடையாது. கண்களிலே நீர் தாரைதாரையாகப் பெருகியது. எனக்கொன்றுந் தோன்றவில்லை. அப்பொழுது குஞ்சுகளைப் போய்ப்பார்க்கவேண்டும் என்னும் எண்ணமுண்டாய்ப் போய்ப்பார்த்தேன். அவ்விரண்டு கூடுகளில் ஒரு கூட்டில் உள்ள குஞ்சுகள் தமது தாய்ப்பறவை கொடுக்கின்ற இரையைத் தங்கள் சிறிய அலகுகளை நீட்டி நீட்டிப் பெற்றுத் தின்றுகொண்டிருக்க; மற்றொரு கூட்டில் உள்ள குஞ்சுகள் தங்கள் தாய்ப்பறவையின் வரவைக்கருதி வானத்தை அண்ணாந்துபார்த்துக் கத்திக்கொண்டிருக்கக் கண்டேன். அந்நிலையில் அவற்றைப்பார்த்தபோது என்மனத்தில் துயரமானது கரைகடந்து பொங்கிய சமுத்திரம்போல முன்னிலும் அதிகமாகப் பெருகுவதாயிற்று. என்னால் நடக்கவுஞ் சக்தியற்றுப் போயிற்று. மெதுவாக வந்து முன்னிருந்த மரத்தடியில் உட்கார்ந்து கொண்டேன். அப்பொழுது சச்சரித்திரன் தன் ஒன்பதாம் வயதில் பெற்றோர்களை யிழந்து என்னை வந்து கட்டிக்கொண்டு அரற்றிய விஷயம்

---

* இவ்விரண்டு—இரண்டிரண்டு.

(அலகு—மூக்கு.

அரற்றிய—அழுக.

என் மனத்திற்கு வந்துவிட்டது. அப்பா! நான் என்னசெய்வேன்! என்மனம் இருபிளவாகப் பிளந்து போனதுபோலாய் விட்டது. அந்தோ! என்னையும் அறியாமல் 'ஓ என்று அழத்தொடங்கி விட்டேன். அந்த நிலையில் என்னை யாரேனும் பார்த்திருந்தால் என்னைச் சொல்லுதற்கரிய பெருங் கஷ்டத்திற்குள் அகப்பட்டுக் கொண்டவனாக நினைப்பார்கள். அந்தச்சமயத்தில் நானெண்ணாதவற்றையெல்லாம் எண்ணினேன். சிறிதுநேரம் அம்மரத்தடியிலேயே படுத்துக்கொண்டிருந்தேன். பிறகு ஒருவாறு தெளிந்தெழுந்து மீண்டும் அப்புதருக்குள் அக்குஞ்சுகளைப் போய்ப் பார்த்தேன். அச்சமயத்தில் நான் முன், ஒரு தாய்ப்பறவை முன்னேவந்து தன் குஞ்சுகளுக்கு இரைகொடுத்துக் கொண்டிருந்தது என்று சொன்னேனே. அப்பறவையானது தன் குஞ்சுகளுக்கு இரைகொடுப்பதுபோலவே தாயிழந்தகுஞ்சுகளுக்கும் கொடுத்துக்கொண்டிருந்தது. அதைக்கண்டதும் எனக்கு மிகவும் ஆநந்தமுண்டாய் விட்டது. பிறகு நான்போன வேலையைப்பார்த்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டேன். மறுதினம் 'அக்குஞ்சுகள் எப்படி இருக்கின்றன பார்ப்போம்' என்றெண்ணி அவ்விடத்துக்குப் போகையில் வழியில் இருவர் கையில் துப்பாக்கிவைத்துக்கொண்டுபோய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில்ஒருவன் மற்றொருவனை நோக்கி, 'அடே! வயிற்றான்! நேத்து சமாசாரம் தெரியுமாடா உனக்கு.

வயிற்றான் :—(அவனைப்பார்த்து) என்னடா குண்டுகண்ணா! என்னடா அது.?

குண்டுகண்ணன் :—அதே, இல்லே பக்கத்லே திம்மஞ்சேரி, அங்கே போயிருந்தேண்டா. அங்கே ஒரு மரத்திலே ரெண்டு பொரு ஆணும் பெண்ணுமா உக்காதிருந்தது. அதும்பக்கத்லே ஒருபருந்து உக்காகிருந்ததாங் காட்டியும் நான் பார்க்கலே. அந்தப்பொருவுக்கு லக்குப்பார்த்தேனே. அதுஎப்படியோ கொஞ்சந் தப்பி அந்தப்பருந்துமேலே பட்டூட்டுது. உடனே அந்தப்பருந்து உழுந்தூட்டுது. அந்த ரெண்டுபொருவும் பறந்துபூட்டுது அந்தப் பருந்து ஒருகுருவியே புடிச்சுக்னு வந்திருந்ததாங்காட்டியும் அந்தப் பருந்து உழவே அந்தக் குருவியும் தப்பிச்சிக்னு ஓடிப் பூட்டுது.

வயிற்றான் :—ஏண்டா! அந்தக் குருவியையானாலும் புடிச்சுக்கோ கூடாதாடா. நீ சுத்த தடி வருமாட்ரா நீ,

குண்டுகண்ணன்:—"அடேஎன்டா அது? அதுகடவாபபல்லுக்குக்கூடப் போதாதேடா. அதை புடிச்சி என்னடா பண்றது?

என்று இப்படிப் பேசிக்கொண்டுபோனார்கள். அதைக்கேட்டதும் எனக்கு அளவில்லாத சந்தோஷமுண்டாய்விட்டது. உடனேவிரைந்து அப்புதரின் அருகிற்சென்று பார்த்தேன். அவ்விரு கூடுகளிலும் இரண்டு தாய்ப்பறவைகளும் இருக்கக் கண்டேன். அப்பொழுது நான் சச்சரித்ரனைப்பற்றி எண்ணிய விஷயங்கள் ஊமன்கண்ட கனவோடொக்கும்" என்றார்.

சச்சரித்ரன்:—"ஐயா! தாங்களே! என்னருமைத்தந்தையார் தங்கள் மனைவியாராகிய அம்புஜவல்லி யம்மாளே என்னருமைத் தாயார்" என்றான்.

வைத்தியர்:—"என்னருமை மைந்தர்காள்! நாழிகையோ பதினைந்தாய்விட்டன. எழுந்திருங்கள்; குளித்துவிட்டுச் சாப்பிடுவோம்" என்றழைத்துக் கொண்டு பின்கட்டுக்குச் சென்றார். அங்கு அம்மூவருங் குளிக்க மூன்று அண்டாக்களில் மிதமான சூட்டோடுகூடிய வெந்நீர் வைக்கப்பட்டிருந்தது. உடனே அம்மூவருங் குளித்துவிட்டுச் சாப்பிட்டுவீதியின் பக்கமாயுள்ள அறையில் இடப்பட்டிருந்த நாற்காலிகளிற் சென்றுட்கார்ந்தார்கள். அத்தருணத்தில் வீதியில் ஒருவண்டி வந்து நின்றது. உடனே அதிலிருந்து ஒரு பையன் ஓடிவந்து வைத்தியரை நோக்கி "ஐயா! தங்களைச் சமீன்தாரவர்கள் அழைத்துக்கொண்டுவரச் சொன்னார்கள்" என்றான். அதைக்கேட்ட வைத்தியர் சச்சரித்ரனையும், சகுநந்தனையும் நோக்கி, "மைந்தர்களே! நீங்கள் எங்கும் போகாமல் வீட்டிலேயே இருங்கள். நான் ஜமீன்தார் வீட்டிற்குச்சென்று விரைவாகவந்து விடுகின்றேன்" என்றுசொல்லி வந்திருந்த வண்டியிலேறிக்கொண்டு சென்றார்.

ச-மீன்:—வைத்தியரே! வாருங்கள், வாருங்கள். ஏன் தாங்கள் காலையில் வரவில்லை?

வைத்தியர்:—இன்று எங்கள் வீட்டிற்கு இருவர் விருந்தினராக வந்தனர். அதனால் வரவில்லை.

ச-மீன்:—அவர்கள் இருக்கின்றார்களா? போய் விட்டார்களோ?

வைத்தியர்:—இருக்கின்றார்கள்:

ச-பிள் :—ஆனால் தாங்கள் வந்துவிட்டீர்களே?

வைத்தியர் :—அவர்கள் இன்னும் சில தினங்கள் இருப்பார்கள். ஆகையால், தாங்கள் அழைத்த சங்கதியை விசாரித்துக்கொண்டு போகலாம் என்று வந்தேன்.

ச-பிள் :—விசேஷம் ஒன்றுமில்லை. குழந்தை என்னமோ நமது தோட்டத்துக்குப் போகவேண்டும் என்றாள். அதற்காகத்தான் தங்களை அழைத்தேன்.

வைத்தியர் :—அதற்கென்ன அனுப்புவதுதானே. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நாளைக்காலையில் நானேவந்து செய்து விடுகின்றேன்.

வனஜாக்ஷி :—(வைத்தியரை நோக்கி) ஐயா! அம்மாள் தங்களையழைக்கின்றார்கள்.

வைத்தியர் :—எந்த அம்மாள்?

வனஜாக்ஷி :—குழந்தையம்மாள் அழைக்கின்றார்கள்

வைத்தியர் :—அப்படியா! இதோ வந்துவிட்டேன்.

என்று சாரசநேத்ரியின் இடத்துக்குச்சென்றார்.

சாரசநேத்ரி :—மாமா! நான் பதிலெழுதி யனுப்பிய கடிதம் தங்களுக்கு வந்து சேர்ந்ததோ!

வைத்தியர்—அது அப்பொழுதேவந்து சேர்ந்துவிட்டதம்மா.

சாரசை :—அப்பா என்ன சொன்னார்கள்?

வைத்தியர் :—அப்பா சொல்வதென்ன? நாளையதினம் நீ தோட்டத்திற்குப் போதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் நான் செய்து விடுகின்றேன். அதில் ஒரு சிறிதுந் தடையிராது.

சாரசை :—சரி. நான்போதற்குரிய ஏற்பாடு செய்து விடுகின்றீர்கள். பிறகு?

வைத்தியர் :—பிறகா? பிறகு ஆகவேண்டியதைப் பற்றி உனக்குக் கவலைவேண்டாம்.

சாரசை :—என்னமோ, எல்லாவற்றிற்குந் தங்களை தான் நம்பி இருக்கின்றேன். எனது பெற்றோர்களை நான் நம்பவில்லை! அவர்கள் சமாசாரம் உங்களுக்குத்தெரிந்தே இருக்கின்றது. அவர்கள் என் வழிக்கு வரமாட்டார்கள்.

வைத்தியர்:—ஏன் அப்படிச் சொல்லுகின்றாய்? ஏதேனும் உன் கருத்தைச்சொல்லிக் கேட்டுப்பார்த்தனையோ?

சாரதை:—நன்றாய்ச் சொன்னீர்கள். எல்லாப்பொருள்களையும் விளக்கிக்காட்டும் விஷயத்தில் விளக்கு நல்லதுதான். ஆனால் அது அவ்வளவு நல்லதாயிற்றே என்று அதற்குயாரேனும் முத்தமிடுவார்களோ?

வைத்தியர்:—சரி, நான் வருகிறேன். நீ இருக்கவேண்டிய ஜாக்கிரதையில் இருந்துகொள்:

என்று சொல்லிச்சென்று சந்திரபிரகாசம்பிள்ளையினிடம் சில நாழிகைவரையினும் பேசிக்கொண்டிருந்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

பெரியோர்களின் போதனையினால் ஒருவன் படிப்படியாக வெய்ய குணங்குறைந்து மேற்றிசையை யடைதல்போலச் சூரியனும் படிப்படியாகத்தனது வெய்யகுணங்குறைந்து மேற்றிசையை யடைந்தான். அன்றிரவு சாரசநேத்ரிக்கு ஒருயுகம்போலிருந்தது. அங்ஙனம் சாரசநேத்ரிக்கு வருத்தத்தைக்கொடுத்துத் தன் வன்மையைச் செலுத்திக்கொண்டிருந்த இரவும் பிறருடைய குடும்பத்தை வஞ்சனையாகக்கெடுக்க நினைக்கும் தீயரைப்போல உருமாறி யழிந்தொழிந்தது. "உலகத்தில் மாந்தரனைவர்க்கும் இன்பதுன்பங்கள் ஒருபடியாக நில்லாமல் மாறிமாறிவருதல் இயல்பேகாண்" என அனைவர்க்கும் விளக்கிகாட்டுதல் போலச்சூரியன் தன் இளங்கிரணங்களைப்பூமியிற் பரப்பிக்கொண்டு உதயகிரியிற்றோன்றினான்.

வைத்தியர் விடியற்காலையில் எழுந்து தமது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தமது அருமைமனைவியாரை அழைத்து ஏதோ சில சமாசாரங்களைச் சொல்லிவிட்டுப் பிறகு சச்சரித்ரனையும், சதாநந்தனையும் நோக்கி "நீங்கள் இங்கு ஜாக்கிரதையாக இருங்கள்" என்றுசொல்லிச் சென்று சாரசநேத்ரியை அவளுடைய தோழிகளோடு அழைத்துக்கொண்டு தோட்டத்துக்குச் சென்றார்.

சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அம்புஜவல்லியம்மாள் சச்சரித்ரனையும் சதாநந்தனையும் அழைத்து மைந்தர்களே! நீங்கள் இன்று இவ்வூர் ஜமீன்தாருடைய தோட்டத்தைச்சென்று பார்த்துவிட்டு அதிலுள்ள பொய்கையில் நீராடிவாருங்கள். அது மிகவும் அழகியதொருதோட்டம். இவ்வூருக்கு வருவோரெவரும் அதைப்

பார்க்காமற் செல்வதில்லை. அதன் நடுவில் ஓரழகிய மாளிகை இருக்கின்றது. அது, பார்ப்பவர் 'இது தெய்வலோகத்துச் சிற்பியேவந்து நிர்மித்ததோ? என்று நினைக்கும்படி அவ்வளவு அழகாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதை நீங்கள் அவசியம்பார்க்கவேண்டும்" என்றனர். அவர்களும் அப்படியே அவ்வம்மையிடம் விடைபெற்று அத்தோட்டத்துக்குச் சென்றார்கள்.

நான்காம் அத்தியாயம்.

சச்சரித்ரன்:—ஆ, ஆ! இந்தத்தோட்டம் எவ்வளவு மனோகரமாயிருக்கின்றது பார்த்தனையா? இதிலுள்ள விருக்ஷவர்க்கங்களை அளவிடுதலருமையாகும். எத்தனை மனோகரமான புஷ்பச்செடிகளிருக்கின்றன பார்த்தனையா? இத்தோட்டத்தை உலகத்திலுள்ள விருக்ஷவகைகளையெல்லாங் காணுதற்காக அமைத்த விருக்ஷக்காட்சிச்சாலை என்னலாம். எத்தனை வகையான சிறு பறவைகள் மரங்களிலும், செடிகளிலும் இருக்கின்றன பார். உலகத்திலுள்ள குயில்கள் யாவுங் கூடிவந்து இச்சோலையையே தமக்கு இடமாகக் கொண்டனபோலும். அதோ ஒருபுறம் மயில்களெல்லாம் தம் அழகிய தோகைகளைவிரித்துக்கொண்டு ஆடுகின்றனபார். இக்கொடிகள் மரங்களையும், செடிகளையும் பின்னிப் படர்ந்து பந்தலிட்டது போலிருக்கும் அழகைப் பார்க்குந்தோறும் எனக்குப்பேரானந்தம் உண்டாகின்றது. ஆகா! இப்பொய்கைகளில் தாமரை, அல்லி, நீலோற்பல முதலிய புஷ்பங்கள் மலர்ந்தும் குவிந்தும் அரும்பியும் நிரைநிரையாயிருக்கும் பொலிவைக்கண்டால் யாருக்குத்தான் சந்தோஷமுண்டாகாது? அப்பா! அந்தக்கயல்மீன்கள் எவ்வளவு உயரமாகத்தாவி விழுகின்றன நோக்கு.

என்றிப்படி அத்தோட்டத்தின் அழகைப்பார்த்துப்பார்த்துச் சொல்லலானான்.

சதானந்தன்:—"நண்ப! நாம்முன் னீராடிவிட்டுப்பிறகு இத்தோட்டத்தின் மற்றைய பாகங்களையும் பார்ப்போம் வருக" என்றழைக்கச் சச்சரித்ரனும் அதற்கிசைந்தான். உடனே அவ்விருவரும் அருகிலிருந்ததொரு அழகிய பொய்கைக்குச் சென்று முதலில் தமது உடைகளைத் துவைத்துக்கொண்டு கரையில் வந்து தங்கள் தங்கள் துணிகளை அங்குள்ள மரங்களிற் கட்டி உலர வைத்தார்கள். சதானந்தன் துணியை உலரவைத்தபக்கம் மரங்கள்மிகவும் அடர்ந்திருந்தன. ஆகையால் அவன் துணி சீக்கிரம் உலரவில்லை. சச்சரித்ரன் துணியை உலரவைத்த பக்கம் மரங்கள் அவ்வளவு அடர்ந்திராமையால் அப்பக்கத்திற் சூரியகிரணங்கள் சிறிதே அவன் துணிமேற்பட்டன. அதனால் அவனது துணி விரைவாக உலர்ந்துவிட்டது. உடனே சச்சரித்ரன் அவற்றை யெடுத்துக்கொண்டு சதானந்தனை நோக்கி "நண்ப! நான் அதோ இருக்

கின்ற புஷ்பங்களிற் சிலபறித்துக்கொண்டு வருகின்றேன். நீயுன் துணிகளை உலர்த்திக்கொண்டிரு. இதோ வந்துவிடுகின்றேன்" என்று விடைகொண்டுசென்று அங்குள்ள நன்மணம்வாய்ந்தமலர்கள் சிலவற்றைப்பறிக்கலானான். அச்சமயத்தில் சாரசநேத்ரி வலம்புரிச்சங்கங்கள் சூழவரும் பாஞ்சசந்நியம்போலவும், § உடுக்குலங்கள் சூழவரும் உவாமதியைப் போலவும் பல தோழிப்பெண்கள் தன்னைச் சூழ்ந்துவர அத்தோட்டத்தின் நடுவிலுள்ள மாளிகையினின்று வெளிவந்து அங்கு அருகிலிருந்ததொரு சிறு பொய்கையின் பக்கத்திலமைக்கப்பெற்றிருந்தசெய்குன்றின் ஓரத்தில் நின்றுகொண்டு தோழியர்களை அழகியமலர்களைப் பறித்துக்கொண்டு வரும்படி ஏவினாள். அவர்களும் அவ்வாறே சென்றார்கள். சச்சரித்ரன் அதனருகில் அடர்ந்திருந்த மரங்களின் மறைவிலேதான் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டிருந்தான். அங்ஙனம் பறித்துக்கொண்டிருந்தவன் அப்பொற்கொடியின் தீங்குரலைக்கேட்டு "இதுவென்ன இங்குயாரோபெண்கள் இருக்கின்றார்கள்போல் இருக்கிறதே" என்றுஅஞ்சி அடர்ந்திருந்த அம்மரங்களைவிட்டு அதனருகிலுள்ளபொய்கையின் புறமாகச்சென்றான். சென்றவன் அப்பொய்கையின் பக்கத்தில் அழகியதொரு செய்குன்றின் ஓரத்தில் உலகத்திலுள்ள அழகுகளையெல்லாம்ஒன்றாகத்திரட்டி ஒரே உருவமாக அமைத்து வைத்தாற்போன்ற ஓர் பெண்ணமுதம் நிற்கக்கண்டு,

(ஐயம்)

* விண்பதி யதுவோ விழைபொழி லதுவோ
தண்கட லதுவோ தனிவரை யதுவோ
ஒண்புன லதுவோ வுரியதுற் றுறைய
எண்ணரும் பொலிவோ டிங்குறை யிவரே.

என்று ஐயமுற்று நின்று சிறிது உற்றுநோக்கி,

---

§ உடுக்குலங்கள்—நக்ஷத்திரக் கூட்டங்கள்.
‖ உவாமதி—பூர்ணசந்திரன்.

* இதன்பொருள்:—ஒப்பாகப் பிறரொருவரை எண்ணவுங்கூடாத அழகுடன் இங்கு (என்னெதிரில்) நிற்கின்ற இம்மாதர் பொருந்தி வசித்தற்குரிய தானது தேவலோகமோ? யாவரும் விரும்புஞ் சோலையோ? குளிர்ந்த பாற்கடலோ? ஒப்பற்றமலையோ? அழகிய நீர் நிலையோ? ஒன்றுந் தெரிந்திலேன் என்பது.

அதாவது:—இவளது அழகின்மேம்பாட்டைக்கண்டு இம்மாது நல்வான் வானகத்துறையும் தெய்வப் பெண்ணோ? சோலைகளிலுறையும் தெய்வப்பெண்ணோ? பாற்கடலிற் பிறந்த ஸ்ரீமகாலக்ஷ்மியோ? மலையில் வசிக்குந் தெய்வப் பெண்ணோ? நீரில் வசிக்குந் தெய்வப்பெண்ணோ? என்று ஐயமுற்றான் என்பது. வானகத்துறையுந் தெய்வப்பெண்ணைச் சூரமகள் எனவும் மலையில் வசிக்குந்தெய்வப்பெண்ணை வரையரமகள் எனவும், நீரில்வசிக்குந் தெய்வப்பெண்ணை நீரரமகள்எனவுங் கூறுவர்.

(துணிவு.)

[பூவிடைப் பூப்போற் பூம்பதம் படியக்
காவியை வென்ற கண்ணிணை யிமைப்ப
மேவுரு வுற்றென் னுயிருறைந் தெனவிப்
பூவிடை யுறலாற் புவியிடத் தவரே.

என்று துணிந்துகொண்டு 'இம்மாதரது குறிப்பை யுணர வேண்டும்' என்று அப்பொற்கொடியை நோக்கினன். அம்மாது நல்லாளின் கண்ணிணைகள் தாமரைகளோடு நீலோற்பலங்கள் கூடி யுறவாடினாற்போல அந்நற்குணக் காளையின் கண்களுடன் கூடி யுறவாடின.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில."

என்பது பெரியார்வாக்கன்றோ? அம்மாதர்க்கரசியாரது இன்னோக்கு தன்னோக்கோடு ஒத்தலின் "இம்மாதர் நமது உரியினுக்கு உறுதி பயக்கவந்த இன்னமுதே யாவர். இனி ஐயமில்லை' என்று துணிந்துகொண்டு அவள் தன் தனங்களில் அணிந்திருந்த முத்துமாலையைநோக்கி, "பொன்னங்குவடுகளிற் பொருந்திய நக்ஷத்திரக் கூட்டங்களை யொப்ப இப்பொன்னங்கொடிபோல்வார்தங் கொங்கைகளைச் சேர்ந்து விளங்குகின்ற ஓ முத்துகளே! நீங்கள்யாரைக் கண்டு * நகுகின்றீர்கள்? இதோ இம்மலர்கள்தோறுஞ் சென்று படிந்து ரீங்காரம் செய்கின்ற வண்டைக்கண்டு நகுகின்றீர்களா? அன்றி, என்னைக் கண்டு நகுகின்றீர்களா? நீங்கள் இவ்வண்டைக் கண்டு நகுதற்கு நியாயமுண்டு. என்னைக்கண்டு நகுதற்கு நியாயமில்லை. என்னையெனின் இவ்வண்டு தக்கதொருமலரை நாடியடைந்து அதினிடமே தங்கி அதிலிருக்கின்ற தேனை யருந்துதலின்றிப் பல மலர்களிலுஞ் சென்று அதிற் சிறிதும், இதிற் சிறிதுமாகத்

[இதன்பொருள்:—(இம்மாதர்) பூமியின்கண் தாமரைப்பூவைப்போன்ற தமது அழகிய பாதங்கள்படியவும், நீலோற்பலத்தை வென்ற இரண்டு கண்களும் இமைக்கவும் எனதுயிரானது (யான்) அன்புசெய்தற்குரிய உருவினைப் பெற்று என்னெதிரில் (வந்து) நின்றாற்போலப் பூமியின்கண் நிற்றலான் மானிடமாதரே என்று துணிந்தான் என்பது.

[இதன்பொருள்:—"காமத்திற்குரிய இருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கால் ஒக்குமாயின், அவர் வாய்மை தோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனும் உடையனவல்ல" என்பது.

* நகுதல்—சிரித்தல்.

தேனையருந்திப் பலஇடங்களிலும் அலைந்து திரிகின்றது. ஆதலின் இதன் நிலைமை கொடிது. அத்தன்மையனல்லேன் யான். உங்களரசியார்க்கு முற்றும் உரியதாக்கிவிட்ட என்னன்பை இனியொரு மாதுநல்லார்க்கு ஒருகாலும் உரியதாக்குவேனல்லேன். உங்கள் அரசியார் தம் அருளைப்பெறாதவழி என்னுயிரைத் துறப்பதன்றி மற்றொருமாதனை யான் கனவிலும் நினையேன். ஆகையால் நீங்கள் கருதுவது இவ்வண்டை நோக்கியதாயின் நியாயமாகும். என்னை நோக்கியதாயின் சிறிதும் நியாயமாகாது" என்றனன்.

அதைக்கேட்ட சாரசநேத்ரி, தன்கொங்கைகளில் விளங்கும் முத்துக்களைப் பார்த்து, "ஓ முத்தினங்களே! நீங்கள் மற்றவர்களைப் பார்த்து நகுகின்றவர்களல்லீர்கள். நான் சிறிய வயதிலிருந்து என்னுடன் பழகியுடனுண்டு வளர்ந்தவர்களில் எவரிடத்தும் என்னன்பைச் செலுத்தாமல் இப்பொழுதே கண்ட இவரிடத்தே என்னன்பை முற்றுஞ் செலுத்திவிட்டதற்காக நீங்கள் என்னைக் கண்டு நகுகின்றீர்கள். இதெல்லாம் சந்திரனும்பொழுதில், இருப்பினுந் தாமரையானது சூரியனைக் கண்டன்றிமலருமா? என்மனம் இவர்பாற்சென்றது. இப்பொழுதே என்று நீங்கள் நினைக்கவேண்டாம். அஃது இவர்பாற்சென்று வெகுநாட்களாயின. இவர் மனம் என்னால் அபகரிக்கப்பெற்றது மாத்திரந்தான் இப்பொழுது நிகழ்ந்த காரியமாகும். இவரைப்பற்றி என்தன் மாமா அடிக்கடிச் சொல்லிக்கொண்டிருந்ததை நீங்கள் கேட்டதில்லையா? இவரைக் கண்டது இப்பொழுதாகவிருப்பினும், இவரை இத்தன்மையரென்று வெகுநாட்களுக்கு முன்னரேயே யான் அறிந்துள்ளேனாம். ஆகையால், என் மனம் இப்பொழுதே இவரிடஞ் சென்றதாக நீங்கள் கருதியதுமுற்றும் பிழையேயாகும்" என்றாள்.

அதைக்கேட்ட சச்சரித்ரன் "என்னுயிர்ப்பதுமையே! நீயாவர் தங்குலக்கொடி? என்னைப்பற்றி நினக்குச் சொல்லினர் யார்? எல்லாவற்றையும் யான் அறிய விரும்புகின்றேன். நீ தெரிவித்தல் கூடுமோ?" என்றான்.

சாரசநேத்ரி நாணத்தினால் தலைகுனிந்துகொண்டு "என் அன்பிற்கிருப்பிடமாகிய தங்களுக்குத் தெரிவிப்பதனையும் அடியாளிடத் திருந்து அறியவேண்டின்? தோழிமார்கள் அதோ வருகின்றார்கள். ஆகையால், இப்பொழுது தெரிவிக்கச் சாவகாசமில்லை. அதைப்பற்றி

என்னை மன்னிக்கக் கோருகின்றேன். நீங்கள் அவற்றை மிக விரைவாக உணர்ந்து கொள்வீர்கள். அங்ஙனந் தாங்கள் உணர்ந்து கொள்ளுதலில் தங்களுக்கு யாதோர் ஐயுறவும் வேண்டாம்" என்றாள்.

உடனே சச்சரித்ரன் அங்ஙனமாயின் "யான்சென்று வருகின்றேன்" என்று அவளிடம் விடைபெற்றுக்கொண்டு உயிரைப்பிரிந்து உடல்செல்லும்வியப்பேபோலச்சென்று சதாநந்தனைச் சேர்ந்தான்.

சதாநந்தன்:—(சச்சரித்ரனது முகவாட்டத்தைக் கண்டு) நண்ப! மலர்பறிக்கச்சென்ற நீ அம்மலர்களைப் பறித்துக்கொண்டு வாராமல்முகவாட்டத்துடன் திரும்பியதற்குக்காரணமென்ன?

சச்சரித்ரன்:—நண்ப! நான் சென்ற இடத்தில் * ஒரு பசும் பொற்கொடியின்மீது அழகிய தாமரை மலர் இருக்கக்கண்டு அதிசயித்துநின்றேன். அம்மலரில் இரண்டு விற்களும், இரண்டு கூரிய அம்புகளும் சார்த்திவைக்கப் பெற்றிருந்தன. ஒரு நிமிஷத்திற் கெல்லாம் அவ்விரு விற்களும் சிறித்தனவாய உடனே அவ்விரு §§ வாளிகளும் வந்து என் நெஞ்சைப் பிளந்தன. அதுவே என்முகம் இங்ஙனம் வாடியதற்குக்காரணம்.

---

* இங்ஙனம் ஒரு பசும்பொற்கொடியின்மீது தாமரையும், தாமரையில் விற்களும் வாளிகளும் இருந்தனவென்கூறியது அமைவுடைத்தோ எனின், அமைவுடைத்தாம் என்பதனை,

"புயலே சுமந்து பிறையே யணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை யன்னமுஞ்செந்நெல்
வயலே நடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே"

என்ற செய்யுளாலறிக.

ஈண்டுப் 'பசும்பொற்கொடி' என்றது சாரசநேத்ரியின் மேனியை. அழகிய தாமரை என்றது அவள் முகத்தை. இரண்டு விற்கள் என்றது அவளது இரண்டு புருவங்களை. இரண்டு கூரிய பாணங்கள் என்றது அவளது இரண்டு கண்களை. அவ்விற்கள் சிறித்தனவாய அவ்விருவாளிகளும் வந்தென் நெஞ்சைப் பிளந்தன என்றதற்கு அவள் தனது புருவங்கள் நெற்றியில் சிறிதே எழுவனவாய அழகிய நோக்கால் என்னை நோக்கினள். உடனே அந்நோக்கத்தால் என் நெஞ்சம் மற்றொன்றையும் நாடாத்தன்மையதாகாமற் கலக்கிவிட்டது என்பது கருத்து.

§§ வாளிகள்—பாணங்கள்.

[அதுவே—அவ்வாளிகள் அவ்வாறு என்னெஞ்சைப் பிளந்த செயலே.

சதாநந்தன் :—நீ ஒருபெண்ணினுக்கு உன் அறிவையெல்லாந் தோற்றுக் கலங்குகின்றாய். இஃது உனக்குத் தகுதியன்று. இது கலையறிவும், நல்லொழுக்கமும் இல்லாததீயரிடத்து நிகழ்தற்குரியதேயன்றிக் *கலை நிரம்பிய மதியும், †தண்ணிய ஒழுக்கமும் உடைய நின்போல்வாரிடத்து நிகழ்தற்குரியதன்று.

சச்சரித்திரன் :—என்னெஞ்சினை இருப்பிடமாகக் கொண்டிறையும் அம்மாதர்நல்லாளது வில்போன்ற புருவங்களும், வாள்போன்ற கரிய கண்களும், செங்கனி போன்ற வாயும், பொன்னங்கலசங்கள் போன்ற தனங்களும், அழகிய நுண்ணிய நூல்போன்ற இடையும் எத்தன்மையினரும் கண்டமாத்திரத்தில் நெஞ்சம் உருகும்படி செய்யத்தக்க வன்மையையுடையனவென்பதை நீ நேரிற் காணாமையால் இகழ்ந்து கூறினை. கண்டால் நீயேயன்றி, ஐம்பொறிகளையும் அடக்கிமேலான தவத்தைச் செய்யும் முனிபுங்கவர்களும் இங்ஙனங் கூறார்.

சதாநந்தன் :—நுண்ணிய பொருளமைந்த பலநூற்களைக் கற்றும், கேட்டும் உணர்ந்துள்ள நீ ஒரு பெண்ணின் கண் வலையிற் சிக்குண்டு வருந்துதல் இது படையிற் சென்றால் பகைவரது உடலைப்பிளந்து வெற்றிபெறும் யானையானது ஒரு சிலம்பியின் மெல்லிய நூலினாற் கட்டுண்டு கலங்குதல் போன்றது. நன்று! நன்று! நின்னையொப்பார் இவ்வுலகில் ஒருவரும் இரார்.

சச்சரித்திரன் :—நண்ப! அந்த அப்பொன்னங் கொடிபோல்வாளோ தமதுகண்ணாகிய கூரியவேலினால் என்னெஞ்சினைப்பிளந்ததன்றி என் நிறையையுங் கவர்ந்து சென்றாள். இங்கு நீயோ என் முன்னின்று என்னை இகழ்கின்றாய். இங்ஙனம் நீயும் இகழ்வாயானால் யானென்செய்வேன்? எவ்வாறு என் துன்பத்தையாற்றுவேன்?

சதாநந்தன் :—‡இவனே கல்வியிற் றுறைகடப்போன்றவன். இவனே அப்பெண்மணியின் கண்கள் உண்டாரைக் கொல்லுங் குணம் வாய்ந்த விஷத்தினைக் கண்டாரைக் கொல்லும் தம்முடைய குணத்தினாலும் பார்த்தறியுங் குணமில்லாத கீழ்லாம்பிஷத்தினைப் பார்த்தறியவல்ல தமது குணத்தினாலும் வென்று காதளவைக் கடந்து சென்று விளங்குகின்றனவெனவும், அம்மாதர் தம் தனங்கள் அம்

* கலைநிரம்பிய மதி—சாத்திரங்களையும் முற்றுங் கற்றுணர்ந்த அறிவு.

† தண்ணிய ஒழுக்கம்—சாந்தமான நடை.

மாதரிடத்துத் தனக்குண்டான ஆசையினும் அகன்றுவிளங்குகின்றனவெனவும் கூறுவாராயின் நாம் அதற்கு மாறாகச் சொல்லக்கூடியதென்ன இருக்கின்றது. இவனோ நன்னெறியிற் பிறழ்ந்துசெல்லுந் தன்மையுடையவனல்லன். அந்தகைய இவனுடையமனம் அம்மாதரசியை நாடுதற்குக் காரணமென்ன? அதுபகவானது சம்மதமாகவே இருத்தல்வேண்டும். இன்றேல் இவனுக்கு அவ்வாறு மனங்கலங்குதற்கு நியாயமில்லை. உலகில் எத்தனைபேரோ ரூபவதிகள் இருக்கின்றார்கள். இவன் இதுகாறும் எந்தப்பெண்ணையேனுங் கண்டு இவ்வாறு விருப்பங்கொண்டதுண்டா? இவன் கலாசாலையிற் படிக்கையில் எத்தனையோ சீமாட்டிகளைப் போன்ற பெண்கள் இவனை அடையவேண்டும் என்னும் விருப்பினால் இவனிடம் வந்து இதமானமொழிகளைக் கூறுவார்கள். அவர்களை இவன் ஒருபொழுதேனுங் கண்ணெடுத்துப்பார்த்ததுமில்லையே. ஆகையால், இவனுக்கு இவ்விருப்பம் முன்னைய தொடர்பால் உண்டானதே ஊழைத்தடுக்க வல்லார் யார்?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" அன்றோ?

இனி இவனைத் தடுக்க நினைக்கின் இடர்ப்படுவன்" என்று தனக்குள் எண்ணிச் சச்சரித்திரனைப் பார்த்து, "நண்ப! உண்மைப் பொருள்களின் தன்மையை உணர்ந்த நீயே இவ்வாறு கலங்கிநிற்பாயானால் மேல் உனக்குப் புத்திபுகட்டவல்லார் யார்? சமுத்திரம் வெப்பமுற்றால் மேல் எந்த நீரைக்கொண்டு வளாவி அவ்வெப்பத்தை மாற்றுவது? உன்னாற் காணப்பெற்ற அம்மாதரசியார் இருந்த இடம் யாது? யான் சென்று பார்த்துவருகின்றேன்" என்றான்.

சச்சரித்திரன்:—நண்ப! அதோ அடர்ந்திருக்கும் மரங்களுக்கு அப்புறத்தில் அம்மாள் அம்புஜவல்லியார் கூறிய விசித்திர மாளிகையிருக்கின்றது. அதற்கும் அம்மரங்களுக்கும் இடையில் ஓர் பொய்கை இருக்கின்றது. அப்பொய்கையின் பக்கத்தில் ஒருசெய்குன்று இருக்கின்றது. அக்குன்றின் பக்கத்தில்தான் அப்பொன்னங்கொடி இருக்கக்கண்டேன். ஆனால் இப்பொழுது அப்பொன்னங்கொடியைச் சூழ்ந்து சில மயில்கள் இருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

சதானந்தன்:—அப்படியா? நான் மிகவும் ஜாக்கிரதையாகச் சென்று பார்த்துவருகின்றேன். அதுவரையிலும் நீ இங்ஙனே துன்புறுதிரு.

என்று விடைபெற்றுக்கொண்டு சென்று அங்குள்ள மரங்களின் மறைவில் நின்று நோக்கினன்.

அப்பொழுது அச்செய்குன்றின் அருகில் நின்ற ஓரழகிய இளங்கொடிக்கு இரண்டு பெண்கள் மலர்களைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். இரண்டுபெண்கள் அப்பண்மொழியைச் சூழ்ந்து நின்றார்கள். அம்மடவன்னம் அம்மலர்களை வாங்கி அருகில்நின்றவர்களிடம் வெறுப்புடன் கொடுத்து விட்டாள். வந்தவர்களில் ஒருத்தியாகிய 'சுபாங்கி' என்பவள் "அம்மா! எங்கண்மீது தங்களுக்கு யாதுகோபம்? நாங்கள் ஒரு குற்றமுஞ் செய்திலோமே! எதற்காக நாங்கள் கொடுத்த மலர்களை அவ்வளவு வெறுப்பாக அவர்கள் கையிற் கொடுத்து விட்டீர்கள்." என்றாள். அதைக் கேட்டு அருகில் நின்றவர்களில் ஒருத்தியாகிய வனஜாக்ஷி, அவளை நோக்கி, தங்காய்! நீங்கள்கொடுத்த மலர்களையேனும் தமதுகை யால் வாங்கி எங்கள் கையிற் கொடுத்தார்கள். நாங்கள் கொடுத்த மலர்களைத் தமதுகையால் தொடவும் இல்லை நம்மனைவர் மீதுமே அவர்களுக்கு ஏதோகோபம் உண்டாயிருக்கின்றது" என்றாள்.

சாரசநேத்ரி—சகிகளே! உங்களிடத்தில் எனக்குச் சிறிதுங் கோபமில்லை. எனக்கென்னமோ இம்மலர்களைக்கண்டால்வெறுப்பாகவே இருக்கின்றது. இம்மலர்களை மாத்திரமல்ல. இச்செய்குன்றைக்கண்டாலும் வெறுப்பாகத்தான் இருக்கின்றது. இப்பொய்கையைக்கண்டாலும் வெறுப்பாகவே இருக்கின்றது. அப்பா! இவ்வண்டுகளின் கர்ணகடூரமான பேரிரைச்சல் என் செவிக்குப் புகைவண்டியின் ஓசையைக்கேட்பதுபோலிருக்கின்றது! இக்குயில்களும், இச்சிறு பறவைகளும் போடும் இரைச்சல் பத்துப்பஞ்சுச் சாலைகளின் விடியற்காலச் சங்குகள் ஒரே காலத்தில் கூவுவதுபோலிருக்கின்றது. இம்மரங்களின் கிளைகள் அசைவதனாலுண்டாகும் ஓசை சமுத்திரம் அலைகளை வீசுவதனாலுண்டாகும் ஓசையினும் மிக்கதாகக் கேட்கின்றது. எனக்கு இவ்விருக்கைச்சிறிதும் பிடிக்கவில்லை. வாருங்கள் மாளிகைக்குப்போவோம். என்று சொல்லிக் கொண்டிருக்கையில் ஒரு சேடி வந்து சாரசநேத்ரியை நோக்கி "அம்மா! தங்களை வைத்தியர் அழைத்துவரச் சொன்னார்" எனச் சாரசநேத்ரி "இதோ நாங்களும் வருவதற்குப் புறப்பட்டோம்; இதற்குள் நீயும் வந்துவிட்டாய்" என்று கூறித் தன் தோழிகளோடு மாளிகைக்குப் போய்விட்டாள்.

சதாநந்தம்—அச்சிற்றிடைப்பெண்ணமுதின் அழகையும், மதுரமொழியையும் நேரிற்கண்டு கேட்டபின், அ! ஆ!! இம்மாதரசியார் தம் கூந்தல் பெரியமேகங்களே. இவர் தம் விழிகள் மான்களே இவர் தம்முகம் முழுமதியமே. இவர் தம்சொற்கள் இனியதேனே. இவர் தம் சாயல் மயிலே. இவரே நமது நண்பன் கூறிய மாதரசியார்.

நமது நண்பன் இன்னுண்ணிடைப் பண்மொழியார் தம் கருங் கண் வலையிற்சிக்கி வருந்தியதைக்கண்டு நாம் இகழ்ந்தது நமது அறியாமையினாலேதான். இம்மாதரசியார் தம் கண்ணாகிய சீரிய கூரிய வேலுக்கு அவன் தப்பிவந்ததை மிகவும் வியக்கத்தக்கதே.

அன்றியும் இம்மங்கை நல்லார் நமது நண்பன் தான் கொண்ட ஆசைக்கடலினின்றும் நீந்திக் கரையேறப் புணையாகியவரே என்பதை இவருக்கு இம்மலர் முதலியவற்றில் உண்டான வெறுப்பே நன்கு தெரிவிக்கின்றது. இவர் இம்மாளிகைக்குட் சென்றதனால் இச்சோலைக்கு உரிமையுடையவராகிய இம்மணிபுரத்து ஜமீன்தார் அவர்கள் செல்வமானவர்களாகவே இருக்கவேண்டும். இவர்களை அழைக்கவந்த அக்கிழ அம்மையார் வைத்தியர் அழைக்கின்றார் என்று சொன்னார்களே! அந்த வைத்தியர் யாராய் இருக்கலாம்? நம்முடைய ஐயா அவர்கள்தாமோ? அவர்களையன்றி இந்த ஜமீன் தார் அவர்கள் வீட்டில் இவ்வளவு உரிமை பாராட்டற்குரிய வைத்தியர் வேறொருவர் இருப்பதாக நாம் கேட்டிலோம். அவர் நாவசைந்தால் ஜமீன்தார் வீடே அசையும் என்று அனைவரும் சொல்ல நாம் கேட்டிருக்கின்றோம். அதற்கேற்ப அக்கிழ அம்மையார் வந்து வைத்தியர் கூப்பிடுகின்றார். என்றமாத்திரத்தில் அப்பொற்கொடியார் விரைந்து சென்றதே அவர்தான் என்பதை நிச்சயிக்கின்றது. ஆதலால், நமது நண்பனது விருப்பம் நிறைவேறும் என்பதிற் சிறிதும் ஐயம் இராது; என்று தனக்குள் எண்ணிக்கொண்டு திரும்பி வந்து சச்சரித்ரனை நோக்கி "நண்ப! நின் விருப்பம் நிறைவேறும்படி திருமகள் நாயகராகிய பகவான் திருவருள் புரிவார். நீ கலங்கற்க. இனி நாம் இங்கு இருத்தல்கூடாது, வருக, வீட்டிற்குச் செல்வோம்" என்று அழைத்துக்கொண்டு சென்றான். அவ்விருவரையுங் கண்டவுடன் அம்புஜவல்லியார் அவர்களுக்கு வெள்ளியினாற் செய்யப்பெற்ற திருமண் பெட்டியைக் கொடுத்தனர். அவர்கள் சிறிதாகவும் அழகாகவும் இருக்கும்படி திருமண்ணும், ஸ்ரீ சூர்ணமும் அணிந்துகொண்டு நின்றார்கள். அப்பொழுது அவர்களைக்கண்ட அவ்வம்மையார் ராமலக்ஷ்மணர்களைக்கண்ட

கோசலையைப்போல மகிழ்ந்து அவர்களுக்கு இனிய பலகாரங்கள் கொண்டுவந்து முற்கூறிய அறையிலுள்ள மேஜையின்மேல் வைத்தார்கள். சச்சரித்ரனுக்கோ அவற்றையுண்ண விருப்பமுண்டாகவில்லை; அவனது மனம் முற்றும் வேறிடத்திற் சென்றுவிட்டது. ஆயினும், நாம் இவற்றைச் சாப்பிடாவிட்டால் அவ்வம்மையாருக்கு வருத்தமுண்டாகுமே என்னும் அச்சத்தால் அவற்றைச் சிறிது சிறிதாக உண்பானாயினான். அவனது வேறுபாட்டைக் கண்டு அவ்வம்மையார் அவ்வேறுபாட்டின் காரணத்தையுணர்ந்துகொண்டவர்களாய் அதை யுணராதவர்போலவே இருந்து அவனுக்குப் பல உபசாரங்களைப் புரிந்து அவற்றை உண்ணும்படி செய்தார்கள். அப்பொழுது சதானந்தன் "அவ்வம்மையார் தங்கள் மீது வைத்துள்ள பேரன்புக்காகத் தனக்குள் மிகவு மகிழ்ச்சியுற்று, அவ்வம்மையார் தங்களைக் காலையில் அச்சோலைக்குப் போகச் சொன்னதற்குக்கூட ஏதோ காரணம் இருத்தல்வேண்டும், அதுவும் ஐயா அவர்கள் வந்தால் நன்கு விளங்கும்." என்று எண்ணிக்கொண்டான். இங்ஙனம் அவ்விருவரும் அப்பலகாரங்களையுண்டு ஏதோ சில புஸ்தகங்களைப் படித்துக்கொண்டு பொழுதைப் போக்கினார்கள். மணி பன்னிரண்டாகப் பகற்போஜனமும் செய்துவிட்டு முன்போலவே படித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வம்மையார் அவர்கள் அங்ஙனம் படித்துக்கொண் டிருப்பதைக் காணுந்தோறு மிகவு மகிழ்ச்சி யடைவார்கள். இங்ஙனம் மாலைப் பொழுதாய்விட்டது. வானமெங்கும் நக்ஷத்திரங்கள் ஒளி செய்திருத்தல்போலப் பூமியெங்கும் விளக்குகள் ஒளி செய்து விளங்கின. பெரியோர்கள் ஐம்புலன்களின் வழியாகச்சென்று உயர்ந்து பரவிநின்ற பொறிகளை அடக்கிக்கொண்டு பர்ணசாலைகளில் உறைவதுபோலப் பக்ஷிகள் யாவும் வானவழியிற் செல்லுங்கால் உயர்ந்து பரவிநின்று தங்கள் இறகுகளை ஒடுக்கிக்கொண்டு தத்தம் கூடுகளில் உறைவனவாயின. சாரசநேத்ரியின் கூந்தலைப்போன்றிருக்கவேண்டும் என்னும் எண்ணத்தாற்போலும் இருள் படிப்படியாகக் கறுத்து மிகப்பெற்றது. சச்சரித்ரனுக்கு இருள் வளர வளரத் துன்பமும் வளர்வதாயிற்று. அவன் மனதில் ஏதேதோ! எண்ணினான். அவனுக்குக் கண்களில் அடிக்கடி நீர்ததும்பிற்று. அப்பொழுதெல்லாம் 'என்ன அடிக்கடி கண்ணில் தூசுபடுகின்றதே' என்று கண்களை நிமிட்டிக்கொண்டான். சதானந்தனோ அருகிலிருந்து அவனுக்குச் சமாதான மொழிகளைக்கூறி அவனைத் தேற்

றிக்கொண் டிருந்தான். சில சமயங்களில் ஏதோ சொல்லத் தொடங்குவான். உடனே அதை மறைத்து 'என்ன ஐயா! இன்னும் வரவில்லையே' என்பான். அவற்றையெல்லாங் கண்ட சதானந்தன் "இனி இவனைச் சிறிது தூரத்தில் அழைத்துக்கொண்டு சென்று தக்க சமாதான மொழிகளைக்கூறி அழைத்துக்கொண்டு வரவேண்டும்" என்றெண்ணி அவ்வம்மையாரை நோக்கி "அம்மா நாங்கள் வெளிக்குப்போய் வருகின்றோம்" என்று விடை பெற்றுக் கொண்டு அவனை அழைத்துச் சென்றான். அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் வைத்தியரும் வந்தனர். வருதலும் அம்புஜவல்லியார் அவரை நோக்கிச் "சாரசையை அவர்கள் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டீர்களோ! அவள் சந்தோஷமாகத் தோழியரோடு அளாளாவி இருக்கின்றாளோ" என்றார்.

வைத்தியர் :—(புன்னகையோடு) சச்சரித்ரனும், சதானந்தனும், எங்கிருக்கின்றார்கள்?

அம்புஜவல்லியார் :—அவர்கள் இங்கில்லை வெளிக்குப் போயிருக்கின்றார்கள்.

வைத்தியர் :—சச்சரித்ரனது சமசாரம்,

அம்புஜ வல்லியார் :—நீங்கள் சாரசநேத்ரியின் சமாசாரத்தைக் கூறாமல் என்னை மாத்திரம் சச்சரித்ரனைப்பற்றிக் கேட்கின்றீர்களே அதுவென்ன?

வைத்தியர் :—சச்சரித்ரனைப் பார்த்தபின் என்னைக் கேட்பானேன். அவனைப் பார்த்ததனாலேயே தெரியவில்லையோ?

அம்புஜ வல்லியார் :—அவனைப் பார்த்ததனால் அவன் தன்மனத்தைச் சாரசநேத்ரிக்குப் பறிகொடுத்துவிட்டு வந்திருக்கின்றான் என்றுதெரிந்தது. சாரசையையும் பார்த்தாலல்லவோ அவளுடைய சமாசாரமும் தெரியும்.

வைத்தியர் :—அவள் நிலையும் அது தான்.

அம்புஜ வல்லியார் :—ஆனால், அவளும் இவனைப் பார்த்திருக்கின்றாள்.

வைத்தியர் :—அவள் இவனைப்பார்க்கத் தானே நான் இவ்வளவு முயற்சி செய்தது. அவள் இவனைப் பார்த்திராவிட்டால் பிரயோஜன மென்ன?

அம்புஜவல்லியார் :—அவள் இவனை நேரிற் பார்க்காதபொழுதே இவன்மீது அவ்வளவு ஆசை கொண்டிருந்தாளே! நேரிற்பார்

க்க பிறகு கேட்கவேண்டுமோ? நீங்கள் ஒன்று ஒன்று எண் ணிக்கொண்டிருக்கின்றீர்கள். அம்புஜவல்லியார் ஒன்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் ஒன்று எண்ணிக்கொண்டிருக் கின்றோம். இது பிறகு எப்படி முடியுமோ தெரியவில்லையே! ஆண்டவன் எண்ணம் நிறைவேறத்தான் நடக்கப்போகின் றது. பகவான் அப்படியே நிறைவேற்றுவாரானால் அது நமக்கு மிக வும் சந்தோஷத்தை விளைவிக்கும். இறுதி எல்லாம் பகவானுடைய செயல். அப்படியில்லாவிட்டால் குழந்தை சச்சரித்ரனுக்குத்தாமே அன்பதனை விளைவித்தவர்களாவோம். அது "சுவர் இருக்கச் சுவரை வைத்தெழுதினான் ஆண்டி" என்பதுபோலாகும். நாங்கள் இனித் தக்க முயற்சிகளைச் செய்யவேண்டும். நான் தங்களுக்குச் சொல்ல வேண்டியது என்ன இருக்கின்றது.

வைத்தியர்:—நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. சாரலை, சச்சரித் ரனையன்றி மற்றொருவரையும் கலியாணஞ் செய்து கொள்ளமாட் டாள். அவள் முன் சொன்னதும் அது தான். இப்பொழுது நான் வருகையிற் சொன்னதும் அது தான். அவள் அவர்கள் வயிற்றிற் பிறந்ததனால் அவர்களுக்குப் பெண் பிள்ளை தவிர மற்ற விஷயங்களி லெல்லாம் நம்முடைய குழந்தையே.

அம்புஜவல்லியார்:—அதற்கென்ன தடை? அவள் சமாசாரம் குழந்தையிலிருந்து அப்படித்தானே. அதனாலே தானே அவளை வேறு யாருக்கும் கொடுக்காமல் நமது சச்சரித்ரனுக்கே கொடுக் கும்படி செய்யவேண்டுமென்று தங்களுக்குச் சொல்லுகின்றேன்.

வைத்தியர்:—உனது எண்ணம் பாக்கியம்! எனது முழு எண் ணமும் அது தான் என்றார்.

இக்காலம் இங்கனம் பேசிக்கொண்டிருக்கையில் வெளியிற் சென்றிருந்த சச்சரித்ரனும், சதானந்தனும் வந்தனர்.

வைத்தியர்:—(அவர்களை நோக்கி) "நீங்கள் இருவரும் பரிய சார மைதானத்துக்கு வந்திருந்தீர்களாமே, ஏன் எனக்குத் தெரிவிக்க வில்லை? நான் அங்குத் தானே இருந்தேன்.

என்று சொல்லச், சச்சரித்ரன் சதானந்தனை நோக்கினான். உடனே,

சதானந்தன்:—தாங்கள் அங்கிருந்தது எங்களுக்குத் தெரி யாது. தெரிந்தால் நாங்கள் வாராமலும் இருப்போமோ?

வைத்தியர்—அம்புஜம்! நீங்கள் அங்கு வரும்போது நான் அங்கு இருந்ததைச் சொல்லவில்லையோ?

அம்புஜவல்லியார்—இல்லை, தாங்கள் குழந்தை சாரசநேத்ரியை அழைத்துக்கொண்டு போயிருந்ததைச் சொல்லவில்லை.

சச்சரித்ரன்—குழந்தையா? யாருடைய குழந்தை?

அம்புஜவல்லியார்—இந்த ஊர் ஜமீன்தாருடைய பெண்.

சச்சரித்ரன்—அதைக்கேட்டுப் பெருமூச்செறிந்து நாற்காலியிற் சாய்ந்தான்.

வைத்தியர்—(அவனை நோக்கி, சச்சரித்ரா! என்ன சோர்வுற்றிருக்கின்றாய்? தேகமேதேனும் அசௌக்கியமாயிருக்கின்றதோ?

அம்புஜவல்லியார்:— அவன் என்னமோ? பரிமளாச்ரமத்துக்குச்சென்று வந்தது முதல் அப்படித் தான் இருக்கின்றான்.

வைத்தியர்:— (கையின் நாடியைப் பார்த்து,) கையிலும் நோய்க்குரிய குறியொன்றும் இல்லையே. ஒருகால் திருஷ்டி தோஷமோ?

அம்புஜவல்லியார்:— ஆம், அப்படித்தான் இருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

வைத்தியர்:—அப்படியானால் சிறிது கர்ப்பூரஞ் சுற்றிப்போடு;

என்று சொல்ல அம்மையாருக்குப் பொறுக்க முடியாமற் சிரிப்பு வந்துவிட்டது.

வைத்தியர்:— என்ன சிரிக்கின்றாயே!

அம்புஜவல்லியார்:— ஒன்றுமில்லை, தாங்கள் சொன்னதற்குத்தான் சிரிக்கின்றேன்.

வைத்தியர்:— திருஷ்டி தோஷத்துக்குக் கர்ப்பூரஞ் சுற்றிப் போடாமல் வேறென்ன செய்வது? நோயானால் மருந்து கொடுப்பதும் வேறு தோஷமானால் அதற்குரியசாந்தி செய்வதுந்தானே யாவருஞ் செய்யும் வழக்கம்.

அம்புஜவல்லியார்:— அதற்குத் தடையில்லை.

வைத்தியர்:— அப்படியானால் நான் சொன்னதில் என்ன குற்றம்?

அம்புஜவல்லியார்:— குற்றமிருந்து தான் சிரித்தேன்.

வைத்தியர் :— குற்றமா! நான் சொன்னதை உன்னையன்றி மற்றுயாரேனுங் குற்றமென்று சொல்லுவார்களோ!

அம்புஜவல்லியார் :— சச்சரித்ரனுக் குண்டாயிருப்பதைப் போன்ற திருஷ்டி தோஷத்திற்கு உங்களையன்றி யாரேனும் கர்ப்பூரஞ் சுற்றிப்போடச் சொல்லுவார்களோ?

வைத்தியர் :— அதென்ன திருஷ்டி தோஷத்திலும் பலவகையுண்டோ?

அம்புஜவல்லியார் :— ஆம், உண்டு.

வைத்தியர் :— ஆகா! பரவாயில்லை. நீ எனக்குமேல் வைத்திய விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றாய். பெண்கள் இதற்குத்தான் நன்றாய்ப் படித்தவர்களாய் இருத்தல்வேண்டும் என்பது.

அம்புஜவல்லியார் :— நான் சொன்னது குற்றமாயிருந்தால் மன்னிக்கக் கோருகின்றேன்.

வைத்தியர் :— இதுவென்ன "கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல்" இருக்கின்றது. நான் வேடிக்கையாகச்சொன்னால் நீயப்படிச்சொல்லுகின்றையே. நீயென்னகுற்றஞ் செய்தாய், நான் இப்பொழுது உன்னை மன்னிக்க? ஆனால் நீ படித்தவளல்லையோ?

அம்புஜவல்லியார் :— சொத்தினருமை சொத்துடையவர்களுக்குத்தான் தெரியும். சொத்துக்கு என்னதெரியும்.

வைத்தியர் :— ஆ! அதுசரி, இப்பொழுது நான் உன்னையொன்று கேட்கின்றேன்; நீ அதற்கு அச்சமில்லாமற் பதில் சொல்ல வேண்டும்.

அம்புஜவல்லியார் :— தங்களிஷ்டப்படி சொல்லுகின்றேன்.

வைத்தியர் :— திருஷ்டி தோஷத்திற் பலவகையுண்டு என்று சொன்னையே, அவ்வகை எத்தனை யெனத்தெரியுமா உனக்கு!

அம் :— ஆம், தெரியும்.

வைத்தியர் :— எத்தனை வகை?

அம்புஜவல்லியார் :— இரண்டு வகை.

வைத்தியர் :— அவைகளை விளக்கிச்சொல். பார்ப்போம்.

அம்புஜவல்லியார் :— ஒன்று தேகத்தைப்பற்றி நலிவது; மற்றொன்று மனத்தைப்பற்றி நலிவது.

வைத்தியர்:— அவற்றுள், நமது சச்சரித்ரனுக்கு உண்டான திருஷ்டி தோஷம் எது?

அம்புஜவல்லியார்:— மனத்தைப்பற்றி நலிவது தான்.

வைத்தியர்:— 'ஓகோ! எது விஷயங்கஷ்ட சாத்தியமானதாயிருக்கின்றதே' என்று சொன்னார். உடனே சச்சரித்ரன் அறைக்குட்சென்று ஒருநாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். உடனே அம்புஜவல்லியார் உட்சென்று பார்த்தார். அவன் கண்களில் நீர் ததும்பி இருந்தது. உடனே அம்புஜவல்லியார் வைத்தியரை அழைத்தார். வைத்தியரும், சதானந்தனும் அறைக்குட்சென்று அவனருகில் உட்கார்ந்தார்கள். பிறகு வைத்தியர் சச்சரித்ரனை நோக்கி, 'குழந்தாய்! நீ ஏன் கலங்குகின்றாய். நீ படித்தவனை இருந்தும் இப்படிக் கலங்கலாமோ'! என்றார்.

அம்புஜவல்லியார்:— 'வைத்தியர் கைவிட்டால் யார் தான் கலங்கமாட்டார்கள்' எனச்சச்சரித்ரனுக்குஞ் சிரிப்புண்டாயிற்று. ஆயினும் அவன் அதை அடக்கிக்கொண்டு நாணத்தினால் தலை குனிந்து கொண்டான்.

வைத்தியர்:— சச்சரித்ரனை நோக்கி'குழந்தாய்! நீ வருந்தாதை. நான் என் முழுமுயற்சியையும் உன் விருப்பத்தைக் கைகூட்டுவிக்கும் விஷயத்திலேயே செலுத்தத்துணிந்து கொண்டேன்' என்றார்.

சச்சரித்ரன் அப்பொழுதே அப்பொற்கொடியை அடைந்துவிட்டவன் போலக்களித்துத் தங்களுக்கு அன்பின் மிக்க தாய்தந்தையரைப்போன்ற அவர் காலில் விழுந்தனன். அம்புஜவல்லியார் "நீ சாரசநேத்ரியை யடைந்து சுகமுறுவாயாக" என்று ஆசிர்வதித்தனர். வைத்தியரும் "அதுவேயாகுக" என்று ஆசிர்வதித்தனர். பிறகு அனைவரும் உண்டு கண்டுயிலலாயினர்.

இவர்கள் இங்ஙனமாகச் சாரசநேத்ரி வீட்டுக்குவந்தபின் சிறிதும் பொலிவின்றி மிகவும் வாட்டமுற்றிருந்தனள். "தோட்டத்திற்சென்றிருந்தபோது பல இடங்களிலும் உலவியிருப்பாள்; அதனாலேயே அப்படியிருக்கின்றாள்" என்று அனைவரும் எண்ணிக்கொண்டார்கள். வனஜாக்ஷிமாத்திரம் அவ்வாறு நினையாமல் இதற்குஏதோ காரணம் இருத்தல்வேண்டுமென்றுஎண்ணி "அம்மா! நாம் இன்றுகாலையில் பார்க்கும்போது பொய்கைகளில் மலர்ந்திருந்த தாமரைகள் எல்லாம் இப்பொழுது தங்கள் காதலரைக்காணப்பெறாதபொற்கொடியார் முகம் எனக்குவிந்திருக்கும். அல்லி தங்காதலரை யடைந்

திருக்கும் கிளிமொழியார் வதனமென மலர்ந்து விளங்கும். பறவைகள்யாவும் தங்கள் தலைவரை அணையப்பெறாதார்கள்போல், ஒருவருடனும் பேசுதலின்றிக் கலைமற்றிருப்பதுபோலக் கூடுகளில் அமைந்திருக்கும். இக்காலமானது தனிப்போராசர்கள் மறைந்த காலத்தில் தோன்றி எளியவர்களையெல்லாம் வருத்தும் தீயவர்களைப்போல மன்மதனார், சந்திரனும் தோன்றித் தனித்திருந்த பெண்களையெல்லாம் வருத்துதற் குரியதாகும். அப்பா! மன்மதனது ஆற்றலை என்னென்று சொல்வேன். அவனோ உருவில்லாதவன். அவன் பிடிக்கும் வில்லோ சிறு பிள்ளைகளும் தங்கள் மெல்லிய கரங்களினால் ஒடித்து விடத்தக்க கரும்பாகும். அதிற் பூட்டும் நாணோ ஓரிடத்தும் தங்கியிராமல் மலர் தோறுஞ்சென்று திரியும் வண்டுகள். அவனுக்கமைந்த பாணங்களோ வண்டுகள் தாவினும் நன்மையார்ந்த மெல்லிய தங்கால்களாற் கிண்டிக்கிழிக்கத் தக்கமலர்கள். அவன் ஏறுந்தேரோ அவனைப்போல உருவமின்றித் திரியும் காற்று. அப்படியிருந்தும் அவன் பெறும் வெற்றியை என்னென்று சொல்வேன்! அவனுக்குத் தோற்காத வீரர்களை எந்தவுலகினும் கிடையார். அவனுக்குப்பயந்து பிரமன் வாணியை நாவில் வைத்து அவன் நெஞ்சில் எய்யும் மலராகிய தாமரையைக் காலில் மிதித்து, அவன் ஒருகால் மீறிவரின் அவன் தலையிற்போட்டுவிடவென்று கையில் தண்டத்தையேந்தித் தமது நான்குமுகத்திலுமுள்ள எட்டுக்கண்களாலும் நான்கு திசைகளையும் பார்த்துக்கொண்டிருக்கின்றார். சிவபிரான், "அப்பா! அவன் மிகக்கொடியதுஷ்டன். அவன் முன்னம் ஒருநாள் நமது தவத்தைக் கலைத்ததற்காக அவனுடலை நாம் சுட்டெரித்த பகையை அவன் மிகுதியாக வைத்திருக்கின்றான். ஆகையால் நாம் மற்றவர்களைப்போல அவ்வளவு இலேசான உபாயத்தைச் செய்தல்போதாது" என்றெண்ணி உமாதேவியைத் தமது தேகத்தின் ஒரு பாதிமுழுதும் அமைத்துக்கொண்டார். அவர் அதோடும் அமையாமல் "நாம் அவனது படைகளாகிய பெண்களில் ஒருத்தியைச் சிரசில்வைத்துக்கொண்டால் அவன் தனக்கு நாம் சிறந்த மரியாதைசெய்ததாக எண்ணி நம்மீதுள்ள சீற்றத்தைச் சிறிதேனு மாற்றக்கூடும்" என்றெண்ணிச் சிரசில் கங்கையையும் வைத்துக்கொண்டார். அதோடும் அமையாமல் அவர் மனங்கலங்கிற்று. அதனால் அவர் "அவன் முன்னே உருவமோடிருந்தான். நாம் கண்ணாற் சுட்டெரித்து விட்டோம். இப்பொழுது உடலின்றி யுலவுகின்றான். ஆதலால், இச்சமயம் அவன் வந்து விடுவானானால்

அவனை எதிர்க்க நம்மாலாகாது. அவனிடம் "மன்மதா! இனிநான் உன்னுடன், எக்காலத்திலும் பகை கொள்ளமாட்டேன். இதோ யாவரும் அறியச்சத்தியஞ் செய்கின்றேன்." என்று சத்தியஞ்செய்து தப்பித்துக்கொள்வதே தகுதியாம் என்று எண்ணி அவன் வந்தால் உடனே யாவரும் அறியச்சத்தியஞ் செய்தற் பொருட்டுக் கயிலாயமலையிலேறிக் கையில் மழுவைச் சித்தமாக வைத்துக்கொண்டிருக்கின்றார்.

விஷ்ணுவானவர் இவர்கள் செய்வதுபோல நாம் செய்தல் கூடாது. அவன் வருதற்குரிய இராக்காலத்தைத் தடுத்து விடுதலே தகுதியென்றெண்ணிக் கோடிசூரிய பிரகாசமான திகிரியைக்கையிலேந்திக் கொண்டார். மீண்டும் "அவன் இவ்வுளவினை யறிந்து "ஆகா! எனது வன்மையைக் குறைக்க இத்தந்திரஞ்செய்கின்றீரோ" என்று வெகுண்டு கேட்பானாகில் என் சொல்வதென்று எண்ணி அப்படி அவன் கேட்பானாகில் "அப்பா! நீ யாரையேனும் விரைந்து வெல்ல நினைத்தால் உடனே இரவையுண்டாக்கும்படி இச்சக்கரத்தைச் சித்தமாகக்கையிலேந்திக் கொண்டிருக்கின்றேன். இது பாரதயுத்தத்தில் அவ்வாறு செய்ததை நீயும் பார்த்துத்தானே இருக்கின்றாய். மைத்துனன் பொருட்டு அப்படிச் செய்தநான் என் புத்திரனாகிய உன்பொருட்டு அப்படிச் செய்வேன் என்பதில் என்ன சந்தேகம்" என்று தந்திரமாகச் சொல்வோம். அப்படியுங் கேளாமல் நமது மார்பில் பாணங்களை பெய்யத்தொடங்குவானாகில் "குழந்தாய்! உனது பிரயாசையைக் குறைக்கவெண்ணி நீ விடும் பாணங்களை எடுத்து என் மார்பில் நானே விட்டுக்கொண்டேன்; பார்" என்று இத்திருமகளின் கால்களைக் காட்டிவிடலாம். அவற்றையவன் தன் பாணங்கள் அல்ல, ஒரு பெண்ணின் கால்களென்று அறிந்தாலும் அப்பெண் தன் தாயாகையால் நம்மீது எய்யும் பாணங்கள் தன் தாயாகிய அவள்மீதும் படுமே என றஞ்சி யாதொன்றுஞ்செய்யாமற் போய்விடுவான்" என்று எண்ணி உலகமாதாவாகிய திருமகளையெடுத்து மார்பில் வைத்துக்கொண்டார். இப்படி மூவர்களும் அஞ்சி நடுங்கும்படி செய்யும் அவனது ஆற்றலை யார் சொல்லவல்லவராவர். 'அம்மா! தீயவருக்குத்தீயவர் உதவிபுரிவர் என்பது பொய்யாமா? அத்தீயவனை மன்மதனுக்கு அந்தோ இக்கொடிய மாலையானது எவ்வளவு உதவி புரிகின்றது பார்த்தனையா" என்றாள்.

சாரசநேத்ரி:—தங்காய்! தீயவர்களுக்குத் தீயவர்கள் மாத்திரமா உதவி புரிகின்றார்கள்? நல்லவர்களிலுஞ் சிலர் உதவி புரிகின்றனர். துரியோதனனுக்குப் பீஷ்மரும், துரோணரும், கிருபாசாரியர் கொடையின் மிக்க கர்ணமகாராஜர் அஸ்வத்தாமர் முதலியவர்களும் உதவி புரியவில்லையா? ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு ஆதரவான இடத்தை எண்ணிப் பிறருக்குண்டாகுந் துன்பத்தைக் கருதாதவர்களாகின்றார்கள். சிலர் தங்கள் உயர்குடிப்பிறப்பையுங் கவனித்தலின்றி அவ்விதத்தீயர்களுக்கு உதவி புரிகின்றனர். உலகத்துக்கெல்லாம் தாயுந் தந்தையுமாயிருந்து உலகத்தையெல்லாந் தந்தருளும் பதுமநாபர் தம் அழகிய மார்பகத்துறைபவராகிய பிராட்டியாருடனும், உண்டவர் தம் உயிரைரக்ஷிக்கும் அமுதம் காமதேனு, கற்பகமுதலிய நல்ல பொருள்களுடனும் தோன்றிய தண்மதியாரும் வெம்மதியினராய் இக்கொடிய மன்மதனுக்கு உதவி புரிவதை நீ கவனிக்கவில்லைபோலும்.

வனஜாக்ஷி:—அம்மா! எவ்விடத்திற் பிறந்தாலும் என்ன? யாருடன் பிறந்தாலும் என்? அவரவர் இயற்கைக்குணம் போகுமா? நஞ்சுபாற்கடலிற் பிறந்ததேனும் தீமையே செய்யும். ஒரே மரத்திற்றோன்றும் கிளை, இலை, புஷ்பம், பிஞ்சு, காய், பழம், பட்டை என்னும் இவைகள் வெவ்வேறு குணங்களையுடையனவாக இருக்கவில்லையா? இவர் மேலுக்கு நல்லவரைப்போல நடிப்பவரேயல்லாமல் இயற்கையில் அகத்தில் நல்ல எண்ணமுடையவர் அல்லவர். "அகத்தினழகு முகத்திற்றெரியும்" என்னும் பழமொழியின்படி இவரகத்தமைந்த கொடிய இருளமைந்த எண்ணத்தை இவர் முகந் தெரிவிக்கின்றதே. இன்னம் இவர் கொடியவரென்பதற்கு அதனினும் பெருஞ்சாக்ஷி வேறொன்று வேண்டுமோ? அந்தோ! இவரால் வருத்தமுற்ற பலபெண்கள் இட்ட சாபத்தினாலேதான் இவர் எப்பொழுதும் வளர்வதும், தேய்வதுமாக இருக்கின்றனர்.

சாரசநேத்ரி:—தங்காய்! இவ்வளவு யோக்கியமானவரையோ கயிலாசவாசராகிய சிவபிரான் தமது சடையில் தரித்துக்கொண்டிருக்கின்றனர். இவர் தாமோதரனுடைய மன்மதனைச் சுட்டெரித்த அச்சிவபிரான் இவரையேன் இன்னும் சுட்டெரிக்காமலிருக்கின்றாரோ தெரியவில்லையே. அவரைப் பித்தர் என்கின்றார்களே; அது சரியாகத்தான் இருக்கின்றது. அவர் கொடியவைகளாகிய சர்ப்பங்களையே ஆபரணமாக அணிந்துகொண்டார். பாவையுங்கொல்லும்

தன்மையுள்ள கொடிய விஷத்தை நெஞ்சில் வைத்தார். அநேக இளம்பெண்களுக்குத் துயரைச்செய்யும் இக்கொடுமதியாரைச்சிரசில் வைத்தார். அவரது செய்தி மிகவுநன்றாய் இருக்கின்றது. அவர் தம் காதலியராகிய உமாதேவியார் தம் நெற்றியோடு இக்கொடுமதியார் பகைகொண்டவரா யிருத்தலையுங் கவனித்திலர் போலும். இக்கொடுமையை எண்ணியே போலும் உமாதேவியார் தமது தேகம்பாதியாகவற்றினர். அவர்" தம் இளையபுத்திரரான சுப்பிரமணியர் கண்ணீராறாய்ப் பெருகி இருப்பதும் அதை யெண்ணித்தான்போலும். இக்கொடுமதியாரை விடச்சொல்லி வேண்டிக்கொள்ளத்தான்போலும் அவர் தம் மூத்தபுத்திரராகிய விநாயகர் எப்பொழுதுந் துதிக்கை கொண்டார். ஆ! இக்கொடுமதியார் தங்கிரணங்களுக்கு இவ்வளவு வெம்மை எப்படி யுண்டாயிற்றோ? சூரியபகவான் கோடைக்காலத்தில் ஏரி குளம் முதலிய நீர் நிலைகளும் அநேக ஆறுகளும் வற்றும்படியாகவும், பூமி பல இடங்கள் வற்றாமல் வெடிப்புண் டாகும்படியாகவும் பரப்புங் கிரணங்களுக்கும் இவ்வளவு வெம்மை இராதே. இத்தீமதியாருடைய கிரணங்களால் உஷ்ண மேறியதனாலேயே இம்முத்துவடங்களும் மிகவும் உஷ்ணமாயிருக்கின்றன. இம்மலர்களும் என்னை வெறுக்கின்றன. இப்பஞ்சணையும் சூடாயிருக்கின்றது. இதுவென்ன ஆச்சரியம். நங்காய்! நீயுமென்ன என்மேற் பகைகொண்டனையோ? சந்தனமென்று என்மேலெல்லாம் அனற்குழம்பை வாரிவாரி யப்புகின்றனையே! எனதருமைத் தோழியாகிய உனக்கு இது தகுதியாமோ? ஆ! ஆ!! விசிறாதே, விசிறாதே; விசிறியின் காற்று என்மேற் படுந்தோறும் என் உயிர் பறந்து போவதுபோ லிருக்கின்றது. விசிறியின் காற்றுங்கூட மிகவும் வெம்மையாகத்தான் இருக்கிறது. ஆம். அது நியாயந்தான். தீயவூழினால் வருந்தும் ஒருவருக்கு அச்சமயத்தில் உலகத்தில் எல்லாப் பொருள்களாலுந் துன்பமே யுண்டாகின்றது. இஃது உலகத்தில் இயல்புதான், ஆ! என்றும் இல்லாமல் விந்தையாக இவ்விரவு இவ்வளவுகாலம் நீடித்திருப்பதற்குக் காரணம் யாதோ தெரியவில்லையே! இவ்விரவுங்கூட இன்று வெகு நேரம் இருந்து என்னை வருத்துதற்கு வரம்பெற்று வந்ததோ? அன்றி நளாயினியைப்போல வேறு யாரேனும் ஒரு பதிவிரதை இரவு புலராமல் இருக்கும்படி சாபமிட்டனளோ? அன்றிச்சூரியன் தான் மேற்குத் திசையாகப் போகையில் மேற்குச் சமுத்திரத்தில் விழுந்து முழுகிப்போயினனோ? ஆ! தூக்கமும் வரவில்லையே! இமையாநாட்டத்தினராகிய தேவர்கள் தூக்கத்தின் சுகத்தையறிய

விரும்பித் தங்கள் விழிப்பை எனக்குக் கொடுத்துவிட்டு என்னுடைய தூக்கத்தை மாயமாய்க்கொண்டு போய்விட்டார்களோ? எல்லாவுறுப்புகளிலுஞ் சிறந்த கண்களே! நீங்கள் யாரைப் பார்க்கின்றீர்கள். நீங்கள் யாரைப் பார்க்கின்றீர்களோ அவரை எனக்குங் காட்டுங்கள். ஆ! ஆ!! கண்களே இவர்தாம் இன்றுகாலையில் என் மனதைப் பறிகொண்டுபோனவர். என்னுயிருக்குயிரான என் அன்பரே! தாங்கள் என்முன் தோன்றித்தோன்றி மறையவேண்டாம். ஏன் இப்படி இம்மடக்கொடியை வாட்டுகின்றீர்கள். ஆ! ஆ!! இதுவென்ன உங்களுருவத்தை எங்குந் தோன்றக்காட்டி மாயஞ்செய்கின்றீர்களே! தாங்கள் காலையில் தங்கள் மனதை முற்றும் எனக்கே கொடுத்துவிட்டதாகச் சொன்னீர்களே. முன்னே அப்படிச் சொன்ன தாங்கள் இப்போது இப்படி செய்யலாமா? கோபிகாஸ்திரீகளின் இல்லந்தோறுந் தானேயாய் இருந்து அவர்களை மயக்கி ஜாலம்புரிந்த மாயப்பிரானிடம் அம்மாயவித்தையைக் கற்றுக்கொண்டு வந்திருக்கின்றீர்களோ? அங்கு அவரை விரும்பி இருந்த பெண்கள் பலர். ஆகையால், அவர் அம்மாயத்தைப் புரியவேண்டியது அவசியமாயிற்று. இங்கு உம்மை விரும்பியிருப்பவள் நான் ஒருத்திதானே. தாங்களேன் இப்படி மாயஞ்செய்யவேண்டும். ஆ! என்ன மதிகேடான சொல்லைச் சொல்லிவிட்டேன். தங்களைக்கண்டால் தெய்வமாதர்களும் காதலிப்பார்களே! அப்படியிருக்கத்தங்களை அவாவிநிற்பவள் நான் ஒருத்திதான் என்று சொன்னது தவறுதான்; ஆனால் எனது கருத்து அதுவன்று; இங்குத்தங்களை விரும்பி இருப்பவள் நான் ஒருத்தி என்பதேயாகும். ஆகையால் என்னை மன்னிக்கக்கோருகின்றேன். ஆ! என்னருமைத்தோழி, வனஜாக்ஷி! இங்கு இப்பொழுது என் கண்முன் நின்றாரே. அவர் எங்குச்சென்றார்? நீ பார்த்தனையா? அப்ப! அவர் என்ன மாயவித்தைக்காரர். அவர் சாந்தமும், கருணையும், அன்பும் நிறைந்தவராய்க் காணப்பட்டாரே. அவருங்கூட இப்படிச் செய்வாரா? பெண்களை வருந்தவிட்டு வேடிக்கைபார்ப்பதில் யாருக்குமே இஷ்டமுள்ளதுபோலும். இதுவென்ன கனவா? அன்றி உண்மையாக அவர்தாமே வந்தனரா! எங்கெதன்குப்போயினர்." என்று சொல்லிக்கொண்டே வனஜாக்ஷியின் மடியில் அப்படியே சாய்ந்துவிட்டனள். வனஜாக்ஷி உடனே மற்றைய தோழியர்களையும் அழைத்துச் சாரசநேத்ரியின் நிலையைக்காட்டி அவள் கூறியவற்றையுஞ் சொன்னாள். அதைக்கேட்ட தோழிப்பெண்களில் ஒருத்தியாகிய [illegible] "சகிகளே! இவ்

வரசிளங்குமரியை இன்று காலையில் பரிமளாச்ரயத்தில் ஓர் செய்குன்றின் பக்கத்தில்விட்டு நாமெல்லோரும் பூக்கொய்யச் சென்றபோது இவர் யாரோ தந்நிகரற்ற ஓரழகிய புருடரைக் கண்டிருக்கின்றனர். அதுமாத்திரமன்று. இருவரு மனங்கலந்து ஒருவரோடொருவர் தங்கள் காதன் மொழிகளைப் பேசிக்கொண்டிருப்பதாகவுந் தெரிகின்றது. நாம் பூக்கொய்துகொண்டு வந்தபோது அதற்குரிய குறிகள் காணப்படாமலும் இருக்கவில்லை. ஆயினும், அதை நாம் அப்பொழுது கவனித்திலோம் இவ்விஷயத்தில் நாம் நமது கருத்தை மிகவும் செலுத்துதற்குரிய கடமையுடையவர்களாகவே இருக்கின்றோம்" என்றாள்.

"ஆம், ஆம், நீ சொன்னது உண்மை தான்" என்றார்கள் மற்றப்பெண்களும். இரவென்னும் பெண்ணரசி தனக்குப் பிரியமான ஆம்பல்மலர்கள் மலர்ந்திருத்தற்குரிய தன்னுடைய ஆளுகைக்காலத்தில் அவற்றிற்குப் போட்டியாகச் சாரசநேத்ரியின் கண்களாகிய தாமரைகளும் நெடுநேரமாக மலர்ந்திருப்பதைக் கண்டு பொறாமைமேலிட்டு நித்திராதேவியை அனுப்ப, அவள் சென்று தனது அரிய மாயாசக்தியினால் அத்தாமரைகள் குவியும்படி செய்துவிட்டனள். மற்றைப்பெண்களும் சாரசநேத்ரி துயில்கொள்ளவே சிறிதே மனங்களித்துத் தாங்களுந் துயில் கொண்டார்கள்.

சூரியன் இரவென்னும் பெண்ணரசி இங்ஙனஞ்செய்த கொடுமையையுணர்ந்து கோபம்பொங்கிக் கண்சிவந்தாலெனக் கீழ்வானம் சிவந்தது. அங்ஙனம் வெகுண்ட சூரியன் அந்த இரவென்னும் பெண்ணரசியின்மீது தனது கிரணங்களாகிய கூரிய பாணங்களைக் கொடியவளாகிய தாடகையின்மீது ஸ்ரீராமபிரான் எய்த பாணங்களைப்போல எய்ய, அத்தடாகை அழிந்தொழிந்தாற்போல அவ்விரவென்னும் மங்கையும் அழிந்தொழிந்தனள். அச்சமயத்தில் பறவைகள் தத்தம் கூடுகளில் இருந்து வெளிவந்து இனிமையாகக் கூவினமை சாரசநேத்ரி இரவெல்லாம் பட்ட கஷ்டத்தைச் சூரியனிடத்தில் இரக்கத்தினாற் சொல்லுதல் போன்றது. சூரியனது வெற்றியைப் புகழ்ந்து பாடுவனபோல வண்டுகள் ரீங்காரஞ்செய்தன. தம்முடைய நாயகனாகிய சூரியனது வருகையை யுணர்ந்து முகமலர்ந்தாலெனத் தாமரை மலர்கள் மலர்ந்தன. நன்றாய்க் கற்றுணர்ந்த புலவர்கள் இல்லாத நாட்டில் மிகவுங் கற்றுணர்ந்தவர்களைப்போல வேடங்கொண்டு திரியும் போலிப்புலவர்கள் புலமை

புடையார் இவரென்றும், புலமை இல்லார் இவரென்றும ஆய்ந்துணரவல்லாரொருபேரறிஞனைக் கண்டவுடன் பறந்தோடுதல்போல இரவெல்லாம் முத்தினங்களைப்போல வேடமுற்றி விளங்கிய பனித்திவலைகள் சூரியனது வரவினாற் பறந்தோடின. அநியாயமாகப் பிறரை வருத்துவோர்தம் சுற்றத்தவரென ஆம்பல்கள் வாடின. வெற்றி பெற்றுவரும் சூரியனாகிய அரசன் களிக்க மயில்களாகிய நாடகக்கணிகையர் நடித்தனர். காற்றினால் எழுப்பப்பட்டுக் கரையைவந்து மோதும் தடாகங்களின் அலைகளாகிய மத்தளங்கள் முழங்கின. அவற்றைக் கண்டு சபையிலுள்ளோர் முகமலர்ந்தாலென மரஞ்செடி கொடிகளிலுள்ள மலர்கள் மலர்ந்து பொலிந்தன. சபையிலுள்ள தனிகர்களிற் கொடையாளிகளா யுள்ளவர்கள் அந்நாடகக்கணிகைக்குப் பலவகை மணிகளைச் சொரிந்தாலெனச் சில மரங்கள் பல வண்ணமுள்ள மலர்களை யுகுத்தன. சாரசநேத்ரி இமைகளாகிய பெட்டகத்தில் மறைத்துவைத்திருந்த கரிய விழிகளாகிய நீலமணியைச் சூரியன் தனது கிரணங்களாகிய திறவுகோலாற் றிறந்து வெளிப்படுத்தி விட்டனன். அவள் துயிலுணர்தற்கு முன்னமே அவளதுதோழியரும் துயிலுணர்ந்திருந்தார்கள். சாரசநேத்ரி பஞ்சணையினின்றெழுந்து "அ! ஆ!! தோழியர்களே நான் என்ன இவ்வளவு நேரம் தூங்கிவிட்டேனே! சூரியன் உதித்து இரண்டுநாழிகைக்கு அதிகமாயிருக்கும்போல் இருக்கின்றதே. நீங்களேன் இவ்வளவு நேரம் என்னை எழுப்பாமல் இருந்தீர்கள்? சீக்கிரம் வாருங்கள். தோட்டத்துக்குப்போவோம்" என்று தோழியர்களை அழைத்துக்கொண்டு தமது மாளிகையைச் சார்ந்துள்ள பதுமாகரம் என்னும் தோட்டத்துக்குப் போய்விட்டாள்.

ச-பின் :—அமிர்தவல்லி! என்ன இன்னும் வைத்தியர் வரவில்லையே.

அமிர்தவல்லி :—வைத்தியரே! உங்களுக்கு நூறாயுசு. உங்கள் தோழர் "என்ன இன்னும் வைத்தியர் வரவில்லையே" என்று கேட்டுக்கொண்டே இருக்கின்றார், நீங்களும் வந்து விட்டீர்கள்.

வைத்தியர் :—ஏன், என்ன விசேஷம்?

ச-பின் :—குழந்தையைப்பற்றிய கவலை இருக்க இருக்க எனக்கு அதிகமாகின்றது. அவளுக்கோ வியாதி வந்துவிட்டது. முன் நான் சொல்லும்போது நான் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் மிகவும் இளம் பருவத்தில் கலியாணஞ் செய்வது மிகவும் முட்டாள்

தனமான காரியம் என்று தடுத்துக்கொண்டே வந்தீர்கள். இப்பொழுதென்ன சொல்லுகின்றீர்கள்.

வைத்தியர்:—இப்பொழுது நான் அப்படிச் சொல்வேனா?

ச-பின்:—ஆனால் இனிக்கலியாணத்தை முடிக்கவேண்டியதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து விடலாமே.

வைத்தியர்:—அது செய்து விடலாம். அது செய்யத்தானே வெகு நேரஞ்செல்லும். நமது பெண்ணுக்குரிய வரன் இன்னான் என்பதை முன்னே நிச்சயித்துக்கொள்ள வேண்டாமா?

ச-பின்:—அவளுக்குரியவரன் இன்னானென்று நீங்களே சொல்லுங்கள்.

வைத்தியர்:—இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் என்னை மன்னிக்கக் கோருகின்றேன்.

"குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார்
கல்வியிற்குறையா ஞானப்
பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்
பரந்தபெருஞ் செல்வ முள்ள
தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்
யௌவனமு மழகுஞ் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழற்
கன்னிமார் நலத்தின் மிக்கார்."

என்றபடி ஒருபெண்ணை ஒருவனுக்குக் கலியாணஞ் செய்து கொடுக்க நினைக்குங்கால் அப்பெண்ணின் தந்தையானவர் நன்றாய்ப்படித்தவருக்குக் கொடுக்கவேண்டும் என்பர். தாய்மார் நிறைந்த செல்வமுடையவருக்குக்கொடுக்கவேண்டும் என்பர். மற்றைய சுற்றத்தவர்கள் குலத்திற் பழுதில்லாதவருக்குக் கொடுக்கவேண்டும் என்பர். இவையெல்லாம் ஒருபுறம் இருக்கக் கன்னியர்கள் தங்கள் மனதுக்கிசைந்த அழகும் யௌவனமுடையவர்களை விரும்புவார்கள். இக்கருத்துப்பற்றியல்லவா "கைநிறைந்த பணத்தைவிடக் கண்ணிறைந்த கணவன் சிறந்தவன்" என்னும் பழமொழி வழங்குகின்றது? ஆகையால், யாரேனும் மேற்சொல்லப்பட்ட நான்குவகையினரில் ஒரு வகையினருடைய கருத்தைச்சார்ந்து பேசுவார்களானால் அவர்கள் மற்றவர்களுடைய கோபத்துக்கு இலக்காவார்கள்

என்பது திண்ணம். ஆதலால் இவ்விஷயத்தை நீங்களே ஆலோசித்துச் சொல்லிவிடின் நான் மற்றைய விஷயங்களையெல்லாஞ்செய்து முடிக்கச் சித்தமாயிருக்கின்றேன்' என்றார்.

ச-பிள் :—ஆம், நீங்கள் சொல்வது சரிதான். உங்கள் தங்கையார் கருத்தென்ன கேளுங்கள்.

அமிர்தவல்லி :—எல்லாந் தெரிந்தவர்களுக்கு நான் சொல்வதென்ன இருக்கின்றது?

வைத்தியர் :—(சந்திரபிரகாசம் பிள்ளையைப்பார்த்துத்) தங்கள் கருத்தென்ன? அதை முன்னே சொல்லுங்கள்.

ச-பிள் :—என் கருத்தை என்னென்று சொல்வது "ஏறச்சொன்னால் எருதுக்குக்கோபம்; இறங்கச்சொன்னால் நொண்டிக்குக் கோபம்" இந்தப் பக்கம்பார்த்தால் என் தங்கைக்குக்கோபம்வரும் போலிருக்கிறது. அந்தப்பக்கம் பார்த்தால் உங்கள் தங்கைக்குக் கோபம் வரும்போலிருக்கிறதே. நான் என்ன செய்வேன். இதற்கு நீங்கள் என்ன யோசனை கூறுகின்றீர்கள்?

வைத்தியர் :—எனக்கொரு யோசனையுந் தோன்றவில்லை.

ச-பிள் வாருங்கள், வாருங்கள் ஜோசியரே! நீங்கள் நல்லவேளையில் வந்து சேர்ந்தீர்கள். உங்களை இப்பொழுது எங்கள் குலதெய்வமாகிய வேங்கடேசர் தான் அனுப்பினார்போலும், என்று சொல்லி ஒரு பணியாளனை அழைத்து அவனைக் கைப்பெட்டியை எடுத்துவரச் சொன்னார். அப்படியே அவன் அவரது கைப்பெட்டியைக்கொண்டு வந்து வைத்தான். அது தந்தத்தினாற் செய்யப்பட்டது. அவர் தமக்கின்றியமையாத சில கடிதங்களை வைக்கவே அதனைச் செய்வித்துக்கொண்டார். அதைத் திறந்து அதிலிருந்து மூன்று ஜாதகங்களையெடுத்து ஜோசியர் கையிற்கொடுத்தார். அவற்றுள் ஒன்று சாரசேந்த்ரியின் ஜாதகம்; மற்றொன்று கஜகர்ணனுடைய ஜாதகம்; இன்னொன்று ஜமீன்தார் தங்கையாரின் குமாரனாகிய செல்வமணியின் ஜாதகம்; ஜோசியர் அவற்றையெடுத்துப் பலமுறையும் நன்றாய்த் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு "அடடா! நான் கஜகர்ணன் விஷயத்தில் நிரம்பவும் எண்ணிக்கொண்டிருந்தேன். அந்த எண்ணம் முற்றும் பயனற்றதாயிருக்கின்றதே" என்று உதட்டைக் கடித்தனர்.

வைத்தியர்:—குழந்தையின் ஜாதகத்தோடு அவன் ஜாதகம் பொருத்தமாக இல்லையோ?

ஜோசியர்:—பொருத்தமா? அதை ஏன் கேட்கின்றீர்கள்? உடனே இரண்டுபேரையும்... சொல்லவாய்க் கூசுகிறது. சிவ, சிவா சரி, அது இருக்கட்டும். இது யாருடைய ஜாதகம்.

வைத்தியர்:—அது இவர்களுடைய தங்கையார் குணமாலிகை யம்மாளுடைய குமாரன் ஜாதகம்.

ஜோசியர்:—இவர்களுக்குத் தங்கையார் ஒருத்தர் இருக்கின்றார்களோ? எனக்குத் தெரியாதே.

வைத்தியர்:—உங்களுக்கு எப்படித் தெரியும்? அந்த அம்மாளுக்குக் கலியாணம் ஆகும்போது நீங்கள் மிகவும் சிறியவர்கள். அப்போது நீங்கள் இந்த ஊரிலுங்கூட இல்லாமல் சென்னையில் உங்கள் அத்தையார் வீட்டுக்குச் சென்றிருந்தீர்கள். அப்போது அவர் ஜாதகத்தைப்பார்த்து கலியாணங்குறித்தவர்கள் உங்கள் தந்தையார் தாமே.

ஜோசியர்:—அப்படியா! ஆனால் இந்தப் பிள்ளையுஞ் சொந்த மானவன்தான். நான் இந்தஜாதகத்தைப்பார்த்தவுடன் குழந்தை சாரசையாரோ அயலார்வீட்டுக்கு மருமகளாகப்போகின்றது, என்றல்லவோ எண்ணிவிட்டேன். மாமன்பிள்ளை யானாலென்ன? அத்தான் பிள்ளையானாலென்ன? சொந்தம் இருவருக்குஞ் சமந்தானே. சரி, இனி நாளைக்குறிக்க விடலாமல்லவா?

வைத்தியர்:—(அமிர்தவல்லியாரைப் பார்த்து) என்ன அம்மா! நீ என்ன சொல்லுகின்றாய்?

அமிர்தவல்லி:—நீங்கள் எல்லோருஞ் செய்வது நன்றாயிருக்கின்றது. கண்ணிருந்தாலல்லவா எல்லாக்காட்சிகளையுங் காணலாம். முதலாவது கண்ணுக்கே மோசம் வருவதாயிருக்கின்ற காரியத்தைச் செய்ய யார்தாம் துணிவார்கள்? ஜோசியர் சொன்னபடி நாளைக்குறித்துக் கொள்ளுங்கள்.

வைத்தியர்:—(சந்திரசேகரம் பிள்ளையை நோக்கி) ஏன் உங்கள் அத்தான் அவர்களைக் கேட்டுத்தானா கலியாணம் நடத்திக்கொள்ள வேண்டுமோ?

ச-பிள்:—அவரைக் கேட்கவேண்டிய அவசியமொன்றுமில்லை, நாமே நாளைக் குறித்துக்கொண்டு ஒரு கடிதம் எழுதி விட்டாற் போதும்.

வைத்தியர்:—கலியாணம் என்று வைத்துக்கொள்ள விரும்புகின்றீர்கள்.

ச-பிள்:—இதுவரையிலும் மற்றைய கலியாணங்களை எங்கு வைத்து நடத்தினோமோ அங்குத்தான் வைத்துக்கொள்ளவேண்டும்.

வைத்தியர்:—ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். சென்ற மாதம் காரைக்காலிலிருந்து வந்த வைத்தியலிங்கம் பிள்ளை பூம்புனற் சோலையிலுள்ள பங்களாவிற் சில இடங்கள் சற்றே காரைபெயர்ந்து பள்ளம் பள்ளமாயிருப்பதாகச் சொன்னார். தோட்டக்காரன் சுப்பண்ணன் என்னிடஞ் சொல்லும்படி அவரிடஞ் சொல்லியனுப்பினானாம். அதை இதுகாறும் எனக்கிருந்த பல வேலைகளால் தங்களிடஞ் சொல்ல மறந்துவிட்டேன். அதை முன்னே பழுதுபார்ப்பித்தல் வேண்டும்.

ச-பிள்:—அதற்கென்ன, அப்படியே செய்துவிடுங்கள்.

வைத்தியர்:—சரி. ஜோசியரே! இனி நாளைக் குறித்துவிடுங்கள்

என்று சொல்ல ஜோசியர் நாளது பவ௵ சித்திரை மாதம் பதினாறாந்தேதி புதவாரம் காலை $6\frac{1}{2}$-மணிக்கு ரிஷபலக்கினத்தில் கலியாணம் என்று நாளைக்குறிப்பித்தார். சந்திரபிரகாசம் பிள்ளை அவருக்கு வேண்டிய சன்மானங்களைச் செய்து அவரை அனுப்பிவிட்டு வைத்தியரை நோக்கி "நீங்கள் அக்காள் அவர்களுக்குக் கடிதமெழுதுங்கள்" என்றார். வைத்தியர் அப்படியே தஞ்சையிலுள்ள வைத்தியநாதம் பிள்ளைக்குக் கடிதமெழுத அவர் தமது குடும்பத்தொடும் மற்றும் அநேக நண்பர்களோடும் வந்து சேர்ந்துவிட்டனர். உடனே ஊரெங்கும் சாரசநேத்ரிக்குக் கலியாணம் நடக்கப்போகின்றதென்னுஞ் சமாசாரம் பரவிவிட்டது.

கஜகர்ணன்:—நண்ப! சமாசாரம் தெரியுமோ?

மணிகண்டன்:—ஆம், தெரியும். ஊரெல்லாஞ் சாரசநேத்ரிக்குக் கலியாணமென்று சொல்லுகின்றார்கள்.

கஜகர்ணன்:—யாருக்குக் கொடுக்க நிச்சயித்திருக்கின்றார்கள் தெரியுமா?

மணிகண்டன் :—அது வெனக்குத் தெரியாது. உனக்குத் தெரிந்திருந்தாற் சொல்.

கஜகர்ணன் :—தஞ்சையிலிருக்கும் வைத்திய நாதம்பிள்ளை குமாரன் செல்வமணிக்குக் கொடுக்க நிச்சயித்திருக்கின்றார்கள்.

மணிகண்டன் :—பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்துவிட்டார்களோ?

கஜகர்ணன் :—அவர்கள் வந்தபிறகு தான் எல்லாந் தெரிந்தது.

மணிகண்டன் :—எங்கும் கலியாணஞ் செய்ய எண்ணியிருக்கின்றார்கள்.

கஜகர்ணன் :—காரைக்காலிற்செய்ய எண்ணியிருக்கின்றார்கள்.

மணிகண்டன் :—அது உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?

கஜகர்ணன் :—ஆம், அது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவ்வூரிலுள்ள பூர்புனற் சோலையைப் பழுது பார்க்கவும், கலியாணத்துக்காக அங்குக்கிடைக்கக்கூடிய சாமான்களை வாங்கிச் சித்தப்படுத்தவும், வெளியிலிருந்து வருகின்ற ஜனங்களுக்கு வசதியான இடங்களை ஏற்படுத்தவும் சில ஆட்களை அனுப்பி விட்டார்கள். இங்கிருந்தும் அநேக சாமான்களை அனுப்பிக்கொண் டிருக்கின்றார்கள்.

மணிகண்டன் :—(பெருமூச்செறிந்து) ஆ! இந்த வைபவங்கள் உன் பொருட்டு நடக்க நான் பார்க்கும்படி புண்ணியஞ் செய்திலேனே.

கஜகர்ணன் :—கண்களில் நீர் ததும்ப நின்றான்.

மணிகண்டன் :—நண்ப! இவ்வளவு தூரம் ஏற்பாடுகள் ஆப்பட்ட பிறகும் நீ இப்படி யுன் சிந்தனையை அப்பெண்மணியார் விஷயத்தில் வைத்திருப்பது நன்றாயிருக்கவில்லை. இனி அம்மாதரசியாரைக் கனவிலுங் கருதாமல் இருப்பதே உனக்கு நன்மையைப் பயப்பதாகும்.

கஜகர்ணன் :—என் நெஞ்சம் அவ்வஞ்சகப்பெண்ணின் உருவைப் பலகாலும் கண்டு பழகித் தன்னிடத்தில் எழுதி வைத்துக்கொண்டு எனக்கு அடிக்கடிக்காட்டுகின்றதே, நான் என்ன செய்வேன்!

மணிகண்டன் :—ஆனால் இப்பொழுது நீ என்ன செய்யவேண்டும் என்கின்றாய்?

கஜகர்ணன் :—தாலிகட்டப்போகும் அந்த வினாடிவரையிலும் முயற்சி செய்தே பார்க்கவேண்டும் என்பதே எனது கருத்து.

மணிகண்டன் :—நீ இவ்வளவு தளராத ஊக்கமுடையனாயிருப்பது மிகவுஞ்சிறந்ததே. ஆனால், அதைத் தக்ககாரியங்களிற் செலுத்துவாயானால் அதிக மேன்மையடைவாய். ஏனோ அவ்வித ஊக்கத்தை இந்தப் பயனற்ற காரியத்திற் செலுத்துகின்றாய்!

கஜகர்ணன் :—எனக்கு இதைக்காட்டிலும் தக்கதும்பயனுள்ளதுமாகிய காரியம் வேறிருப்பதாகத் தோன்றவில்லை.

மணிகண்டன் :—(சிறிது நேரம் ஆலோசித்து) உம் சரி, நாம் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்வோம். பிறகு தெய்வ இச்சையின்படி ஆகட்டும். ஆனால் இப்பொழுது நான் ஒன்று சொல்கின்றேன், அதை நீ முதலிற் செய்யவேண்டும்.

கஜகர்ணன் :—அப்படியே செய்கின்றேன், சொல்.

மணிகண்டன் :—உன்னுடைய அத்தையம்மாள் அமிர்தவல்லியார் உன்னிஷ்டப்படி செய்யச் சம்மதிப்பார்களா, என்பதைத் தெரிந்துகொள். சிறிது பின்னிட்டாலும் அவர்களைச் சம்மதிக்கும்படி செய்துகொண்டுவந்து விடு. பிறகு நடக்கவேண்டியதைப்பற்றி ஆலோசிக்கலாம். ஆனால் அதையுன் தாயாருக்கும், தந்தையாருக்குந் தெரிவியாதே.

கஜகர்ணன் :—போய்ப் போய் அந்தக் கிழப் பிணங்களுக்குத் தானா அதை நான் தெரிவிப்பேன். தெரிவித்தால் அப்பொழுதே அக்காரியங் கெட்டுப்போனது தான். இதோ நான்போய் வருகின்றேன்.

என்று சொல்லி மணிகண்டனிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குச்சென்று ஓரறையிலுள்ள தனது கட்டிலிற் படுத்துக்கொண்டு சால்வையை விரித்துத்தேக மறையப்போர்த்துக்கொண்டான்.

அவன் அங்ஙனம் படுத்துக்கொண்டிருப்பதை அவனது தாயாராகிய மங்கையர்க்கரசியார் கண்டு அவனருகில் வந்து "அடா குழந்தாய்! என்னடா உடம்பு உனக்கு" என்றுகேட்டனள். அவன் அதற்குப் பதிலொன்றும் பேசவில்லை. அவன் பேசாமல் இருக்கவே அந்த அம்மாளுக்குக் கவலையுண்டாய் அவனுடம்பிலுள்ள சால்வையைச் சிறிது விலக்கிக்கையால் தடவிப்பார்த்துக்கொண்டே

மறுபடியும் இரண்டு மூன்று முறைகேட்டனா. அவன் தன் முகத்துப்புறமாகச்சால்வையைச்சிறிதேவிலக்கிக்கையிற்பற்றிக்கொண்டு அவ்வம்மையை விழிக்க விழிக்கபார்த்து "ஏன் வீச்சுவீச்சென்று கத்துகிருய்? சரிதான் ஒன்றுமில்லை, போ" என்றுகசறினன் அதற்கு அந்த அம்மாள் கோபித்துக்கொண்டார்களா? இல்லை, இல்லை. பெற்றமனம்பித்து, பிள்ளைமனங் கல்லு" என்பது உலக அனுபவங்களைத் தனக்குள் அடக்கிக்காட்டாநிற்குஞ் சிறந்த பழமொழிகளுள் ஒன்றல்லவா? மற்றென்னசொன்னர்களெனின் "அடா, அப்பா! நீ என்னைக்கசறினலுங்கசறு. உனக்கென்ன நோயோ அதை மாத்திரஞ் சொல்லி விடு" என்ருர்.

கஜகர்ணன்:—ஆமாம், சொன்னல் உடனே தீர்த்துவிடுவாய்.

மங்கையர்க்கரசியார்:—அப்பா! நான் தீர்க்காவிட்டாலும் உன் தந்தையாரிடஞ் சொல்லித் தக்க வைத்தியரைக்கொண்டு மருந்து கொடுப்பிக்கும்படி செய்விக்கின்றேன்.

கஜகர்ணன்:—சரிதான், சரிதான். இருக்கின்ற தலைநோய்போதாதென்று அவருடன் சொல்லப் போகின்ருய்? உன் காலுக்கொரு கும்பிடு; நீ போய்வா அம்மா!

மங்கையர்க் கரசியார்:—அப்படி அவரிடஞ் சொல்வது உனக்குச் சரிப்படாவிட்டால் நீ சொல்வதுபோலச் செய்கின்றேன். உனக்கென்ன நோய் சொல்லு.

கஜகர்ணன்:—இப்பொழுதுதான் "இருக்கின்ற தலைநோய் போதாதா" என்று சொன்னேனே. உனக்கு இன்னுமொருமுறைச் சொல்லவேண்டும் போலிருக்கிறது.

மங்கையர்க்கரசி:—உனக்கு எனப்பா தலைநோய் வந்தது?

கஜகர்ணன்:—எனப்பாவும்மாச்சு, தானப்பாவுமாச்சு. ஏதோ வந்தது. நானென்ன வைத்தியனே? சாமியா? வருகிற நோய்களுக்கெல்லாங் காரணஞ் சொல்லுதற்கு. இந்த வீண் வம்புகளையெல்லாம் விட்டு விட்டு நான் சொல்வதுபோலச் செய்யப்போகின்ருயா? இல்லையா?

மங்கையர்க்கரசியார்:—உனக்கு ஏன்டா அப்பா இவ்வளவு கோபம்? கோபம் தான் அடுத்துள்ள இடத்தையுங்கெடுக்கும். தான் அடுத்துள்ள இடத்தின் எதிரிடத்தையும் கெடுக்கும். அதைவிட்டு விடு. நான்தான் முன்னமே "நீசொன்னபடி செய்கின்றேன்" என்று

சொல்லிவிட்டேனே. அதை நீ கேட்கவில்லையா? நீ என்ன செய்யச்சொல்கின்றாயோ சொல். அப்படியே செய்கின்றேன்.

கஜகர்ணன்:—எனக்குத்தலைநோய் என்பதை அத்தையம்மாளிடஞ் சொல்லி அவர்களை இங்கு அழைத்துக்கொண்டு வா, என்றான். அப்படியே அவ்வம்மையுஞ்சென்று தோட்டத்தின் வழியாக அமிர்தவல்லியாரை அழைத்து வந்தனர். ஜமீன்தார் மாளிகை ஒரு தோட்டத்தின் முன்பக்கம் இருக்கின்றது அத்தோட்டத்தின் பெயர் பதுமாகரம் என்பது இதைப் படிப்போர்க்கு முன்னமே தெரிந்திருக்கலாம். அமிர்தவல்லியார் வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்தனர். அப்போது கஜகர்ணன் தன் தாயாரை நோக்கி, "அம்மா! நீ யிங்கிருந்தால், அப்பா ஒருகால் இங்கு வந்தாலும் வந்துவிடுவார் அவர் வந்தால் எனக்கு இங்குப் படுத்துக்கொண்டிருக்கவுங் கூடச் சகிக்காது. நீ போ" என்றான். அதைக்கேட்ட அவ்வம்மையும் அப்படியே வெளியிற் போய்விட்டனர்.

கஜகர்ணன்:—(அமிர்தவல்லியாரை நோக்கி) அத்தாய்! எனக்கு இப்பொழுது தலைவலி சகிக்கக்கூடாததா யிருக்கின்றது.

அமிர்தவல்லியார்:—அதற்கென்ன, நமதுவீட்டில் சீதளசோஷணி என்னும் தைலம் இருக்கின்றது அதைத்தடவினால் எப்படிப்பட்ட தலைவலியும் உடனே பறந்தோடிப்போம் அதைக் கொண்டுவரச் சொல்லட்டுமா?

கஜகர்ணன்:—அதனால் என் நோய் தீராது

அமிர்தவல்லியார்:—மற்றெதனால் தீரும்?

கஜகர்ணன்:—காட்டிற்சென்று கூரிய பல முட்செடிகள் அடர்ந்த புதரின் இடையிலிருக்கும் புற்றிலுள்ள நல்லபாம்பின் மணியைக்கொண்டு வந்து என் தலையிற் கட்டினால் உடனே தீரும்

அமிர்தவல்லியார்:—"அலைச் சாக்கிட்டுஉரலையிடிப்பாரைப்போல" நீ வேறெதையோ எண்ணிக்கொண்டு எதையோ சொல்கின்றாய். உனக்கு வந்த தலைவலி உன் உடலைப்பற்றியதன்று உன் உள்ளத்தைப் பற்றியதாக இருக்கும் என்று நினைக்கின்றேன்

கஜகர்ணன்:—இல்லை. இல்லை என் உடலையும் பற்றவில்லை; என் உள்ளத்தையும் பற்றவில்லை என் உயிரையேபற்றி நிற்கின்றது.

அமிர்தவல்லியார்:—நீ யேதோவிபரீதமான எண்ணங்கொண்டிருக்கின்றாய் என்று நினைக்கின்றேன் அடா, குழந்தாய்! உன்தந்

னதயா எப்பொழுதும் வருந்தும்படியாகவே நீ நடந்து வருகின்றாய். உனக்கு நான் எவ்வளவு புத்திகளைச் சொன்னாலும் நீ கேட்பதில்லை. உனக்கு நான் முன்னமே சாரசைக்கும் உனக்குஞ்சிறிதும் பொருத்தமில்லை என்று ஜோசியர் சொன்னார் என்பதையும் சொல்லி விட்டேனே. அவர் உன்விஷயத்தில் எவ்வளவு அன்புள்ளவர். அவர் அப்படித் தப்புச்சொல்வாரா? பிறர் சொல்வானேன். உன் அநுபவத்தில் தெரியவில்லையா? சாரசைக்கு உன்னிடத்திற் சிறிதேனும் அன்பிருக்கின்றதா? அன்பில்லாத விடத்திலின்பம் எப்படியுண்டாகும்? மனையாள் தன்மனத்தோடொத்தவளாய் இராவிடின் இல்வாழ்க்கை சிறிதுஞ் சீராக நடவாது. அவர்களுக்கு எவ்வளவு செல்வமிருந்தாலும் அவற்றாற் பயனில்லை. ஒருவன் தன் மனையாள் எவ்வளவு அழகுடையவளாக இருந்தாலும் தன்னிடத்தில் அன்பில்லாதவளாயிருந்தால் அவளோடு கூடி அவன் வாழ்வது கருங்கற்களை வாயிலிட்டு மெல்லுவதோடொக்கும். ஒருவன் தன் மனையாள் அழகில்லாதவளாயிருந்தாலும் தன்னிடம் அன்புடையவளாயிருந்தால் அவளுடன் வாழ்வதே அவனுக்கு மிகவு நன்மை பயப்பதாகும். நான் சொல்வதை நீ உனக்கு மிகவும் நன்மையைச்செய்யக்கூடிய சொல்லெனக்கொள். சாரசையைத்தவிர நீ வேறெந்தப் பெண்ணை விரும்பினும் நான் அவசியம் உனக்குக்கலியாணம் பண்ணுவிக்கின்றேன். அதில் யாதொரு தடையுமிராது. நீயே உன்மனத்தில் நன்றாயோசித்துக்கொள்.

கஜகர்ணன்:—என்னிடத்தில் மிகவும் அன்புடையவர்களாகிய தங்களுடைய சொல்லையும் யான் கேளாமற்போவேனோ? நீங்கள் இவ்வளவு தூரஞ் சொல்லியதனால் இப்பொழுது என் மனத்தைத் தேற்றிக்கொண்டு நான் விரும்பக்கூடிய ஒரு பெண்ணையும் நான் தெரிந்துகொண்டேன்.

அமிர்தவல்லியார்:—அப்படியா? அந்தப்பெண் யார் சொல். அந்தப் பெண்ணுக்கும் உனக்கும் கலியாணம் நடப்பித்தற்குரிய உபாயங்களை இப்பொழுதே செய்து விடுகின்றேன்.

கஜகர்ணன்:—அந்தப் பெண்ணை நான் கலியாணஞ் செய்து கொள்ளுதற்குப் பிறர் கஷ்டப்படவேண்டிய அவசியமே இல்லை. நான் நினைத்தால் இப்பொழுதே அது முடிந்துவிடும். ஆனால் ஒன்றுக்காக யோசிக்கின்றேன்.

அமிர்தவல்லியார்:—அப்படியா? ஆனால் எதற்காக யோசிக்கின்றாய்?

கஜகர்ணன்:—அந்தப்பெண்ணை நான் கலியாணஞ் செய்துகொள்வதாயிருந்தால் அம்மாவையும், அண்ணனையும் பிரிந்து அவர்களிடமே போயிருக்கவேண்டியதா யிருக்கும். அதற்காகத் தான் நான் அஞ்சுகின்றேன்.

அமிர்தவல்லியார்:—நீ அந்தப்பெண் இன்னவள் என்பதை எனக்குச்சொல். நீயங்குப்போகவேண்டிய அவசியம் இல்லாமல் அப்பெண் நமது வீட்டிற்கு வரும்படி நான் செய்கின்றேன்.

கஜகர்ணன்:—அது ஒருவராலும் ஆகாது.

அமிர்தவல்லியார்:—அப்படிப்பட்ட அந்தப் பெண் யார்?

கஜகர்ணன்:—அவள் தேவலோகத்தில் உள்ள ஒரு அப்சரீமாது. சாரசைக்குக் கலியாணம் நடப்பதற்கு முன்னாகவே அவளை நான் கலியாணஞ் செய்துகொள்ள விரும்புகின்றேன். என்று சொன்னான். அவன் அதைச்சொல்கையில் அவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப்பெருகியது. அதைக் கேட்ட

அமிர்தவல்லியார்:—அப்பா! நீயோ சாரசையையே விரும்பி இருக்கின்றாய். சாரசையோ உன்னைக் கனவிலுங்கருதேன் என்கின்றாள். அவள் மாத்திரம் உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ள இசைந்திருந்தால் இவ்வளவு ஏற்பாடுகள் வேறோரிடத்தில் அவளைக் கொடுப்பதற்காக நடந்திருக்குமா? அவள் சிறிதும் இசையாமற் போனதினால் அல்லவா நான் இவ்விஷயத்திற் பிரயாசப்படுவதனாற் பயனில்லை" என்றெண்ணி விட்டுவிட்டேன். ஆ! நான் என் செய்வது. இருதலைக் கொள்ளியினிடைப்பட்ட எறும்பைப்போலத் தவிக்கவேண்டியவளாயினேனே. உம் சரி, நீ எப்படிச் சொல்கின்றாயோ அப்படிக்கேட்கின்றேன். ஆனால் அந்த விஷயத்தில் நானுகச் செய்யக்கூடிய உபாயமொன்றுமில்லை. அதையும் உனக்குத் தெரிவிக்கின்றேன்.

கஜகர்ணன்:—நீங்களாக ஒருபாயமுஞ் செய்யவேண்டிய அவசியமில்லை. நான் சொல்வதுபோற் செய்தால் அதுவே போதும்.

அமிர்தவல்லியார்:—சரி, அப்படியே செய்கின்றேன். இப்பொழுது உங்கள் அம்மானை அழைத்துக்கொண்டுபோய் ஒருபுட்டியில் தைலங் கொடுத்தனுப்புகின்றேன். அதிற் சிறிது தலையில் தடவிக்

கொண்டு படுத்துக்கொள். இன்று வெளியில் எங்கும்போகாதே; என்று சொல்லிவிட்டு அவனது தாயாரை அழைத்துக்கொண்டு போய் அந்தஅம்மாளிடம் அப்படியே ஒருபுட்டியில் மேற்சொன்ன தைலத்தைக் கொடுத்தனுப்பினார். அவனும் அவ்வாறே அதிற் சிறிது தலையில் தடவிக்கொண்டு வெளியிலெங்கும் போகாமல் அன்றெல்லாம் வீட்டிலேயே படுத்துக்கொண்டான்.

ஐந்தாம்-அத்தியாயம்.

மறுநாட் காலையில் வைத்தியரும் ஜமீன்தாரும் பேசிக்கொண்டிருக்கையில் சாரசநேத்ரியின் தோழிகளில் ஒருத்தியாகிய வனஜாக்ஷி வந்து அவர்களெதிரில் வணக்கத்துடன் நின்றாள். அவளைக் கண்ட ஜமீன்தார் "வனஜாக்ஷி! என்ன சமாசாரம், ஏன் வந்தாய்?" என்று கேட்டனர். வனஜாக்ஷி "அம்மாள் சாரசநேத்ரியார் என்னம்மா ஒருவாறாக இருக்கின்றார்கள் அவர்களுக்கு ஏதோ தேகம் அசௌக்கியமா யிருக்கிறது போலிருக்கிறது அதைத் தெரிவிக்கத்தான் வந்தேன்." என்றாள். அதைக்கேட்ட ஜமீன்தார் "அப்படியா!" என்று திரும்பி வைத்தியரை நோக்கி, "வைத்தியரே! சற்றேபோய் என்ன உடம்பென்று பார்த்துவிட்டு வாருங்கள்" என்றார். அவர் அவ்வாறே சாரசையின் இடஞ்சென்றார். அப்பொழுது சாரசையின் அருகில் வனஜாக்ஷியும், திலகமும் இருந்தார்கள். அவரைக் கண்டவுடன் சாரசை "தாங்கள் மறந்து விட்டீர்களா" என்றாள். வைத்தியர் "இல்லை, இல்லை" என்று தன்கையில் இருந்த ஒரு கடிதத்தை எடுத்து அவள் கையில் கொடுத்து அவளிடம் ஏதோ சில சமாசாரங்களைச் சொல்லிவிட்டு வந்துவிட்டனர். அன்று மறுதினம் நிச்சயதாம்பூல மாற்றிக்கொள்ள எண்ணியிருந்தனர். ஆனால் வைத்தியர் அன்று காலையிலேயே காரைக்குப் போகவேண்டி இருந்ததால் அதையும் கலியாணப் பந்தலிலேயே செய்துகொள்வதென்று தீர்மானித்தார்கள். உடனே வைத்தியரும் அவர் மனைவியார் அம்புஜவல்லியம்மாளும் இன்னுஞ் சிலருமாகப் புகை வண்டிச்சாலைக்குப் போய்விட்டனர். அவர்கள் புகை வண்டியில் ஏறியதும் அம்புஜவல்லியார் "நமது வீட்டிலானால் இந்நேரம் குழந்தைகளுக்குக் காப்பி செய்து கொடுத்திருப்பேன். அவர்கள் இந்நேரம் என்ன செய்கின்றார்களோ தெரியவில்லையே" என்

னார். வைத்தியர் "ஒப்பிலாமணிப்பண்டிதரும் அவர் மனைவியாரும் மிகவும் உத்தமமானவர்கள். அவர்கள் அவர்களுக்கு ஒரு குறைவுஞ் செய்யமாட்டார்கள்" என்றார். அவர்கள் இங்ஙனம் சச்சரித்ரனையும், சதாநந்தனையும் பற்றிப் பேசிக்கொண்டே பிரயாணஞ் செய்வாராயினர்.

நிற்க, சாரசநேத்ரி வனஜாக்ஷியை அழைத்துக்கொண்டு தோட்டத்துக்குச்சென்று அவளை யாரேனும் வந்தாற் சொல்லும்படி ஒரு புறம் நிற்க வைத்துத் தானொருபுறம் ஒரு செடியின் மறைவிலிருந்து அக்கடிதத்திலுள்ள விஷயங்களை முற்றும் இரண்டு மூன்று முறை நன்றாய்ப்படித்து பார்த்துக்கொண்டு அவளிடங்கொடுத்துப் படிக்கச்சொன்னாள். அவளும் முற்றும் படித்து முடிக்குஞ் சமயத்திற் பக்கத்துத்தோட்டத்திலிருந்து யாரோ ஓராடவன் வருவதாகத் தோற்றியது. உடனே வனஜாக்ஷி அதை அவசரமாகத்தன் மடியிற் சொருகிக்கொண்டாள். அவ்வாடவன் சமீபமாக வருதலைக்கண்டு சாரசநேத்ரி முன்னும் வனஜாக்ஷி பின்னுமாக மாளிகைக்குட்சென்றார்கள். வந்த ஆடவன் அவர்கள் நின்றுகொண்டிருந்த மரத்தருகில் வந்தனன். அங்கொரு கடிதமிருந்தது. அதைக்கண்டு ஆவலோடும் எடுத்துப்படித்துப்பார்த்து, "உம், அப்படியா? பேஷ்! சாரசை வசமாயகப்பட்டாள் நமது கையில்" என்று இரண்டுமூன்று தரந் தலையை யசைத்துவிட்டு அங்கு நின்றுகொண்டிருந்தான். சிறிது நேரஞ் சென்று "என்ன இன்னும் அவர்கள் வரவில்லையே. ஒருகால் இப்பொழுதிருக்கும் அதிக வேலையினால் மறந்துவிட்டார்களோ? அன்றி அத்தையம்மாள் அவர்களிடஞ்சொல்ல மறந்தார்களோ" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது பின்னுமுன்னுந் திரும்பித் திரும்பிப்பார்த்துக்கொண்டே இரண்டு பெண்கள் வந்தார்கள். அவன் அவர்களைநோக்கி "இந்நேரம் என்ன செய்தீர்கள்" என்றான். "இந்நேரம் அம்மாள் சாரசநேத்ரியாரும், வனஜாக்ஷியும் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் இங்கு வந்திருந்து இப்பொழுதுதான் வீட்டுக்குட் சென்றார்கள். அதனாலேதான் இந்நேரமாயிற்று." என்றார்கள்.

சஜகர்ணன்:—சரி, இருக்கட்டும். அத்தையம்மாள் என்ன சொன்னார்கள்.

வந்தபெண்கள்:—நீங்கள் நேற்று இரவு எட்டுமணிக்கு வந்து போனபிறகு எங்களை அழைத்து, உங்கள் சொற்படி நடந்துகொள்ளும்படி எங்களுக்கு உத்தரவு செய்தார்கள்.

கஜகர்ணன்:—அதில் உங்களுக்குச் சிறிதுந் தடையிராதே?

வந்த பெண்கள்:—யாதொரு தடையும் இராது.

கஜகர்ணன்:—சரி, நீங்கள் இரவு எட்டுமணிக்கு இத்தோட்டத்தின் பின்புறத்தில் வந்திருங்கள். பிறகு நடக்கவேண்டிய சங்கதிகளைச் சொல்லுகின்றேன், என்று போய்விட்டான்.

வந்தபெண்களில் ஒருத்தி மற்றொருத்தியை நோக்கி,'தோழி, கனகாங்கி! இனி நமக்கு நல்ல காலந்தான். வனஜாக்ஷியும், திலகமும் சாரசநேத்ரியார் தங்களிடம் மிக்க அன்பைக் காட்டுகின்றார் என்றெண்ணி நம்மைச்சிறிதும் பொருட்படுத்தாமல் கொர்வங்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கொட்டத்தை அடக்கிவிட வேண்டும். அதற்கு இதுதான் தக்க சமயம்" என்றாள். அதைக்கேட்ட கனகாங்கி "நீ மிகவும் அவசரக்காரி. இன்னும் ஒரு காரியமும் நமக்கு அனுகூலமாக ஏற்படவில்லை. இதற்குள் இவ்வளவு எண்ணங்களை எண்ணி விடுகின்றாயே! எல்லாம் முடிவில் எப்படிப்போய் எப்படிவருமோ. அனைவரும் சாரசநேத்ரிக்கும், அவரது மாமனார் புத்திரராகிய செல்வமணி என்பவருக்கும் விவாகம் நடக்கப்போகின்றதென நிச்சயித்துக்கொண்டு அநேக காரியங்கள் நடத்தி வருகின்றார்கள். வைத்தியரும்விவாகத்திற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் செய்வதற்குக் காரைக்குப் போய்விட்டார். அப்படியிருக்க நீ இவ்வளவு நிச்சயமாக ஏதேதோ எண்ணிச்சொல்லிவிடுகின்றாயே, பயித்தியக்காரி. எல்லாம் நம்முடைய இஷ்டம்போல முடியட்டும்; பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்றாள். இங்ஙனம் இருவரும் பேசிக்கொண்டு மாளிகைக்குட் சென்றார்கள்.

ஆறும்-அத்தியாயம்.

மணிகண்டன்:—கஜகர்ண! நேற்றுமாலை நீ என் வரவில்லை? உனக்காக நான் வெகுநேரங் காத்துக்கொண்டிருந்தேனே.

கஜகர்ணன்—நண்ப! நேற்று நான் தலைநோய் என்றுபாசாங்கு செய்து எங்கள் அத்தையம்மாளை வரவழைத்து எங்கள் அம்மாளையும் வெளியிற் போகச்சொல்லிவிட்டு நீ சொன்னவாறு அவர்கள் என்னிஷ்டம்போற் செய்யச்சம்மதிக்கும்படி செய்துகொண்டேன். அன்றியும், நேற்றிரவு எங்கள் அத்தையம்மாளிடஞ்சென்று சார

சையின் தோழிகளிற் சுபாங்கி, கலாகாங்கி என்னும் இருவர்க்கு நான் சொல்லுவதுபோல அவர்கள் நடக்கும்படி உத்தரவுசெய்யச் சொல்லி அவர்களை இன்றுகாலையில் தோட்டத்தில் என்னை வந்து பார்க்கச்சொல்லும்படியாகவுஞ்சொன்னேன். அப்படியேஎங்கள் அத்தையம்மாள் அவர்களுக்குச் சொல்லிவிட்டார்களாம். அவர்கள் அவ்வாறே இன்று என்னிடம் வந்து "தாங்கள் சொல்வதுபோல நடந்துகொள்ளும்படி உங்கள் அத்தையம்மாள் எங்களுக்கு உத்தரவு செய்தார்கள்" என்று சொன்னார்கள். அப்படியானால், இன்று இரவு எட்டு மணிக்கு இத்தோட்டத்தின் பின்புறமாக வந்திருங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

மணிகண்டன்:—இதுவென்ன காகிதம்?

கஜகர்ணன்:—முக்கியமாக இதைக் காட்டத்தான் இப்பொழுது உன்னிடம் வந்தேன். இந்தா இதைப் படித்துப்பார், என்று அக்கடிதத்தை அவன் கையிற் கொடுத்தான்.

மணிகண்டன்:—(அதை வாங்கி படித்துப்பார்த்து) அனுகூலமுண்டாகுங் காலத்தில் எல்லாம் அனுகூலமாகவே முடியும். சரி, இனி இதற்கு என்ன உபாயஞ்செய்ய நினைக்கின்றாய்.

கஜகர்ணன்:—அவன் காதோடு சில சமாசாரங்களைச் சொன்னான்.

மணிகண்டன்:—அப்பா! நீ மிகவும் அசாத்தியன். இவ்வளவு அசாத்தியமான காரியங்களைச்செய்ய உன்னையன்றி மற்றவர்களாலாகாது. நீ எப்பொழுது புறப்படப்போகின்றாய்?

கஜகர்ணன்:—இன்றைக்கு நாலாநாள் புறப்படுவேன்.

மணிகண்டன்:—ஆனால்இன்றிரவு அப்பெண்களிடம்சொல்லவேண்டிய சமாசாரங்களை யாருக்குந் தெரியாமல் வெகு ஜாக்கிரதையாகச் சொல்லிவிடு.

கஜகர்ணன்:—அப்படியே சொல்லி விடுகின்றேன். என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

விண்மணியாகிய சூரியன் உலகத்தாருக்கு "மானுடர்களே! உங்கள் சரீரமும் இப்படியே சிறிது காலம் இளமைப்பருவத்தையும், சிறிதுகாலம் யௌவனப்பருவத்தையும், சிறிது காலமுதுமைப் பருவத்தையும் அடைந்திருந்து பிறகு மறைந்துபோகும். அதை

நித்தியமானது என்றெண்ணிப் பிறர்க்குத் தீமையைச் செய்யாதீர்கள்” என்று போதிப்பதுபோலக் காலைக்கதிராய்க் கடும்பகற்கதிராய்ப்பிறகு மாலைக்கதிராய் மறைந்து விட்டனன். உடனே கலையறிவில்லாதவன் மனத்தில் அறியாமை நிறைந்திருப்பதுபோல இருள் எங்கும் நிறைந்துவிட்டது. அத்தகையோனுக்குப் பெரியோர்கள் பருவங் கண்டு கூறும் எளியனவான போதனையினால் இடை இடைச்சிறிது சிறிதே அறிவு தோன்றுதல்போல வீடுகள் தோறுந் தீபங்கள் தோன்றின. பூர்ணமா னக்கலை நிரம்பப் பெற்ற சந்திரனாலும் முற்றும் போக்கமுடியாத அவ்விருள் இச்சிறு தீபங்களாற் போக்க முடியுமோ? அச்சிறு தீபங்களுள்ள சில்விடங்களிலன்றி மற்ற விடங்களிலெல்லாம் இருள் நிரம்பிக் கண்களுக்குப் பொருள்களைக்காட்டாமல் மறைத்துக்கொண்டிருந்தன. மணி எட்டாய் விட்டது. கஜகர்ணன் அப்பெண்களை வரச்சொல்லிக் குறிப்பிட்ட இடத்திற்குச்சென்றான். அங்கு இரண்டு பேர் நிற்கக்கண்டான். ஆனால் அவர்கள் புருஷர்களாகக் காணப்பட்டார்கள். உடனே கஜகர்ணன் முன் வைத்த காலைப்பின் வைத்தான். அவர்கள் “யாருமில்லை வாருங்கள் நாங்கள்தான்” என்று குரல் கொடுத்தார்கள். கஜகர்ணன் அக்குரலால் தான் வரச்சொன்ன பெண்களே அவர்களென்று தெளிந்து அருகிற் சென்று அவர்களிடஞ் சில சமாசாரங்களைச்சொல்லி அவர்களைப்பத்திரமாகக்கொண்டு வந்து தோட்டத்துக்குள் விட்டுவிட்டுப் போய்விட்டான். அவர்கள் தோட்டத்துக்குள் வந்தவுடன் புருஷவுடையை மாற்றிவிட்டு மாளிகைக்குட் சென்றுவிட்டார்கள்.

ஏழாம்-அத்தியாயம்.

மறுநாட்காலையில் ஒப்பிலாமணிப்பண்டிதர் தமது மனைவியாராகிய பூங்குழல் வல்லியாரை நோக்கிப், “பூங்குழலாய்! இன்று காலையில் சச்சரித்ரனும், சதாநந்தனும் புகை வண்டிச்சாலைக்குப் போகவேண்டியவர்கள் என்றுசொன்னேனே ஞாபகமிருக்கின்றதா’ என்றார் அவ்வம்மையார் “அவர்கள் புகை வண்டிச்சாலைக்குப்போதற்கு வேண்டியனவெல்லாஞ் சித்தமாயிருக்கின்றன” என்றனர். உடனே பண்டிதர் சச்சரித்ரனையும் சதாநந்தனையும் நோக்கி “மணியாய்விட்டது. இனி நீங்கள் புறப்படவேண்டியதுதான்” என்றார். சதா

நந்தன் "எம்முடையீர்! நமது குறுஞ்சேரிக்கும் வண்டலூர்ப்புகை வண்டிச்சாலைக்கும் எவ்வளவு தூரம்." என்றான்.

பண்டிதர்:—"மணிபுரத்துக்கும் நமது ஊருக்கும் ஒரு கல் தூரந்தான்" என்றார் சதாநந்தன் "ஆனால் நமது ஊருக்கும் அதற்கும் மூன்றுகல் தூரந்தான். நடந்து சென்றாலும் முக்கால் மணி நேரத்தில் அங்குப்போய்ச் சேர்ந்துவிடலாம்" என்றான். "சச்சரித்ரன் ஏன் அரைமணி நேரத்திலேயே போய்ச் சேர்ந்துவிடலாம்" என்றான். பண்டிதர் "நீங்கள் நடந்துபோகவேண்டிய அவசியமில்லை. தெருவில் வண்டி வந்திருக்கின்றது. சீக்கிரம் போய் ஏறிக்கொள்ளுங்கள்" என்றார். அவர்கள் அவ்வாறே தங்களுக்குவேண்டிய சாமான்களையெல்லாங் கொண்டுபோய் வண்டியில் வைத்துக்கொண்டு ஏறிக்கொண்டார்கள். பண்டிதர் அவர்களோடு வண்டலூர்ப் புகைவண்டிச்சாலை வரையினுஞ்சென்று அவர்கள் புகைவண்டியில் ஏறினபிறகு தாம் திரும்பி வந்துவிட்டார். அவர்கள்சென்று மாயவரத்துப் புகை வண்டிச்சாலையில் இறங்கி மாயவரஞ்சென்று அங்கோர் சத்திரத்தில் தங்கிஇருந்தார்கள். அன்று மூன்றாம்நாட் காலையில் கஜகர்ணன் ஒரு கடிதம் எழுதிக் கனகாங்கி, கபாங்கி என்பவர்களை அழைத்து அவர்களிடங் கொடுத்துத் தன் அத்தையாராகிய அமிர்தவல்லியம்மாளிடங் கொடுக்கச் சொல்லிக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்து தன் தந்தையாரிடத்தும், தாயாரிடத்தும் "இக்கலியாணம் முடிகிறவரையினும் இவ்வூரிலிருக்க எனக்கிஷ்டமில்லை. ஆகையால நான் சென்னைக்குப் போகவேண்டும்" என்றான். அவர்களும் அவன் அவ்வாறு அச்சமயத்திற் சென்னைக்குப்போய் விடுவதே நலமென்றெண்ணி அப்படியே போக உத்தரவு கொடுத்துவிட்டார்கள். அவன் மிகவுஞ் சந்தோஷத்துடன் தன் அறைக்குட் சென்று நோட்டுகளாகவும், சவரன்களாகவும் தான் முன்னாகச் சேகரித்து வைத்திருந்த சற்றேறக்குறைய ஐயாயிரம் ரூபாய் உள்ள ஒரு பையையும், இன்னும் தனக்குவேண்டிய சில சாமான்களையும் எடுத்துக்கொண்டு மணிகண்டன் வீட்டுக்குச் சென்றான். அவன் கஜகர்ணனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு ஒரு வண்டியைப் பேசிச் சித்தமாக வைத்துக்கொண்டிருந்தான். அவன் வந்ததும் அவ்விருவரும் அந்த வண்டியிலேறிப் புகை வண்டிச்சாலைக்குச் சென்று அங்கு டிக்கட்டு பெற்றுக்கொண்டு புகைவண்டியில் ஏறி மாலை சற்றேறக்குறைய நாலரைமணிக்கு மாயவரம் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் அங்குப்போனதும் ஒரு பிராமணர் அவர்களை எதிர்கொண்டு வந்து தங்கள் வீட்

டுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு நாற்காலியிட்டு அதில் உட்காரச்சொல்லினர். அவர்களும் உட்கார அவரும் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தனர்.

கஜகர்ணன் :—(மணிகண்டனை நோக்கி) நண்ப! இவர்தான் நான் சொன்ன சுப்பண்ணையர்.

மணிகண்டன் :—இவர்தானா! "மிகவுஞ் சந்தோஷம். ஸ்வாமி! என்னமோ தங்களை நம்பிக்கொண்டு தான்" வந்திருக்கின்றோம்.

சு-ஐ :—அதற்கென்னங்கோ பிள்ளைவாள், கடிதம் வந்தது முதல் அவருடைய காரியத்தை நிறை வேற்ற வேண்டியதற்குரிய வேலைகளைத் தான் செய்துகொண்டிருக்கிறேன்.

கஜகர்ணன் :—நான் குறித்த மனிதர்கள் இன்னாரென்பதைத் தெரிந்து கொண்டீர்களோ?

சு-ஐ :—அவர்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது தானே முதல் காரியம். அவர்களைத் தெரிந்து கொள்ளாமல் மேல் நடத்த வேண்டியவைகளை எப்படி நடத்துவது? அவர்களை நேற்றையதினமே இன்னார் எனக் கண்டுகொண்டேன்.

கஜகர்ணன் :—சரி, இனிமேல் நடத்தவேண்டிய காரியங்களை நடத்தலாமல்லவா.

சு-ஐ :—நடத்துவதில் யாதொரு தடையும் இல்லை. ஆனால்;

கஜகர்ணன் :—சரி, நீங்கள் சொல்லப்போவது எனக்குத் தெரியும். உங்களுக்கு நடத்த வேண்டியதில் யாதொரு குறைவும் நான் செய்யமாட்டேன்.

சு-ஐ :—நன்றாய்ச்சொன்னீர்கள். எனக்காகவா? உங்கள் விஷயத்தில் அவ்வளவுசெய்ய எனக்குப்பாத்தியதை யில்லையா? உங்கள் விஷயத்தில் நான் வாங்கிக்கொண்டுதானா ஒரு காரியத்தைச்செய்ய வேண்டும்? அதற்கென்ன எனக்கு ஏதேனும் வேண்டுமென்றால் தாங்கள் சித்தமாகக்கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கின்றீர்கள்.

கஜகர்ணன் :—மற்று யாரைப்பற்றிக் கேட்கின்றீர்கள்?

சு-ஐ :—இந்த விஷயத்தில் இன்ஸ்பெக்டர் அவர்கள் தயவு இருந்தாலொழிய நான் பிரவேசிப்பது கூடாமையாகும்.

சஜகர்ணன்:—அதற்கென்ன இன்னும் நல்லதாய் விட்டது. செய்யவேண்டிய காரியங்களை இன்னும் அதிக தைரியத்துடன் செய்யலாமல்லவோ? அவருக்கு என்ன கொடுக்கவேண்டும் என்கின்றீர்கள்?

ச-ஐ:—அவ்வளவு இப்பொழுது தாங்கள் கொண்டுவந்திருக்கின்றீர்களோ இல்லையோ? அவர் அதற்கெல்லாம் உட்படுகின்றவரே யல்லர். அவர் அப்படியாக நமது தாக்ஷிண்யத்தினால் உட்பட்டாலும் கொஞ்ச நஞ்சத்திற்கெல்லாம் உட்படமாட்டார். அப்படித் தங்கள் கையில் இல்லாவிட்டாலும் தங்கள் கையெழுத்தின்மேல் இங்கு யாரையேனுங் கொடுப்பிக்கின்றேன்.

சஜகர்ணன்:—அதைப்பற்றி நீங்கள் சிறிதும் யோசிக்கவேண்டாம். அவருக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்? அதைமாத்திரஞ் சொல்லுங்கள்.

ச-ஐ:—அவர் சொல்வதோ பெருந்தொகையாக இருக்கின்றதே. அதைத் தங்கள் விஷயத்தில் எப்படிச் சொல்வதென்று பார்க்கின்றேன். ஆனால் காரியத்தைப் பார்த்தாலோ அதுவுங் கொடுக்கலாம், அதற்கு மேலுங்கொடுக்கலாம்.

சஜகர்ணன்:—தாங்கள் ஏன் இப்படியோசிக்கின்றீர்கள்? எவ்வளவானாலும் நான் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன். சொல்லுங்கள்.

ச-ஐ:—அவர் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் கேட்கின்றார். ஆனால் தாங்கள் ஆயிரத்தைந்நூறு ரூபாய் கொடுத்தால் நான் எப்படியேனுந் தங்களுக்காகச் சரிப்படுத்தி விடுகின்றேன்.

சஜகர்ணன்:—தொகை அதிகமாயிருந்தாலும் என்ன செய்வது. நாம் எடுத்தகாரியம் முடியவேண்டியது முக்கியமேயல்லாமல் பணம் முக்கியமல்ல. என்று நூறுரூபாய் நோட்டுகள் பதினைந்தெடுத்து ஐயர் கையில் கொடுத்தான். அவர் அவற்றைப் பெற்றுக்கொண்டு அவர்களை வெளியிற் சென்று வரும்படியாக அனுப்பிவிட்டுத் தமது மனைவியாகிய சேஷுவை அழைத்து அவற்றிற் பத்துநோட்டுகளைக் கொடுத்துப் பத்திரமாக வைக்கும்படி உத்தரவு செய்துவிட்டு இன்ஸ்பெக்டர் சம்பந்தப்பிள்ளை யிடஞ்சென்று அவர் கையில் அந்த ஐந்துநோட்டுகளைக் கொடுத்தார்.

சம்பந்தப்பிள்ளை:—ஐயரே! ஏது நீர் சொன்ன தொகைக்கு அதிகமாகவே இருக்கின்றதே.

சு-ஐ:—நான் உங்களிடம் முந்நூறு ரூபாய் வாங்கித் தரக்கூடும் என்று ஒருநிதானத்தில் பேற்சொன்னேன். ஆனால் அதையே அவர்களிடஞ் சொல்லி விடுவேனா? அவர்களிடம் அப்படிச் சில சமாசாரங்களைப் பேசிக்கொண்டிருந்து கடைசியாக "இது ஐந்நூறு ரூபாய் கொடுத்தாலொழிய முடியாது" என்றேன் அவர்கள் அதற்குமேல் முந்நூறு என்றும், நானூறு என்றும் பேரம்பேசிக் கடைசியாக ஐந்நூறுரூபாய் கொடுக்கின்றோம். எங்கண்மீது தயவு செய்து எப்படியாகிலுங் காரியத்தை முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நான் பிகுவாகவே "உங்களுக்காகையால் நான் இதற்கு ஒத்துக்கொள்ளுகின்றேன்" என்றுவாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். அப்படியில்லாமல் நான் உங்களிடஞ் சொல்லிப் போனதுபோல "முந்நூறு கொடுக்கவேண்டும்" என்று கேட்டால் நூறு, நூற்றைம்பது என்று தானே பேரம் பேசுவார்கள்.

சம்பந்தப்பிள்ளை:—என் விஷயத்தில் உம்மைப்போல உண்மையாக நடந்து கொண்டவர்களை நான் இதுவரையிலும் பார்த்ததே இல்லை. நீர் முன்னே என்னிடஞ் சொன்னபடி முந்நூறு ரூபாயை எனக்குக் கொடுத்து விட்டு மற்ற இருநூறு ரூபாய்களை நீரே எடுத்துக்கொண்டிருப்பீரானால் எனக்குத் தெரியப்போகிறதா? நீர் இப்படியெல்லாம் என் விஷயத்தில் நடந்து கொள்வதனால்தான் எனக்கு உம்மிடத்தில் இப்படிப் பொன்பு உண்டாயிருக்கின்றது. உமது விஷயத்தில் மற்றச்சேவர்களுக்கெல்லாம் பொறாமைதானே. உம்மை ஹெட்கான்ஸ் டேபிலாகச் செய்வித்தபோது எத்தனை பேர் பொறாமைபட்டார்கள். நான் அவர்கள் பொறாமைக்கெல்லாம் இடங் கொடுப்பேனா என்ன? நீர் இந்த விஷயத்தில் மிகவும்பிரயாசைபட்டிருக்கின்றீர். (ஒரு நூறுரூபாய் நோட்டைக் கையில் எடுத்துநீட்டி) இந்தாரும், ஒரு நோட்டை நீரெடுத்துக்கொள்ளும்.

சு-ஐ:—வேண்டாம், வேண்டாம், எனக்கு உங்கள் தயவு இருந்தாற்போதும். இதைப்போல எத்தனை நூறு ரூபாய்களை வேண்டுமானாலும் நான் சம்பாதித்துக்கொள்வேன். இந்த ரூபாய்களை உங்களுக்கென்று தானே வாங்கிக்கொண்டு வந்தேன். எனக்கு வேறே அவர்கள் கொடுப்பார்கள். நான் அதை வாங்கிக் கொள்கின்றேன்

சம்பந்தப்பிள்ளை—(தம்மிடம் இருந்த ஐம்பதுரூபாய் நோட்டொன்றையெடுத்து நீட்டிச) சரி, நீர் இந்த ஐம்பது ரூபாயையாகிலும் வாங்கிக்கொள்ளும்.

ச-ஜூ:—சரி, சரி, எனக்கு வேண்டியதே வேண்டாம். என்னிடம் ரூபாய்கள் இருக்கட்டுமே, இதைக்கொண்டுபோய் எங்கள் ஆத்துக்காரியிடங்கொடுத்து "பிள்ளையவாள் கொடுத்தார்" என்று சொன்னபோதே அவள் "முன்னே கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்து மறுவேலை பாருங்கள்" என்று சொல்வாள். அதற்கு நான் என்ன சொல்லுவேன்?

சம்பந்தப்பிள்ளை:—நான் கொடுத்ததாகச் சொல்லாமல் வேறு யாரேனுங் கொடுத்ததாகச் சொல்லுமே

ச-ஜூ:—அடே அப்பா! இது மூச்சுவிட்டாலும் அது அங்கு தெரிந்து விடுகின்றதே. இதை எப்படி மறைக்க முடியும்! இதை யாருக்குந் தெரியாமல் மறைக்க நினைப்பது "முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க நினைப்பது" போன்றது தான்.

சம்பந்தப்பிள்ளை:—இருந்தாலும் இருக்கட்டும் நான் வற்புறுத்திக் கொடுத்ததாகச் சொல்லிக்கொடும். அப்படியும் மறுத்தால் இன்றிரவு உங்கள் வீட்டுக்கு வரவேண்டிய வேலை இருக்கின்றது. அப்போது அந்த அம்மாளுக்கு நான் சமாதானஞ் சொல்லுகின்றேன்.

ச-ஜூ:—இப்படி நீங்கள் சொன்னால் நான் எப்படித் தடுப்பது. சரி, கொடுங்கள். என்று வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்று தன் மனைவியின் கையிற் கொடுத்து அங்கு நடந்த சமாசாரங்களை யெல்லாஞ் சொன்னார். அவ்வம்மை "இதுவும் லாபத்தோடு லாபந்தான்" என்று அதையும் வாங்கிவைத்துக் கொண்டனள்.

எட்டாம்-அத்தியாயம்.

சதானந்தன்:—நண்ப! நாம் இங்குவந்து வெகு நேரமாய்விட்டது. இத்தோட்டத்தில் யாரும் இரவானால் வருவதேயில்லைபோ லிருக்கின்றது.

சச்சரித்ரன்:—ஆம், ஆம்! நண்ப! நான் பகல் சத்திரத்தில் முன்னதாகச் சாப்பிட்டுவிட்டு வெளியில்வந்தேனே. அப்பொழுது அங்கொருவரிருந்தார், அவர் "நீங்கள் தினமும் வெளிக்குப்போகின்ற தோட்டத்தில் இரவில் ஒருவரும் போகமாட்டார்கள். ஆனாலும் எங்கேயோ இருந்து சிலதிருடர்கள் அங்குவந்து சேருகில்

றார்கள்" என்றார். நான் அதை உன்னிடஞ் சொல்லமறந்து விட்டேன். வருகபோவோம்.

என்று அவ்விருவரும் பேசிக்கொண்டு தாங்கள் இறங்கியுள்ள சத்திரத்திற்குப்போகப் புறப்பட்டார்கள். புறப்பட்டவர்கள் தமக்கெதிரில் ஒரு மனிதன் வரக்கண்டு திருடன்போலும் எனச் சற்று நிதானித்தார்கள்.

உடனே வந்த மனிதன் ஒருமுறை சீழ்க்கையடித்தான். அச்சீழ்க்கையின் ஓசையைக் கேட்டுச் சிலர் அங்கு ஓடிவந்து கள்ளப் பையல்களே! இதுவரையிலும் எங்கள் கண்ணுக்கு நீங்கள் அகப்படாமல் மறைந்து கொண்டிருந்தீர்களல்லவா? "பல நாளைய திருடர்கள் ஒரு நாளைக்கு அகப்படுவார்கள்" என்பதை நீங்கள் கேட்டிருக்கவில்லையா? இதுவரையிலும் எத்தனையோ பேர்களுடைய சொத்துக்களைப் பறித்துக்கொண்டு அவர்களையும் அநியாயமாய் அடித்துத் துன்பப்படுத்தி வந்தீர்கள். இன்று அத்துன்பங்களையெல்லாம் நீங்கள் அநுபவிப்பீர்கள்" என்று கூறி இரண்டு துணிகளால் அவர்களைக்கட்டி இழுத்தார்கள். அப்போது சச்சரித்திரனும், சதானந்தனும் எவ்வளவு கலங்கினார்களோ என்னென்ன எண்ணினார்களோ! எப்படி வருந்தினார்களோ! அவையெங்குமாயுள்ள இறைவனேயன்றி மற்றவர்களால் அளவிடற்கரியனவாமோ? சச்சரித்திரன் உடலில் உயிர் இருக்கின்றதோ? இன்றோ? என்னும்படி மெய் சோர்ந்து கீழே விழுந்துவிட்டான். அப்போது அக்கொடியவர்களில் ஒருவன் இவன் மிகவும் பாசாங்கு செய்கின்றான். இவனை விடாதீர்கள். நன்றாய்ப்புடைத்து எழுப்புங்கள் என்றான். அதைக் கேட்டமாத்திரத்திற் சதானந்தனுக்கு மெய்யெல்லாம்வெயர்த்தது. உள்ளமும் உடலும் ஒன்றாய் நடுங்கின. பேச்சு குழறியது. இவ்வளவு துன்பத்துடனும் அக்கொடியவர்களை நோக்கி "ஐயன்மீர்! நீங்கள் எங்களை ஒன்றுஞ் செய்யாதீர்கள். நாங்கள் உங்கள் சொற்படி நடந்து கொள்ளுகின்றோம். நீங்கள் எங்கு வரச்சொல்லினும் வருகின்றோம்" என்றான்.

அப்போது அச்சேவர்களில் ஒருவன் இன்ஸ்பெக்டர் "உங்களிடம் அகப்படுந் திருடர்களை யாதொருதொந்திரவுஞ் செய்யாமற் பிடித்துக்கொண்டு வருவீர்களாக என்று கட்டளையிட்டிருக்கின்

றார். ஆகையால் நாம் இவர்களை ஒன்றுஞ் செய்யாமலே அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்றான். அவன் அவ்வாறுசொல்லுஞ் சமயத்தில் சச்சரித்ரன் சிறிதே மூர்ச்சை தெளிந்து எழுந்துட்கார்ந்து "ஆ! நண்ப! சதாநந்தா! நீ எங்கே இருக்கின்றாய்! ஆ! தெய்வமே!"......என்று அதற்குமேலொன்றுஞ் சொல்லநாவெழாமல் மறுபடியும் மூர்ச்சித்து அப்படியே தரையிற் சாய்ந்தான். அந்தோ! அச்சமயஞ் சதாநந்தனுடைய மனமிகவுங்கலங்கியது. சதாநந்தனைப் பிடித்துக்கொண்டிருந்த சேவகன் அவனைச் சச்சரித்ரனிடம் போகவிடவில்லை. சிறிதுநேரத்திற் சச்சரித்ரன் மூர்ச்சை தெளிந்தெழுந்து "சாரசே என்நட்பை விரும்பிய உனது கதியினியாதாகுமோ" என்றான். அதைக்கேட்ட சதாநந்தன் "ஆ! கொடுமை. கொடுமை! இன்னும் என்னென்ன விளையப்போகின்றனவோ? ஆ! பரம புருஷா! நீதான் எங்கட்குற்ற இவ்விடுக்கண்களைப் போக்கியருளல்வேண்டும் நின்னையன்றி யாவர் துணையுறுவார்? அடியேங்கட்குற்ற தந்தையும் நீயே. தாயும் நீயே" என்று கண்ணீரைப் பெருக்கினன். சச்சரித்ரனும், சதாநந்தனும் மிகவும் மேதாவிகள். அவ்விருவரும் தக்க பலமுமுடையவர்கள். அவர்கள் சிறந்த போர்வீரர்களை யொத்த தைரியசாலிகள். எவ்வளவு துன்பமுற்றதெனினும் பொறுத்துக் கொள்ளுதற்குரிய மனவலியுற்றவர்கள். அவர்கள் நினைத்தால் அங்குவந்த சேவகர்கள் அத்தனை பேரையும் நன்றாய்ப் புடைத்துக் கீழே தள்ளிவிட்டுப் போய்விடத் தக்கவர்கள். ஆகையால் அவர்கள் அவ்வாறு தளர்ச்சியடைந்ததற்குக் காரணம் அவர்கள் கையிற் பிடிபட்டதாயிராது. வேறு யாதோ ஒரு காரணம் இருத்தல்வேண்டும். என்பதை இதைப்படிக்கும் நண்பர்கள் யூகித்துணர்ந்து கொள்ளலாம். ஆனால் அவர்கள் அச்சேவகர்கள் கையினின்றும் தப்பித்துக்கொண்டு போகாமைக்குக் காரணம் பலக்குறைவன்று. அவர்கள் "உற்றதுகொண்டுமேல் வந்துறுபொருள் உணருங்கோளார்" ஆகையால் அச்சேவகர்கள் தக்க முயற்சியுடனே வந்திருக்கின்றார்கள் என்று உணர்ந்தார்கள். அச்சேவகர்களை அனுப்பிய சுப்பண்ணா ஐயர் இலேசானவரல்லர். அவரவர்களுடைய வன்மையை நன்றாய் விசாரித்தறிந்துகொண்டு அதற்கேற்றபடியே எல்லா ஏற்பாடுகளையும் செய்யும் வன்மையுற்றவர். அங்கு அவர்கள் எதிரில் வந்த சேவகர் ஐந்தாறுபேர்களே இருப்பார்கள். ஆனால் அருகில் இன்னும் பலபணிகர் இருப்பதாக அவர்கள் தெரிந்துகொண்டார்கள். அன்றியும் அச்சேவகர்கள் வெறுங்கையுடன் வந்திரார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும். நிற்க

சச்சரித்ரன் தெளிந்து எழுந்தபின் அச்சேவகர் அவர்களை அழைத்துக்கொண்டு சென்று வெவ்வேறு இரண்டறைகளில் அடைத்து தாளிட்டு விட்டார்கள். ஆ! அவ்வறைகளில் ஒரு சிறு விளக்குங் கூடவில்லை. படுக்க ஒரு சிறு பாயுமில்லை. தெய்வத்தையன்றி அவர்களுக்கு அங்கு வேறு துணையும் இல்லை. அவ்வறைகள் அவர்களுக்குத் தாயின் வயிற்றிற் குழந்தைகள் இருக்கும் நிலை இது தான் என்று விளக்கிக்காட்டுவன போன்றிருந்தன. மனிதர்கள் நினைப்பன நினைப்பன நினைத்தவண்ணம் முடியும் என்பது யாருக்கேனும் உண்டா? அங்ஙனம் உண்டாயின் துன்பம் என்னும் பெயர் உலகில் வழங்குமா? யாவர் உயர்ந்தவர்? யாவர் தாழ்ந்தவர்? செல்வர் யாவர்? தரித்திரர்யாவர். வெற்றியேது? தோல்வியேது? அரசரெனப்படுவோர் யாவர்? குடிகளெனப்படுவோர் யாவர்? யாவும் ஊழின்படியேயாகும்.

"ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

அன்றோ? அவர்களுக்கு அன்றிரவு உணவுமில்லை. அவர்களை ஒருவரு மீண்டும் வந்து கவனிக்கவுமில்லை. பாவம், பாவம்! அவர்களை அடைத்து வைததிருந்த இடங்கள் சிறைச்சாலையைச் சேர்ந்தனவுமல்ல. ஒரு வீட்டைச் சேர்ந்தனவுமல்ல. இன்னதன்மையனவாகிய அறைகளில் அன்றிரவைக்கழிக்கவேண்டியதாயிற்று, அவர்கள் கதி.

ஒன்பதாம்-அத்தியாயம்.

"மணிகண்டா! மணியாய் விட்டது. சுப்பண்ணு ஐயரை எழுப்பு" என்றான் கஜகர்ணன். அவ்வாறே மணிகண்டன் தாங்கள் இறங்கி இருந்த சத்திரத்தில் ஒருஅறையிற் படுத்திருந்த அவ்வையரை எழுப்ப அவர் எல்லா நகைகளும் பூட்டப்பட்டிருந்த இரண்டு பெண்களுடன் வந்து சேர்ந்தனர். அப்போது ஒருவண்டியும் வீதியில் வந்து நின்றது. அப்பெண்களும் ஐயரும் மணிகண்டனும் கஜகர்ணனுமக அவ்வண்டியிலேறிக் கொண்டார்கள். அப்போது கஜகர்ணன் "நண்ப, மணிகண்டா! அச்சத்திரத்து ஐயர்கொடுத்தசச்சரித்ரனுடைய உடைகளையும் சதாநந்தனுடைய உடைகளையும் எடுத்துக்கொண்டனையா" என்றான். மணிகண்டன் "அதுவரையினும்

நல்ல காலம் நீ அங்குப்போன பிறகு கேட்டிருப்பாயானால் காரியங் கெட்டுப்போயிருக்கும். இதோ எடுத்துக்கொண்டு வருகின்றேன்” என்று வண்டியினின்றிறங்கிச் சத்திரத்துக்குட்சென்று ஒரு மூட்டையை எடுத்துக்கொண்டு வந்து வண்டியில் ஏறினான். உடனே வண்டி புகைவண்டிச்சாலையை நோக்கிச்சென்றது. அப்போது ஏறக்குறைய மூன்றரைமணி இருக்கும். அரைமணி நேரத்தில் வண்டி ஸ்டேஷனுக்குப் போய்விட்டது. மற்றும் அரைமணிநேரத்தில் பட்டணத்துப்புகைவண்டி வந்தது. அதிலிருந்து பல ஜனங்கள் இறங்கினார்கள். முதல் வகுப்பிலிருந்து சந்திரபிரகாசம்பிள்ளை, வைத்தியநாதம் பிள்ளை முதலியவர்கள் அவரவர்கள் மனைவியரோடு இறங்கினார்கள். அவர்களுடைய வேலைக்காரர்களும் மற்றுஞ் சிலரும் மூன்றாவது வகுப்பிலிருந்து இறங்கினார்கள். சாரசநேத்ரியை அவளது தோழியர் இறக்கிக்கொண்டுவந்து ஓரிடத்தில் மறைவாகநிற்கவைத்தார்கள். அதன் பிறகு மாயவரத்திலிருந்து கும்பகோண முதலிய வெளியூர்களுக்குப் போகவேண்டியவர்கள் பலர் அவ்வண்டியில் ஏறிக்கொண்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வண்டிபோய்விட்டது.

பிறகு மாயவரத்திலிருந்து காரைக்காலுக்குப்போகும் புகைவண்டியொன்று அங்கு வந்து நின்றது. உடனே அவ்வண்டியில் ஏறுவதற்காக ஜனங்கள் அப்படியும் இப்படியும் அலைகின்றவர்களும், ஓடுகின்றவர்களும் இதில் இடமில்லை என்பவர்களும், ஏறுகின்றவர்களை வண்டியிலிருந்து இங்கு இடமில்லை வேறு வண்டிக்குப்போங்கள் என்று தடுப்பவர்களும், அண்ணா! தம்பி! அப்பா! அம்மா! ஏறிக்கொண்டீர்களா! அவர்கள் ஏறிக்கொண்டார்களா? நம்மவர்களில் இந்தவண்டியில் ஏறிக்கொண்டவர்கள்போக மற்றவர்கள் பக்கத்துவண்டியில் ஏறிக்கொண்டார்களா? சற்றேஎட்டிப் பாருங்கள் என்பவர்களுமாக இருந்தார்கள். அச்சமயத்தில் ஒருவர் இரண்டு பெண்களையிட்டுக்கொண்டு அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருந்தார். அவர் அச்சந்தடியில் ஒருபக்கமாக ஐந்துபெண்கள் நின்றிருந்த இடத்திற்சென்று அவர்களில் ஒருத்திக்கு ஏதோ ஒரு குறிப்புக்காட்டினார். அங்கொருவர் வந்து “வண்டி போய்விடுஞ் சீக்கிரம் ஏறிக்கொள்ளுங்கள்” என்றார். அவர்களும் வண்டி ஏறப்போனார்கள் அச்சமயத்தில் முதற்கூறியவரோடு வந்திருந்த பெண்கள் அவர்களில் கலந்தார்கள். உடனே ஐந்துபெண்கள் ஒருவண்டியிலேறினார்கள். வண்டியும் அசைந்துவிட்டது. ஒருவர் அப்படியும் இப்

படியுமாகப் இரண்டு பெண்களை அழைத்துக்கொண்டோடிக் கடைசி யாக ஒருவண்டியில் ஏறப்போனார். அச்சமயத்தில் ஒருவன் "ஓடி வந்து வண்டி புறப்பட்டுவிட்டது; ஏறவேண்டாம், ஏறவேண்டாம்" என்று அவரைத் தடுத்து, அவரைநோக்கி "ஓய்! உமக்கென்னபுத்தி யில்லையா? வண்டி புறப்பட்டு விட்டபின் அதில் ஏறப்போகின்றீரே. நீர் விழுந்து செத்தால் யார் உத்தரவுசொல்வது. இங்கிருப்பவர் களுக்குத்தானே கடைசியில் துன்பமாய் முடியும்" என்றுசொல்லி பலவாறுதிட்டி அவரை வெளியிற் போகும்படி தள்ளினான். அவர் "ஐயா! இதோ போய்விடுகின்றேன். இதோ போய்விடுகின்றேன்" என்று அப்பெண்களை அழைத்துக்கொண்டு வெளியிற் போய்விட் டார். அங்கு இரண்டுவண்டிகள் சித்தமாக இருந்தன. அவற்றில் ஒன்றில் இரண்டு வாலிபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அப்பெண் கள் அவர்களை எட்டிப் பார்த்துவிட்டு மற்றொரு வண்டியில் ஏறிக் கொண்டார்கள். அவர்களை அழைத்து வந்தவர் வண்டிக்காரர்களை நோக்கி "நீங்கள் வெகு ஜாக்கிரதையாக இவர்களை நான் சொன்ன இடத்திற் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்" என்றுசொல்லி அவ்வ ண்டிக்காரர்களுக்குத் திட்டஞ் செய்துவிட்டு அவ்வாலிபர்களிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார். உடனே வண்டிகள் புறப் பட்டன. ஆனால் அவ்வண்டிகள் மாயவரத்தைநோக்கிச் செல்லவில் லை. அது வேறு எதோ ஒரு ஊரைநோக்கிச் சென்றது. வண்டிகள் மிகவும் விரைந்து சென்றன. மான்வேகமும் அவ்வண்டிகளிற் கட் டிய குதிரைகளின் வேகத்திற்குப்பின்னிட்டது. விடியற்காலத்தில் ஸ்டேஷனுக்கு ஏறக்குறைய இருபது இருபத்தைந்துகல் தூரத்தி லுள்ள ஒரு சிறு ஊரில் வந்து நின்றன. அங்கு ஒருவீடு அவ்வண் டிகள் நின்ற இடத்தில் இருந்தது. அது மற்ற வீடுகளோடு சேர் ந்திராமல் தனியாக இருந்தது. அப்போது அவ்வாலிபர்களில் ஒரு வன் அப்பெண்களை வண்டியினின்றிறங்கி அவ்வீட்டுக்குள்போகச் சொன்னான். அவர்கள் அப்படியே இறங்கி அவ்வீட்டுக்குள் போ னார்கள். அவர்கள் உள்ளே சென்று பார்த்தபோது அவ்வீட்டில் யாரோ தங்கள் வருகையை முன்னுகவறிந்து தங்களுக்கு வேண் டிய எல்லாப் பொருள்களையுந் தயாரித்து வைத்திருக்கக்கண்டார் கள். ஆயினும், அவர்களுக்கு முகமலர்ச்சி சிறிதும் உண்டாக வில்லை. அவர்களில் ஒருபெண் மற்றொருபெண்ணை நோக்கித்தோழி "என்ன குரல் வேறாகக்காண்கின்றதே" என்றாள். அதைக்கேட்ட மற்றொருத்தி இல்லையம்மா! அது அவருடைய நண்பர் சதாநந்த

ருடைய குரலாய் இருக்கும் என்றாள். அதற்குப்பொற்கொடி இல்லை அப்படியும் இல்லையே! என்றாள். அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் வெளியில் இருந்த வாலிபர்கள், வண்டியின் சத்தங் கேட்டு அவ்வண்டிக்காரர்களை அனுப்பிவிட்டு உள்ளே வந்தார்கள். அப்போது நன்றாய் நிலந்தெளிந்து விட்டது. அவர்களைக் கண்டதும் அப்பெண்மணிகள் மனங்கலங்கித்திகைத்தார்கள். உடனே அவர்கள் கண்களில் நீர் பெருகியது "ஆ! மோசம்போய் விட்டோமே! ஆ தெய்வமே! நாங்கள் என்ன செய்யப்போகின்றோம்" என்று கதறினார்கள். அப்போது அவ்வாலிபர்களில் ஒருவன் அப்பெண்களில் ஒருத்தியை நோக்கிச், 'சாரசே! இனி நீ வருந்துவதனாற் பயனில்லை. இது வரையினும் நீயாரைவிரும்பி இருந்தாயோ! அவன் இன்னேரம் பரலோகஞ்சேர்ந்திருப்பான். அவனைப்பற்றி நீ எண்ணாதே!" என்றான். அச்சொல்லைக்கேட்டதும் அப்பெண்மணி, "ஆ நாதா!" என்று கூவிக்கொண்டே மூர்ச்சித்து விழுந்தாள். மற்றொருபெண் அவளருகிற்சென்று 'அம்மா அம்மா!' என்று அழைத்தாள். அவள் பேசவில்லை. அதனால் அவள் மிகவு மனங்கலங்கினாள். ஒரு மூலையில் ஓடினாள். ஒரு விசிறியைக்கொண்டு வந்து விசிறிச்சிறிது உபசாரங்களைச்செய்தாள். அதனால் அப்பெண் சிறிது தெளிந்து பக்கத்திலிருக்குந் தன் தோழியைப் பார்த்து "தோழி, வனஜாக்ஷி! எனது பெற்றோர்களையும் யாரை அடைதற்பொருட்டு இழக்கத் துணிந்தேனோ அந்த என்னுயிர்க் காதலரைக் காணாமல் என் கண்கள் வாடுகின்றன. என்னுள்ளமுந் தத்தளிக்கின்றது. என்னுயிரும் உடலைவிட்டு நீங்குதற்குரிய நிலையை யடைகின்றது. பரிமளாச்ரயத்தில் ஒருமுறை தமது முகதரிசனத்தைக்கொடுத்து உடனே என் மனத்தை அபகரித்துச்சென்ற அப்புண்ணியசீலரும், அவரது நண்பருமென்றே நம்பி இப்பாவிகள் கையில் அகப்பட்டோம் இனி இக்கொடியவர்கள் யாது செய்வார்களோ! ஆ! வனஜாக்ஷி! இப்பாவிகளுக்கு அவர்களுடைய உடை எப்படிக்கிடைத்தனவோ? ஒருகால் இப்படுபாவி இப்பொழுது சொன்னபடி அவர்களைக் கொன்று விட்டுத்தான் இவ்வுடைகளை அபகரித்துக்கொண்டு வந்துவிட்டானோ? ஆகா! என்னுயிர் துடிக்கின்றதே! ஆ தெய்வமே! காலாயிரம், செம்பொன் முடியாயிரம், திருக்கண் மலராயிரம்" உடைய உனக்கு எங்களுடைய துன்பத்தைக்கண்டு போக்குதற்கு ஒருகண்ணும் இல்லாமற் போனதென்ன காரணமோ? நீ தீனதயாளனல்லையோ? தேவ தேவா! இப்படியும் ஏழைகளாகிய இப்பெண்களைத் தவிக்க விடலாமோ?" என்றாள்.

அப்போது கஜகர்ணன் "சாரசே! நீ என்னை இப்படித்திட்டிக்கொண்டும், வீண் பேச்சுகளைப் பேசிக்கொண்டும் இருப்பதனால் பயனில்லை. நீ யிப்படியே செய்து கொண்டிருப்பாயானால் இனி உனக்கு உன் உயிரளவான கெடுதிவந்து நேரிடும்" என்றான்.

சாரசை:—அடா, பாவி! நீ இப்பொழுதுசொன்னதுபோல இப்பொழுதே என்னைக்கொன்று விடுவாயாகில் அது எனக்கு மிகவும் நன்மையைத்தருவதாகும். கொடியனாகிய உன்முகத்தில் விழிக்காமலும் இருப்பேன். உன்னைச் சிறிதும் விரும்பாமல் இருக்கின்றவென்னை விரும்பி இவ்வித துன்பமான காரியங்களையெல்லாஞ் செய்தனையே! நீயொரு ஆண்மகனோ? எனக்கு வேறொரு புருஷனிடத்தில் விருப்ப முண்டாயிருப்பதை அறிந்திருந்தும் நீ என்னை விரும்புதலாமோ? கற்புடைய பெண்கள் தமது மனத்தை ஒருவர்பாற்செலுத்திவிட்டபின் அம்மனத்தைத்திருப்பி மற்றொருவரிடஞ் செலுத்தவே மாட்டார்கள். நானோ என்மனத்தை ஒருபாற் செலுத்திவிட்டேன். இனி என் னுயிர் நீங்கினும் அம்மனத்தை மீட்டு மற்றொருவர்பாற் செலுத்துவேனல்லேன். உத்தமபுருஷர்கள் தம்மை விரும்பாத பெண்களைத் தாம் கனவிலுங் கருதார்கள். அந்தோ! நீ அதமனாகையால் உன்னை விரும்பாத என்னை விரும்புகின்றாய். இதனால் உனக்கியாது பயன்? இல்லறமாகிய நல்லறத்தை நடத்த விரும்பும் அறிஞர்கள் தம்மனக்கருத்தோடு இணங்கிய பெண்களையே மணந்து வாழ்வார்கள். உன்னைப்போல இவ்வித இழி தொழிலைச்செய்யமாட்டார்கள். உன்னைப்போலக் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வார் ஒருவருமிலர். நீ நல்ல குடியிற் பிறந்தவனாயிருந்தும் இத்தீத்தொழிலைப் புரிந்து உனது பெற்றோர்களுக்குப் பழிச்சொல்லையுண்டாக்கத் துணிந்தாய். உன்னால் உத்தமர்களாகிய அவர்கள் பெயருங் கெடும்படியானதைக்குறித்து என்மனம் மிகவும் பதறுகின்றது, என்று பலவாறு திட்டினள்.

கஜகர்ணன்:—அப்பெண்மணி அவ்வாறு கூறியவற்றையெல்லாங்கேட்டு அவளை நோக்கி 'ஆம், ஆம். நீயும், உன்னால் உயர்ந்தவனாக மதித்து விரும்பப்பட்ட சச்சரிதனும் இப்பொழுது செய்தது மிகவும் யோக்கியமான காரியந்தானோ? உனது பெற்றோர்கள் வைத்தியநாதப்பிள்ளையின் குமாரனாகிய செல்வமணிக்கு உன்னைக்கன்னிகாதானஞ் செய்து கொடுப்பதாக நிச்சயித்து உன்னைக் காரைக்கு இட்டுக்கொண்டு போகும்வழியில் நீ அவர்களையேமாற்றிச் சச்சரி

த்ரனோடு கூடியோடிப்போவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ததும், அதற்கவன் உடன்பட்டு மாயவரத்தில் வந்து அதற்குரிய ஏற்பாடுகளைசெய்து கொண்டிருந்தது மிகவும் நியாயமான காரியங்கள் தாம்போலும். அர்ச்சுனனோடு தன் தங்கையாகிய சுபத்திரையை உளவாயிருந்து சேர்ப்பித்த திருட்டுக்கிருஷ்ணனைப்போல உன் பக்கில் இவ்வனஜாக்ஷிசேர்ந்து சச்சரித்ரனோடு உன்னைச்சேர்ப்பிக்க எண்ணிப்பல விசித்ரமான காரியங்களை ஒன்றுந் தெரியாதவள்போலவே இருந்து செய்து வந்தாள். இவள் உன் விஷயத்திற் செய்ய இருந்த இவ்விசித்ரமான காரியத்தில் தனக்குண்டான பெரிய நோக்கத்தினாலும், சந்தோஷத்தினாலும் தன் மடியிலிருந்த கடிதம் கீழே விழுந்ததையும் அறியாமற்போய்விட்டாள். அக்கடிதம் என் கையில் அகப்படாமலிருந்திருப்பின் நீயவளைவரையும் ஏமாற்றிவிட்டு இந்நேரம் சச்சரித்ரனோடு கூடிக்கொண்டுபோய் விட்டிருப்பாயல்லவோ? என்றான்.

அதைக்கேட்டுச் சாரசை வனஜாக்ஷியை நோக்கினள். அப்போது வனஜாக்ஷி "அந்தோ! இப்பொற்கொடிக்கும், இவரது காதலருக்கும் இவ்வளவு துன்பங்கள் உண்டாவதற்கு முடிவில் நானே காரணமானவளாய் நின்றேனே! ஆ! என்ன என்மூடமதி! மறுபடியும் அக்கடிதத்தை எங்கிருக்கின்றதெனக் கவனிக்காமலும் போனேனே! கவனித்திருந்தால் இவர்களின் வஞ்சனைக்கு இம்மாதரசியார் அகப்படாவண்ணஞ் செய்திருப்பேனே. இப்பேதை மகன் நம்மையும் வஞ்சித்தனனே! இருந்தாலும் இருக்கட்டும். இவனை நாம் வஞ்சிக்கவேண்டும்" என்று தனக்குள் நினைந்து, அவனை நோக்கி "ஐயா! நான் தீயகாரியங்களுக்கு உடன்படுகின்றவளல்லள். நான் செய்யத்துணிந்தது சாஸ்திரசம்மதமான காரியமேயாகும். இப்போது நமது சாரசநேத்திரியார் செய்ய விரும்பி இருப்பது போன்ற மணஞ்செய்தலே தமிழர்களாகிய நமது பண்டையவழக்கு. ஆரியர்களுக்குரிய எண்வகை மணங்களுள் மிகச்சிறந்ததென அவர்களை மதித்துக்கூறும் காந்தர்வமணமும் இம்மணம்போன்றதேயாகும். அதனை,

"இன்பமும் பொருளு மறனு மென்னுங்
கற்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்
டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே"

ன்றப்பல்காப்பியத்தோரும்புகழ்ந்துரைக்குந்தொல்காப்பிய சூத்திரத்தினால் நன்குணரலாகும். நம் சாரசநேத்ரியாரும் அவர் காதலராகிய சச்சரித்ரரும் நன்றாய்ப்படித்தவர்கள் என்பது உங்களுக்குந் தெரிந்த விஷயந்தானே. அவர்கள் சாஸ்திர சம்மதமல்லாத காரியங்களை ஒருபோதுஞ் செய்யத்துணியார்கள்." என்றாள்.

கஜகர்ணன் :—"ஆம் நீயும் படித்தவள்தான். அவர்களும் படித்தவர்கள் தாம். அந்தச் சட்டக்கல்வியெல்லாம் இப்போது இங்குப் படிக்கவேண்டாம். இனி நடக்கவேண்டிய காரியங்களுக்கு என்ன சொல்கின்றாய்" என்றான்.

வனஜாக்ஷி:—"இதுதான் தக்கசமயம் இவனை ஏமாற்றுதற்கு' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு (அவனை நோக்கி) "ஐயா! தாங்கள் இப்படிக் கோபங்கொள்ளுதல் கூடாது. பெண்களிடத்திலெல்லாம் எப்பொழுதும் இனிமையாகப் பேசி அவர்களிஷ்டம்போல முன்னேவிட்டுப் பிறகுதான் அவர்கள் மனத்தைத் தமது வசமாகத் திருப்புதல்வேண்டும். நீங்கள் சற்றுப்பொறுமையாக இருங்கள்" என்று கூறிச் சாரசநேத்ரியை அழைத்துக்கொண்டு அங்கு ஓரறைக்குள் புகுந்தாள்.

கஜகர்ணன் :—மணிகண்டனை நோக்கி, "நண்ப! இவ்வனஜாக்ஷி மிகவுந் திருடி. இவள் விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருத்தல்வேண்டும்" என்றான்.

மணிகண்டன் :—"இவர்கள் நமது கையில் மீன்கள் வலையிற் சிக்கிக்கொள்ளுதல்போலச் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களால் என்ன செய்யமுடியும்? நாம் ஆண்பிள்ளைகளாயிருந்து இவர்களுக்கா அஞ்சுவது" என்றான்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் வனஜாக்ஷி வெளியில் வந்து கஜகர்ணனை நோக்கி "ஐயா! இப்பொழுது சாரசையார் மிகவும் வருத்தத்துடன் இருக்கின்றார். ஆகையால், அவர் மனத்தை இப்பொழுதே திருப்புவதென்றால் அது கஷ்டமானகாரியமாகும். இரண்டுமூன்று தினங்கள் அவருக்குள்ள வருத்தம் ஆறவிட்டுப்பிறகுதான் அவர்மனத்தைத்திருப்பவேண்டும். இப்பொழுது காலதாமதமாகின்றது. இனித்தாங்கள் சமையல்செய்தற்குரியகாரியங்களைச் சித்தப்படுத்தித்தரவேண்டும். சாரசையார் மற்றவர்கள் செய்யுஞ் சாப்பாட்டைச் சாப்பிடமாட்டார். நான்தான் அவர்களுக்குச்

சமைக்கவேண்டும்" என்றாள். கஜகர்ணன் "எனக்குக்கூட இன்று நீ சமைக்குஞ் சாப்பாட்டைச் சாப்பிடவே மிகவும் இஷ்டமாயிருக்கின்றது. இப்பொழுது உனக்கு என்னென்னவேண்டும் என்கின்றாய்" என்றனன். வனஜாக்ஷி "இதோ இச்சிறு கடிதத்தில் எழுதியுள்ள சாமான்களையெல்லாம் வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்று ஒரு சிறு காகிதத்தைக் கொடுத்தாள். அவன் அதை வாங்கிக்கொண்டு மணிகண்டனை நோக்கி "நண்பா! சாரதையுங் கூடக் கலந்து இச்சாமான்களை யெழுதி இருக்கின்றாள்போ லிருக்கிறது. அவளுக்கு என்னிடத்திலும் அன்பு இருப்பதாக நான் முன்னே எண்ணியது சரிதானென்று இப்போது நினைக்கின்றேன். நீ என்ன நினைக்கின்றாய்" என்றான் அவன் "நானும் அப்படித்தான் நினைக்கின்றேன்" என்றான்.

கஜகர்ணன்:—"சக்கரீத்தான் ஒருவன் மாத்திரம் இல்லாமலிருந்தால் அவள் என்னையே விரும்பியிருப்பாள். அவன் ஒருவன் இடையில் கொன்றைமாலையைப்போலக் குறுக்கிட்டதனால் காரியங்கெட்டுப்போயிற்று" என்றான். வனஜாக்ஷி "இப்பொழுதுதான் என்ன முழுகிப்போய்விட்டது? நீங்கள் சீக்கிரங்கடைக்குப்போய்சாமான்களை வாங்கிக்கொண்டுவாருங்கள்" என்றாள். அதைக்கேட்டவுடன் கஜகர்ணன் பேராநந்தக்கடலில் மூழ்கித் திளைத்தவன்போலப் பரவசப்பட்டுப் பொங்கியெழுந்து "வனஜே! இதோ சென்று வாங்கிக்கொண்டு வருகின்றேன்" என்று மணிகண்டனுடன் எழுந்தான். அப்போது வனஜாக்ஷி அவனை நோக்கி "ஐயா! தாங்கள் முன்னேயொரு காரியஞ்செய்தல்வேண்டும். அதாவது சொன்னவேலையைச் செய்வதற்கு யாரேனுமொரு சிறுபெண்ணைக் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போகவேண்டும்" என்றாள். அவன் அவ்வாறேசென்று அங்கொரு குடியானவனொடு உறவாடி அவனது இளம்வயதுடைய பெண்ணொருத்தியை அழைத்துவந்து அங்குவிட்டுக் கடைக்குப்போய்ச் சாமான்களையெல்லாம் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்துவிட்டு அக்குடியானவனையே அங்குக் காவலாக வைத்துவிட்டு அடுத்துள்ளதொருதோட்டத்தில்மணிகண்டனுடன் குளிக்கப்போய்விட்டான். வனஜாக்ஷி அக்குடியானவன்பெண்ணைச் சிலவேலைகள் செய்யும்படியாக விடுத்தாள். அக்குடியானவனிடம் வந்து "ஐயா! தங்களைப் பார்த்தால் எங்கள் தகப்பனாரைப்போ லிருக்கின்றீர்கள். உங்கள் குழந்தை மிகவுஞ்சுகுணசாலி. மிகப்புத்திசாலியாகவுமிருக்கின்றது. உங்களுக்கு இவளொரு பெண்தானே? இன்னும் பெண்கள் உண

டோ" என்றாள். குடியானவன் "அம்மா! இன்னும் இரண்டு பெண்களுண்டு, அவர்களுக்குக் கலியாணமாய்விட்டது" என்றான். வனஜாக்ஷி "ஐயா! அந்தப்பெண்களைப்போலவே என்னையும் தங்கள் பெண்ணாகத் தாங்கள் நினைக்கவேண்டும்" என்றாள்.

குடியானவன்—என்ன அம்மா! தங்களைப்பார்த்தால் தேவ மாதரைப்போ லிருக்கின்றீர்கள். நானோ ஒருபட்டிக்காட்டான். நான் தங்களை என் பெண்ணாக நினைப்பதனாலே தங்களுக்கு என்ன விசேஷம் வரப்போகின்றது.

வனஜாக்ஷி—"ஐயா! தாங்கள் அப்படிச் சொல்லுதல் வேண்டாம். என்னைத் தாங்கள் தங்கள் பெண்ணாக நினைப்பதுதான் எனக்கு மிகவுஞ்சிறந்த விசேஷமாகும்" என்று கண்களில் நீரைப் பெருக்கினாள்.

குடியானவன்—என்ன அம்மா! தாங்கள் ஏன் இப்படி வருந்துகின்றீர்கள்? தங்களுக்கென்ன குறைவு.

வனஜாக்ஷி—"நான் இவ்வளவு சொல்லியும் தாங்கள் என்னைத் தங்கள் பெண்ணாக நினைப்பதாக ஒப்புக்கொள்ளாமலிருப்பதுவே எனக்குற்ற குறைவு" என்று அவன் காலில் விழுந்து கண்ணீரைப் பெருக்கினாள்.

குடியானவன்—அம்மா! உன்னை யென் பெண்ணாகவே சத்தியமாகக் கருதுகின்றேன். உனக்குற்ற குறையை எனக்குற்ற குறையாகவே நினைக்கின்றேன். இதனை நான் எங்கு நிறைந்துள்ள பகவானறியச்சொல்கின்றேன். உனக்குற்ற துன்பத்தினின்றுநீங்கி நீ சுகமுறுவாய். எழுந்து உனக்குற்ற குறையைச்சொல்.

வனஜாக்ஷி—(உடனே எழுந்து) தங்கள் வரலாற்றை ஆதியோடந்தமாகக்கூறி, எங்களுக்குற்றதுன்பங்களை நீக்குதற்குரிய தெய்வமும் தாங்களே" என்றுமீண்டும் அவன் பாதங்களில் விழுந்தனள்.

குடியானவன்—(பெருமூச்சுவிட்டு) ஆகா, என்ன மோசம், அம்மா! நீ யொன்றுக்கும் அஞ்சவேண்டாம்; எழுந்திரு; உங்கள் விஷயத்தில் என் உயிரையும்விடச் சித்தமாக இருக்கின்றேன்; இதை யான் முக்காலுஞ்சத்தியமாகச் சொல்கின்றேன்.

வனஜாக்ஷி—உடனே எழுந்து சாரசையினிடஞ்சென்று அவளுக்கு அக்குடியானவன் தனக்கு முக்காலுஞ் சத்தியம் பண்ணிக் கொடுத்ததைக்கூறி அவளையும் அழைத்துக்கொண்டுசென்று அக்

குடியானவனைக் காட்டினாள் அப்பொற்கொடியும் அவ்வாறேகூறி அக்குடியானவனுடையகாலில்விழுந்தனள். குடியானவன் "அம்மா! நீ சிறிதும் பயப்படவேண்டாம். நானொரு குடியானவன். நான் சொன்ன சத்தியத்தினின்றுந் தவறமாட்டேன்; இதுவரையினும் நான் எனக்கு மூன்றுபெண்களே இருப்பதாக எண்ணியிருந்தேன்; இப்பொழுது உங்களிருவரையுஞ் சேர்த்து ஐந்துபெண்களை எனக்குப்பகவான் கொடுத்திருக்கிறார் என மனமார எண்ணிக்கொண்டேன். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள். நீங்கள் உங்கள் வேலையைப்பாருங்கள். மேல்நடக்கவேண்டியதைப் பிறகு ஆலோசிப்போம். இப்பொழுது அவர்கள் வருகின்றவேளையாய் விட்டது" என்றான். உடனே அவர்களும் அவ்வாறே சென்று சமையல் செய்துமுடித்தார்கள். சிறிதுநேரத்திற்கெல்லாம் கஜகர்ணனும், மணிகண்டனும் வந்தார்கள். வனஜாக்ஷி உடனே எதிர்கொண்டுசென்று அவர்களுக்குக் கைகால்கள் சுத்திசெய்துகொள்ள நீர்கொடுத்துக் கஜகர்ணனை நோக்கி "ஐயா! இப்பெரியவர் மிகவும் நல்லவர். இக்குழந்தையும் மிகவும் நல்ல குழந்தை. நாம் இங்கு இருக்கும் வரையிலும் இவர்களையும் இவ்விடத்திலேயே இருக்கும்படி சொல்ல வேண்டும்" என்றாள். கஜகர்ணன் "அதற்கென்ன, அப்படியேசொல்கின்றேன்." என்று அக்குடியானவனை நோக்கி "ஐயா! நீர் நாங்கள் போகின்ற வரையில் இங்குத்தானே இருக்கவேண்டும், நீர் என் சொல்லைத்தடுக்கக்கூடாது, நாங்கள் இவ்வூரினின்றும்போகையில் தமக்குத்தக்க சன்மானஞ் செய்யாதினின்றுந் தவிரமாட்டோம்" என்றான். குடியானவன் இதுவே தக்க உபாயமென்று தனக்குள் எண்ணிக்கொண்டு "அப்படியேசெய்கின்றேம், பெரியபிரபுக்களாகிய தங்கள் சொல்லை நான் மீறுவேனே? தங்கள் சொற்படியே நடந்துகொள்கின்றேன்" என்றான். கஜகர்ணன் அக்குடியானவனையும் தங்களோடிருந்து சாப்பிடச்சொன்னான். அவன் "தாங்கள்போய்ச் சாப்பிடுங்கள் நான் பிறகு சாப்பிடுகின்றேன்" என்றான். உடனே கஜகர்ணனும்மணிகண்டனுமாகச்சாப்பிட்டுவிட்டுப்பிறகு அவ்வீட்டின் வீதிப்புறத்துள்ள திண்ணையிற்சென்றுட்கார்ந்தார்கள். பிறகு வனஜாக்ஷி அக்குடியானவனை அழைத்துச்சாப்பிடச்சொல்ல, அவன் "அம்மா! நான் உங்கள் பொருட்டாக யாரை இப்பொழுது விரோதியாகஎண்ணியிருக்கின்றேனோ அவனது சோறன்றோ இது? இச்சோற்றை உண்டுவிட்டால் பின் நான் அவனை எவ்வாறு வஞ்சித்தல் கூடும்?

நேரிசை வெண்பா.

"முன்னொருவன் செய்யு முபகார மேவுலகுந்
தன்னைக் கொடுத்தாலுஞ் சாருமோ — வென்னே
உயிர்க்குறுதி யாக வொருவர்சோ றுண்டார்
பிறர்க்குரிய ராவரோ பேசு."

ஆகையால், இச்சோற்றை யான் உண்ணேன்" என்றான்.

வனஜாக்ஷி:—அதைக்கேட்டு "ஐயா! என்னை மன்னிக்கவிரும்புகின்றேன். எங்கள் கையிலிருந்த பணத்தைச் செலவிட்டுத் தனிமையாக எங்களுக்கெனச் சிலபலகாரங்கள் பண்ணிக்கொண்டிருக்கின்றோம். அவற்றிற்குரிய சாமான்களையெல்லாம் பிறர் அறியாவண்ணம் அம்புஜமே வாங்கித்தந்தனள். ஆகையால் அதைத்தாங்கள் யாதொரு தடையுமின்றிச் சாப்பிடலாம்" என்று அன்புடன் உபசரித்து அக்குடியானவனுக்குத் தமக்காகச் செய்து வைத்திருந்த அப்பலகாரங்களிற் பாதியைக்கொண்டு வந்து கொடுத்தார்கள். அவற்றை அவன் விருப்புடன் உண்ணலானான். அப்போது வனஜாக்ஷி "ஐயா! தங்கள் திருநாமத்தை யான் அறியும் அவாவுடையேன்; தயவுசெய்து அறிவிக்கலாகுமோ" என்றாள். அதற்கு அக்குடியானவன் 'குழந்தாய்! என்பெயர் சத்தியநாதப்பிள்ளை என்பது' என்றான்.

வனஜாக்ஷி:—"ஐயா! தங்களுடைய பெயர் தங்களுடைய குணத்துக்குத்தக்கபடியே அமைந்திருக்கின்றது. தாங்கள் இப்பொழுது கூறிய நீதிமொழி செஞ்சோற்றுக்கடன் கழித்தற் பொருட்டுத் துரியோதனனுக்கே துணையாக நின்று அவனுக்கு எதிரிகளாகிய பாண்டவர்களைத் தன்னுடைய சகோதரர்கள் என்று அறிந்தும் எதிர்த்துத் தன்னுயிரை விட்டவனாகிய கர்ணனையும், அவ்வாறே தன் மருகர்களாகிய பாண்டவர்களை நாடிவரும் வழியில் தனக்குப் பாண்டவர்களுடைய தெனச்சொல்லி வஞ்சனையாகத் தன் சோற்றையிட்டுப் பிறகு தன்னுடைய சோறெனக்கூறிய அத்துரியோதனனுக்குத் துணையாகி அப்பாண்டவர்களை யெதிர்த்துத் தன்னுயிரை விட்ட சல்லியனையும் நினைக்கச்செய்தது. அந்தோ! அந்தச்சோற்றை நீங்கள் உண்டபின் அக்கொடும் பாவியினுடையதென்று உணர்ந்திருப்பீர்களாயின், எங்கள் காரியம் அநியாயமாகக் கெட்டுப்போயிருக்குமன்றோ? கடவுளே இந்த ஆபத்தினின்றும் எங்களைத் தப்புவித்தார். எங்களுக்குத் தங்களினும் வேறான கடவுள் இருப்ப

தாக நாங்கள் நினைப்பது அறியாமையேயாகும்" என்று பல இன்சொற்களைக் கூறினள். சத்தியநாதப்பிள்ளை தனக்குவைத்த பலகாரங்களிற் சிறிது உண்டு மற்றவற்றை "அம்மா! இவற்றைக்கொண்டுபோய் நீங்கள் மூன்று சகோதரிகளும் சாப்பிடுங்கள்" என்று கொடுத்தனன். வனஜாக்ஷி அவற்றைப் பகவானுக்கு ஆராதித்தபிரசாதத்தை அன்பர்கள் எவ்வளவு விருப்புடன் ஏற்றுக்கொள்வார்களோ அவ்வளவு விருப்புடன் ஏற்றுக்கொண்டுபோய் அதனுடன் மீதியாக இருந்தபலகாரங்களையும் சேர்த்துச் சாரசநேத்ரிக்கும், அக்குடியானவன் மகளாகிய அம்புஜத்துக்குங் கொடுத்துத் தானும் உண்டனள்.

சத்தியநாதப்பிள்ளை:—அவர்களிடம் விடைகொண்டு கடைக்குச்சென்று ஏதோ ஒன்றை வாங்கிக்கொண்டு வந்து வனஜாக்ஷியினிடங்கொடுத்து ஏதோ சில சமாசாரங்களைச் சொல்லிவிட்டுச் சென்றனன் காலத்தில் மழையைப்பெய்வித்து யாவர்க்கும் காலத்தையும் விளக்கிக்காட்டாநிற்பவராகிய சூரியபகவானும் சத்தியநாதப்பிள்ளையைப்போலச் சாரசநேத்ரியின் பொருட்டு ஏதோ சில காரியங்களைச்செய்யச்சென்றால் என மேற்றிசையடைந்தனர். கஜகர்ணனும்,மணிகண்டனும் வனஜாக்ஷியினிடம் நாங்கள்வெளியிற்சென்று வருகின்றோம் என்றுகூறி வெளியிற் போய்விட்டார்கள். அக்கொடியவர்கள் சாரசநேத்ரிக்கு யாதொரு தீங்குஞ்செய்யாமற் பார்த்துக்கொள்ளும்படி அச்சூரிய பகவானால் அனுப்பப்பட்ட அவரது சேனைகளெனத்தீபங்கள் வீடுகடோறும் தோன்றி விளங்கின. 'பிறருக்கென்றும் தீமைசெய்தலேயே நோன்பாகக்கொண்டுள்ள தீயர்களே! நீங்கள் பிறகு அடைதற்குரிய தானம் இதைப்போலவே இருண்.... வடிவினதாயிருக்கும்" என்று காட்டுதல்போலக் கரிய இருள் எங்கும் பரவியது. மணியும் எட்டாயிற்று. வெளியிற் சென்ற கஜகர்ணனும், மணிகண்டனும் திரும்பிவந்து சேர்ந்தார்கள். வனஜாக்ஷி உடனே அவர்களை எதிர்கொண் டழைத்து வெந்நீர் கொடுத்தனள். அவ்விருவரும் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டார்கள். வனஜாக்ஷி அவர்களை நோக்கிச் "சாப்பாடு சித்தமாய்விட்டது சாப்பிடவாருங்கள்" என்றாள். அவர்களும் அவ்வாறேசென்று தங்களுக்காக இடப்பட்டிருந்த இலைகளில் உட்கார்ந்தார்கள். சாப்பாடு பலவகைப் பலகாரங்களோடு வட்டிக்கப்பட்டது. அவர்கள் அச்சோற்றை உண்டு எழுந்து கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு தங்களுக்காக இடப்பட்டிருந்த புரியிற் சென்றுட்கார்ந்

தார்கள். உடனே வனஜாக்ஷி சத்தியநாதப்பிள்ளை கொண்டுவந்து கொடுத்த ஏதோ ஒருவகை வாசனையோடுங் கூடிய பொடிகலந்த பாக்குப் பொடியையும், வெற்றிலையையுங் கொண்டுவந்து வைத்தாள். அவ்விருவரும் அதைப்போட்டுக் கொண்டார்கள். சிறிது நேரத்திற் கெல்லாம் அவ்விருவருக்கும் கண்கள் சுழன்றன. அப்படியே அப்பாயின்மேற் சாய்ந்தார்கள். உடனே இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு வண்டி அவ்வீட்டின் பின்புறமாக வந்து நின்றது. அப்புஜத்தை அவள் வீட்டிற்கனுப்பி விட்டுச் சாரசநேத்திரியும், வனஜாக்ஷியும் அவ்வண்டியி லேறிக்கொண்டார்கள். உடனே வண்டியுங் காற்றாய்ப் பறந்தது. அவ்வண்டி சென்ற ஏறக்குறைய இரண்டுமணி நேரத்தின்மேல் கஜகர்ணனும், மணிகண்டனும் ஒருவாறு மயக்கந் தெளிந்தெழுந்து பார்த்து வீட்டிலொருவருங் காணாமையினால் திடுக்கிட்டு வெளியில் வந்தார்கள். அப்போது ஒருமனிதன் அவர்கள் எதிரில் அதிகவேகமாக ஓடிவந்தான். அவன் அவர்களைப்பார்த்து "ஐயன்மீர்! ஏதோ ஒருவண்டி இவ்வீட்டின் பின்புறத்திலிருந்து புறப்பட்டு அதிக வேகமாகச் செல்கின்றது. அதிலிரண்டு பெண்கள் ஏறிக்கொண்டிருந்தார்கள். நான் வெகுதூரம் அவ்வண்டியைப் பின்தொடர்ந்து ஓடினேன், அவ்வண்டியைப் பிடிக்க என்னால் ஆகவில்லை" என்றான். அதைக்கேட்ட கஜகர்ணன் அவனைநோக்கி "அந்த வண்டி இந்நேரம் எவ்வளவுதூரம் போயிருக்கும்" என்றான். அவன் அஃது இந்நேரம் ஒரு மயில் அல்லது மிஞ்சினால் ஒன்றரைமயில் தூரம்போயிருக்கும்" என்றான். கஜகர்ணன் அதைப் பின்தொடர்ந்து பற்றக்கூடியவண்டி ஏதேனும் இங்கு அகப்படுமோ" என்றான். வந்தோன் "ஆகா! என் சிநேகன் ஒருவன் ஒருவண்டி வைத்திருக்கின்றான். அவன் வைத்திருக்குங் குதிரை எத்தனையோ பந்தயங்கள் கெலித்திருக்கின்றது. அஃது இதுவரையிலும் ஓரிடத்திலுங் கூடத் தோற்றது கிடையாது. தக்க சத்தங் கொடுப்பதாயிருந்தால் நான் சென்று அவனை அதை ஓட்டிக்கொண்டு வரச் சொல்கின்றேன்" என்றான். கஜகர்ணன் "எவ்வளவு சத்தம் வேண்டுமானாலுந் தருகின்றேன், சீக்கிரம் ஓட்டிக்கொண்டுவரச்சொல்" என்றான். அவன்சென்ற உடனே ஒருவண்டியை அழைத்துக்கொண்டு வந்தான். கஜகர்ணன் அவனைநோக்கி "நீயும் வண்டியில் ஏறிக்கொள்" என்றான். அவன் "எனக்கிங்குள்ள

வேலைகள் கெட்டுப்போகுமே, நான் இன்னும் சாப்பிடவில்லையே" என்றான். கஜகர்ணன் அவனைநோக்கி "நான் உனக்கும் தக்கசன்மானம் பண்ணுகின்றேன், தடைசொல்லாமல் ஏறிக்கொள்" என்றான். அவனும் அப்படியே ஏறிக்கொண்டான். உடனே கஜகர்ணன் உள்ளேபீதியாயுள்ள ரூபாய்கள் வைக்கப்பட்டுள்ள பையை எடுத்துக்கொண்டு வந்து மணிகண்டனோடு வண்டியிலேறிக்கொண்டான் உடனே அந்தவண்டியும் சாரசநேத்ரியைப் பற்றச் செல்லும் கஜகர்ணனுடைய மனத்தின் வேகத்தைப் பின்னிடச்செய்ய எண்ணிச்செல்வதுபோல மிக்க விரைவாகச்சென்றது. கஜகர்ணனுக்கு அவனுக்குள்ள மனக்கவலையினால் வண்டி புறப்பட்டு இவ்வளவு நேரமாயிற்றென்பது தெரிந்திலது. அவன் மணிகண்டனை நோக்கி "நண்ப! வண்டிபுறப்பட்டு எவ்வளவுநேரம் இருக்கும்" என்றான்! மணிகண்டன் "நண்ப! ஏறக்குறைய ஒருமணிநேரமாய் இருக்கும்" என்றான். கஜகர்ணன் அவ்வண்டியை அழைத்துவந்தவனை நோக்கி "ஐயா! இவ்வளவுநேரமாகியும் இன்னும் அந்தவண்டி நம்கண்ணுக்கும் அகப்படவில்லையே! என்செய்வது" என்று கேட்டுக்கொண்டிருக்கையில் வண்டிக்காரன் வண்டியை நிறுத்திவிட்டான். கஜகர்ணன் அவனைநோக்கி "ஏனப்பா வண்டியைநிறுத்திவிட்டாய்" என்றுகேட்டான். அவன் "ஐயா! நாம் இன்று தப்புவது அருமை, எதிரில்தோன்றுங் காட்டைப் பார்த்தீர்களா? இது மிகவும் பெரியகாடு. இந்தக் கப்பித்தவறி வருகின்றவர்க்கு இதுவே சுடுகாடாகும். ஆகா! நான் என்பேராசையால் இந்த ஆபத்திற்குள் அகப்பட்டுக் கொண்டேன்" என்று சொல்லிக்கொண்டேயிருக்கையில் ஏறக்குறைய இருபதுபேர் கத்திகளும், தடிகளும், தீவர்த்திகளும் கையிற் பற்றிக்கொண்டுவந்து அவ்வண்டியைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களைக் கண்டவுடன் கஜகர்ணனும், மணிகண்டனும் இன்று இவர்களின் தரிசனம் எமதூதர்களின் தரிசனமே என்று நிச்சயித்துக் கொண்டார்கள். வந்த அத்திருடர்கள் தங்கள் கையில் தீவர்த்திகளை வைத்திராவிடின் அவர்கள் கண்ணுக்கே புலப்பட்டிரார்கள். சிறிது வெளிச்சமாயுள்ள இடமும் அவர்களுடைய உடலின் நிறத்தால் இருண்டுபோகும் என்றால் அவர்களுடைய கருநிறத்தைப்பற்றி விசேஷமாக வர்ணிக்கவேண்டியதென்னுளது? அவர்களில் ஒவ்வொருவனும் ஆறடிக்கு அதிகமாகவே உயரமுடையவனாயிருந்தான். அவர்களுடைய தோள்

ள் கருங்கற்களே அவ்வுருவுற்று விளங்குகின்றனவோ என்று
சொல்லும்படி தோன்றின. அவர் தம் கண்களுக்கிடையில் கருவி
ழிகள் இல்லாமலிருந்திருப்பின் அவைகள் ஒரேகாலத்தில் தோன்
றிய பல அருணமண்டலங்களென்றே சொல்லும்படி இருக்கும்.
அவர்களுடைய மார்புகள் இரும்பினாற் செய்தமைக்கப்பட்டனவே
என்றுரைப்பதன்றி வேறாகச்சொல்ல ஒருவருந்துணியார். அவர்க
ளுடைய திரண்டுரண்டு கொழுவிப் சதைப்பற்றிய கொடைகளுக்
குச் சமானமாக நான்முகர் இனி நன்றாய் ஆய்ந்தொன்றைச் சிரு
ஷ்டித்தாலன்றி உள்ளபொருள்களில் எவையும் உவமையாகச் சொ
ல்ல கூடியனவாகா. அத்தகையர்களாகிய அவர்களில் ஒருவன் ஒரு
தடியால் ஓங்கி வண்டிக்காரன் தலையில் அடித்தான். அஃதெப்படி
யோ தப்பி அவன் தலையிற்படாமல் வண்டியின் ஏர்க்காலின்மீதுபட்
டது, ஆயினும், வண்டிக்காரன், அவர்களைக்கண்டபயத்தினாலோ!
அன்றி அவர்களிடந் தப்பித்துக்கொள்ளும் உபாயத்தைக் கருதி
யோ! மற்றுயாது காரணத்தினாலோ "அப்பாடா! செதந்தேன்"என்
று கீழேவிழுந்தான் அவன்செய்தி அவன் எழுந்தபிறகுதான்தெரி
யும். பிறகு மற்றொரு திருடன் குதிரையை வண்டியினின்று அவிழ்
த்துத் தூக்கிவிட்டான் மற்றும் இருவர் வண்டியில் இருந்தவர்
களை இழுத்துக் கீழேதள்ளினார்கள், மற்றொருவன் வண்டியிலிரு
ந்த மூட்டைகளையெல்லாம் எடுத்துக்கொண்டான். மற்றொருவன்
அவர்களுடைய துணிகளையெல்லாம் அவிழ்த்துக் கொண்டான்.
மற்றொருவன் அவர்களுக்கு அவ்வண்டியை அழைத்து வந்துவிட்
ட மனிதனை ஓர் அறை அறைந்தான். அவ்வறையை பெற்ற அவ
னும் யாதொரு பேச்சுமின்றிக் கீழே சாய்ந்தான். ஆனால் அவனு
டைய பற்கள் விழாமலும் இரத்தம் சிறிதும் பெருகாமலும்
இருந்தன. அவை அவனை அறைந்த மறவனுடையகையில் அறை
யுண்ட எல்நகளுக்கும அவ்வாறு இருந்தனவல்ல. ஆகையால்
அவனுக்கு மாத்திரம் அங்ஙனமிருந்தது மிகவும் ஆச்சரியமே. இ
வ்விருவர்கதியு மிவ்வாறாயிற்றென்றால் மற்றவர்களின் மனநிலை
எவ்வாறாயிற்றென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அவர்கள்
அப்படியே நின்றுகொண்டிருந்தார்கள். காடுகளிலும், மலைகளி
லுந் திரிகின்றவர்களாகிய அம்மறவர்களும் இதுவென்ன? இ
வர்கள் இபபடிக்கல்லாய்ச் சமைந்து விட்டார்களே! முன்னொரு

கல்லைப் பெண்ணாகச்செய்த ஸ்ரீராமரும் இப்பொழுது இங்கு இல்லையே! என்றெண்ணினார்கள். அவர்களில் ஒருவன் "இக்கற்களை இதோ இக்கல்லின்மேல் தள்ளிவிடுகின்றேன்" என்று பக்கத்திலிருந்த ஒரு கருங்கல்லின்மேல் அப்படியே தள்ளிவிட்டான். "செய்யாதன செய்பவர் படாதன படாமற் போவரோ" அவர்களுக்குத் தலையில் நன்றாய் அடிபட்டது. "ஆலமரத்தைப் பற்றிய சனியன் அதைச்சேர்ந்த அரசமரத்தையும் பற்றியது" என்பது போலக் கஜகர்ணனுக் குற்ற துன்பங்களையெல்லாம் அவனைச்சேர்ந்த மணிகண்டனும் அனுபவிக்க வேண்டியவனானான். தீயரைச் சேர்ந்தோர் தீமையையன்றி நன்மையை யடைவது எங்ஙனங்கூடும்? அதனாலன்றோ கவிசக்ரவர்த்தினியாகிய ஔவையார் "சேரிடமறிந்துசேர்" என்று கூறியதும், அவர்கள் அவ்வடியினால் பேச்சுமூச்சின்றி அப்படியே மூர்ச்சை யடைந்துவிட்டார்கள். அத்திருடர்களில் ஒருவன் அவர்கள் அவ்வாறு பேச்சுமூச்சின்றி இருப்பதைக்கண்டு "இனிநமக்கு இங்குஇருக்கவேண்டிய அவசியமில்லை. அடேவண்டிக்கார முனியா! அடே கந்தா! எழுந்திருங்கள், போவோம்" என்று கூப்பிட்டான். உடனே அவ்விருவரும் எழுந்து "அடேபாவிகளே! எங்களையும் இப்படி அடித்துவிடலாமா" என்றார்கள். அத்திருடர்களில் ஒருவன் "நீங்கள் இருவரும் இப்பொழுது உயிருடன் எழுந்துபேசுவதே உங்களை நாங்கள் அடிக்கவில்லை என்பதைத்தெரிவிக்கவில்லையா" என்றான். பிறகு அனைவருமாகக் கூடிக்கொண்டு காட்டுக்குள் போய்விட்டார்கள். அவர்கள்சென்ற ஒருமணிநேரத்திற்பின்பு கஜகர்ணன் மூர்ச்சைதெளிந்துஎழுந்தான். மணிகண்டனும் உடனே எழுந்தான். கஜகர்ணன் அவனை நோக்கி "நண்ப! இங்கு இருந்தோரெல்லாம் எங்குப்போயினரோ? எங்காயினும் மறைவில் ஒளித்துக்கொண் டிருக்கின்றார்களோ? என்னமோ தெரியவில்லையே! வண்டியுங் காணோமே! வண்டிக்காரனும் நமக்குத் துணையாகவந்தவனும் எங்குப்போ யிருப்பார்கள்? ஒருகால் எழுந்து வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்களோ? அப்படிச் சொல்வதற்கும் இல்லை, ஏனெனின், திருடர்கள் வந்தவுடன் குதிரையை அவிழ்த்துத் துரத்திவிட்டார்களே! அஃது இதற்குள் அகப்பட்டிருக்குமா? யோசிக்கையில் இஃது இடையில் யாரோ நின்று செய்த சூழ்ச்சியாகவே இருக்கின்றது. இனி நாம் இங்கிருத்தல்கூடாது. எழுந்திரு, போவோம்" என்

றான். அதைக்கேட்டு மணிகண்டனும் எழுந்தான், உடனே இருவருமாகப் புறப்பட்டு மெல்ல மெல்ல நடந்து சென்றார்கள். அவர்களுக்குத் தாங்கள் இருப்பது இன்னவூரின் அருகில், இப்பொழுது இன்ன ஊருக்குப்போகின்றோம் என்பது தெரியாது. "என்னமோவழியே நடந்துபோனால் பொழுது விடிகையில் ஏதேனும் ஓர் ஊரைச்சேரலாம்" என்று கருதி நடந்து செல்வாராயினர். அவர்கள் சரித்ரம் நிற்க, இனிமற்றவர்களின் சரித்ரத்தை ஈண்டுக் கவனிப்பது இன்றியமையாததாகும்.

பத்தாம்-அத்தியாயம்.

இனிச்சச்சரித்ரனையும்,சதாநந்தனையும்பற்றிக் கவனிப்போம். நல்லோருக்கொரு துன்பமுற்றதெனின் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டியது சர்வலோக நாயகனாகிய பகவானுக்கும் இன்றியமையாத கடமையாகுமென்றால் மற்றவர்களுக்கு அவ்விஷயத்தில் உள்ள கடமை எவ்வளவினது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

சச்சரித்ரனையும், சதாநந்தனையுஞ் சேவகர் சிறு அறைகளில் அடைத்த அன்றிரவு மூன்று மணிக்கு இரண்டு சேவகர் அக்கதவுகளைத்திறந்து அவ்விருவரையும் ஒருவண்டியிலேற்றிக்கொண்டு அதை வெகு வேகமாகச் செலுத்தினார்கள். சற்றேறக்குறைய ஐந்துமணியாகுந் தருணத்தில் அவ்வண்டி ஒரு காட்டினிடையே சென்றது. அதைக்கண்ட சதாநந்தன் அச்சேவகரில் ஒருவனை நோக்கி "ஐய! நீங்கள் எங்களை ஏன் இக்காட்டின் வழியில் அழைத்துவந்தீர்கள்" என்றான் அதற்கச்சேவகன் பேசாமலிரு, ஏதேனும் பேசினால் இக்கத்தியினால் வெட்டிவிடுவேன்" என்றான் அதைக்கேட்டசச்சரித்ரன் உடனே அவனைஓங்கி ஒருகுத்துக்குத்தினான். அச்சேவகன் அப்படியே வண்டியிற் சாய்ந்தான். சச்சரித்ரன் அவன்கையிலிருந்தகத்தியைப்பிடுங்கிக்கொண்டான்,அதற்குள் சதாநந்தனும் அவ்வாறே மற்றொரு சேவகனைக் குத்திக் கீழேதள்ளி விட்டான். பிறகு சச்சரித்ரனும், சதாநந்தனும் அவ்வண்டியிலிருந்த

ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவ்வண்டியிற் கட்டியிருந்த குதிரையையும் அவிழ்த்துத் துரத்திவிட்டு மிக்க வேகமாகத் தங்கள் மனத்திற்குத்தோற்றிய வழியே நோக்கிச்சென்றார்கள். அவ்விருசேவகர்களும் சிறிதுநேரஞ் சென்றபின் மூர்ச்சை தெளிந்து எழுந்து "இன்று நல்லகாலமாக நாம் பிழைத்தோம். அவ்விருவாலிபர்களும் மிகவுஞ் சாதுக்களாயிருந்ததைக்கண்டு நாம் அவர்களை மிகலேசாக எண்ணிவிட்டோம். அவர்கள் கல்வியின்மாத்திரமே தேர்ந்தவர்களாயிருப்பார்கள் என்றெண்ணினோம். அவர்கள் போர்த்தொழிலினு மிக்க ஆற்றலுடையவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் நம்மைப்போல இரக்கமற்றவர்களாயிருந்திருப்பின் இந்நேர நம்மைக்கொன்றிருப்பார்களல்லவோ? அவர்களுக்குத் தீமையைச் செய்ய எண்ணிவந்த நமது விஷயத்திலும் அவர்கள் கருணையைக் காட்டியதனால் அவர்களைப் பெருங்கருணையாளர்கள் என்றே சொல்லுதல்வேண்டும்." என்று புகழ்ந்து பிறகு குதிரையை நாற்புறமும் தேடிப் பார்த்தார்கள். அது வெகுநேரம் அகப்படவில்லை. பொழுது விடிந்தபிறகு ஏறக்குறைய எட்டு, எட்டரைமணிக்கு அகப்பட்டது. அதனை வண்டியிற்கட்டி ஏறிக்கொண்டு ஊருக்குச் செலுத்தினார்கள். வண்டி காலைப் பத்தரைமணிக்கு ஊரைப்போய்ச் சேர்ந்தது. அங்குச்சென்றதும் சுப்பண்ணா ஐயரைக்கண்டு தாங்கள் சச்சரித்ரனையும், சதாநந்தனையும், நன்றாய்ப்புடைத்து 'மூர்ச்சிக்கும்படி செய்து ஒருகுழியில் தள்ளிவிட்டு வந்துவிட்டதாகச்சொல்லி "நாங்கள் என்ன செய்தாலும் நீங்கள் எங்கண்மீது கருணைவைக்காமலே இருக்கின்றீர்களே" என்றார்கள் சுப்பண்ணாவையர் மிகுந்த சந்தோஷங்கொண்டு "நான் இன்ஸ்பெக்டரிடம் உங்கள் விஷயத்தில் மிகவுங் கவனம் வைக்கும்படி செய்கின்றேன். அது விஷயத்தில் நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம்" என்றார் அவர்கள், அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றார்கள். நிற்க, அன்று இரவு இரண்டுமணிக்குமேல் மாயவரத்தினின்றும் புறப்பட்ட புகைவண்டி விடியற்காலையில் காரையிலுள்ள புகைவண்டிச் சாலையிற் சென்று நின்றது. உடனே எல்லா ஜனங்களும் வண்டியினின்றும் இறங்கிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஐந்து பெண்கள் வண்டியினின் றிறங்கி ஒருபுறமாக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் இரண்டு பெண்கள் ஜலமலபா

ஜைக்குச் செல்லுதற் பொருட்டு அங்குக் கட்டப்பட்டுள்ள சிற்ற றைக்குட் சென்றார்கள். உடனே சந்திரபிரகாசம் பிள்ளை மற்றை மூன்று பெண்கள் நிற்கும் இடத்திற்கு வந்து அவர்களை நோக்கிக் "குழந்தை சாரசை எங்கே" என்று கேட்டார். அவர்களில் திலகம் பெண்கள் வெளிக்குச்செல்லும் அச்சிற்றறையைக் காட்டி "அம்மாள் வனஜாக்ஷியோடு இம்மறைவிடத்திற்குச் சென்றார்கள்" என்றாள். அதைக்கேட்ட சந்திரபிரகாசம் பிள்ளை மற்றும் தம்மோடு வந்திருப்பவர்களிடம் சென்று யாவரும் ஜாக்கிரதையாக வந்து சேர்ந்திருக்கின்றனரா என்று விசாரித்துவிட்டு மீண்டும் அப்பெண்களிடம் வந்து "குழந்தை வந்துவிட்டனளோ" என்று விசாரித்தனர். திலகம், "அவர்கள் இன்னும் வரவில்லை" என, அவர் "ஏன்வரவில்லை? உள்ளேசென்றுபாருங்கள். என்றார்" அப்பெண்கள் அவ்வாறே அங்குச்சென்று பார்த்தார்கள். அங்கு அவர்களைக்காணாமல் மிகவும் நடுக்கமுற்றுத் திகைத்துநின்றார்கள். அதைக்கண்ட சந்திரபிரகாசம் பிள்ளை மனங் கலங்கி நான்கு புறமும் பலமனிதர்களை விட்டுத் தேடச்சொன்னார். சென்றோர் பலரும் பல இடங்களிலுஞ் சென்று அவர்களைக் காண்கிலராய் மிக்க வருத்தத்துடன் வந்து சேர்ந்தார்கள். அவர்களில் இருவர் அப்புகை வண்டிச் சாலையை அடுத்துள்ளதொரு தோட்டத்தின் குளக்கரையில் சாரசநேத்ரியினுடையனவும் வனஜாக்ஷியினுடையனவுமாகிய ஆடை ஆபரணங்கள் மாத்திரம் இருக்கின்றன, அவர்கள் அகப்பட்டிலர்" என்று வந்து சொல்லினர். அதைக்கேட்ட சந்திரபிரகாசம் பிள்ளையும், மற்றுமுள்ள எல்லா ஜனங்களுமாகத் திரண்டு அக்குளத்தருகிற் சென்றார்கள். சந்திரபிரகாசம் பிள்ளை சில ஆட்களைவிட்டு அக்குளத்தைச் சோதித்துப் பார்க்கச் சொல்லினர். அவர்கள் அகப்பட்டிலர். பிறகு வலைஞர்களையழைத்துவலையைப்போட்டுப் பார்க்கச்செய்தனர். அதனாலும் அகப்பட்டிலர். பிறகு நீர் இறைக்கும் யந்திரத்தைத் தருவித்து அக்குளத்து நீரையே முற்றும் இறைப்பித்துப் பார்த்தார்கள். அதனாலும் அகப்பட்டிலர். இதற்குள் இச்செய்தியை அறிந்து வைத்தியர் ஒருசோதிடரை அழைத்துக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தனர். அவரைக் கண்டதும் சந்திரபிரகாசம் பிள்ளையும் மற்றையோருமனங்கலங்கி

யரற்றலாயினர். வைத்தியர் "சுபகாரித்தையுன்னிவந்துஇப்படிஅவசகுனமாக அழுதல் தகுதியன்று. சிறிது நிதானியுங்கள். என்னுடன் வந்திருக்கும் இப்பெரியவர் சிறந்த சோதிடர். இவர் சொல்வனவற்றில் ஒன்றும் தவறுதலில்லை. இப்பொழுது இவரைக்கொண்டு ஓர் ஆரூடம் பார்ப்பிப்போம்" என்று அவரை ஆரூடம் பார்க்கச்சொல்லினர். அவர் அவ்வாறே பார்த்துச் சந்திரபிரகாசம்பிள்ளையை நோக்கி "ஐயா! உங்கள் குழந்தையும் அவள் தோழியும் உயிருடனேதான் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது இந்த வூருக்குள்ளாகவேயில்லை. அவர்கள் இவ்வூருக்கு வெகு தூரத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் உங்களைவிட்டுப் பிரிந்து சற்றேறக்குறைய இரண்டுமணி நேரமிருக்கும். அதுவரையினும் உங்கள் பெண்களைப்போல வேறு இருவர் வேடம் போட்டுக்கொண்டு உங்களுடன் வந்திருந்தார்கள். அவ்வாறு வந்திருந்தவர்கள் பெண்கள் அல்லர். இரண்டு சிறுவர்கள், அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்கள் பொன்னாபரணங்களல்ல, ஆடைகளும் பித்தளைச் சரிகையை யுடையனவே. அவற்றை வேண்டுமானால் நீங்கள் சோதித்துப் பாருங்கள்" என்றார். உடனே அக்குளக்கரையிலிருந்த ஆடையாபரணங்களை எடுத்துப்பார்க்க அவைகள்யாவும் அந்தஜோசியர் சொன்னபடியே இருக்க மிகவும் ஆச்சரியமுற்றுச் சந்திரபிரகாசம்பிள்ளை, அந்த ஜோசியரை நோக்கி "ஐயா! அவர்கள் இப்பொழுது எங்கிருக்கிறார்கள்? அவர்கள் எப்பொழுது அகப்படுவார்கள் என்பனவற்றைத் தாங்கள் தயவுசெய்து சொல்லவேண்டும்" என்றுவேண்டினர். ஜோசியர் "ஐயா! அவர்கள் இன்னவூரில் இருக்கின்றார் என்று சொல்லுதல் கூடியதொன்றன்று. அவர்கள் எப்பொழுது அகப்படுவார்கள் எனின் சற்றேறக்குறையவொன்றரை வருஷத்துக்குமேல் இரண்டு வருஷத்துக்குள்ளாக அகப்படுவார்கள். அதற்குள் அவர்கள் பல கஷ்டங்களை அடையவேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள். நீங்கள் என்னமுயற்சி செய்தாலும் குறைந்த பக்ஷம் ஒன்றரை வருஷங்களுக்குமுன் அவர்கள் உங்களுக்கு அகப்படமாட்டார்கள். இவ்விரண்டு வருஷங்களுக்குப்பின் யாதொருதடையும் இன்றி அவர்கள் உங்களிடம் வந்து சேர்வார்கள். அதற்குமேல் அப்பெண்மணிகள் மிகவுஞ் சௌக்கியமாகவே

இருப்பார்கள். அப்பொழுதுங்கூட நீங்கள் இப்பொழுது அறிந்துள்ள பிள்ளையை உங்கள் குழந்தை மணந்துகொள்ளுமென்றது முற்றும் பொய்யேயாகும். இதற்குமேல் யான் இப்பொழுது ஒன்றுஞ்சொல்லுதல் கூடாமையாகும்” என்றார். அதைக்கேட்டசந்திரபிரகாசம் பிள்ளையும் அமிர்தவல்லியம்மாளும் “ஆ!”என்றலறிக் கீழே மூர்ச்சித்து விழுந்தனர். மற்றவர்களும் கண்களில் தாரைதாரையாக நீரைப்பெருக்கிக் கலங்கி நின்றார்கள். வைத்தியநாதம் பிள்ளை “ஆ! நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததே.

“ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்”

என்ற ஆன்றோர் முதுமொழி பொய்யாமோ? நாம் இதுவரையிலும் எவ்வளவு களிகொண்டிருந்தோம். நாம் நமது அருமை மைத்துனருடைய பெண்ணையே நமது பிள்ளைக்குக் கொள்ளும்படி கிடைத்தது நம்முன்னோர் செய்த புண்ணியமே என்று எண்ணினோம். இதற்குள் எவ்வளவு மனோராச்சியம் செய்தோம். ஊழானது பின்யாது செய்ய நிற்கின்றதோ என நினையாத நம்போன்ற பேதைமாந்த ரனைவரும் இப்படியே ஒருகாரியங் கைகூடுவதாகத் தோன்றிய மாத்திரத்தில் எண்ணுதற்கெண்ணி அளவில்லாத சந்தோஷ சாகரத்தில் மூழ்குவர். அக்காரிய முற்றுங்காறு நிதானியார். இங்ஙனமே தீமைவருவது போற்றோன்றினும் உடனே மனந்தளர்ந்து துக்கசாகரத்தாழ் மூழ்கி முயற்சி என்னும் புணையின் றுணையைக் கொண்டு கரையைச் சாருவகையை அறியாதவர்களாய்த் திகைப்பார்கள்” என்று தமக்குத்தாமே பித்தரைப்போலப் பேசிக்கொண்டு கண்களில் நீரைப்பெருக்கினர். அப்பொழுது அங்கிருந்தோருக் குற்ற துயரமானது ஸ்ரீராமசந்திரன் காட்டுக்குச் சென்றபோது அயோத்தியிலிருந்த ஜனங்கள் யாவரும் அடைந்த வருத்தம் இத்தன்மையதா மெனக்காட்டுவது போன்றிருந்தது. வைத்தியர் அவர்கள் அனைவர்க்கும் பல இதமொழிகளைக் கூறித்தேற்றிப் பூம்புனற்சோலைக்கு அழைத்துச் சென்றனர். சந்திரபிரகாசம் பிள்ளைக்கு அங்குச்சென்றதும் துயரமிகுந்து பெருகிற்று. அதனால் அவர்,

குழலிசை யாழிசை குறைந்த தென்னவோ
பழலைய மொழியிசை வழங்கு செல்வமே
அழலன துயரநா னடைய விட்டெனைப்
பழகில் நடந்துநீ படர்ந்த தெங்ஙனே (1)

உன்னிழை யெனக்குநீ யுரைத்தி லாமலே
பொன்னிழை யெழிலினாய் பொய்ம்மை செய்தனை
உன்னிழை வுடையயா முருகி நைவமென்
றெண்ணிலை யென்செய்தா யேழை நெஞ்சினாய். (2)

நெஞ்சற வுருகியா நீடு துன்பமென்
விஞ்சவெங் கடலிடை வீழ வைத்தனை
நஞ்சன கொடியர்தங் கலகில் செய்கையின்
வஞ்சனை புரிந்தனை மடநல் லன்னமே. (3)

என்று இவ்வாறு பல பல கூறியாற்றுவாராயினர். உடனே வைத்தியர் "ஐயா! தாங்கள் வருந்தவேண்டாம். யான் சென்று நமது செல்வியைத் தேடிக்கொண்டு வருகின்றேன். இனிக் குழந்தை சாரசை யகப்பட்ட பின்னரே யான் மீண்டு மணிபுரம் வருவேன். இது சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்" என்றுசொல்லி எழுந்தார். உடனே சந்திரபிரகாசம் பிள்ளை, "ஆ! ஈதென்ன துன்பம்; தாங்கள் என்னருகிலிருந்தாற் பல இதமானமொழிகளைக் கூறி என் மனத்துயரைத் தணியச்செய்வீர்களே! தாங்களும்பிரிந்து சென்றால் யான்எப்படி இத்துயரத்தை ஆற்றிக்கொண்டிருப்பேன்" என, வைத்தியர் "ஐயா! வருந்துதல் வேண்டாம். நானெப்படியேனும் சாரசநேத்திரியைக் கண்டழைத்துவருகின்றேன். இலங்கையில் சீதாப்பிராட்டியார் இருந்த இடத்தை அறிந்துவந்து சொல்லிய ஸ்ரீ அஞ்சனாதேவியின் திருக்குமாரரை மனத்தில் தியானித்துக்கொண்டு யான நமது செல்வியைத் தேடப்போகின்றேன். ஆகையால், அவர் குழந்தையை எங்கிருப்பினும் காட்டிக்கொடுப்பர். அவரருளினால் அடையக்கூடாத பொருளும் ஒன்றுண்டோ? சஞ்சீவி மலையைக்கொண்டுவந்து இலக்ஷ்மணன் முதலியவர்களையுயிர்ப்பித்தாரல்லரோ! ஆகையால் அவரது அருளினால் யான் எப்படியேனும் குழந்தையைக் கண்டுபிடித்துவருவேன்" என உறுதியாக நம்புக

ன்" என்று அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு நமது மனைவி யாராகிய அம்புஜவல்லி யம்மாளைச் சத்திய சம்பன்னராகிய அச் சந்திரபிரகாசம் பிள்ளையவர்களின் வீட்டிலேயே இருக்கும்படி பணித்துச்சென்றனர்.

பதினோராம்-அத்தியாயம்.

அங்ஙனம் புறப்பட்ட வைத்தியர் மாயவரஞ் சென்று அங்குச் சச்சரித்ரனும் சதானந்தனும் முன் இறங்கி யிருந்த சத்திரத்துக்குச் சென்று விசாரித்தினர். அச்சத்திரத்தின் தலைவராகிய ஐயர், சேவகர் சச்சரித்ரனையும், சதானந்தனையும், சிறையில் அடைத்துவைத்ததும், விடியற்காலையில் இரண்டு சேவகர் அவர்களை ஒரு வண்டியிலேற்றிக்கொண்டு சென்றதுமாகி இவை முதலிய அங்கு நிகழ்ந்த செய்திகளைக் கூறினர். அவற்றைக்கேட்டதும் வைத்தியர் மிகவு மனங்கலங்கிப் பெருமூச்செறிந்து "ஆ! தெய்வமே! நானென் செய்வேன்" என்றுதிகைத்தார் பிறகு ஒருவாறுதெளிந்து "இவற்றிற்கெல்லாங் காரணம் யாராயிருக்கலாம்" என்று யோசித்து இவற்றிற்கெல்லாங் காரணம் கஜகர்ணனாகவே இருத்தல்வேண்டும் என்றுயூகித்துணர்ந்து, அச்சத்திரத்து அந்தணரைநோக்கி "ஐயா! இங்ஙனமெல்லாம் உடனிருந்து நடத்தினாரினாரெனக்கூறுதல்கூடுமோ? என்மீது கருணைகொண்டு கூறுவீர்களாயின் தங்களுக்கு இளமை, செல்வம் யாக்கைமுதலியவற்றின் நிலையாமையையும், ஆத்துமாவையும், பரமாத்துமாவையும், ஆத்துமாக்கள் அடையவேண்டியபயனையும், அப்பயன்களை ஆத்துமாக்கள் அடையதற்குரிய வழியையும், அவற்றை ஆத்துமாக்கள் அடைதற்குத் தடையாய் உள்ளவைகளையும் நன்குணர்ந்த சிறந்த ஞானியாகிய ஒரு பாகவதோத்தமர் மனங்களிக்கும்படி அவருக்கு அன்னம் இட்ட சிறந்த பலனை அடைவீர்கள்" என்றார். அதைக் கேட்ட அந்த அந்தணர் "ஐயா! தாங்கள் மிகவும் பெரியவர்களாயிருக்கின்றீர்கள் அச்சச்சரித்ர சதானந்தர்கள் தங்கள் குமாரர்களோ! ஆனால் அவர்கள் தங்களை ஒரேகுலத்தினர்கள் தாமெனவும், தாங்கள் சிநேகர்களெனவும், ஒருவர்க்கொருவர் சிறிது பந்துத்துவமும் உள்ளவர்களே எனவுங்கூறினார்கள். அதனால் அவ்விருவரும் தங்கள் குமாரர்களாக இருப்பார்கள் என்று நினைக்கவுங்கூடவில்லை." என்றார்

வைத்தியர் "ஐயா! அவர்கள் கூறினயாவும் உண்மையே. அவ்விருவரும் எனதரிய நண்பர்களின் குமாரர்கள். எனக்குச் சிறிது பாத்தியமும் உடையவர்களே. அவர்களில் சச்சரித்தரனுக்குத் தாய் தந்தையர்கள் இல்லை. சதாநந்தனுக்குத் தந்தையார் இல்லை, தாயார் இருக்கின்றனர். அவர்களைச் சிறுவயதிலிருந்து யானே பேணிவந்தேன். அவர்கள் என்சொல்லை ஒருசிறிதும் மீறாமல் நடப்பார்கள். ஆகையால் அவர்களை யென்னுடைய சொந்தப் புத்திரர்களாகவே யெண்ணியுள்ளேன். அவர்களுக்குற்ற இத்துயரம் என்மனத்தைப் பிளக்கின்றது. இதன் காரணத்தையான் நன்கறிதற்கேற்ற உபாயங்களைத் தாங்கள் சொல்லியருளல் வேண்டும்" என்று வேண்டினர். அந்தணர். "ஐயா! இது சொல்லக்கூடாத விஷயமாக இருக்கின்றது. தாங்கள் எனக்கொரு கெடுதியும்வராமல் நடந்துகொள்வதாயிருந்தால் யான் கூறுகின்றேன். இவைகள் என்னால் வெளிப்பட்டனவென்று தெரிந்தால், இக்கொடுமைகளையெல்லாம் உடனிருந்து செய்து வைத்த கொடியவன் என்னை இவ்வூரிலேயிருக்கவிடான்" என்றார். வைத்தியர் "ஐயா! யான் உண்மையாகக் கடவுள் முன்னிலையாகக் கூறுகின்றேன், தங்களால் இவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டதாகவே காட்டிக்கொள்ளமாட்டேன்" என்றார். அதைக்கேட்ட அந்தணர். "ஐயா! இவ்வூரில் அக்கிராகாரத்தைக் கெடுக்க வந்த பணப்பேய்பிடித்தவன் ஒருவன் இருக்கின்றான் அவன் பொருள் வருவதாயிருந்தால் எத்தகைய கொடுமையையுஞ் செய்யத்துணிவான். அவன் பெயர் சுப்பண்ணன். அவன் செய்யாத துன்மார்க்கமான காரியம் இவ்வுலகில் ஒன்றும் இராது. குடிக்கப் புறப்பட்டாலோ ஒருபுட்டி சாராயமும் அவன் குடிக்குப்போதாது. மாம்ச பக்ஷணத்தில் நாய்களும் அவனுக்குப் பிற்பட்டுப்போகும். யாரேனும் அவனை என்னடா! அப்பா இப்படிக் குலத்துக்குத் தகாத காரியங்களைச் செய்கின்றாயே. அந்தணனாய்ப்பிறந்த நீ மாம்சத்தைப் புசிக்கலாமோ;

"ஒத்து மறப்பினுங் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்ற முதுமொழியையேனுங் கவனித்தாயில்லையே; எனின் அறிவில்லாத பேதைகளே! நீங்கள்சொல்வது மிகவும் விந்தையாயிருக்கின்றது. நமது முன்னோர்கள் யாவரும் மாம்ச பக்ஷணஞ்செய்

தவர்களென்பதை நீங்கள் அறியீர்களா! வசிஷ்டர் மித்திரசகன் என்னும் அரசன் வீட்டில் அவன் தென்புலத்தார் கடனாற்றும்நாளில் மாம்சம் பக்ஷிக்கவில்லையோ! அகஸ்தியரும் அவ்வாறே மாம்சம் உண்டதை வாதாபி வில்வலன் என்போருடைய சரித்திரம் நன்கு விளக்கிக்கொண்டிருக்கின்றதே. சுக்கிராசாரியார் மதுமாம்சங்களை நன்றாயுண்டு மயங்கியிருந்த சரித்திரத்தைப் பாரதம்சொல்ல மறைக்கவில்லையே. அப்படியிருக்க நீங்களென்னமோ ஒன்று முணராதவர்களைப்போல மாம்சம்புசிப்பது நமது குலத்துக்கு அடுக்குமா! என்று மிகவு நீமசமாகக் கேட்கின்றீர்களே! * போங்களடா, போங்களடா பைத்தியக்காரர்களே" என்பான். அவனிடம் அதற்குமேற்பேச யாரும் அஞ்சுவார்கள். அவன் தீமையாவும் ஒருருவெடுத்தாற் போன்ற தீயவன். மிகவும் வஞ்சகன். பெற்ற தாயினிடமும் ஒரு பொய்சொன்னால்தான் அவனுக்கு இரவில் நன்றாய்த் தூக்கம்பிடிக்கும். மிக்க தந்திரசாலி. அவன்தான் இக்கொடுமைகளையெல்லாஞ் செய்தவன்" என்றார். அதைக்கேட்ட வைத்தியர் "ஆகா! இப்படிப்பட்ட கொடும் பாதகர்களையல்லாமல் எமதூதர்கள் வேறாக இருப்பார்களோ? ஓகோ நானென்ன தப்பாக எண்ணுகின்றேன். எமதூதர்கள் பெற்றாரும், உற்றாரும், மனைவிமக்களும் வருந்தவருந்த உயிரைக்கொண்டு போகும் வன்கண்ணர்களாயிருப்பினும் நீதியினின்றுஞ் சிறிதும் பிறழார்களே. அநீதியினின்றும் ஒருசிறிதும் பிறழாதவர்களாகிய இவர்களுக்கு அவர்களை உவமிக்கலாகுமோ? இவர்களுடைய கொடுமையை நினையுங்கால் அவர்களுடைய கொடுமை, கொடுமையாகத் தோன்றாமற் சிறந்த தருமமாகவே தோன்றும்" என்று பலவாறு எண்ணி அவ்வந்தணரை நோக்கி "ஐயா! அக்கொடியோன் யார்பொருட்டாக இக்கொடுமையைச் செய்தானென்பது தங்களுக்குத் தெரியுமோ" என்றார். அந்தணர் "ஐயா! யாரோ இருவாலிபர்கள் மணிபுரத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் சற்றேறக்குறையச் சச்சரித்ர சதானந்தர்களின் வயதுடையவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் வருகையில் சற்றேறக்குறைய ஓர் ஐயாயிரரூபாய் வரையிலுங்கொண்டுவந்தார்களென்று சிலரால்கேள்வியுற்றேன். அவர்கள் பொருட்டாகத்தான் அவன் அக்காரியங்களைச் செய்தான் என்று தெரிகிறது" என்றார். வைத்தியர் "நன்று, நன்று. அப்படி

* பன்மையில் ஒருமைவந்த வழுவமைதி; இங்ஙனம் உலகவழக்கில் வரும்.

யா! இருக்கட்டும்" என்று சொல்லி அவ்வூதுணரிடம் விடைபெற்றுக்கொண்டு அந்தச் சுப்பாண்ணு ஐயர் இருக்கும் இடத்தைச் சென்றடைந்தார். சுப்பண்ணுவையர் அவரைக்கண்டதும் பல உபசாரங்களைச்செய்து ஒருநாற்காலியில்உட்காரவைத்து "ஐயா! தாங்கள்எங்கிருந்து வந்தீர்கள்" என்றுகேட்டார். வைத்தியர் "ஐயா! யான் மணிபுரத்தில் இருந்துவந்தேன். எனது குமாரன் சுஜகர்ணன் என்பவன் தன்நண்பனுகிய மணிகண்டன் என்பவனேடு கையிற்கொஞ்சம்பணமும் எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். அந்தப் பணத்தைப்பற்றி எனக்கு அவசியமஇல்லை எனக்குப்பிள்ளை யகப்பட்டாற்போதும என்பதுதான். அவனுக்குச் சிலகொடியவர்கள் பகைவர்களாய் இருக்கின்ருர்கள். அதிலும் இரண்டுகொடியபாவிப்பிள்ளைகள் இருக்கின்ருர்கள். அவர்களில் ஒருவனுக்குத் தந்தையார் இருவருமே இல்லை. மற்றொருவனுக்குத் தந்தையில்லை. தாயார்தான் இருக்கின்ருர். அவன் அந்தத் தாயார் பேச்சைக்கேட்பதில்லை. அந்தத் திருடப்பிள்ளைகளுக்கு அவனிடத்தில் மிகவும் பகை. எங்கள் பையனே ஒருவர் ஜோலிக்கும் போகின்றவனல்லன். ஆனால் அவனிடத்தில ஒரு குணமாத்திரம் உண்டு. அவன் நல்லவர்களுக்கு நல்லவனுகவும் கெட்டவர்களுக்குக் கெட்டவனுகவும் நடந்துகொள்வான். அவன் தனக்கு யாரேனும் ஒரு கெடுதி செய்தால் அதற்குப் பதில் செய்தே தீரவேண்டுமென்று ஓரேபிடியாக நிற்பான். அந்த ஒரு கெட்டகுணந்தான் இருக்கின்றது அந்தக் குணமாத்திரம் அவனிடம் இல்லாவிடின் அவனைப் பத்தரைமாற்றுத்தங்கக்கட்டி யென்றேசொல்ல வேண்டும்" என்று பற்பல வகையாகச் சுஜகர்ணனைப்புகழ்ந்தனர் சுப்பண்ணுவையர் "உலகத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குமாரர்களை அப்படித்தான் புகழ்ந்து சொல்கின்ருர்கள். அப்படியே உங்கள் பிள்ளையிடத்தில் உங்களுக்குள்ள அன்பினுல் நீங்களும் புகழுகின்றீர்கள். இஃது அதிசயமான காரியமன்று" என்ருர். வைத்தியர். "நீங்கள்சொல்வது உண்மையே. ஆனல் எங்கள் பையன் சுஜகர்ணன் விஷயத்தில் மாத்திரந் தாங்கள அப்படிச் சொல்லுதல் கூடாது. அவனது நற்குணங்களையும், சாமர்த்தியத்தையும் அவனுடன் பழகினேர் யாவருஞ்சொல்வர். அவற்றை நான் எடுத்துச்சொன்னுல் இப்பொழுது தாங்கள் சொன்னதுபோலவே பிறரும் நினைப்பார்கள்" என்ருர்.

சுப்பண்ணுவைய்யர்—"ஐயா! தங்களுடைய குமாரரது குணங்களை யெல்லாம் யான் இரண்டொரு நிமிஷத்திலேயே பகிழ்ந்

தெரிந்து கொண்டேன். இரண்டொரு நிமிஷம் பழகிய மாத்திரத்தில் நான் எல்லாருடைய குணங்களையும் அறிந்துகொள்வேன். அந்தப்பாக்கியத்தை மாத்திரம் * தங்களுடைய புண்ணியத்தால் கடவுள் எனக்குக் கொடுத்து இருக்கின்றார். யான் அவர்பொருட்டு அநேக நலங்களைச்செய்து முடித்துவிட்டேன். இனி நீங்கள் கலியாணப் பெண்ணையும், கலியாணப் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு போய்க் கலியாணஞ் செய்து முடிக்கவேண்டிய கடமையொன்று மாத்திரந்தான் பாக்கியாய் இருக்கின்றது" என்றார்.

வைத்தியர்—ஆகா! ஐயா! நீங்கள் பரமோபகாரிகள். நீங்கள் செய்த இந்த உபகாரத்துக்குக் கைம்மாறாக நான் என்ன செய்யப்போகின்றேன். ஐயா! தாங்கள் பெண்ணை யெங்குப்பார்த்து ஏற்பாடு செய்திருக்கின்றீர்கள்? அந்தப் பெண்ணை யானும் பார்க்க விரும்புகின்றேன். அவர்கள் எங்கள் பந்துக்களிற் சேர்ந்தவர்களா என்பதை மாத்திரந் தான் யான் விசாரிக்க விரும்புகின்றேன். மிகச் சிறந்த அறிவுடையவர்களாகிய தாங்களே இதுவிஷயத்தில் முயன்றிருப்பதனால் வேறொன்றையும் நான் கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை.

சுப்பண்ணையர்—இல்லை, இல்லை, அப்பெண் நான் இப்பொழுது பார்த்து ஏற்பாடு செய்த பெண்ணல்ல. தங்கள் குமாரர் முன்னமே பார்த்து விரும்பி இருந்தபெண்தான்.

வைத்தியர்—என்ன! அவன் விரும்பியிருந்த பெண்ணா! அந்தப்பெண்ணை ஜமீன் சந்திர பிரகாசம் பிள்ளை தங்கள் அத்தான் பிள்ளை செல்வமணிக்குக்கொடுப்பதற்காகக் காசிக்கு அழைத்துக் கொண்டு போனாரே! இந்நேரங் கலியாணமும் ஆயிருக்குமே! அந்தப்பெண் இங்கு வருவதற்கு ஒருவழியும் இல்லையே! ஒருகால் அப்பெண்ணைப் போன்ற வேறொரு பெண்ணாயிருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

சுப்பண்ணையர்—இப்பொழுது தங்கள் குமாரரிடம் இருக்கும் பெண் அப்பெண்ணே. அப்பெண்ணையும், அப்பெண்ணின்

---

* இப்படிச்சொல்லுதல் சாதாரண ஜனங்களுக்குள் வழக்கமாயிருக்கின்றது. ஒருவன் தன் புண்ணியத்தை "உங்கள் புண்ணியம்" என்பது மரியாதையும், அன்பும், நட்பின் உரிமையுந்தோன்றக் கூறுவதோர் வழுவமைதி.

தோழியாகிய வனஜாக்ஷியையும் போல் வேஷம்பூண்ட இரண்டு பார்ப்பனச் சிறுவர்களே! அவர்களோடுகோரைக்குச் சென்றார்கள். அவர்களும் முன்னமே இங்கு வந்து சேர்ந்து விட்டார்கள்." என்றார்.

வைத்தியர்—"ஆகா! அப்படியா? அப்பெண்ணைத் தாங்கள் எப்படி இங்கு அழைத்துக்கொண்டு வந்து விட்டீர்கள்?" என்று கேட்கச் சுப்பாண்ணையர் கஜகர்ணன் தனக்கு முன்னதாகக் கடிதமெழுதியதும், அவன் பிறகு மாயவரம் வந்துசேர்ந்ததும், பிறகு சச்சரித்ரனையும் சதாநந்தனைப்பிடித்து அறைகளில் அடைத்து வைத்தது மாகிய எல்லா விஷயங்களையுங் கூறினார். அதைக் கேட்ட வைத்தியருக்குக் கண்களில் நீர் ததும்பியது. வைத்தியர் உடனே "ஐயா! தாங்கள் என்பிள்ளையைத் தங்கள் பிள்ளையாக எண்ணி இவ்வளவு முயற்சிகொண்டுசெய்த விஷயங்களைக் கேட்டதனால் எனக்கானந்தக் கண்ணீர் பெருகுகின்றது. ஆகா! தங்களைப் போன்ற உத்தமர்களை நான் எங்கும் கண்டிலேன். தயவு கூர்ந்து கஜகர்ணனையும், சாரசநேத்ரியையுங் காட்டியருளல் வேண்டும். தங்கள் அபிமானம் பெற்ற என்னருமைக் குமாரன் தனக்கிஷ்டமான அழகிய அங்கனையுடன் கூடியிருப்பதைக் காண்பதைவிட எனக்குச் சந்தோஷம் தரக்கூடியது வேறு யாது இருக்கின்றது" என்றார்.

சுப்பண்ணையர்—"ஐயா! அவர்கள் இப்போது இவ்வூரி லில்லை. அவர்களிடஞ் செல்லத்தான் இன்ஸ்பெக்டர் அவர்களிடம் நான்கு தினங்களுக்கு விடுமுறை பெற்றுக்கொண்டிருக்கின்றேன். இன்னும் சில நிமிஷங்களில் வண்டிவரும். நாம் அதில் ஏறிக்கொண்டு போவோம்" என்று சொல்லுகையில் வீதியில் ஒருவண்டி வந்து நின்றது. சுப்பண்ணையர் உடனே வைத்தியரை அழைத்துக்கொண்டு தன் மனைவியினிடம் விடைபெற்றுக்கொண்டு அவ்வண்டியிலேறி முன்தான் கஜகர்ணன் முதலியவர்களை அனுப்பின ஊருக்குச் சென்றார். அங்குச்சென்று பார்த்து அவர்களை யிருக்கும்படி குறித்தவீட்டில் அவர்கள் இல்லாமற் போகவே, சுப்பண்ணையர் அவ்வூரி லிருப்பவர்களை விசாரித்தார். சத்தியநாதப் பிள்ளை சுப்பண்ணையரை நோக்கி "ஐயா! அவர்கள் நேற்றிரவு ஒரு வண்டியிலேறிக்கொண்டு எவ்விடத்திற்கோ போய்விட்டார்

அவர்கள் சென்றவிடம் இங்கொருவர்க்குந் தெரியாது" என்றார். அதைக்கேட்டவுடன் வைத்தியருக்கு மிகவு முகம்வாடிப்போயது. அவரது முகவாட்டத்தைக் கண்ட சத்தியநாதப்பிள்ளை சுப்பண்ணையையரை நோக்கி "ஐயா! இவர்யார்" என்று கேட்டனர். சுப்பண்ணையைர் "இவர் கஜகர்ணப்பிள்ளையின் தந்தையார். அவரைத்தேடிக்கொண்டு வந்திருக்கின்றார்" என்றார். சத்தியநாதப்பிள்ளை "அப்படியா! நன்று, நன்று, மிகவுஞ் சந்தோஷம். ஐயோபாவம், இவர் வந்தசமயத்தில் அவர்கள் இல்லாமற்போனதைப் பற்றி யான் மிகவும் விசனமுறுகின்றேன். அதற்கென்ன? அவர் ஆண்பிள்ளை. அவரோடு அவருக்கேற்ற ஒரு நண்பரும் உடன் இருக்கின்றார். அவருக்காக நாம் அஞ்சவேண்டியதில்லை. அவர் சிறந்த புத்திமான். அவருக்கென்ன குறைவு வரப்போகின்றது" என்று கூறி வைத்தியரை நோக்கி "ஐயா! தாங்கள் ஏன் வருந்துகின்றீர்கள். தாங்கள் தங்கள் ஊரைப்போய்ச் சேருங்கள். அவர்கள் தாங்களே வீட்டிற்கு வந்து சேருவார்கள்" என்று தைரியங் கூறினார்.

வைத்தியர்—சத்தியநாதப்பிள்ளையை நோக்கி "ஐயா! தாங்கள் சொன்னபடி கஜகர்ணனும், மணிகண்டனும் ஆண்பிள்ளைகளாகையால் அவர்களைப்பற்றி நாம் சிறிதும் ஆலோசிக்க வேண்டியது இல்லைதான். அவர்களழைத்துச் சென்ற பெண்களைப்பற்றித்தான் மனங் கலங்கவேண்டியதாயிருக்கின்றது" என்றார்.

சத்தியநாதப்பிள்ளை—"ஐயா! நீங்கள் இப்படிக்கலங்கி நிற்பதனாற் பயனில்லை. இரண்டு ஆண்பிள்ளைகள தங்கள் வசமுற்ற இரண்டு பெண்களைப் பழுதின்றிக் காத்து வருதற்குரிய வன்மையில்லாதவர்களாயிருப்பார்களா! கஜகர்ணப் பிள்ளையும், மணிகண்டப் பிள்ளையும் புத்திபலத்தோடு மிக்க தேகபலமுமுடையவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்களுடைய தைரியத்தையான் ஒருநாளைய பழக்கத்திலேயே தெரிந்துகொண்டேன். ஆகையால்தான் தங்களுக்கு இவ்வளவுதூரஞ் சமாதானஞ் சொல்கின்றேன். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சுதல் வேண்டாம்; உங்கள் ஊரைப் போய்ச்சேருங்கள்" என்றார்.

வைத்—ஐயா! தங்களைப்பார்த்தால்மிகவுஞ் சிறந்த ஒழுக்கமும், அறிவும் உடையவர்களாய்க்காணப்படுகின்றீர்கள். ஆகையால்

தாங்கள் சொல்லியபடி அவர்கள் யாதொரு குறைவும் உறாமலே வந்து சேருவார்கள் என்று எண்ணுகின்றேன். தாங்கள் சொல்லிய படியே யான் ஊருக்குப்போகவே எண்ணுகின்றேன்" என்றார். அதைக்கேட்ட சுப்பண்ணையர் அவரைநோக்கி "நீங்கள் அப்படிச் செய்வதே எனக்குங்கூட மிகவும் நன்மை எனத்தோன்றுகின்றது. நான் அவர்களை எப்படியேனுங் கண்டுபிடித்துத் தங்களிடங் கொண்டுவந்து சேர்க்கின்றேன்" என்று தைரியம் கூறிச் சத்திய நாதப் பிள்ளையிடம் விடைபெற்றுக்கொண்டு வைத்தியரை அழைத் துக்கொண்டு மாயவரம் வந்து சேர்ந்தார். மறுநாள் வைத்தியர் சுப்பண்ணையரை நோக்கி "ஐய! யான் கூறைநாடு வரையினுஞ் சென்று ஊருக்குப்போக நினைக்கின்றேன்" என்று கூறி, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு கூறைநாடுசென்று அங்கு ஓரிடத்தில் தங் கிச் சந்நியாசி வேடங்கொண்டு அவர்களைத் தேடிக்கொண்டு புறப் பட்டார்.

பன்னிரண்டாம்-அத்தியாயம்.

நமது கதாநாயகியாகிய சாரசையும், அவளது மனமொத்தசுந்த ரியும் என்னவானார்கள் என்பதை யீண்டு நாம் கவனிக்கவேண்டு வது மிகவும் அவசியமாமன்றோ? அவர்களைச் சத்தியநாதப்பிள்ளை ஒரு வண்டியி லேற்றிக்கொண்டு சென்றாரல்லவா? அங்ஙனம் ஏற் றிச்சென்ற அவர் தமது கிராமத்துக்குப்பத்துமைல் தூரத்திலுள் ளதொரு திருச்சேர்வு என்னுங் கிராமத்தி லிருக்கும் சிறியமடத் தில் வசிப்பவரும் தமது சிநேகருமாகிய சந்நியாசி யிடம் அப்பெ ண்மணிகளை அடைக்கலமாக வைத்து அவரை வணங்கி அப்பெண் மணிகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டுமென்றும், தாம் அடிக்கடி வந்து பார்த்துக்கொண்டு போவதாகவும் கூறித் தமது ஊருக்குத் திரும்பிவிட்டார்.

பிறகு அக்கிளிமொழியார் அச்சந்நியாசிக்கு வேண்டிய பணி விடைகளைச்செய்துகொண்டு அவரைப்பூசித்துவந்தார்கள். அந்தச் சந்நியாசி இயற்கையிற் சிறிது நல்லகுணமுடையவர். ஆகையினா லேதான் சத்தியநாதப்பிள்ளை அவரிடம் அப்பெண்களை அடைக் கலமாகவைத்தார். ஆயினும் சாரசையைக்கண்டதினத்திலிருந்து

அவருடைய மனமாறிக்கொண்டே வந்தது. இரண்டாம்நாள் இரா
வு சற்றேறக்குறைய எட்டு மணிக்குச் சாரசையை அருகில
ழைத்து உட்காரவைத்துக்கொண்டு சிலநேரம் இனிமையானமொ
ழிகளைக்கூறி அவளது கையைப் பற்றப்போனார். உடனே அவள்
அஞ்சி யெழுந்து உடல் நடுங்கவும், முகத்தில் வெயர்வை யரும்ப
வும் நின்றாள். வனஜாக்ஷி சந்நியாசியை நோக்கி "ஐயா! தாங்கள்
மிக்க பெரியவர்களாகவும், துறவியாகவும் இருந்தும் இத்தகைய
தீயசெயலைச் செய்யத் துணிந்தலாகுமோ? ஊரில் வெள்ளத்துக்கஞ்
சிக் காட்டுக்குவந்தாற் காடுதீபற்றி யெரிந்ததுபோல எங்களுக்கு
மூன்றொரு கொடியனால் நேர்ந்ததுன்பத்தினின்றுந் தப்பிப் பிழை
க்கவெண்ணித் தங்களிடம் அடைக்கலமாக வந்துசேர்ந்தால் நீங்க
ளும் இப்படிச் செய்ய நினைத்தீர்களே! துறவறத்தை மேற்கொண்
ட உங்கள் செய்கையினும் இல்லறத்திலிருப்பவர்கள் செய்கையே
மிகவு நன்றாயிருந்தது. உத்தமராகிய சத்தியநாதப் பிள்ளை உங்க
ளை நண்பராகக் கொண்டது பசு பாம்மைத் தோழமைகொண்டது
போலத்தான். புலி பசுத்தோலைப் போர்த்துக்கொண்டது போல
நீங்கள் சந்நியாசி வேஷம் பூண்டுகொண்டிருக்கின்றீர்கள். நன்று
நன்று" என்றாள். அதைக்கேட்ட சந்நியாசி வனஜாக்ஷியைநோக்கி
"பெண்ணே! நீயாது கூறினும் கூறுக. அவளிடத்து எனக்கு மிக்க
ஆவல் பெருகிவிட்டது. அதற்கு மாறாகநீங்கள் பேசுவீர்களாயின்
உங்களை யிப்பொழுதே எமலோகத்துக் கனுப்பி விடுவேன்" என
றார். அதைக்கேட்ட வனஜாக்ஷி "ஐயா! நாங்கள் உங்கள் கையி
லகப்பட்டபின் உங்களிஷ்டப்படி நடந்து கொள்ளாமல் வேறு
என்னசெய்ய வல்லோம் ஆயினும் தாங்கள் சிறிதுநேரம் பொறுக்
கவேண்டும்" என்று கூறிச் சாரசையை ஒருபுறம் மறைத்துவிட்டு
அம்மடத்தி லிருந்ததொரு சிற்றறையில் சில மட்பாண்டங்களை
ஒன்றின்மீதொன்றாக அடுக்கி அவ்வடுக்கின்மேற் சாரசையின்
அணிகளை அவள் கட்டிக்கொள்வதுபோலக் கட்டிச்சிங்காரித்துப்
பக்கத்தில் ஒரு மட்பாண்டத்தை வைத்து அதன்மேல் ஒரு தடிக்
கையிட்டு அதன்மேல் துணியைப் போட்டு விளக்கை அணைத்துவி
ட்டுச்சந்நியாசியிடம் வந்து "ஐயா! தாங்கள் இவ்வறைக்குட்செல்
லுங்கள்" என்றாள். சந்நியாசி விளக்கு ஏன் வைக்கவில்லை" என,
வனஜாக்ஷி "ஐயா! அவள் மிகவும் இளமைப்பருவமுடையவளாகையால்
விளக்கிருந்தால் மிகவும் நாணமடைவாள்; இரண்டுநாள் வரையி
னும் விளக்கின்றியே தாங்கள் அவளிடஞ்செல்லுதல்வேண்டும். பிற

கு தங்களிஷ்டப்படியிருக்கலாம்" என்றாள். சந்நியாசி எப்படியேனும் அவள் நமக்குக் கிடைத்தாற்போதும் என்னும் எண்ணத்தால் "சரி அப்படியே ஆகட்டும்" என்று உட்புகப்போனார். அப்பொழுது வனஜாக்ஷி "ஐயா! தங்கள் முன்னே கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு பிறகு அவளருகிற் செல்லுங்கள்" என்றாள். சந்நியாசி "நீகூறுவது மிகவும் நல்லகாரியந்தான்" என்று கூறி உள்ளேசென்று கதவைமூடித் தாளிட்டார். வனஜாக்ஷி அக்கதவின் வெளிச்சங்கிலியைச் சந்தடியில்லாமல் எடுத்து வாசற்படியிலுள்ள அள்ளில் மாட்டிக் கயிற்றையிட்டு நன்றாய்க் கட்டிவிட்டு நின்றாள். உட்சென்ற சந்நியாசி அங்கு இடப்பட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தார். உடனே அது நெறநெறென நொறுங்கிப்போய்விடச் சந்நியாசி அப்படியே மல்லாக்காகச் சாய்ந்து விழுந்து தட்டித்தடவிக்கொண்டெழுந்து "ஆகா! இப்படியும்என்னைப்பரிகாசம் செய்யலாமா! பெண்மணீ, சாரசநேத்ரீ! நான் உன் அருமை மணவாளனல்லேனோ? எனக்கு ஒருகால்இடுப்புக்கிடுப்புப் பிடித்துக்கொண்டாற் பிறகு உனக்குத்தானே கஷ்டம்" என்றார். அப்போது வனஜாக்ஷி கலீர் என நகைத்து "ஆம், ஆம்! அவளுக்குத்தான் நஷ்டம்" என்றாள். சந்நியாசி "என்ன வனஜாக்ஷி! நீபக்கத்தில்தான் இருக்கின்றாயோ? என்ன நான் சொன்னதற்குச் சிரிக்கின்றாயே" என்றார். புதுப் பெண்ணும், புதுப்பிள்ளையும் படுக்கை அறைக்குட் சென்றால் என்னைப்போன்ற சிறுபெண்களெல்லாம் அவ்வறையின் பக்கத்திலிருந்து அவ்வறைக்குள் உள்ள பிள்ளையும் பெண்ணும் பேசுவதைக்கேட்டு இப்படித்தான் சிரிப்பது வழக்கமாகும். நீங்கள் இதுகாறும் துறவறத்தில் இருந்து இப்பொழுதே இல்லறத்திற்கு வந்தவர்களாகையால் உங்களுக்குத் தெரியாது. அன்றியும் மற்றையோர்க்கு இல்லறத்திலிருந்து துறவறத்திற்குச் செல்லுவது வழக்கமாயிருக்கத் தாங்கள் துறவறத்திலிருந்து இல்லறத்திற்கு புக நினைத்ததும் என்னைச் சிரிக்கவே செய்கின்றது" என்றாள். சந்நியாசி "பெண்மணீ! இவ்வளவும் நீ பேசுகின்றாயேயன்றி உன் தோழி வாய்திறந்து ஒன்றும் பேசவில்லையே" என்றார். "ஐயோ பாவம்! நீங்கள் பெண்களின் தன்மையைச் சிறிதும் அறியாதவர்கள். பெண்கள் முதலில் வாய்திறந்து ஒன்றும் பேசமாட்டார்கள். ஆடவர்களே முதலில் அருகிற்சென்று கட்டித்தழுவி அவர்களுக்கு உபசார மொழிகளைக்கூறி அவர்களுடைய நாணத்தைப் போக்கவேண்டும்" என்றாள். சந்நியாசி "அப்படியா! இதோ

நான் அப்படியே செய்கின்றேன்" என்று அடுக்களையின் அருகிற்சென்று "பெண்ணே! நானாக உன்னைவருத்தலாகாது என்று எண்ணி இதுகாறும் சற்றுத் தூரமாக இருந்தேன். மற்றத் தடிப்பயல்களா யிருந்தால் இதுவரையினும் உன்மேல் விழுந்து எவ்வளவோ தாறுமாறான காரியங்களைச் செய்து விட்டிருப்பார்கள். என்னைப்போன்ற பெரியவர்கள் அப்படிச்செய்யார்கள். இதுதான் பெரியோர்களுக்கும், மற்றவர்களுக்குமுள்ள வித்தியாசம். உன்னைப்போன்ற பெண்கள் என்னைப்போன்ற அறிவுடையவர்களைச் சேருவதுதான் தகுதியாகும். மற்றைத் தடிப்பயல்களைச் சேருவதனால் என்னபயனுண்டாகும்? நாள்தோறும் என்னை வந்து வணங்குகின்றவர்களெல்லாம் உன்னையும் வணங்குவார்கள். அஃது உனக்கு எவ்வளவுகௌரவமாக இருக்கும் என்பதை நீயே யோசித்துப்பார். இவ்வளவு கௌரவமும் உனக்கு இப்பொழுதே வந்துவிட்டதாக எண்ணிக்கொள். இக்கௌரவங்களெல்லாம் உனக்கு வருவதற்குக்காரணமென்ன? நீஎன்னை நாயகனாகஏற்றுக்கொண்டதல்லவா? நீயே யோசித்துப்பார். என்ன நான் இவ்வளவுசொன்னாலும் பதில் ஒன்றுஞ்சொல்லாமல் இருக்கின்றனையே! நீ சிறியபெண்ணாகையினால் உனக்குநாணம் இருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆயினும் என்னிடத்தில் உனக்கு இவ்வளவு நாணம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. மிகவு முறைப்பும், திருப்புமாயிருக்கின்ற தடிப்பயல்களைக் கண்டால்தான் நீ இவ்வளவு நாணங் கொள்ளவேண்டும். ஏதோ என்னுயிருக்கு உறுதி பயப்பதாகிய ஒரு முத்தங்கொடு" என்று சொல்லிக்கொண்டு அந்த அடுக்களையைத் தமது ஆசையெல்லாம் பொருந்தக் கட்டித்தழுவினார். அவ்வடுக்களை உடனே நெறுநெறென நொறுங்கிப்போயிற்று. அந்த ஞானசந்நியாசி அப்படியே சுவரிற் சாய்ந்து வீழ்ந்தார். தலையில்நன்றாய்க் காயம்பட்டு உதிரம்பெருகியது. அதனால் அவர் தட்டுத்தடுமாறிச்சமாளித்துக்கொண்டு நின்று "ஆ ஆ!! நம்மை இப்பெண்கள் முற்றும் ஏமாற்றிவிட்டார்கள். இவர்களுக்கு இதமானமொழிகளைக் கூறிவெளியிற் சென்று இவர்களைவெட்டி இங்கொருபள்ளந்தோண்டி அதிற்போட்டுப் புதைத்துவிட வேண்டியதுதான்" என்று தீர்மானித்துக்கொண்டு "பெண்ணே! வனஜாக்ஷி எனக்குப் புத்திவந்து விட்டது நீயே எனக்கொரு சிறந்தகுருவானாய். இனி நான் இந்தக்காரியத்துக்குப் பிரவேசிக்கமாட்டேன். தயவுசெய்து கதவைத்திறந்து விடு" என்றார். வனஜாக்ஷி, "அறிவுகெட்ட சந்நி

பாவியே! உன்னைப்போல என்னையும் அறிவுகெட்டவள் என்று எண்ணிக்கொண்டனையோ? நீ இந்த அறையிற் பத்திரமாக இரு" என்று சொல்லிருதான் முன்னதாகச் சித்தப்படுத்தி வைத்திருந்த காவித்துணிகளை யெடுத்துச் சாரசைக்குக்கொடுத்துத்தானும் உடுத்திக்கொண்டாள். இங்ஙனம் சந்நியாசச் சிறுவர்களைப்போல வேடம்பூண்ட அப்பெண்கள் இருவரும் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு அதிவேகமாக அந்நள்ளிருளிற் சென்றார்கள்.

பதின்மூன்றாம்-அத்தியாயம்.

அங்ஙனம் சென்றவர்கள் பொழுதுவிடிகையில் ஒருகாட்டை யடைந்தார்கள். அக்காட்டிற் சென்றதும் சாரசநேத்ரி வனஜாக்ஷியை நோக்கி "தங்காய், வனஜாக்ஷி! இதுகாறும் நான் பேரறிவுவாய்ந்த உன்னுடைய உதவியினால் பற்பல ஆபத்துக்களினின்றுந் தப்பித்துக்கொண்டு வந்தேன். இப்பொழுது நாம் இந்தக்காட்டிற்குள் வந்து விட்டோம். இக்காடோ பெரிய பெரிய மரங்களால் அடர்ந்து சூரியனால் துரத்தப்பட்ட இருள் முழுதும் வந்து தங்கியுறைவதோர் இடமாய் இருக்கின்றது. இதில் நாம் இன்னும் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்கவேண்டுமோ தெரியவில்லை" என்றாள்.

இங்ஙனம் அப்பொற்கொடி சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு பெரும்புலியானது இவர்களைப்பார்த்துக்கொண்டும் வாலைமுறுக்கிக்கொண்டும் இருக்க அவ்விருபெண்மணிகளுங்கண்டுமிகவும் அஞ்சி உடல் நடுங்கித்திகைத்து "இனி நாம் இதனிடம் இருந்து தப்புவது அருமையே" என்றெண்ணி நின்றார்கள். அந்தோ! துன்பத்தின்மேல் துன்பமாய் வரின் அவ்விளம்பொற்கொடிகள் எப்படிச்சகிப்பார்கள், பாவம்! இச்சமயம் அவர்கள் யாரைத் துணையாக நாடுவார்கள்? ஆதரிப்பார் ஒருவருமின்றி அக்கரைந்துநிற்கும் ஏழைகளுக்குப் பகவானையன்றி ஆபத்தில்வந்து உதவுவார் யாருளர்? எல்லாரையும் படைத்துக்காத்து முடிவில் தமது திருவடிக்கட்டில் வைத்துக்காத்து மீண்டும் படைப்பவராகிய அப்புருஷோத்தமரே எல்லாவுயிர்களுக்கும் எல்லாவிடத்தும் எக்காலத்துந் துணையி

ருந்து உதவுகின்றவர். எல்லாப்பொருள்களுக்குள்ளும் அவரிருக்கின்றார். அவரில்லாத இடமே கிடையாது. அவரிடத்திலேயே எல்லாப் பொருள்களும் அடங்கியிருக்கின்றன. அவருக்கு வேறான இடத்திலிருக்கும் பொருளொன்றும் இன்று. அவரினும் வேறான இடமும் இல்லை. அவரது கட்டளை மீறி நடக்கும் பிராணியே கிடையாது. அவர் எல்லாப் பிராணிகளையும் நல்வினை தீவினைகள் என்னுங் கயிற்றாற்கட்டி சூத்திரக்காரன் பொம்மைகளைக் கயிற்றாற்கட்டி ஆட்டுவதுபோல ஆட்டுகின்றார். மற்றைய சூத்திரதாரர்கள் ஞானமில்லாத பொருள்களை ஆட்டுகின்றார்கள். அப்பரமபுருஷராகிய சூத்திரக்காரரோ ஞானமுள்ள பொருள்களை அங்ஙனம் ஆட்டுகின்றார். ஆகா! அவருடைய விசித்திர சாமர்த்தியங்களை அளவிட்டுரைக்க வல்லார்யாவர்? அப்பெண்கள் அங்ஙனந் திகைத்து நிற்குஞ் சமயத்தில் அப்புண்டரீகாக்ஷரது திருவருளால் அங்கு வேட்டையாடுதற்பொருட்டு இரண்டு போர்ச்சேவகர் வந்தனர். அவர்கள் அப்புலியையும், அப்புலியைக் கண்டு அஞ்சி உடல் நடுங்கி நிற்கும் அந்த இளஞ்சந்நியாசிகளையுங் கண்டு விரைவாக இருவருமருந்து முதலியனபோட்டுத் தங்கள் கையிற்சித்தமாகவைத்திருந்த துப்பாக்கிகளை யெடுத்து ஏககாலத்தில் நன்றாய்க்குறிபார்த்து அக்*கொடுவரியைச்சுட்டு வீழ்த்தினர். பிறகு அவ்விருவரும் அவ்விளஞ்சந்நியாசிகளிடம் வந்து அவர்களை "ஐயன்மீர்! நீங்கள் எங்கிருந்து இங்கு வந்தீர்கள்? இப்பொழுது எங்குப் போகின்றீர்கள்" என்று கேட்டனர். அவர்கள் "எங்கள் உயிரைக் காத்தற்கு இருதெய்வங்களைப்போலத் தோன்றிய உத்தமர்களே! நாங்கள் ஓரிடத்திலிருப்பவர்கள் அல்லேம். பல தேசங்களுக்கும் யாத்திரையாகச் சென்று வருகின்றோம். இன்று வழிதப்பி இக்காட்டுக்கு வந்துவிட்டோம்" என்றார்கள். அதைக்கேட்ட அவ்வீரர்கள் "ஐயன்மீர்! நீங்கள் எங்களுடன் வரின் இதற்கு அடுத்தவொரு ஊரில் ஒரு பெரியவர் இருக்கின்றார். அவரிடம் உங்களை அழைத்துக்கொண்டு போய்விடுகின்றோம்" என்றுகூறினர். அதற்கு அவர்கள் சம்மதிக்க அவ்வீரர்கள் அவர்களை அழைத்துக்கொண்டுபோய் அப்பெரியவரிடம் விட்டுச்சென்றார்கள். அப்பெரியவர் எதையும் எழுதிக்காட்டுவாரே யல்லாமல் வாய்திறந்து பேசமாட்டார். அவருக்கு இரண்டு சீடர்கள் உண்டு. அவரிருக்கும் இடம் ஒரு சிறியவீடு. அந்து

*கொடுவரி-வளைவான வரிகளை உடையது; புலி.

மற்றைய வீடுகளோடு சேராமல் தனித்திருந்தது. அங்குப்பகலெல்லாம் பல ஜனங்கள் வந்து அந்தமௌன சந்நியாசியாரைச் சேவித்துக்கொண்டு போவார்கள். அச்சந்நியாசி தம்மிருமாணவர்களோடு அவர்களையும் இருக்கும்படி எழுதித்தெரிவித்தனர். அவர்களும் அப்படியே இருந்து அவருக்குப்பல பணிவிடைகளைச்செய்துகொண்டிருந்தார்கள். இங்ஙனம் இரண்டு மூன்று நாட்கள் செல்லச் சந்நியாசி எப்படியோ அவர்களைப் பெண்கள் என்று உணர்ந்துகொண்டார். அவருக்கு அவர்களிடங்காதல்பெருகிற்று. இதற்குத் தக்க உபாயந் தேடவேண்டும் என்றெண்ணினார். உடனே தம்முடைய சீடர்களை அழைத்து அவர்களிடம், மறைவாக "என் வணக்கமுள்ள நன்மாணவர்களே! இன்று எனக்கு உங்களால் ஆகவேண்டியதொரு முக்கியமான காரிய மிருக்கின்றது. அதை நீங்கள் யாருக்குந் தெரியாமல் முடித்துத் தருவதாயிருந்தால் கூறுகின்றேன்" என்றார். அவர்கள் "சுவாமி! தாங்களிட்ட திருப்பணிகளைச் செய்துகொண்டு தாங்களுக்குத் தொண்டு பூண்டிருக்கும் அடியேங்கள் தாங்கள் கூறுங் காரியத்தைச் செய்து முடிக்காமல் இருப்போமா? தாங்கள் எவ்விதக்காரியத்தைச்செய்யச்சொன்னாலுஞ்செய்து முடிக்கின்றோம்" என்றார்கள். சந்நியாசி "நீங்கள் மிகவும் உத்தமர்களான சீடர்கள் உங்களைப்போன்ற சிறந்த குணமுடைய சீடர்கள் கிடைப்பது மிகவும் அருமையாகும். உங்களுக்குச் சிவபரஞ்சுடரின் திருவருள் வாய்ப்பதாகுக. நற்குணசீடர்களே! நான் இன்று கூறுங் காரியத்தைப் பிறருக்குத் தெரிவிக்காமல் செய்தல்வேண்டும் இப்பொழுது நம்மிடம் வந்துள்ள சந்நியாசிகள் யாரென்று கவனித்தீர்களா" என்றார். அம்மாணவர்கள் "சுவாமி! நாங்கள் அவர்களைக்கவனித்துத்தான் பார்த்தோம். அவர்கள் எங்களுக்குத்தெரிந்திருப்பவர்களாகச் சிறிதும்புலப்பட்டிலர். புதுமுகமானவர்களாகத்தான் இருக்கின்றார்கள்" என்றனர். சந்நியாசி "களங்கமற்ற பிரம்மசாரிகளே! அவர்கள் உங்களுக்குப் புதுமுகமானவர்கள் என்பதில் தடையில்லை. உங்களுக்குமாத்திரமல்ல; எனக்கும் அவர்கள் புதுமுகமானவர்களே. ஆகையால், நான் உங்களைக்கேட்டது உங்களுக்கு அவர்கள் தெரிந்தவர்களாயிருப்பார்கள் என்பதைப்பற்றியன்று. அவர்கள் ஆண்பாலர்தாமா, என்பதைப்பற்றித்தான் கவனிக்கச்சொன்னேன்" என்றார் அதைக்கேட்டமாணவர்கள் சிறிது யோசித்துச் "சுவாமி நாங்கள் இதுவரையினும் அவர்களை ஆண்பாலாரென்றே எண்ணியிருந்தோம்

இப்பொழுது தாங்கள் கூறியவற்றாற் சிறிது சந்தேகிக்கின்றோம்" என்றனர். சந்நியாசி "சிறிது சந்தேகிப்பானேன். அவர்கள் பெண்பாலர்களே" என்றார். மாணவர்கள் "ஆகா! நாங்கள் இதுகாறும் அவர்களைப் பெண்களென்றறிந்திலோம். அவர்கள் மிகவும சாமர்த்தியம் வாய்ந்தவர்கள்; தங்களைப் பெண்களென்று ஒருவரும் உணராதபடி அவ்வளவு தந்திரமாக நடந்துகொள்கின்றார்கள். அப்பா! அவர்களின் புத்திவன்மையே வன்மை. மிகவு நன்றாய்ப்படித்தவர்களாகவே இருக்கின்றார்கள். பெண்பாலரில் அவ்வளவு படித்தவர்கள் கிடைப்பது மிகவும் அருமை. அவர்களுடைய கல்வியின்வன்மை அவர்களிடத்தில் எங்களுக்குச் சந்தேகம் உண்டாகாதபடி செய்துவிட்டது. ஆம், ஆம், இப்பொழுதுதான் அவர்கள் பெண்கள் என்பது நன்றாய் விளங்குகின்றது. அவர்கள் எங்களுடன் குளிப்பதில்லை. அவர்கள் எப்பொழுதுமே காவித்துணியினால் தேகமுழுதையும் நன்றாய் மறைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய முகமும், உள்ளங் கைகளும், பாதங்களுமன்றி மற்றைய உறுப்புகள் காணப்படுதலில்லை. அவர்கள் பெண்களே; சந்தேகமே இல்லை" என்றார்கள். சந்நியாசி உத்தம சீஷர்களே! நீங்கள் எப்படியேனும் நான் அவர்களை அடைந்து இன்புறும்படி செய்வித்தல் வேண்டும். இதுவே நீங்கள் எனக்குச் செய்யவேண்டிய மிகச் சிறந்த பேருதவியாகும். நீங்கள் அதைச் செய்யின் பிறகு என் உடல் பொருள் ஆவி யாகிய மூன்றும் உங்களுடையனவேயாம். இதுகாறும் யான் ஈட்டிவைத்துள்ள பொருள்களை உங்களுக்கன்றி யான் வேறுயாருக்குக்கொடுக்கப் போகின்றேன்." என்றார் மாணவர்கள் அவரைவணங்கிச் "சுவாமி! தாங்கள் கூறியபடியே செய்து முடிக்கின்றோம்" என்று சொல்லிச் சென்று மறைவில் ஏதோ இருவருமாகப் பேசிக்கொண்டு அவ்விளஞ் சந்நியாசிகளிடஞ் சென்று "உத்தமச் சந்நியாசிகளே! உங்களை நாங்கள் ஒன்றுகேட்க விரும்புகின்றோம். நீங்கள் யாருக்குப் புத்திரிகளில்லாத குறையை நீக்கியவர்கள்? நீங்கள் இவ்வேஷம் பூண்டிருப்பதற்கு நியாயமென்னை" என்றார்கள். அதைக்கேட்டவுடன் அவர்கள் திடுக்கிட்டு அஞ்சி நின்றார்கள். அதைக்கண்ட அம்மாணவர்கள், "பெண்மணிகாள்! நீங்கள் சிறிதும் அஞ்சுதல் வேண்டாம். இப்பொழுது எங்கள் குருவாகிய திருட்டு மௌனசந்நியாசி உங்களை யெப்படியோ பெண்களென்று அறிந்துகொண்டு உங்களை அடைய விரும்பி இருக்கின்றார். நாங்கள் இதுகாறும் உங்களைப் புருஷர்களென்றே

எண்ணியிருந்தோம். அக்கள்ளச் சந்நியாசி சொன்ன பிறகுதான் நீங்கள் பெண்கள் என்பது எங்களுக்குத் தெரிந்தது. உங்களுக்கு அக்கிழச் சந்நியாசியை அடைய விருப்பமா! அல்லது உங்களைப் போலும் எவ்வனம் வாய்ந்த புருஷர்களாகிய எங்களை யடைய விருப்பமா! உங்கள் கருத்தை ஒளியாமற் சொல்லுங்கள்" என்றார்கள்.

அதைக்கேட்டு வனஜாக்ஷி "நல்ல வன்புடையவர்களே! இளம் பெண்கள் எல்லாம் எப்பொழுதும் எவ்வனமும் அழகும் உடைய புருஷர்களை அடைய விரும்புவார்களேயன்றிக் கிழவர்களை அடையவிரும்புவார்களோ! ஆனால் நான் ஒன்றுசொல்கின்றேன். நீங்கள் அதைப்போலச் செய்யவேண்டும். நாம் இங்கிருந்து கொண்டிருந்தால் நமக்குச் சௌக்கிய முண்டாகாது. ஆகையால் நம் நான்குபேருக்கும் நான்கு குதிரைகளையும் நான்கு கத்திகளையும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அதுவும் நாளையதினம் இரவுக்குள்ளாகச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். நாளையதினம் இரவு எட்டு மணிக்குமேல் நாம் இங்கிருந்து புறப்படவேண்டும். இது யாருக்குந் தெரிதல் கூடாது" என்றாள். அதைக்கேட்ட அம்மாணவர்கள் "அப்படியே செய்கின்றோம்" என்று கூறிச்சந்நியாசியினிடஞ் சென்று "சுவாமி! அப்பெண்களை நாங்கள் அநேக இதமான மொழிகளால் ஒருவாறு சம்மதிக்கும்படி செய்திருக்கின்றோம். இன்று மாத்திரந் தாங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும். நாளையதினம் இரவு எட்டுமணிக்குள் எப்படியேனும் அவர்களைத் தங்கள் இஷ்டப்படித் தங்களிடம் இசைந்து இருக்கும்படிசெய்து விடுகின்றோம்" என்றார்கள். சந்நியாசி அதைக்கேட்டு மிகவும் சந்தோஷித்து "எனது அரும்பெறல் மாணவர்களே! நீங்கள் எப்படியேனும் முயன்று நீங்கள் சொன்னபடி நாளை இரவுக்குள்ளாக அவர்களை யான் அடையும்படியான வகையைச் செய்துவிடவேண்டும். உங்களுக்குக் கங்கையைச் சடையில் அணிந்துள்ள சிவபெருமான் நல்லருளைப் புரிவார்" என்றார். அன்றையதினங் கழிந்தது. மறுநாள் காலையில் வனஜாக்ஷி அவர்களை அழைத்து "நான் சொன்ன காரியத்தைச் சீக்கிர முடித்துவிடுங்கள்" என்றாள். அவர்கள் "அப்படியே, ஆகட்டும்" என்று கூறி அந்தச்சந்நியாசியினிடஞ் சென்று "சுவாமீ! அவர்களுக்குச் சிறந்த நகைகள் வேண்டுமாம். அவைகளைத் தாமதியாமற் கொண்டுவந்து கொடுக்கவே

ண்டும் என்கிறார்கள்" என்றார்கள். அதைக்கேட்ட சந்நியாசி "அப்படியா? அதற்கென்ன தடை" என்று தாம்சேமித்து வைத்திருந்த பொருளில் நோட்டும் ரூபாயுமாக ஐயாயிரம்ரூபாய் எடுத்துக்கொடுத்து "இந்த ஊரில் நகைவியாபாரஞ் செய்யும் சோமுசெட்டிச்செட்டியார் ஏதோ சிறந்த நகைகளை வரவழைத்திருக்கின்றாராம். அவரிடம் சென்று தக்க நகைகளாகப் பார்த்து வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றார். அவர்கள் அப்படியே அந்த ரூபாயைப் பெற்றுக்கொண்டுபோய் அடுத்த ஊரில் வந்திறங்கி இருந்த குதிரை வியாபாரியிடஞ் சென்று நான்கு குதிரைகளை வாங்கிக்கொண்டு அங்கிருந்த ஒருகொல்லனிடத்தில் ஓரிருபதுரூபாய்களைக்கொடுத்துக் கத்தி செய்து கொடுக்கும்படி கேட்டார்கள். அவன் தான் யாருக்காகவோ முன்னே செய்து வைத்திருந்த பத்துக் கத்திகளில் நான்கு கத்திகளை யெடுத்துக்கொடுத்தான். அவர்கள் அதையும் பெற்றுக்கொண்டு மிகக் களிப்போடு தங்கள் ஊரைவந்தடைந்து தாங்களிருக்கும் வீட்டிற்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு தோட்டக்காரனிடம் அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டுச் சந்நியாசியிடம் வந்து வணங்கி நின்று "சுவாமீ! தாங்கள் கொடுத்த ரூபாய்க்குமேல் ஐந்நூறு ரூபாய் கடன் வைத்துக்கொண்டு வந்துவிட்டோம். தாங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. அந்த நகைகளை அவர்கள் கண்டமாத்திரத்தில் பேராநந்தக் கடலில் மூழ்கிவிட்டார்கள். இப்பொழுது சற்றேறக்குறைய ஆறுமணியிருக்கும். இப்பொழுதுள்ள சிறிது வெளிச்சமும் நீங்கிவிடட்டும். விளக்கு வைத்தபிறகு ஜனசந்தடி முற்றும் அடங்கிவிடும். அதற்குள் அவர்களுஞ் சாப்பிட்டுவிட்டுச் சித்தமாயிருப்பார்கள். ஆனால் ஒன்று. அக்காரியத்தைத் தாங்கள் இங்கு வைத்துக்கொள்ளக்கூடாது ஏனெனின் ஒருவேளை யாரேனும் இருந்தாற் போலிருந்து இங்குத் தங்களைச் சேவிக்க வரினும் வரக்கூடும். அப்படி யாரேனும்வந்து அதை அறிந்துவிட்டாற் பிறகு தங்களிடம் இருக்கு மதிப்புப் போய்விடும். தங்களுக்காக அடுத்துள்ள சிறுவீட்டில் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றோம்" என்றார்கள். சந்நியாசி "எனது அன்புள்ளசீஷர்களே! நீங்கள் மிகவும் புத்திசாலிகள். உங்களைச் சிஷர்களாகப் பெற்ற எனக்கு முடியாத காரியம் என்னுளது. சீக்கிரம் நீங்கள் சென்று செய்யவேண்டிய கிரியங்களையெல்லாஞ் செய்து வையுங்கள்" என்று அவர்களை அனுப்பினர். அவர்கள் அப்படியே அச

றவீட்டிற்குட் சென்று ஏதோ சில காரியங்களைச் செய்துகொண்டிருந்து இரவு ஏழரைமணிக்குச் சந்நியாசியினிடம் வந்து அவருக்கு வேண்டிய பால்பழ முதலிய உணவுகளையெல்லாங் கொடுத்தார்கள். அச்சந்நியாசி அவற்றை யுண்டபின் மாணவர்கள் அவரை வணங்கி நின்று "சுவாமி! யாவுஞ் சித்தமாயின. தாங்கள் எழுந்தருளலாம்" என்றார்கள். சந்நியாசி அப்படியேநல்லஆடைகளை யுடுத்திக்கொண்டு வாசனைபூசிக்கொண்டு தாம்பூலத்தைக்கையிற்பற்றிக்கொண்டு தமக்குஇளமைவயது திரும்பிவிட்டதாக மனத்தில் நினைத்து மிகவும் ஒய்யாரமாக ஆடி அசைந்து அச்சிறு வீட்டிற்குட்சென்றார் உடனே மாணவர்கள் அவருடன் அவ்வீட்டினுட் சென்று ஓரறையைத்திறந்து சந்நியாசியை அதற்குட் போகச்சொன்னார்கள். சந்நியாசி உட்சென்று பார்க்கையில் சுடலையில் அடுக்குவதுபோல அதிற் கட்டைகளும் வறட்டிகளும் அடுக்கப் பட்டிருந்தன சந்நியாசி அதைக்கண்டு அஞ்சிநடுங்கி மாணவர்களைநோக்கி, "என தருமைச் சீடர்களே! இஃதெதற்காக" என்றனர். அவர்கள் தங்களைத் திருப்பள்ளிப் படுத்துவதற்காகத்தான்" என்றார்கள். அதைக்கேட்டதும் சந்நியாசி அம்மாணவர்களின் காலில் வீழ்ந்து "என்னை ஒன்றுஞ் செய்யாமல் விட்டுவிடுவீர்களாயின் நான் சேர்த்து வைத்துள்ள பொருள்களையெல்லாம் உங்களுக்கே கொடுத்து விடுகின்றேன். அந்தப் பெண்களும் எனக்கு வேண்டாம். அவர்களையும் நீங்களே அடையுங்கள். எனக்குப் புத்தி வந்து விட்டது. இனி நான் அவர்களைக் கனவிலும் நினையேன்" என்றார். மாணவர்கள் அதைக்கேட்டு அச்சந்நியாசியை நோக்கி "ஆனால் நீர் கூச்சலிடாமலிருந்தால் உம்மை உயிருடன் விட்டுச்செல்வோம். கூச்சலிடுவீராகில் உம்மை இக்கத்திக் கிரையாக்கிவிடுவோம்" என்று அங்கு மறைய வைத்திருந்த கத்தியை எடுத்துக்காட்டினார்கள். சந்நியாசி அக்கத்தியைக்கண்டதும் நடுநடுங்கி "அப்படியே கூவாமலிருக்கின்றேன். என்னை ஒன்றுஞ் செய்யாமல் மாத்திரம் விட்டு விடுங்கள்" என்று பலவாறு வேண்டிக் கொண்டார்.

அவர்கள் அச்சந்நியாசியை நோக்கி "அப்படியே விட்டுவிடுகின்றோம், சத்தாதிரும்" என்றுகூறித் தாஞ்சித்தப்படுத்தி வைத்திருந்த கயிறுகளை யெடுத்து அச்சந்நியாசியின் கைகால்களை நன்றாய்க் கட்டி அவ்விடத்திலேயே உருட்டிவிட்டு வெளியிற் சென்று சந்நி

பின் வீட்டிற்சென்று அவர் சேமித்து வைத்திருந்த பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அப்பெண்மணிகளையும் அழைத்துக்கொண்டு முன் தாங்கள் குதிரையை வைத்திருந்த தோட்டக்காரனிடம் சென்று அவனுக்கு ஒரு நூறுரூபாய்களைக்கொடுத்து அக்குதிரைகளைக் கொண்டுவரச் சொன்னார்கள். அவன் அந்த ரூபாயைக் கண்டதும் அளவில்லாத சந்தோஷமடைந்து அந்தக்குதிரைகளை ஒவ்வொன்றாகப் பற்றிக் கொண்டுவந்து அவர்கள் முன் விட்டுப் பிறகு தன் வீட்டினுட்சென்று நான்கு கத்தியையுங் கொண்டுவந்து,கொடுத்தான். அம்மாணவர்கள் அவற்றைப்பெற்றுக்கொண்டு அவற்றுள்,இரண்டு கத்திகளையெடுத்து அவ்விரு பெண்மணிகளிடங் கொடுத்து,மற்றிரண்டு கத்திகளைத் தாங்கள் இருவரும் பேருக்கொன்றாகக் கையிற்பற்றிக்கொண்டார்கள். அப்போது வனஜாக்ஷியும் சாரசையும் தனித்தனி ஒவ்வொரு குதிரையின் மேல் ஏறிக்கொண்டார்கள். அம்மாணவர்களும் தனித்தனி ஒவ்வொரு குதிரையின் மேல் ஏறிக்கொண்டார்கள். உடனே மாணவர்கள் தங்கள் குதிரையை முன்னே செலுத்தினார்கள். அப்பெண்மணிகளும் தங்கள் குதிரைகளை அவற்றின் பின்னே செலுத்தினார்கள். அந்நான்கு குதிரைகளுஞ் சொல்ல முடியாத வேகத்துடன் சில நிமிஷங்களுக்குள் அநேக ஊர்களைக் கடந்து சென்றன. அப்போது வனஜாக்ஷி அவர்களுக்குப் பல இதமான மொழிகளைச் சொல்லிக்கொண்டே போயினள். அம்மாணவர்கள் அம்மொழிகளைக் கேட்கக் கேட்கச் சந்தோஷமும், காதலும் மேன்மேலும் வளரப் பெற்று "நாம் இப்பிறப்பினாலாகியபயனைப் பெற்றோம். இப்பெண்மணியின் மொழிகளைக் கேட்பவர்களுக்கு உண்டாகும் இன்பம் விண்ணுலகத்தி லிருந்து தேவாமுதத்தை யுண்ணுதலாலும், மிக்க பெரியோர்களாகிய நாரத தும்புருக்களின் வீணையின் இசையைக் கேட்டலாலும் உண்டாகாது. சந்நியாசம் பெற்றுக் காடுகளில் உறைந்து திரிவோரெல்லாம் இவ்விதப் பெண்களை யடையப் பெறாமையினால் வெறுப்புற்று அவ்விதவேடங்கொண்டோரோயாவர்" என்றெண்ணிச்சந்தோஷிக்கலானார்கள். இங்ஙனம் நான்கு பேர்களும் நான்கு குதிரைகளையும் செலுத்திக்கொண்டு போகையில் வனஜாக்ஷி அவர்களின் மனநிலையை யுணர்ந்தவளாய்ச் சாரசநேத்ரிக்கு ஒரு ஜாடைகாட்டினள். சாரசநேத்ரி தன் கையிலிருந்த கத்தியினால் அம்மாணவர்களில் ஒருவன் ஏறியிருந்த குதிரையை வெட்டிவிட்டனள். அத்தக்ஷணத்திலும்மனவனா

ஜாக்ஷி மற்றொருவன் ஏறியிருந்த குதிரையை வெட்டி வீழ்த்தினாள். உடனே அவ்விரு பெண்மணிகளின் குதிரைகளும் வாயுவேகமும் மனோவேகமும் பிற்படும்படி நான்கு கால்களினாலும் பாய்ந்து சென்றன.

பதினைன்காம்-அத்தியாயம்.

இப்பொழுது நமது கதாநாயகனைப் பற்றி சண்டுக் கவனித்தல்வேண்டும். அவனும் அவனது உயிர்த்துணைவனாகிய சதாநந்தனும் தங்களைக் கொல்லக் கருதியோ? மற்றென்செய்யக்கருதியோ காட்டிற் கழைத்து வந்த சேவகர்களை நையப்புடைத்துவிட்டுப் போய்விட்டனரல்லமோ? அங்ஙனம்போனவர்கள் அக்காட்டினையும், பலவூர்களையும் கடந்து எப்படியோ ஆழ்வார்திருநகரியென்னும் திருக்குருகூரைச் சென்றடைந்தார்கள். அப்பதியை அடைந்து அப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஆதிநாதப் பெருமானையும் ஆதிநாயகவல்லியாரையும் தரிசித்துப் பண்ணார்பாடல் பல பாடிக்கொண்டு நின்றார்கள். அப்பொழுது அங்கு வந்திருந்த தனவான்ஒருவர் அவர்கள் பாட்டுகளைக் கேட்டு மிக்க ஆநந்தமடைந்து அவர்களுக்குப் பல உபசாரமொழிகளைக்கூறி அவர்களைத் தம்வீட்டிக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குமிக்க ஆதரத்துடன் விருந்து செய்வித்தனர். அவர்களும் அத்தனவானுடைய அன்பார் மொழியினுக் குகந்து அவரளித்த இன்பார் சுவையமைந்த உணவினையுண்டு களித்தனர். பிறகு அத்தனவான் அவர்களோடு நெடுநேரம் செந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் பல வற்றை வினவி அவர்கள் கூறிய விடைகளால் அவர்கள் கல்வியில் மிகவுஞ் சிறந்தவர்கள் என்றறிந்து அவர்களை நோக்கி அத்திருப்பதியில் அவதரித்து உலகமுய்யத் தமிழ்வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளிய காரிமாறப் பிரான்மீது பேருக்கு இவ்விரண்டு வண்ணச் சந்தவிருத்தங்கள் பாடும்படி வேண்டினார். வேண்டுதலும்,

ச்சரித்ரன்:

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தனன தனத்தத் தனதன தானன
தனன தனத்தத் தனதன தானன.

கருணை மிகுத்துப் புவிமிசை யீடுறு
கலைகண் மிகுத்துச் செறிதமிழ் நாடுறு
குருகை யகத்துச் சிறுபுளி மேவிய
குழக னடிப்பொற் பனிமலர் நாடுதும்
திருகு மிகுத்துத் தொடர்தரு மாவினை
செறித லொழித்துத் திறலுறு சீரொடு
பெருகு நலத்துக் குணமுறு வோர்குழு
பிரித லகற்றிச் சுகமுற நாளுமே. (1)

உரிய நலத்துக் கனிதமி ழாரண
முலக முவப்பப் பொலிபொரு ளோடருள்
அரிய குணத்துக் குருகையி னாயக
னமுத மரைப்பொற் படியிணை பாடுதும்
கருவி னகட்டுப் பலவடி வாயுறு
கடிய வினைக்குச் செறியடி யாகிய
இருமை வினைக்குட் படுமன மாசற,
வினையி னலைத்துத் திகழ்தர நாளுமே. (2)

என்னு மிருசெய்யுட்களைப்பாடினன்.

சதாநந்தன்.

தனன தனத்தத் தனதன தனதன
தனன தனத்தத் தனதன தனதன.

மந்திர கவிக்குச் சிறுதொடர் மொழியினின்
மறை னகத்துப் பொருளுற வருளிய
சதுர னெமக்குத் தனிமுத லிறையவன்
சரண மலர்ப்பொற் படியிணை நினைகுதும்

விதலை நினைக்கத் தருமுடி வெனுமது
வெறுவ வுறுத்துச் செறிதா வருபல
விதமொ லகெட்டுத் தொடர்தரு பிறகள்
வினைக ளொழித்துச் சுகமொடு நிலவவே. (1)

பரம பதத்துக் குழுவினர் தலைமையன்
படியி னகத்துச் செறிபவர் துயரவை
சரம நிலைக்குட் புகமொழி படிவரு
சதுர னிணைப்பொற் படிமுடி யணிகுதும்
பரவு முலைக்குப் பணபணி யரவொடு
பகைகொ ளதற்குத் திசைதொறு மலைமனம்
ஒருமை படைத்துப் பொறிவழி யுறலற
வுலைவில் சுகத்துத் திறலொடு நிலவவே. (2)

என்னுமிரு செய்யுட்களைப் பாடினன். பிறகு அத்தனவான் அவர்களிற் சச்சரித்ரனை நோக்கி "வன்னத்தம் பிக்கு மழைமா னும்" என்பதை முதலடியின் முதலாக வைத்துக்கொண்டு அதில் மழை என்னுந் துணையுந் திரித்து ஒருகட்டளைக் கலித்துறைபாட வேண்டும்" என்றனர். அவன் அவ்வாறே,

கட்டளைக் கலித்துறை.

வன்னத்தம் பிக்கு மழைமானுஞ் சொர்க்கநன் மாகளங்கண்
சொன்னத்தம் பிக்கு மழைப்பூவா ரோதி சுடர்முடியை
முன்னத்தம் பிக்கு மழைநெஞ்சி னேடைந்த மூர்த்தியிதோ
என்னத்தம் பிக்கு மழைவா னுறக்காணி னென்னிதுவே.

என்னுஞ் செய்யுளைப்பாடினன். பிறகு அத்தனவான் சதாநந் தனைநோக்கி "வானேங்கு மாணிறத்தார்" என்பதை முதலடியின் முதலாக வைத்துக்கொண்டு மடக்காக வரும்படி தாவு கொச்சகப் பா ஒன்று பாடவேண்டும் என்றனர். அவன் அவ்வாறே,

தரவு கொச்சகம்.

வானேங்கு மாணிறத்தார் மலரோங்கு மாணிறத்தார்
தானேங்கு மம்பரத்தார் தனிப்பொன்னி னம்பரத்தார்
ஆனேங்கு மலையெடுத்தா ரமுதோங்கு மலையெடுத்தார்
தேனேங்கு மாற்றமுளார் சேர்ந்தோரை மாற்றமுளார்.

என்னுஞ் செய்யுளைப் பாடினன். பிறகு அத்தனவான் சச்சரித்ரனை நோக்கித் திருவேங்கடநாதன் மீது ஒரு அஷ்டநாக பந்தம்போட்டுத் தருதல் வேண்டுமென்று வேண்டினர். அவ்வாறே அவன்,

நேரிசை வெண்பா.

நாதாமா காயாசீ நாகாச லேசாபூ
மீதாமா வேதாபூ நாகானுங்—கோதாகா
நாமாசீர் மேயதாள் கானு நசைசீரிங்
காமேவா நாடுகிற் பார்.

என்னுஞ் செய்யுளைப்பாடினன். பிறகு அவர் சதாநந்தனைத் திருவரங்கநாதனுக்கு ஒரு பதுமபந்தம்போட்டு தரும்படி வேண்டினர். அவன் அவ்வாறே,

நேரிசை வெண்பா.

நாதவித கீதவித போதமத வாதவித
நாதவினை காடியென்று நான்பணிந்திங்—கோதவிண்
மேயவரும் பூதலமு மேவரங்க வென்றுதொழுந்
தூயவடி போற்றச் செய்வி.

என்னுஞ் செய்யுளைப்பாடினன். பிறகு அவர் சச்சரித்ரனை நாராயணனே என்பது ஈறாக வரும்படி ஒரு ரதபந்தம் போட்டுத் தரச்சொல்லினர். அவன்,

நேரிசைவெண்பா.

மாதவ போத தபோவனமார் மாமுனிவோர்
மேதகு நீதி விழைதரு—போத
முறவே யருளா யொளியா யிருடான்
மெறுநீ நாராயணனே.

என்னுஞ் செய்யுளைப்பாடினன். பிறகு அவர் சதாநந்தனை அதற்கேற்பச் சத்ரபந்தம் ஸ்ரோஷ்டகமாக வரும்படி போட்டுத் தரச்சொல்லினர். அவன்,

வஞ்சித்துறை.

* ஆளனை, கனகன கதனித
தனசர ரசனத
தனிலக கலனித
தனிதக னகனக

என்னுஞ் செய்யுளைப்பாடினன். அவர் இச்செய்யுளை நோக்கிச் சச்சரித்திரனைத் தா, நா, மா, நீ என்னும் நான்கு எழுத்தினால் ஒரு வஞ்சித்துறை பாடச்சொல்லினர். அவன் அவ்வாறே,

வஞ்சித்துறை.

* * தாதா நாதா
தாநா நாமா
மாநா தாதா
தாதா நாநீ

---

* இதன் பொருள், கனம் - சிறந்த, கனக - பீதாம்பத்தையுடையவனே, தனிதம் - ஓசையையுடைய, தனு—வில்லும், அ—பிரசித்தமாகிய, சரம்—பாணமுமாகிய இவற்றினுடைய, ரச-சாரத்தைப்புணர்ந்தவனே, நத்த—பாஞ்சசன்னியத்தை யுடையவனே, இல்தன் அக-மோக்ஷத்தினகத்தி லிருப்பவனே, கல அனித-பிறரால் அழிக்கவொண்ணாதவனாய் நித்தியனாயிருப்பவனே, தக-அவற்றிற்கேற்ப, நகு-(எங்குமாய்) விளங்கும், அநக-பரிசுத்தனே, ஆளனை-அடியேனை யாண்டருள், என்பது.

கனகம்-பொன்; அது கருவியாகு பெயராய்ப் பொன்னுடையை யுணர்த்தியது; பீதாம்பரம்-பொன்னுடை. (பீதம்-பொன்; அம்பரம்-ஆடை). நத்த என்பதினும், நகு என்பதினும் முதல் நகரம் இப்பந்தத்தைநோக்கி றன்னகரமாயிற்று, தன் இல் அக என்பதை இல் தன் அக எனமாற்றிப் பொருள்கொள்க. ஸ்ரீநாராயணபகவான் பரமபதத்திலே திருமாமணி மண்டபத்தினிடையிலே வீற்றிருப்பர் என்பர். ஆகையால் அது தோன்ற இல்தன் அக எனக்கூறப்பட்டது. ஆளனை என்பது செய்யுளிற் சோராது தனித்து வந்தமையின் இது கூன் எனப்படும்.

* * இதன்பொருள் தாதா-ஈகைக்குணமுள்ளவனே, நாதா-எல்லாவுயிர்களுக்கும் இறைவனே, தாநா-நாவைக்கொடு, நாமா-கீர்த்தியை யுடையவனே, மாநாதா-ஸ்ரீமகாலக்ஷ்மியின் நாயகனே, தாது ஆம்-பஞ்சபூதங்களின் வடிவாகவும், ஆம் நீ-ஆகின்ற நீ, தாநா-நாவைக்கொடு, என்பது.

என்னுஞ் செய்யுளைப்பாடினன். பிறகு அவர் சதாநந்தனைப் புதுவதாக இன்னும் ஏதேனும் ஒரு பந்தம் போட்டுத் தருதல் வேண்டும் என்றனர். அவன் அவ்வாறே ஏகநாகபந்தம் போடுகின்றேன், என்று,

வெண் செந்துறை.

சீரார் மணியே செந்திரு நாதா
ஏரார் மதியே யீந்தருணீதான்

என்னுஞ்செய்யுளைப் பாடினன். பிறகு அத்தனவான் அவர்களுடைய கல்வித் திறத்தினைக்கண்டு மிகவும் வியப்புற்று அவர்களை நோக்கி "ஐயன்மீர்! யான் உங்களை என்னருமைச்சுற்றத்தவர்களாக்கிக் கொள்ள விரும்புகின்றேன். ஆனால் எனக்கு ஒரே ஒரு மந்தப்புதல்வி யிருக்கின்றனள். அவளை உங்களில்யாருக்குக் கொடுப்பதென்று எனக்குத்தோன்றவில்லை. நீங்களிருவருமே எல்லாவிதத்திலும் ஒத்திருக்கின்றீர்கள். அன்றியும் நீங்கள் மனமொத்த துணைவர்களாகவும் இருக்கின்றீர்கள். இவ்விஷயத்தை நீங்களே நன்றாய் ஆலோசித்து என் வேண்டுகோளுக்கிணங்கி என்கவலையையொழித்து என்னை உங்களுடைய உறவினனாகச் செய்துகொள்வீர்களென்று மிகவும்வேண்டுகின்றேன்" என்றார். அதைக்கேட்டுச் சச்சரித்ரன் அவரை நோக்கி "ஐயா! தாங்கள் அது விஷயத்திற் சிறிதுங் கவலையுறவேண்டாம். நான் என் மனத்தை யொரு பொற்கொடிக்குக் கையுறையாகக் கொடுத்துவிட்டேன். இனி யான் பிறமாதர்களைக் கனவினும் அடைய விரும்பேன். அப்பணிமொழியின் பொருட்டாகவே யாங்கள் இவ்வளவு தூரம் வந்தோம்" என்று தங்கள் வரலாற்றினைக் கூறினன். உடனே அத்தனவான் பேரானந்த மடைந்து அவர்களை நோக்கி "எனது முன்னோர்செய்த தவப்பயனாக நீங்கள் எனக்குக் கிடைத்தீர்கள். அன்றியும்யான் கொண்ட கவலையையும் ஒழித்தீர்கள் குலநலத்தினாலும் எனக்கு நீங்கள் முற்றும் ஒத்திருக்கின்றீர்கள். இதனைக் காரிமாறப்பிரான் என் கவலையை யொழிக்க வெண்ணிச் செய்த கருணையெனவே கருதுகின்றேன். இன்றேல் எல்லாவகையினாலும் தகுதிவாய்ந்த உங்களை நான் காணப்பெறுவேனோ" என்று பல இன்மொழிகளைக்கூறி அவர்களை அங்கிருத்தி, அவர் அவ்வீட்டின் இரண்டாங்கட்டுக்குச்சென்றார். அவர் அவர்களோடு பேசிக்கொண்டிருந்

தது அவ்வீட்டின் முதற் சுட்டிலாகும். அது மூன்று கட்டுள்ளதொரு பெரியவீடு. அதற்கு மேல்மெத்தை உண்டு. அஃது இரண்டாங் கட்டுவரையிலும் அமைக்கப்பெற்றிருந்தது. பிறகு சிறிதுநேரஞ்சென்று சச்சரித்ரனை இரண்டாங்கட்டுக்கு வருப்படி அத்தனவான் அழைத்தனர். அவன் அவ்வாறே சென்றான். அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம சதாநந்தன் தான் உட்கார்ந்திருந்த அறைக்கு எதிரில் இருந்ததோர் அறையில் கண்டோர் மனதிற்புக்குக் குடிகொண்டு அகலாமல் இருக்கவல்ல விசித்திர சாமர்த்தியம் வாய்ந்த பாவையொன்று இருக்கக்கண்டான். கண்டவுடன் அவனதுமனத்தின் உரம் குன்றியது. சச்சரிதிரனுக்கு நாம் அவ்வளவு உறுதியோடு புத்தி புகட்டினோமே. இப்பொழுது அவன் நம்மைக் கண்டு கேட்டால் நாம் அவனுக்கு என் புகல்வது? என்று எண்ணி நாணினன். அவன் இன்னுஞ் சிறிதுநேரம் அங்குத்தானே இருந்து பிறகு வருவானாயின் நலமாம். அங்ஙனம் இன்றி அவன் இப்பொழுதே வந்துவிடுவானாயின் நம்மைக்கண்டவுடன் பரிகாசம் செய்யாமல் விடான். ஓ மனமே! நீ யேன் இங்ஙனம் அவசரப்படுகின்றாய்? நீ எந்தப் பொன்னம்பாவையைக்கண்டு அடையவிரும்பியிருக்கின்றனையோ அந்தப் பாவையைக் கடவுளருளாற் பெற்ற பெரியவர் நமக்குத் தாமேவலிந்து தருவதாக வாக்களித்திருக்கின்றனர். ஆதலால் நீயிங்ஙனல் அவசரப்படுதற்கும்,வருந்துதற்கும் நியாயமில்லை. ஆ! மன்மதா! நீ காலமல்லாத காலத்தில் வந்துஎன்னை வருத்துகின்றாய். உனக்கு இரவென்பதும், பகல்என்பதும் தெரியவில்லையோ? உனக்கு மூன்று உலகத்திலிருப்பவர்களையும்வெல்லத்தக்க வன்மையை அளித்த் பகவான் நன்மை, தீமைகளை பகுத்தறியும் அறிவை ஏன் கொடுக்காமற் போயினரோ? அங்ஙனங்கொடுத்திருந்தால் ஒப்பற்ற அழகுவாய்ந்த உனது அங்கத்தை அநியாயமாக இழந்துவிடாமல் இருப்பாயல்லவோ? அப்பா! உனக்கு அந்தத்தண்டனை வேண்டுவதுதான். உருவமில்லாமல் இருக்கையிலேயே இப்படி அனைவரையும் உன்னிஷ்டப்படி ஆட்டிப் படைக்கின்ற நீ உருவோடு கூடியிருப்பாயானல் இன்னும்எவ்வளவு துன்பங்களை விளைப்பாயோ! ஆ! ஆ!! உலகத்தில் என்போல்வார்செய்த புண்ணிய வசத்தினலேதான் போலும் உனக்கு இங்ஙனம் உருவற்றுப்போயிற்று. அதோ என்தோழன் வருகின்றனன். நீஇந்தச் சமயத்தில் என்னைப்பித்தனைப் பிதற்றும்படி செய்யாமல் சற்றுத் தயவுசெய்வாயாக" என்றான். அச்சமயத்தில் சச்சரித்ரன் வந்து

அருகில் உட்கார்ந்தான். அத்தனவானும் வந்து அருகில் உட்கார்ந்தனர். பிறகு அத்தனவான் சச்சரித்ரனை நோக்கி "ஐயா! இந்தக்கலியாணத்தை யான் இம்மதியிலேயே செய்து முடிக்க விரும்புகின்றேன்" என்றார் சச்சரித்ரன் "ஐயா! தாங்கள் கூறியது எனக்கும் மிக்க ஆநந்தத்தினை விளைக்கின்றது. விரைவில் ஜோசியரை அழைப்பித்து நாள் பார்க்கச் சொல்லுங்கள்" என்றான் அதைக் கேட்டுச் சதாநந்தன் "ஐயா! இப்பொழுது யாங்கள் எந்தக்காரியத்தினால் இவ்வளவு தூரம் வரும்படி நேர்ந்ததோ அந்தக்காரி முடியாதமுன் நான் இந்தக் கலியாணத்தைச் செய்து கொள்ளிலேன். என் அருமைத்தோழன் தான் அடைய விரும்பிய மாதர் நல்லாளை அடையாமல் வருந்தி நிற்ப யான் மாத்திரம் கலியாணஞ் செய்துகொண்டு ஆநந்தமுற்றிருத்தல் கூடியதொரு காரியமாகுமோ? அதற்கு என் மனஞ் சிறிதும் இடந்தராது. நான் என் அருமை நண்பனது விருப்பமானது நிறைவேறியபின்னரே தங்கள் சொல்லுக்கு இணங்குவேன். இதற்குமுன் நான் எவ்வளவும் அதற்குச் சம்மதியேன். இது சத்தியம்" என்றான். அதைக்கேட்ட சச்சரித்ரன் சதாநந்தனை நோக்கி "என்னை, சதாநந்தா! முன் பின் யோசியாமல் இப்படிச்சத்தியஞ்செய்துவிட்டனையே! எனது விருப்பம் முற்றுப் பெறுவது எங்ஙனங் கூடுமென்று நீ சிறிதும் யோசிக்கவில்லையே! நீ யாதுகாறும் நிகழ்ந்திருப்பனவற்றைச்சற்று நிதானித்துயோசியாக்குறையினால் இங்ஙனங் கூறி விட்டனை. உன்னைப் போன்ற புத்திமான்களுக்கு முன்பின் யோசியாமல் இங்ஙனம் அவசரப்பட்டு ஒன்றைச் சொல்லிவிடுதல் அழகாகுமா? ஆகா! இவ்வுத்தமர்தம் விருப்பம் விரைவின் முடியாத வகையாகச் செய்து விட்டனையே! இதற்கு நான் என் செய்வேன்! என் பொருட்டாக நீயும், உன்பொருட்டாக நானும் வருந்துதல் நியாயமேயாகும். நம்மையாருமறியாத இவ்வூரில் தாமாகவே நம்மைக்கண்டு அழைத்து நமக்குப் பலநலங்களைச் செய்யவிரும்பும் இவர் நம்பொருட்டாக வருந்துதல் நியாயமாகுமா" என்றான். சதாநந்தன் அதற்குப் பதிலொன்றுங் கூறாமல் மௌனமாயிருந்தனன். அப்போது அத்தனவான் அவர்களை நோக்கி,

"அழிவினவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதா நட்பு"

எனவும்

"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை"

எனவும்

பொய்யா மொழியார் திருவாய்மலர்ந்தருளிய நட்பிலக்கணங்கள்யாவும் உங்களிடத்திலேயே அமைந்திருக்கின்றன. உங்கள்நட்பு வளர்பிறை போல நாளுளும் வளர்ந்து நுனியிலிருந்து கரும்பைத்தின்னுதல் போல இருக்க இருக்க இன்பம் பெருகிக்கொண்டே வருவதாகும். எனது முன்னோர்களும் யானும் செய்த பெருந்தவத்தாலேயே உங்களையான் காணப் பெற்றேன். உங்களுக்கு என்னிடம் உண்டான அன்புநாளுளும் வளர்ந்து என்விழைவை நிறைவேறச் செய்வித்தற் குரியதாகும்படி புருஷோத்தமனும், தேவதேவனும், திருமகள் நாதனுமாகிய ஆதிதேவப் பெருமாள் திருவருள் புரிதல் வேண்டுமென்று மிகவும் யான் பிரார்த்திக்கின்றேன். இதையன்றி அறிவிற்சிறந்தவர்களாகிய உங்களுக்குயான் என்ன சொல்லப் போகின்றேன்" என்றார்.

சச்சரித்ரன் அதைக்கேட்டு மிகவுமனங்களிந்து, "ஐய! யான் என்நண்பன் கூறியபடி அப்பொற்கொடியை மணக்கும்படி கடவுளருளால் நேருமாயின் தங்களுக்குத் தெரிவியாமல் மணஞ்செய்து கொள்கிலேன். அன்றியும் அங்ஙனம்எனக்கு மணமுடிந்த பின்னர் இப்பொழுது சதாநந்தன் தான் கூறியபடி தங்கள் செல்வியாரை மணந்துகொள்ளானாயின் என்காதலியைக் கண்ணினுலும் பாரேன். இதுசத்தியம்" என்றான்.

சதாநந்தன் "நண்ப! இதற்குநீயேன் சத்தியம் செய்யவேண்டும். நம்மை இவ்வளவு விருப்புடன் உபசரித்து நமக்குப் பலநலத்தினையே செய்யநினைக்கும் இவரது சொல்லை நான் அவமதிப்பேனோ? அத்தகைய நண்பனையோ நீ யடைந்திருக்கின்றாய்? நீ அவரிடம் என்நண்பன் தான் சொன்ன சொல்லினின்றுந் தவிரான் என்பதொன்றே சொல்லியிருக்கலாமே. ஆயினுமாக; இனிநாம்தாமதித்தலாகாது'' என்றான்.

உடனே சச்சரித்ரன். அந்தனவானை நோக்கி "ஐய! யாங்கள் எங்கள் க்ஷேமலாபங்களைத் தங்களுக்குத் தெரிவித்தற் பொருட்டுத தங்கள் மேல்விலாசம் எங்களுக்கு வேண்டியதா யிருக்கின்ற

து" என்றான். அத்தனவான் "திருக்குருகைப் பெருமாள் பிள்ளை, திருக்குருகூர்; என்று எழுதினால் போதும்; எனக்கு எப்படியும் வந்து சேர்ந்துவிடும்" என்றார்.

சச்சரித்ரன் "தங்கள் செல்வியார்தம் திருப்பெயரையும் அறிய விரும்புகின்றேன்" என்றான்.

தனவான் "எனது செல்வியின் பெயர் கிருஷ்ணவேணி" என்றார். பிறகு அவ்விருவரும் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டனர்.

அங்ஙனம் அவர்கள் சென்றபின்னர், கிருஷ்ணவேணிக்கு மிகவும் முகம் வாடிப்போயிற்று. ஏன் கிருஷ்ணவேணியும் சதாநந்தனை அப்பொழுது பார்த்திருந்தாள். தனக்குத்தன் தந்தை அந்நல்லிளங் குமரனைக்காட்டி "இந்நற்குணச் செல்வர்க்கே உன்னைக் கன்னிகாதானஞ் செய்துகொடுக்க விரும்புகின்றேன்" என்றுகூறினர். அதைக்கேட்ட பொழுது அப்பொன்னனங்கொடி அளவில்லாத ஆநந்தமடைந்தனள். சதாநந்தனுக்குந் தன்னைக் கண்டவுடன் தன்னிடம் காதல் உண்டானதையும் அப்பொழுது அவனிடம் உண்டான குறிப்பால் உணர்ந்தனள். சதாநந்தனும், கிருஷ்ணவேணியும் சச்சரித்ரனையும், சாரசநேத்ரியையும்போல ஒருவரோடொருவர் வாய்திறந்து பேசிக்கொண்டிலர்; ஆயினும், அவர்கள் தங்கள் கண்களினால் ஒருவரோடொருவர் உறவாடி மனங்கலந்து விட்டனர்.

முன்னேகாட்டிய

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்னுங்குறள் ஈண்டு மிகவும் பொருத்த முடையதாகின்றது. அப்பொன்னனங்கொடி பகலெல்லாம் அல்லியாகவும் இரவெல்லாந் தாமரையாகவும் ஆயினள். அப்பைந்தொடிக்கு, முத்துமாலையும், கலவைச்சாந்தும், பனிநீரும், மலர்க்கொத்தும், மலர்ப்பாயலும், கடலும், கங்குலுமாகிய இவைகள் யாவும் பகைகளாயின. அவள் மனம் மிகவுஞ் சோர்ந்தது. தேகத்திற் பசலை நிற

முற்றது. ஒருவருடனுங் கூடாமல் தனித்திருக்கவே விரும்பினள். அவள் கண்களில் நீர் பெருகி வடிந்தது. உணவையும் உறக்கத்தையும் ஒழித்தாள். ஊசலாடுதல், பந்தாடுதல், அம்மனை ஆடுதல் முதலியவற்றையுந் துறந்தாள். யாழ்வாசித்தலையும், கிளியொடு பேசுதலையு மறந்தாள். நிதமுங் குளித்தலையும் ஒழித்தாள். அழுக்குடைகளையே தரித்தாள். அடிக்கடி பெருமூச்செறிந்தாள். சில சமயங்களில் தனிநின்று சிறிது மணலை எதிரிற்கொட்டி அதனைப் பரப்பி என்னெஞ்சினை வஞ்சித்துக்கொண்டு சென்ற கள்வர், விரைந்து வந்து என்னுயிரினுக்குறுதிபயத்தல் உளதாயின் நீகூடிடு கூடலே! என்று கண்களை மூடிக்கொண்டு அம்மணலிற் சுட்டுவிரலால் வட்டமாகக் கோடு கிழித்து அக்கோடு தொடங்கிய இடத்திற் சரியாகவந்து கூடியதாஎன்று பார்ப்பாள். அது தொடங்கிய இடத்தில் வந்து கூடி இருந்தும் அவளது கண்கள் அதில் நீரைச்சொரிதலால் அது கூடிய இடங் கலைந்துவிடும். அதனால் அது கூடாததுபோற் காணவே தனக்குப் பகையாயுள்ள * கடற்பகையினின்றும்நீரானது **மலைப்பகையின்மேற்பாயச் செய்வாள். இங்ஙனம் சதாநந்தனது பிரிவினால் கிருஷ்ணவேணி ஆற்றாது வருந்தாநின்றனள். அவளது தோழியரும், நற்றாயாகிய குமுதவல்லியாரும், செவிலித்தாயுமாகிய அனைவரும் அவளுக்குப் பலவகையான உபசாரங்களைப் புரிந்தார்கள். அவர்கள் செய்த உபசாரங்கள் யாவும் அவளுக்குத் துயரத்தைப் போக்குதற்கு ஏதுக்களாகாமல் அவளது துயரத்தை மேன்மேலும் வளர்க்கவே ஏதுக்களாயின. இங்ஙனம் தமது அருமைப் புதல்வி வருந்துதலைக்கண்டு திருக்குருகைப் பெருமாள் பிள்ளை மிகவு மனம் வருந்தி அப்பதியில் எழுந்தருளியுள்ள ஆதிநாதப் பெருமாளின் திருவடிகளை வணங்கி "ஓ தேவதேவா! பக்தவச்சலா! தீனதயாளா! உன்னையே நம்பி உன்னையன்றி மற்றோர் களைகண் இல்லாமல் இருக்கும் இவ்வடியனது மனக்குறையை விரைந்து முற்றுறச் செய்ய வல்லார் உன்னையன்றி யாவருளர். ஐயனே! ஆழியங்கையனே! முகில் நிறமெய்யனே! உனக்கென ஒன்றினும் பற்றில்லாததுய்யனே! நீவிரைந்து எனது துயரைப்போக்கி ஆட்கொண்டருளவேண்டும்" என்று பலவகையாகத் துதியாநின்றனர். அங்ஙனந் துதியாநிற்கையிற் சரியான சகுனமாகப் பல்லி சொல்லிற்று. அப்பொழுது

---

* கடற்பகை—கண்

** மலைப்பகை—தனம்




சத்திர பந்தம்.



ஏகநாகபந்தம்.



அஷ்ட நாக பந்தம்.



அவ்வழியாகச்சென்ற இருவரில் ஒருவர் ஏதோ கேட்டதற்கு மற்றொருவர் "நீங்கள் சிறிதும் ஐய முறவேண்டாம். தாங்கள் கருதுங் காரியம் விரைவிற் கைகூடும்" என்றார். அவற்றைக் கேட்ட திருக்குருகைப் பெருமாள் பிள்ளை மனங்களித்து வீட்டுக்குவந்து தான் ஆதிநாதப் பெருமாளைச் சேவிக்கையில் உண்டான நற்சகுனங்களைத் தமது மனைவியாருக்கும், புத்திரியாகிய கிருஷ்ணவேணிக்குங் கூறினர். அதனால் அனைவர்க்கு மகிழ்ச்சி யுண்டாயது. அதனால் கிருஷ்ண வேணிக்குத் தான் விரும்பிய நாயகனை விரைவில் அடைதல் கூடும் என்னும் நிச்சயமுண்டாயிற்றேனும், அவளது வருத்தமாறியதன்று. மிகவும் பசியுற்றார்க்கு அப்பசி உண்டால் தீருவதன்றி "நீர் விரைவில் உண்பீர்" என்று சொல்வதனால் தீர்ந்து விடுமோ! அவளுக்கு நாளுக்குநாள் துன்பம்வளர்ந்து கொண்டே யிருந்தது.

நிற்க, இங்குக் கஜகர்ண மணிகண்டர்களைக் கவனிப்போம். அவர்கள் முன்கூறியபடி நடந்து சென்று ஓர் ஊரையடைந்தனர். அடைந்து கையிற் பணமில்லாமல் திகைத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கொரு வணிகர்வந்தனர். அவர் கஜகர்ணனது தந்தையாரின் உயிர்த்துணைவர். அவருக்குக் கஜகர்ணனிடத்தில் மிகவும் அன்புண்டு. அதற்குக்காரணம் அவன் அவரது நண்பரதுபுத்திரனா யிருத்தலேயாகும். அவனது நண்பன் என்னும் எண்ணத்தால் மணிகண்டனிடத்திலும் அவருக்கு அன்புண்டு. அவ்விருவரும் அவரைக்கண்டதும் அவரிடம் விரைந்து சென்றார்கள். அவர் அவர்களைக்கண்டு மிகவும் அன்போடு உபசரித்து, "மைந்தர்காள் நீங்கள் இவ்வளவு தூரம் வருவதற்குக் காரணமென்ன" என்று கேட்டார். கஜகர்ணன், "ஐய! நாங்கள் எல்லா வூர்களையுஞ் சுற்றிப்பார்த்துவரப் புறப்பட்டோம்; புறப்படுகையில் நான் ஓராயிரம் ரூபாயும், எனது நண்பன் ஐந்நூறு ரூபாயுமாகக் கொண்டு வந்தோம், நாங்கள்வழியில் ஒருசத்திரத்தில் இறங்கி இருந்தபோது ஆயிரத்து முந்நூறு ரூபாய் வரையினும் யாரோ திருடிக்கொண்டார்கள். மற்றரூபாய்கள் எங்களாற் செலவிடப்பட்டன. அதனால் யாங்கள் என்ன செய்யலாம் என்று தவித்துக்கொ

ண்டிருக்கின்றோம்; இந்தச்சமயத்தில் நீங்கள் எதிர்ப்பட்டதெங்களது பெரும்புண்ணியமே" என்றான். அவ்வியாபாரி "ஐய! நீ அஞ்சாதே. உனக்குவேண்டும் பணம்யான் தருகின்றேன்" என்றார். கஜகர்ணன் "ஐய! எனக்கு இரண்டாயிரம் ரூபாய் வேண்டும். நான் ஊருக்கு வந்ததும் அந்த இரண்டாயிரம் ரூபாய்களையுந் தங்களுக்குச்செலுத்தி விடுகின்றேன்" என்றான். அப்படியே அவர் அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய்களைக் கொடுத்து அவனைநோக்கி "ஐய! இந்த ரூபாய்களைப் பயனில்லாத விஷயங்களிற் செலவிடாமல் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு இன்றியமையாத விஷயங்களில் மாத்திரம் செலவிட்டு உங்களிஷ்டப்படி எல்லாவூர்களையுஞ் 'சுற்றிப்பார்த்துக்கொண்டு விரைவாக ஊருக்குப்போய்ச் சேருங்கள்" என்று சொல்லி அவர்களை விடைகொடுத்தனுப்பினர். உடனே அவ்விருவரும் புறப்பட்டு மற்றோரூரை அடைந்தார்கள். அவ்வூரில் புஷ்பங்கட்டும் பண்டாரமாது ஒருத்தியிருந்தனள். அவள் புருஷனை யிழந்தவள். மிகவும் அழகுடையவள். சற்றேறக்குறைய நாற்பது வயதுடையவள். ஆனால் அவள் அவ்வளவு வயது சென்றவளாகக் காணப்படாள். ஏனெனின் அவளுக்குப் புத்திரப்பேறே இல்லை அன்றியும் அவள் இருபது வயதிலேயே கணவனை யிழந்துவிட்டவள். மறுவிவாகஞ்செய்து கொள்ளுதல் என்னுங் கொள்கையிருந்திருப்பின் அவள் உடனே வேறோராடவனை மணந்துகொண்டிருப்பாள். அஃதில்லாமையினால் அவள் தன் காலத்தை மிக்க துயரத்துக் கிடமானதாகவே கழித்துக்கொண்டு வந்தனள். அவள் சற்றேறக்குறைய முப்பத்தைந்து முப்பத்தாறு வயதுவரையினும் வீட்டிலிருந்தே புஷ்பமாலைகளைக்கட்டி விற்றுவந்தாள். முப்பத்தாறுக்குமேல் தானும் கடை வீதிக்குச் சென்று புஷ்பமாலைகளை விற்க வேண்டும் என்றெண்ணினாள். அதனால் அதுமுதல் தன்னிடம் புஷ்பமாலைகள் வாங்குதற்கு வருவாரிடம் "இனியானும கடைவீதிக்கு வந்து வியாபாரஞ் செய்ய நினைக்கின்றேன். யானோ முக்காற் கிழவியாய் விட்டேன். இனி நான் கடைவீதிக்கு வரத்தடை சொல்வார் யார்?" என்று சொல்வாள், அதைக்கேட்பவர்களும், "ஆகா அப்படியே செய்யலாம். உன்னினுஞ் சிறுவயதுள்ள பெண்களெல்லாம் கடை வீதிக்கு வந்து வியாபாரஞ் செய்ய வில்லையா? அப்படியிருக்க நீ மாத்திரம் வரக்கூடாது என்பதென்ன? அப்படி ஒருவருஞ் சொல்லமாட்டார்கள்" என்பார்கள். அவள் இவ்வாறு இரண்டுமூன்றுமாதங்கள் சொல்லிக்

கொண்டேயிருந்து மெல்ல மெல்லக் கடைவீதிக்குச் செல்லத் தொடங்கினாள். அவள் கடைவீதிக்குச் சென்று வியாபாரஞ் செய்யத் தொடங்கியபின் மற்றவர்களுக்கு வியாபாரம் குறைந்து போய் விட்டது. அவள் மிகவும் இனிமையாகப் பேசுவாள். யாவரும் அவளது இனியசொல்லைக் கேட்கவே அவளிடம் வந்து வியாபாரஞ்செய்வார்கள். புஷ்பம்வேண்டிய அவசியம் இல்லாதவர்களும் ஏதோ ஒருகாரணத்தை உண்டாக்கிக் கொண்டு அவளிடம் புஷ்பம்வாங்கச் செல்வார்கள். அவள் உள்ள அந்த ஊருக்குச் சென்று கஜகர்ண மணிகண்டர்கள் ஒருசத்திரத்தில் இறங்கிஇருந்தார்கள். ஒருநாள் மாலை நாலரைமணிக்குக் கஜகர்ணனும் மணிகண்டனும் புஷ்பக்கடைக்குச் சென்றார்கள். அங்கு அப்பொழுது அப்பண்டார மாதையன்றி மற்றொருவரும் வந்திலர். அவளும் அப்பொழுதே வந்து புஷ்பக்குடலையைக் கீழேவைத்தாள். கஜகர்ணன் அவளைக் கண்டதும் மணிகண்டனைப் பார்த்து “நண்ப! இம்மாது தன்னுடைய இளமைப் பருவத்தில் அழகினால் சாரசநேத்ரிக்குச் சிறிதும் பின்னிட்டவளாயிருந்திராள். ஆகா! இவள் முகத்தை நமறுவின்றி விளங்கும் பூரணசந்திரன் என்னலாம். அந்தோ! இத்தகைய அழகு வாய்ந்த இப்பெண்மணி இவ்வாறு தனிமையாக வந்து வியாபாரஞ் செய்யவேண்டிய காரணம் யாதோ தெரியவில்லையே! இவளுடைய புருஷன் இவளை விட்டு எங்கேனும் சென்று விட்டானோ? இவளைமனைவியாக அடைந்த புருஷன் இவளை விட்டுச் செல்லுவானோ? இக்காரணத்தை நாம் மெதுவாக விசாரித்தல் வேண்டும்; வருக” என்று அவனை அழைத்துக் கொண்டு அவள் அருகிற் சென்று “மாது நல்லாய்! இன்று நாங்கள் காளி கோயிலுக்குச் செல்லவேண்டும். இன்று அந்த அம்மனை நன்றாய்ப் புஷ்பத்தினால் அலங்கரிக்க விரும்புகின்றோம். நீ எங்கள் விருப்பத்தினை நிறைவேற்றுவிப்பாய் என்று நம்புகின்றோம்” என்றான். அதைக்கேட்ட அம்மங்கை “ஐயா! அதற்கென்றுதானே நானிங்கு வருந்திருக்கின்றேன். தங்களுக்கு எவ்வளவு புஷ்பம் வேண்டுமென்றாலும் தருகின்றேன்” என்று குடலையின்மேலிருந்த துணியையும் இலைகளையும் எடுத்துவிட்டு அதிலிருந்த புஷ்பங்களையெல்லாம்எடுத்துகாட்டினள். கஜகர்ணன் “மாதரசே! இப்புஷ்பங்கள் மிகச் சிறந்தனவாக இருக்கின்றன. இம்மாலைகளைக் கட்டினார் யாவர்” என்றனள். அம்மாது “ஐயா! இவற்றையெல்லாங்கட்டினவள் யானே” என்றாள். கஜகர்ணன் “ஆகா உனது சாமர்த்

தியமே சாமர்த்தியம். இத்தகைய சாமர்த்தியம் வாய்ந்த உன்னைத்தன் மனைவியாக அடையப்பெற்ற புருஷன் மிகவும் சிறந்த புண்ணியஞ்செய்தவனே. இங்கு இன்று உன்கணவன் உன்னுடன் வந்திலனோ? உன்னைத் தனியாகக் கடைவீதிக்கு அனுப்பிய உன்றன் புருஷனுடைய நெஞ்சம் கல்நெஞ்சமாகவே யிருக்கவேண்டும்" என்றான் அதைக்கேட்டு அம்மாது சிறிதே கண்களில் நீர்ததும்ப "ஐயா! எனது நாயகர் எனது இளமைப்பருவத்திலேயே என்னை விட்டுப் பரலோக மடைந்து விட்டனர். அவர் இருந்தால் எனக்கேன் இந்தத் தலைவிதி வருகின்றது"! என்றாள். அதைக்கேட்ட கஜகர்ணன் "ஆகா! இத்தகைய அழகினையும்நற்குணங்களையும் உனக்குக் கொடுத்த அந்தப் பிரம்மன் அதற்கேற்பநல்லசுகங்களையுங் கொடாமற் போனானே. அந்தோ அவனுக்குப் புத்திதானில்லையோ. இவ்வளவு கொடுந்துன்பத்தை யுனக்குத் தந்த அந்தப்பிரம்மனை யான்காண்பேனாகில் "அற்றதலை போக அறாததலை நான்கினையும்பற்றித் திருகிப் பறித்திடுவேன். அந்தோ உன்னைப்பார்க்கப் பார்க்க என்மனமிகக் கரைகின்றது" என்று பலவாறு அவளைப்புகழ்ந்து பேசினான். அதனால் அவளது மனம் அவனிடத்தில் அன்புகொள்வதாயிற்று. இருக்க இருக்க அவள் சிறிதே நாணமான குறியோடு பேசினாள். கஜகர்ணன் அவளது முகக் குறிப்பினாலும் பேச்சுகளின்குறிப்பினாலும் அவள் தன்வசமாய் விட்டாள் என்று உணர்ந்துகொண்டு அவளை "மங்கைநல்லாய் இப்புஷ்பங்களை இக்குடலையோடு கொண்டுபோக நினைக்கின்றேன். அன்றியும் இவ்வூரின் வழக்கம் யாதோ எங்களுக்குத் தெரியாது. எப்படி விசாரிப்பதென்று விழித்துக்கொண்டிருக்கின்றோம்"என்றான். அம்மாது "ஐயா தங்களுடன் வந்து தங்களுக்கு வேண்டிய உதவி புரிவேன், ஆனால் அக்காளியம்மன் கோயில் சிறிது தூரத்தில் இருக்கின்றதே, நாம் எப்படி நடப்போம் என்று பார்க்கின்றேன்" என்றாள்.

கஜகர்ணன் "மாது நல்லாய்! நாங்கள் மாத்திரஞ் செல்வதாயிருந்தாலும் வண்டிவைத்துக் கொள்ளாமல் செல்லமாட்டோமே. அப்படி யிருக்க நீ வந்தால் உன்னை நடத்தி யிட்டுக்கொண்டு போவோமா" என்று கூறி உடனே ஒரு வண்டியைப்பேசி அதில் அப்புஷ்பக் குடலையையும் அம்மாதையும் முதலில் ஏற்றி அவளுக்குப்பின் தாலும் ஏறிக்கொண்டுதனக்குப்பின் மணிகண்டனையும்ஏற்

திக்கொண்டான். வண்டி விரைவிரைவாகக் குறித்த இடத்தை யடைந்தது. உடனே மூவரும் வண்டியினின் றிறங்கிப் புஷ்பக்குடலையை இறக்கிக் கொண்டு வண்டிக்காரனுக்கு வண்டிச் சத்தங் கொடுத்தனுப்பி விட்டுக் கோவிலுக்குச் சென்றார்கள்.

அப்போது அம்மாது நல்லாள் அங்கிருந்த பூசாரியை வருவித்து அக்காளியம்மனுக்கு மிக்க அலங்காரஞ்செய்வித்து ஆராதனைகளும் மிகவுஞ் சிறப்பாகச் செய்வித்தாள். யாவுமுடிந்தபின்னர் அக்கோயிலின் அருகிலிருந்ததொரு சத்திரத்தில் அம்மூவரும் அன்றிரவு தங்கினார்கள்.

கஜகர்ணன் அன்றிரவை அம்மங்கையோடுகழித்தனன். மறுநாள் மூவரும்அவ்வூரைவிட்டு வேறொரு ஊருக்குச்சென்றார்கள். அவ்வூரில் தங்கியிருக்கையில் ஒரு நாள் கஜகர்ணன் தன் நண்பனோடு அவ்வூரின் ஒரு வீதியின் வழியாகச் சென்றான் அத்தெருவே அவ்வூரிலுள்ள தெருக்கள் எல்லாவற்றிலும் சிறந்தது. சிறந்த பணக்காரர்கள் வீடுகளெல்லாம் அத்தெருவிலே தான் கட்டப்பட்டிருந்தன. அவ்வீடுகளெல்லாம் இரண்டடுக்கு மூன்றடுக்குமாகக் கட்டப்பட்ட மெத்தைவீடுகளாகவே இருந்தன. அவற்றின் நடுவில் அவற்றிற் கெல்லாம் நடுநாயகம் போல ஒருவீடு சிறந்து விளங்கியது. அவ்வீட்டின் தலைவனே அவ்வூரில்லுள்ளார் யாரினுஞ் சிறந்த தனவான். அவனது மனைவி அப்பொழுது மெத்தையின் மேல் உலாவிக்கொண்டிருந்தனள். அவள் சற்றேறக்குறைய இருபது வயதுடையவள். அழகினுற் சாரச நேத்திரியையொத்தவள். என்றே சொல்லுதல் வேண்டும். கஜகர்ணன் அவளைக் கண்டனன். கண்டு அப்பனிமொழியினிட மிக்க காதலுடையவனானான். உடனேதன் நண்பனை அழைத்துக்கொண்டு தாங்கள் தங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்று யாருடனும் பேசாமல் படுத்துக் கொண்டனன். அதைக்கண்ட பண்டாரமாது "ஐயா! நீர் இங்ஙனம் முகவாட்டத்தோடு ஒருவருடனும் பேசாதிருத்தற்குக் காரணயாது? என்றாள். "அன்புடைமாதே! எனக்கு இப்பொழுதுண்டான மனக்கவலையைப் பிறரிடஞ் சொல்வதனாற் பயனில்லை; ஆதலால் நீ கேட்க வேண்டாம்" என்றான். அம்மாது "ஐய! என்னால் முடியாத காரியமாயினும், நீர் அதை என்னிடங் கூறுவதனாற் குற்றமொன்றும் உண்டாகாதன்றோ" என்றாள்.

கஜகர்ணன் "மாதே! அதைப்பற்றி யெல்லாஞ் சொல்ல ஒண்ணாது. நீயதை எப்படியேனும் முடித்துத் தருவதாகச் சத்தியஞ்செய்தாற் சொல்கின்றேன்" என்றான்.

அம்மாது அப்படியே சத்தியஞ் செய்து கொடுத்தனள். உடனே கஜகர்ணன் தன்விருப்பினை வெளியிட்டனன். அதைக்கேட்டதும் அவள் மனம் மிகவும் கலங்கியது. அவள் கஜகர்ணனை நோக்கி இக் காரியமானது மிகவுங் கொடியதாகிய காரியமா யிருப்பதோடு நீர் என்னைக் கைவிடுதற்கு ஏதுவானதாகவும் இருக்கின்றது. இப்படிச் செய்வீரென்று யான் முன்னமே யறிந்திருந்தால் உம்முடன் வந்திரேனே. ஆகா! எனது அறியாமையினால் மோசம் போனனே. நம்பினவர்களை நட்டாற்றில் விட்டு விடுவது போலிருக்கின்றதே உம்முடைய செய்தி. நன்று, நன்று" என்று கண்ணீர் பெருக்கினள். அதைக்கேட்ட கஜகர்ணன் அவளைநோக்கி "மாதுநல்லாய்! யான் எத்தகைய பெண்களை அடையினும் உன்னை யென்னுயிர் உள்ள அளவும் கைவிடுவேனல்லேன். இது முக்காலுஞ்சத்தியமாகும் நீசிறிதும் அதில்ஐயமுறாதே" என்றான். அதைக்கேட்டு அம்மாது "ஐய! அங்ஙனமாயினும் அப்பொற்கொடியை நீர் அடையும்படி செய்வது மிகவும் அருமையான காரியமா யிருக்கின்றதே. அதை நான் எப்படிச் செய்து முடிப்பது?" என்றாள்.

கஜகர்ணன்—"பெண்மணி! நீ நினைத்தால் அஃதியாதொரு தடையுமின்றி முடியும்" என்றான்.

அம்மாது "ஐய! என்னாற்கூடியவரையினு முயன்றுபார்க்கின்றேன்" என அவன் மகிழ்வெய்தினன். பிறகு அம்மங்கை சிறந்த புஷ்பங்கள் கொண்டு வந்து யாவரும் வியக்கத்தக்க அழகிய மாலைகளாகக் கட்டிக்கொண்டு அவ்விளம் பெண்ணிருந்த வீட்டுக்குச் சென்று அப்புஷ்பமாலையைக் காட்டினள்.

அவ்வீட்டின் யஜமானனாகிய வணிகன் காதலி அம்மாலைகளைக் கண்டு மிகவும் வியப்பெய்தி "இதைப்போன்ற மாலைகளைநான் இதுவரையினுங் கண்டதில்லை. இவற்றுட்சில கோத்த மாலைகளாகவும் சில தொடுத்த மாலைகளாகவும் இருக்கின்றன" என்று

கூறி அம்மாலை கொண்டு வந்த பண்டாரமாதை நோக்கி "அம்மா! இம்மாலைகளைக் கட்டினவர்கள் யார்?" என, அம்மாது "அம்மா! இவற்றைக் கட்டினவள் யானே" என்றாள். வணிகமாது அம்மா! நாள்தோறும் எனக்கு இவ்வித மாலைகளைக் கட்டிக் கொண்டுவந்து கொடுக்கக் கூடுமோ? எனப் பண்டாரமாது "அம்ம யான் அப்படியே கொண்டுவந்து தருகின்றேன். இவ்வித மாலைகளை மற்றவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதினும் அருமை தெரிந்தவர்களாகிய தங்களுக்குக் கொடுப்பதில் எனக்கு மிகவும் விருப்பமுண்டு" என்றாள்.

வணிகன் மனைவி அம்மா! "இம்மாலைகளுக்கு என்ன கொடுக்க வேண்டும்" எனப் பண்டாரமாது அதன் விலையைத் தங்களுக்கு நான் சொல்ல வேண்டுமோ? தாங்களென்ன புதுமையாக இப்பொழுதே வாங்குகின்றவர்களோ? அப்படிப் பட்டவர்களுக் கன்றோ நான் விலைசொல்லுதல் வேண்டும். எனக்கு இப்பொழுது பணம் வேண்டுவதில்லை. பணம் வேண்டும்போது தெரிவிக்கின்றேன். அப்பொழுது தாங்கள் கொடுங்கள். தாங்கள் சொல்லியபடியே நாள்தோறும் இவ்வித மாலைகளைக் கொண்டுவந்து தங்களுக்குக் கொடுக்கின்றேன்" என்று அவ்வணிக மாதினிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பிவந்து அதுமுதல் அப்பண்டாரமாது பற்பல விதமான மாலைகளைக் கட்டிக்கொடுத்து வந்தனள். அம்மாலைகளால் அம்மாது அப்பண்டாரமாதினிடம் பேரன்புடையவளானாள். சிற்சில சமயங்களில் அப்பண்டாரமாது அவ்வணிகமாதின் வீட்டிலேயே நெடுநேரமிருந்து இனிமையாகப் பேசிக்கொண்டிருப்பாள். அவ்வணிகமாது தங்கள்மனையின் பின்புறமாயுள்ள தோட்டத்திற்கு அவளை அழைத்துச் செல்வாள். இவ்வாறு அப்பொற்கொடி தன்னிடமிகவும் நேசமுடையவளான பின் பண்டாரமாது ஒரு நாள் மாலை சற்றேறக்குறைய நாலுமணிக்கு அழகியமாலைகளோடு ஒருசிறந்த பூச்செண்டையுங் கட்டிக்கொண்டு போய்முதலில் மாலைகளைக்கொடுத்தனள். அவள் அம்மாலைகள் மற்ற தினங்களிற் கொண்டுவந்த மாலைகள் எல்லாவற்றினு மிகச் சிறந்தனவாக இருக்கக்கண்டு வணிகமாது பேரானந்தமடைந்து அவளோடுவெகு நேரம்பேசிக்கொண்டு இருந்தனள். பிறகு அவளைத்தோட்டத்திற்கு அழைத்துச் சென்று வெகுநேரம் அவளுடன் பேசிக்கொண்டி

ருந்தனள். அப்போது அப்பண்டாரமது "அம்மா! நானொன்று தங்களுக்குக்கொடுக்க மறந்தேன்" என்று மடியிலிருந்தபூச்செண்டையெடுத்துக் கொடுத்தாள். அப்பூச்செண்டு மிக்க அழகானதாகவும் சிறந்த மணமுள்ளதாகவு மிருந்தது. அம்மணத்தை அவ்வணிகமாது பலமுறையு மோந்தனள். அதனை மோக்க மோக்க அவளுக்கு ஒருவிதமயக்கந் தோன்றி அதிகரித்துக்கொண்டே வந்து சிறிதுநேரத்துக் கெல்லாம் கீழேவிழுந்து விட்டனள். அம்மங்கை நல்லாள் அங்ஙனம் விழுகையில் சூரியனது வெளிச்சமுற்றுமறைந்து இருள் அரும்பியிருந்தது. உடனே இரண்டுஆடவர் அங்குவந்து அம்மடமயிலை எடுத்து ஒருபெட்டியில் வைத்தனர். பிறகு நான்கு மனிதர் அங்குவந்து அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு அத்தோட்டத்தின் பின்புறமாக ஒருவர் கண்ணிலும் அகப்படாமற் சென்றனர். பிறகு அப்பெட்டியை யெடுத்துக்கொண்டு சென்ற ஆட்கள் கஜகர்ணன் முதலியயோர் இறங்கி இருந்த வீட்டிற் கொண்டுபோயிறக்கினர். உடனே அப்பெட்டியை உள்ளே கொண்டு சென்று பத்திரப்படுத்தினர். இதற்குள் அப்பண்டாரமாது அங்குவந்துசேர்ந்து கஜகர்ணனைவிளித்து "ஐய! இனிநாம் இங்கிருத்தல்கூடாது" என்றாள். அவனும் அது தகுதியாம் என்று மணிகண்டனை ஒருவண்டி அழைத்து வரும்படி அனுப்பினன். அவனும் அவ்வாறே சென்று மிகவும் விரைந்துசெல்லவல்ல ஒருவண்டியை அழைத்து வந்தான். உடனே அம்மூவரும் அப்பெட்டியை வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். அவ்வண்டியும் விரைந்து செல்வதாயிற்று. வண்டிசிறிதுதூரஞ் செல்லுதற்குள் சிலசேவகர்கள் வந்து வண்டியைப் பற்றிக்கொண்டு அவ்வூர் நியாயத்தலத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்குப் பண்டாரமாதினால் வஞ்சிக்கப்பட்ட வணிகமாதின் நாயகனும் மற்றும் பலரும் வந்து திரண்டிருந்தனர். பற்றிக்கொண்டு போனசேவகர் அம்மூவரையும் அவர் வைத்திருந்த பெட்டியையும் இறக்கி நியாயத்தலத்திற்குள் கொண்டுபோனார்கள். அப்பெட்டியின் நான்குபுறமுங் காற்றுவெளியேபோய் வருதற்கு ஏற்றபடி துவாரங்கள் இருந்தன. உடனே அப்பெட்டி திறக்கப்பட்டது. அதில் அவ்வணிகப்பாவை செத்தவள்போற் கிடக்கக் கண்டார்கள். அதைக்கண்டு அம்மாது நல்லாளின் கணவன்

முதலாயினோர் ஓவென்றலறத்தொடங்கினர். அப்போது அங்கிருந்த ஆங்கில வைத்தியர் ஒருவர் அம்மாது நல்லாளின் அருகிற்சென்று பார்த்து அங்கு வருந்துகிற்போரனைவரையுந் தேற்றி அப்பெட்டியுடன் அப்பொன்னங்கொடியை ஓரறைக்குட் கொண்டு சென்று அம்மாதின் மூர்ச்சை தெளியும்படி செய்தனர்.

உடனே அம்மங்கை நல்லாள் உறங்கி எழுவாள்போல் எழுந்து உட்கார்ந்தனள். பிறகு அங்கிருந்த சேவகர்தலைவர் அம்மாதராசியின் வாக்குமூலத்தை வாங்கினர். அதன பிறகு கஜகர்ணன் முதலிய மூவரையுந் தனித்தனியே விசாரிக்கத் தப்பித்துக்கொள்ள வேறொருவகையும் இல்லாமையின் அவர்கள் உண்மைசொல்லிவிட்டனர். உடனே அம்மூவரையுஞ் சிறையில் அடைக்கும்படி அச்சேவகர் தலைவர் உத்திரவிடச் சேவகர் அம்மூவரையும் சிறையில் அடைத்துவிட்டனர். வணிகன் தன் அரும்பெறற் காதலியை அழைத்துச் சென்றனன். அவ்வழக்கு அவ்வூரை அடுத்திருந்ததொரு சிறு நியாய தலத்தில் விசாரிக்கப்பட்டுச் சென்னையிலுள்ள உயர்தர நியாய தலத்திற்கு மாற்றப்பட்டது.

அத்தியாயம்.

ஈண்டுச் சந்திரபிரகாசம் பிள்ளையின் நிலையைச் சிறிது கவனிப்போம். அவர் தம் ஒரே புத்திரியாகிய சாரசநேத்ரியைப் பிரிந்த பின்னர் அவருக்கு இவ்வுலகில் ஒருபொருளும் இன்பம் பயக்கும் வன்மையுடையதான தில்லை. அவர் உயிர் அப்புத்திரியே என்னலாம். அவர் இவ்வுலக வாழ்க்கை முழுவதையும் அச்செல்வியின் உருவமாகவே கொண்டிருந்தனர். அவருக்கு அப்புத்திரியைப் பிரிந்தபின் உணவும் ஏற்பதில்லை. நாளுக்குநாள் தேகமெலிந்துகொண்டே வந்தது. அவர் மணிபுரத்திற்குச் சென்றிலர். அந்தக் கிராமத்தின் காரியங்களெல்லாம் அவரது மைத்துனராகிய கனகசபைப் பிள்ளையினாற் பார்க்கப்பட்டு வந்தது. சந்திரபிரகாசம் பிள்ளையின் மனைவியாராகிய அமிர்தவல்லியாருக்கு அப்புத்திரியின் பிரிவினால் அவ்வளவு துயரமுற்றதின்றுமேனும் தமதன்புக் கினியராகிய நாயகரது வருத்தத்தைக் காணக்காண அவ்வம்மைக்கு ஆற்றொணாத் துயரம் பெருகுவதாயிற்று. சந்திரபிரகாசம் பிள்ளையின் தங்

கையாகிய குணமாலிகையாரும் அவரது கேவலாகிய வைத்திய நாதம் பிள்ளையும், சில பணியாளருந் தவிர மற்றையோரனைவரும் தத்தம் மூருக்குச்சென்றனர்.

நிற்க. சாரசநேத்ரியைத் தேடிச்சென்ற வைத்தியரைப்பற்றி சண்டுக் கவனிப்போம். அவர் பல இடங்களிலுஞ் சென்று தேடிச் சாரசநேத்ரியைக் காணுமல் முடிவில் திரிசிரபுரத்துக்கு அருகி லுள்ளதொரு காட்டினிடைச் சென்று அங்கிருந்ததொரு சிறு குன்றில் ஒரு பெருந்தவசியைப்போல் வேடம் பூண்டு வீற்றிருந்த னர். இரண்டொரு தினங்களில் வயிற்றுக் கடுப்பு, தலைவலி முதலி ய பிணிகளாற் பீடிக்கப்படுவோர் சிலர் அங்கு வந்து அவரை வ ணங்கி அவர் கொடுத்த மருந்தை யுண்டு அதனால் அப்பிணிகள் நீ ங்கப்பெற்று அக்கம் பக்கங்களிலுள்ள ஊர்களில் உள்ளவர்களி டம் அவரைப்பற்றிப் புகழ்ந்து கூறினர். அதனால் அது முதல் அ வ்வூர்களில் உள்ளவர்களிற் பலர் அங்குவந்து அவரை வணங்கிச் செல்வாராயினர். அவரை அவ்வூர்களில் அறிந்து கொள்ளாத வர் ஒருவருமிலர். மிகவுஞ் சிறுவயதுடையாரும் அவரை யறிந்த வராயினர். அவருக்கு நாளடைவிற் சிறுமலைச் சாமியார் என்னும் பெயருண்டாயிற்று. அவர்யாவருடன் பேசிக்கொண் டிருப்பினும் சச்சரித்ர சதாநந்தர்களையும், சாரசநேத்ரியையும் எப்பொழுது நாம் காண்போம் என்னும் எண்ணமே கொண்டிருந்தனர்; ஆத லின் தாம் எந்தக்காரியத்தைச் செய்துகொண்டிருப்பினும் தோற் றக் கேடில்லாத தொன்மாலின் திருவடிகளிலேயே மனதைச் செ லுத்திக்கொண்டிருக்கும் பரமயோகிய ரெனவே காணப்பட்டனர்.

அவர் இங்ஙனமாகச் சச்சரித்ரனும் சதாநந்தனும் திருக் குருகையினின்று புறப்பட்டுப் பல ஊர்களையுங் கடந்து வைத்தி யர் வீற்றிருக்குங் காட்டின் அருகில் வந்தனர். அவர்கள் அங்கு வருகையில் சற்றேறக்குறையப் பகல் பன்னிரண்டு மணியிருக்கும். அங்குவருகையிற் சச்சரித்ரனுக்கு மிகவு நீர் வேட்கையாயிற்று. அதனால் அவன், "நண்ப! எனக்கு மிக்க நீர்வேட்கை யுண்டாயிரு க்கின்றது. நீ விரைந்துசென்று எங்கேனும் நீர் கொண்டுவருக" என்றனுப்பினன். அவன் அவ்வாறே தாங்கள் வைத்திருந்த ஒரு று பாத்திரத்தை எடுத்துக்கொண்டு நீர்கொண்டு வரப்போனுன்.

சச்சரித்ரன் அவன் சென்றபின் அங்கிருந்த ஒரு மரநிழலிற் படுத்துக்கொண்டனன். அவன் படுத்த சிறிது நேரத்திற்குள் ஒரு பைம்பொற் பணவரவு வந்து அவனதுகையிற்றீண்டிற்று. உடனே சச்சரித்ரன் எழுந்து "ஆ! என்னுருயிர் நண்ப! என்னைப் புல்லிய அரவொன்றுபல்லுறத் தீண்டிற்று. அந்தோ! அந்தோ!! எனக்குத் தலைசுற்றுகிறது, ஆ! உன்னை என்று காண்பேன், காண்பேன்" "என்று கீழே விழுந்துவிட்டான். அச்சமயம் அங்கு மாடுகளை மேய்த்துக்கொண்டு அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சிறுவன் ஒருவன் சதானந்தனை அழைக்க ஓடினன். அவனும் அச்சிறுவனெதிராகவந்து கொண்டிருந்தான். அவனிடம் அச்சிறுவன் விரைந்தோடி நிகழ்ந்தனவற்றைக்கூறினன். அவன் அதைக்கேட்ட உடன் வந்து சச்சரித்ரனைக் கண்டு,

ஆ! வென்ற வுயிரின் பேறே! யையகோ
கெட்டேன் கெட்டேன்
போவது நீயோ நானே பொருந்திப்
புவியில் வாழ்வேன்
தேவர்தந் தருவி னீழற் சேரநா
னின்னே டாவேன்
ஓவலில் லாத வன்பி னுறையுளா
மென்ற னண்பா!

என்றரற்றத் தொடங்கினன். அதைக்கண்ட அம்மாட்டுக்காரச் சிறுவன் சதானந்தனை நோக்கி "ஐய! தாங்கள் இங்ஙனம் வருந்திக்கொண்டு காலம் போக்காமல் விரைந்து என்னுடன் வருவீர்களாயின் யான் ஒருபெரியவரிடம் தங்களை அழைத்துக்கொண்டுபோய் விடுகின்றேன். அவர் வருவாராயின் இவரைத் தடையின்றிப் பிழைப்பிப்பார்" என்றான். அதைக்கேட்ட சதானந்தன் உடனே அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு "என்னரும்பெறல் நண்ப! நீயே இப்பொழுது என்னுயிரைக் கொடுக்கவந்த தெய்வம்போல் நின்றாய். நீ இப்பொழுது என் கண்ணுக்கு ஆயர்பாடியில் தன்னை

த்த இளஞ்சிறுவரோடு சென்று ஆநிரைகளை மேய்த்து அச்சிறுவர்கள் அஞ்சும்படி அங்கொருபொய்கையில் வசித்துவந்தகாளிங்கன் என்னுஞ் சர்ப்பத்தின் அகந்தையை ஒழித்தருளிய அக்கோவிளங்குமரனையே போல்கின்றாய். விரைந்து வருக. நீ கூறிய பெரியவரிடம் போவோம்" என்று அச்சிறுவனை அழைத்துச்சென்றான். அக்காலத்து அவ்விருவருஞ்சென்ற வேகமானது இந்திரஜித்து விட்ட பிரம்மாஸ்திரத்தினால் ஸ்ரீராமர் முதலியோர் மயங்கி விழுந்தபோது அவர்களது மயக்கத்தைப் போக்குதற்குச் சஞ்சீவி மலையைக் கொண்டுவரவெண்ணி வாயுபுத்திரராகிய ஸ்ரீ ஆஞ்சநேயர் சென்ற வேகத்தையே ஒத்திருந்தது. அவ்வாறு அவர்கள் சென்றபின்னர் அங்குப் பொன்னனங் கொம்பன்னார் இருவர்வந்தனர். அவ்விருவருளொருத்தி அங்குப் பேச்சுமூச்சின்றி விழுந்துகிடக்குஞ் சச்சரித்ரனைக் கண்டு "ஆ! வனஜாக்ஷி! விரைந்தோடிவா; என் தவம் பலித்தது. என் கஷ்டங்கள் ஒழிந்தன. என்னுருயிர் நாதர் இதோ படுத்துறங்குகின்றனர். விரைந்துவா. வந்துபார்'" என்று அதிக ஆவல் பெருக அழைத்தனள். அவளும் விரைந்தோடி வந்து சச்சரித்ரனை கண்டு "அம்மா! இவரேன இப்படித் தனியாகப் படுத்துறங்குகின்றனரோ தெரியவில்லையே. இவரது நண்பர் இவரை விட்டு எங்குப்போயிருப்பார்?" என்றாள்.

மற்றொருத்தி "ஆம் வனஜாக்ஷி! என்ன மூச்சுங்கூடக்காணோமே! ஆ! தெய்வமே! மோசம்போனேன் மோசம் போனேன். எண்ணிச்சென்ற பொருள் எதிருற்றது என்றெண்ணினேனே! என் துன்பம் பெரிது. தெய்வமும் என்னை வஞ்சித்ததே! ஆ! நாதா! நிர்ப்பாக்கியமுடையவளாகிய என் பொருட்டு எந்தெந்தத் துன்பங்களை அடைந்தீரோ! கொடிய ஊழ்வினையுடையளாகிய என்பொருட்டுப் பல துன்பங்களுக்குள்ளாகிய தங்களுக்கு வருத்தங்களைப் போக்கிப் பல உபசாரங்களைச் செய்து யான் இந்தப் பெண்பிறவியினைப் பெற்றதனாலாகிய பயனைப் பெறும் புண்ணிய முடையவ

ளாகாதபடி என்னை விட்டுச் சென்றீர்களே! ஆ! என் ஜன்ம மிகக் கொடிது. என்ஜன்மத்தைச் சுடவேண்டும். இஃதென்ன என் ஜன்மத்தைச்சுடவேண்டுமென்கின்றேனே. தங்களைப் பிரிந்தும் என்னுயிரையினி வைத்திருப்பேனோ? அங்ஙனம் வைத்திருப்பின் என்னைப்போலும் துயரங்களுக்கெல்லாம் இருப்பிடமாகக் கூடிய மங்கை மற்றொருத்தி யிருப்பாளோ? என்னைத் தம்முயிருனு மேன்மையாகப்பேணிவந்த அருமைமிக்க தந்தையாரையும் பறவைகள் தம்பார்ப்புகளைச்சிறகினுள் வைத்துப்பாதுகாப்பதுபோல் பாதுகாத்த அன்னையாரையும் என்றும்பிரிந்தறியாத யான் பிரியத் துணிந்ததும், கொடியனான கஜகர்ணனாலும் இடையின் மற்றும் பலகொடியராலும் உண்டான பொறுக்கமுடியாத துன்பங்களை யெல்லாம் பொறுத்துக்கொண் டிருந்ததும், கூரிய பலமுட்களும் கற்களு முள்ள காட்டில் வருந்திநடந்ததும், அத்துன்பங்களால்உயிரை விடுதல் நலமென்றெண்ணியும் ஒருகாட்டிற் கொடும் புலியொன்றைக் கண்டபோதுஉயிருக்கஞ்சிநடுங்கியதும் ஆகியஇவைகள்எல்லாம் உம்மையடையவேண்டுமென்னும் விருப்பினாலேயேயல்லவா? அத்தகைய உம்மைப்பிரிந்த பின் நான் இவ்வுலகில் இருந்து அனுபவிக்கற்குரிய இன்பம்யாதுளது? ஆ! என்னரிய உயிரே! நீயேன்வீணாக இவ்வுடலிலிருந்து வருந்துகின்றாய்? "கிட்டாதாயின் வெட்டனமற" என்ற நமதருமை மூதாட்டியின் வாக்கினை யறிந்திருந்தும் நீயேனோஇன்னும் இவ்வீண்எண்ணங்களைக் கொள்கின்றாய் இவ்வுலகத்தில் இனி இவ்வுடலினோடு நாம் அவரை அடைதல் முடியாது. சீக்கிரம் இதை விட்டுப் புறப்பட்டு, நாம் பொன்னுலகத்துக்குச் சென்று கற்பகத்தரு நிழலிலே அவரைத் தடையின்றி அடைந்து இன்புறலாம். அதில் யாதொரு தடையுமிராது. நமது நாயகர் மிகவுங் கருணையுடையவராகையால் அங்கு அழகிற் சிறந்த அரம்பையர் பலர் இருப்பினும் அவரிடம் நீங்காத காதலினாற் பின்தொடர்ந்து செல்லு நம்மை நீக்கார்.

விரைவிற் புறப்படு, புறப்படு. ஆ! நாதா! என்னுயிரும் இசைந்து விட்டது. நானும் இதோ வந்துவிட்டேன், வந்து விட்டேன்" என்றெழுந்து தனது தாமரைப்புஷ்பங்கள் போன்ற இணைக்கைகளைக் கண்ணினும், மார்பிலும் ஏற்றிக்கொண்டு அசையாத பெருங்கற்களும் அசைந்து கரைந்து போகும்படி அரற்றிக்கீழே மூர்ச்சித்து வீழ்ந்தனள். மறுபடி அழுதுகொண்டு "அந்தோ! யான்பட்ட கஷ்டங்களெல்லாம் கமரிடை யுகுத்த பாலாயொழிந்தனவே; என் கஷ்டத்தின் அளவான பயனையும் யான் பெற்றிலேனே! "முயற்சிமெய்வருத்தக் கூலி தரும்" என்ற திருவாக்கும் பொய்த்துப் போயிற்றே! என்னளவிற்கு மாத்திரம் அந்நூல் கூறியது மாறுபட்டது போலும். "அம்பாள் பாக்கியம் சம்பாவிளைந்தது பாவிபாக்கியம் பதராய்விளைந்தது" என்றபடி என்னூழ்ப்பாக்கியத்தினாலேயே இப்பெருங்கொடுமைகள் நேர்ந்தன. என்கண்ணும், கையும் பொல்லாதவை "புண்ணிய முன்னோர் மண்ணையெடுத்தாலும் பொன்னாகும், அஃதில்லாதார் பொன்னையெடுத்தாலு மண்ணாகும்" என்னும் பழமொழி மாத்திரம் எனக்கு மெய்யாய்ப்பலித்தது" என்று பலபல பன்னிப் பன்னித் தன்னூழ்வினையை யுன்னி யுன்னி என்றுதனவும் எண்ணி எண்ணி மண்ணில்விழுந்தனள். பிறகுசிறிது கிலதெளிந்தெழுந்தனள். மீண்டும் வீழ்ந்தனள். பின்னும் எழுந்தனள். சாரசநேத்ரியினிடஞ்சென்றனள். அவள் மூக்கிற்கலையை வைத்துப்பார்த்து மூச்சு வருதலைக்கண்டு சிறிதே தைரியங்கொண்டு அவளருகில் உட்கார்ந்து தன் முன்றானையினால் விசிறி உபசாரம் புரிந்துகொண்டிருந்தனள்.

இவர்கள் இங்ஙனமாக, அக்காட்டினுள்ள மஹரிஷிச்சாமியாரை அழைத்து வரச்சென்ற சுதாகரனும் மாடுமேய்க்குஞ் சிறுவனும் அம்மலையை அணுகி அதிவிரைந்து அப்பெரியவரைக் கண்டனர். கண்டவுடன் சுதாகரன் அவர் காலிலே விழுந்து சக்கரதரனுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைக் கூறிக்கண்ணீர் பெருக்கினன். அவர் அதைக் கேட்டவுடன் திடுக்கிட்டெழுந்து அங்கிருந்த சிறந்த தொரு மூ

லிகையைஎடுத்துக்கொண்டு அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு
அஞ்சனாதேவியின் திருமைந்தர் சஞ்சீவிமலையை யெடுத்துக்கொ
ண்டுதிரும்பிவந்த வேகத்தை யொப்ப விரைந்து வந்து சேர்ந்தனர்.
அங்கொருபுறம் சாரசநேத்ரி விழுந்திருத்தலையும், மற்றொரு புறம்
சச்சரித்ரன் உயிரற்ற உடலினனாய்க் கிடத்தலையுங் கண்டனர்.
அளவற்ற துயரங்கொண்டனர். ஆயினும் இப்பொழுது நமது மன
தைத் தளரவிடாமல் நாம் இனிச் செய்யவேண்டிய முயற்சிகளைச்
செய்வதே நலந்தருவதாகுமெனக் கண்டனர். அவர்களைக்கண்டவு
டன் வனஜாக்ஷி எழுந்துவந்து அப்பெரியவரின் காலில்விழுந்து அ
றற்றினள். அவர் அவளுக்குப்பல சமாதான மொழிகளைக் கூறித்
தேற்றித் தாங்கொண்டு வந்த மூலிகையை ஒரு சிறுகொம்பில்
வைத்துக்கட்டி அதனை நெருப்பிற் கொளுத்திப் புகையை
உண்டாக்கிச் சச்சரித்ரன் முகத்தை ஒரு துணியாற்
மூடி அச்சிறுகோலை அதற்குட் செலுத்தி அவன் மூக்கில் அப்
புகைபுகும்படி பிடித்தனர். சிறிது நேரத்திற்கெல்லாஞ் சச்ச
ரித்ரனுக்குத் தும்மலும் இருமலும் வந்தன. பிறகு அப்பெரி
யவர் அத்துணியையும் அக்கோலையும் எடுத்துவிட்டு அம்மூலிகையி
ற்சிறிதளவுவாயில்விட்டனர். அதுசென்ற சிறிதுநேரத்திற்கெல்லா
ஞ் சச்சரித்ரன் எழுந்து உட்கார்ந்து கண்ணைத் திறந்து பார்த்தன
ன். அங்ஙனந் திறந்துபார்க்கையில் தன்னைப்பெற்றதந்தையினும்ப
ல்லாயிர மடங்கு தன்னை அருமையாய்ப் பேணிவந்த வைத்தியரெ
திரிலிருக்கக்கண்டு எழுந்திருக்கச் சக்தியில்லாமையினால் அப்படி
யே குனிந்து அவர்தம் இரண்டு திருப்பாதங்களையும் பற்றிக்கொ
ண்டு தன்கண்களின் நீரினால் அப்பாதங்கள் இரண்டையுங் கழுவி
னான். உடனே அவர் அவனை யெடுத்து மார்புடன் அணைத்து அ
வனது கண்ணீரைத் துடைத்தனர். அச்சமயத்தில் சாரசநேத்ரியும்
மூர்ச்சை தெளிந்தெழுந்து தமதருமைத் தந்தையையொப்பத்தன
க்கு இதத்தைச் செய்பவராகிய வைத்தியர் எதிரில் வீற்றிருத்தலை
யும், அவருக்கருகில் சச்சரித்ரன் எழுந்து உட்கார்ந்திருத்தலையும்
அவ்விருவருக்கும் அருகில் சதானந்தன் நிற்றலையுங்கண்டு இ

வென்னமாயமோ! அன்றிக்கனவோ! உண்மைதானோ என்றெ ண்ணித் திகைத்துப் பார்த்தனள். மற்றும் பலமுறையும் க ண்களைப்பிசைந்து கொண்டு பார்த்தனள். வைத்தியர் அவளது க ருத்தையுணர்ந்து ஒரு சிறு குழவியை யெடுப்பதுபோல் எடுத்து மார்புடன் அணைத்து முத்தமிட்டு "என்னருமைச் செல்வி! இ தோ நினது காதலன். இனி உங்களுக்கு யாதொரு துன்பமும்நே ரிடாது. நீங்கள் சுகமாய் வாழ்வீர்கள்" என்று ஆசீர்வதித்து அவர் கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு தாமிருந்த மலைக்குச் செ ன்றனர். அவர் தம்மிருப்பிடத்துக்குச் சென்றவுடன் வைத்தியர் அன்று அவர்களுக்கு அவ்வரிய உதவியைப் புரிந்த அச்சிறுவனைத் தம்முடன் இருத்திக்கொண்டு அவனுக்குப் பல உபசாரங்களைப்பு ரிந்தனர் மற்றையோரும் அச்சிறுவனை மிகவுங் கொண்டாடி வா ழ்த்தினர்.

அன்றையதினம் அந்த இடத்திற்றானே தங்கி யிருந்தனர் மறுநாட் காலையில் இருவர் வயோதிகர் அங்கு வந்தார்கள். அவர்க ளில் ஒருவர் பெண்பாலார்; மற்றொருவர் ஆண்பாலார். அவ்விருவ ரையுங்கண்ட வைத்தியர் அவர்களை அழைத்து உபசரித்தற்காக அவர்களின் அருகிற்சென்றனர். அவர் அங்ஙனஞ் சென்று அவர் களைப் பார்த்துப் பிரமித்து நின்றனர். அவர்களும் அவரை உற்று நோக்கினார்கள். அவர்கள் கண்களினின்றும் நீர் பெருகியது. வைத்தியர் அவர்களில் ஆண்பாலரா மவரைக் கட்டிக்கொண் டு கண்ணீர் பெருக்கினர்; அன்றையதினம் அவர்களைக் கண்டது அ வருக்கு முன்னையதினம் சுச்சரித்ரன் முதலியவர்களைக் கண்ட விய ப்பினும் நூறுமடங்கு அதிகமான வியப்பையுண்டாக்கிற்று. பிறகு அவர்களையும் தமது இருப்பிடத்தில் இருக்கச்செய்து உபசரித் துச் சச்சரித்ரனையு மற்றோரையும் அழைத்து அவர்களிற் சச்சரித் ரனை நோக்கிக் குழந்தாய்! இவர்கள் யார் தெரிகிறதா!" என்ற னர். அவன் "அவர்களை உற்றுநோக்கி அவர்கள் இன்னாரென்றறிந்து சொல்லற்கரிய வியப்பெய்தி அவர்கள் காலில் வீழ்ந்து வாய்குழறி குழறி ஏதோசொல்லிக்கொண்டு புரண்டான். அப்பொழுது சதா னந்தனும் அவர்கள் பாதங்களில் வீழ்ந்து கண்ணீர்பெருக்கிநின்றான். அவர்கள் அவ்விருவரையும் தழுவிக்கொண்டு அவர்களை யெழுந்தி ருக்கச்செய்தார்கள். சாரசநேத்ரியும், வனஜாக்ஷியும் அவர்கள்யாரா

யிருக்கலாமென்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். வைத்தியர் அவர்களுள் ஆடவராமுதியவரைப்பார்த்து "ஐய! தங்களைநாங்கள் மறுபடியுங் காண்போம் என்னும் ஆசையையே முற்றும் இழந்து விட்டிருந்தோம் எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தங்கள் பகைவனாகிய முத்துக் கருப்பண்ணன் தங்களிருவரையும் அழகர் சந்நிதிக்குச் செல்லும் வழியிற் கண்டு கொன்று விட்டதாகவும் சேவகர் அவனைப் பிடித்துச் சிறையில் அடைக்க அவன் இறந்து விட்டதாகவுமெழுதி, அடியில் "மதுரை ராமசந்திரம்பிள்ளை" எனக் கைச்சாத்து இடப்பட்டிருந்தது. நமது அருமைச் சிநேகராகிய அவரது கைச்சாத்தைக் காணவேயாங்கள் அனைவருமே முற்று நம்பி விட்டோம். பிறகு நாங்கள் நடத்தவேண்டிய காரியங்களை நடத்தி விட்டோம்" என்றனர். அதைக்கேட்டு அவர்களில் ஆடவராமுதியவர் வைத்தியனை நோக்கி "ஐய! நாங்கள் சச்சரித்திரனைத் தங்கவிடம் விட்டு விட்டுப் புறப்பட்டுப் பல தலங்களையுஞ் சேவித்துக் கொண்டு பிறகு திருமாலிருஞ் சோலைமலைக்கு அழகரைச் சேவிக்கச் செல்கையில் எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில்,

"எனதருமை நண்பர், தேவநாதப் பெருமாள் பிள்ளை அவர்கள் சமுகத்துக்கு,

இன்று தங்களுக்கு உயிரை வருத்துங் கொடுங் கூற்றின் செய்கையினும் மிகத் துன்பத்தை விளைக்குந் துயரச் செய்தியைத் தெரிவித்தற்குரிய தீவினையுடையவனானேன். எந்தச் செய்தியைத் தங்களுக்குத் தெரிவிக்க என் மனம் அஞ்சுகின்றதோ அந்தக் கொடுஞ் செய்தியினால் உண்டான துன்பமே எனது உடலை ஈர்த்தற்குரியவாளா யிருக்கின்றது; அதனோடு அச்செய்தியைக் கேட்கின் தாங்கள் எவ்விதத் துன்பத்தை எய்துவீர்களோ என்பதை நினைக்க நினைக்க உண்டாகும் துன்பம் என் னுயிரை யீர்த்தற்குரிய வாளியேயா யிருக்கின்றது. அந்தோ! எழுதத் தொடங்கினால் கை நடுங்குகின்றது. சதானந்தனது ஆருயிர்த் துணைவனும் புத்திரப்

பெற்ற என்மனத்தை அதனால் துயருறாதபடி சந்தோஷத்தினால் நிறைவித்துக்கொண்டு வந்தவனும், தங்கள் அருமைத்திருக்குமாரனுமாகிய சச்சரித்திரன் நம்மனைவரையும் வஞ்சித்துப் பரமபுருஷனாகிய ஸ்ரீதானந்த திருவடி நீழலைச் சார்ந்து விட்டனன்" என்றுமொழிதி,

இங்ஙனம்,
தங்கள் நண்பன்,
வைத்தியன்,
சௌந்தரராஜன்,

என்றுரைக்கப்பட்டிருந்தது. அதைக்கண்டயாம் தங்களைப்போலவே அதைத் தாங்கள் எழுதிய கடிதமெனவே நம்பி "இனி இவ்வுலகில் நாமடைய வேண்டியதென்ன இருக்கின்றது" என்று எண்ணி அதனால் எய்திய துன்பத்தோடு காடுகளிலும், மலைகளிலுந் திரிந்து வந்தோம். எங்களுக்கு எங்கள் உயிர்போன்ற தங்களையும், இவனையும், இவனது ஆருயிர் நண்பனாகிய சதானந்தனையும் மீண்டுங் கண்டு தழுவிக் களித்தற்குரிய புண்ணியமிருக்கின்றபடியினாலேதான் எங்கள் உயிர் உடலைவிட்டு நீங்காமல் இருந்தன. இன்றேல், தங்களுக்குவந்தகடிதத்தில் எழுதிய விஷயம்பொய்யென்று தாங்கள் உணர்தற்குரிய காரணமும் நேர்பட்டிராது" என்று கூறி மறுபடியும் சச்சரித்திரனையும், சதானந்தனையும் தழுவியணைத்து வாழ்த்தினர்.

பிறகு வைத்தியர் அவரைப் பல சமாதான மொழிகளைக் கூறித்தேற்றிச் சாரசநேத்ரியையும், வனஜாக்ஷியையும் திரும்பிநோக்கினர். அவர்கள் அங்கு நடந்த சம்பாஷணையைக் கேட்டு வஞ்சகநெஞ்சனது சதிசெயலின் அதிசயத்தை எண்ணி எண்ணி வியப்புற்றுப் பொற்பாவைகளென அசைவற்றிருந்தனர்.

வைத்தியர் அதையறிந்து சாரசநேத்ரியை நோக்கிக் "குழந்தாய்! உலகத்தில் வஞ்சநெஞ்சமுடையார் செய்யும் தீமைகள் இவ்வளவல்லவோ? அந்தோ! அவை கணக்கிலடங்குவன வல்ல. தூய மனத்தையுடையார்க்கு அவைகள் யாவும் வியப்பாகவே தோன்றும். அக்கொடியவர்களுக்கு அவைகளோ மிகவுஞ் சாதாரணமான

காரியங்களாயிருக்கும்." அவற்றை நினையற்க, குழந்தாய்! இதுவரையினும் நடந்த சம்பாஷணைகளால் இவர்கள் இன்னாரென்பதை நீயுணர்ந்து கொண்டிருப்பாய். இவர்கள் உத்தமகுணங்களின் திரண்ட வடிவமே தங்கள் வடிவமாகப் பெற்று வந்தவர்கள். இவர் உனது காதலனது தந்தையாராவர். இவரது திருப்பெயர் தேவநாதப் பெருமாள் பிள்ளை என்பது. இவர் அவனது தாயார். இவரது திருப்பெயர் வேதவல்லியம்மாள் என்பது. இன்று உங்களையெல்லாந் தெய்வச்செயலாய்க் காணப்பெற்று எனக்குண்டான வியப்பை என்னென்றுரைப்பேன் குழந்தாய்! வனஜாக்ஷி! நீ யுன்தோழியின் பொருட்டு அளவில்லாத துன்பங்களை யடைந்திருக்கின்றாய் என்று நான் அறிகின்றேன். உனதுத்தோழி இதுகாறும் உயிர்தரித்திருந்து வந்து சேர்ந்ததற்கு உனது புத்தியின் வன்மையே காரணமான்று என நான் உறுதியாக நம்புகின்றேன். உனக்குச் சகலமங்களும் உண்டாகுவனவாக." என்று ஆசீர்வதித்து அனைவரையும் அழைத்துக்கொண்டு மாயவரம் வந்து சேர்ந்தனர்.

பிறகு சச்சரித்ரன் திருக்குருகையிலிருக்குந் திருக்குருகைப் பெருமாள் பிள்ளைக்குத் தங்கள் க்ஷேம சமாசாரங்களைப் பற்றி அடியில் வருமாறு ஒரு கடிதம் எழுதினன்.

கனந்தங்கிய ஐயா திருக்குருகைப்பெருமாள் பிள்ளை யவர்கள் திவ்விய சமுகத்திற்கு, க்ஷேமம், க்ஷேமந்தெரிவிக்கக்கோருகின்றேன்.

தங்கள் ஆசீர்வாதத்தினாலும் ஆதிநாதப் பெருமாள் அருணோக்கினாலும் எனதன்புக்குரிய மைத்துனியை யாங்கள் காணப்பெற்றோம். அதனோடுமற்றோரரிய விசேஷமும் நிகழ்ந்தது. அஃதென்னெனின் யான் இறந்தவர்களாக எண்ணியிருந்த எனது பெற்றோரையும் இன்று காணப் பெற்றோம். தந்தையினும் அன்புடனெங்களைப் பேணி வந்த எங்கள் ஐயாவையுங் காணப் பெற்றோம். யாங்களெல்லோரும் இப்பொழுது மாயவரத்திலிருக்கின்றோம். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் மணிபுரத்திற்குச் செல்வோம். சென்றவுடன் தங்களுக்கு மறுபடியுமொரு கடிதம் எழுதுகின்றேன். இக்கடிதங் கண்டவுடன் தயவுசெய்து க்ஷேமத்தையும்

என் நண்பனுறன ஆருயிரேயன்ன கிருஷ்ணவேணி யம்மாளது க்ஷேமத்தையும், மற்றும் உள்ளவர்களது க்ஷேமத்தையும் பற்றித் தெரிவிக்கக் கோருகின்றேன்.

இங்ஙனந் தங்கள்,

அன்புக்குரியனுகிய,

சச்சரித்ரன்.

திருக்குருகைப் பெருமாள் பிள்ளை அக்கடிதத்தைக் கண்டு மிகவும் ஆநந்தமடைந்து அதைக் கிருஷ்ணவேணி முதலியவர்களுக்குங் காட்டினர். அதைக் கண்டு அவர்கள் அனைவரு மகிழ்வெய்தினர். பிறகு அவர் சச்சரித்ரனையும், சதாநந்தனையும் ஆசீர்வதித்து ஒரு செய்யுள் எழுத வேண்டுமென்று எண்ணினர். ஆனுல் அவருக்கு ஒரு யோசனை வந்துவிட்டது. அதாவது "நாம் எழுதுஞ் செய்யுள் அவர்கள் மதிக்கத் தக்கனவாகுமா" என்பதே.

அப்பொழுது மதுரையிலிருந்து ஏதோ ஒரு காரியமாக அவ்வூருக்கு வந்திருந்த மதுரைப் பிள்ளை அவரைக்காண வந்தனர். அவரை அத்திருக் குருகைப் பெருமாள் பிள்ளை ஒருநாற்காலியிட்டு உட்காரவைத்து உபசரித்தனர். மதுரைப் பிள்ளை "ஐயா! தாங்கள் எதையோ மிகவும் கருத்துடன் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றீர்கள். நான் வந்து அதைக்கெடுத்து விட்டேன்" என்றுர்.

திருக்குருகைப் பெருமாள் பிள்ளை. அதைக்கேட்டுத் தமது கருத்தை அவருக்குத் தெரிவித்தனர். அதைக் கேட்டு அவர் "ஐயா! என்னேடு ஒரு மகா வித்துவான் வந்திருக்கின்றனர். அவரை யெல்லோரு மிகவுங் கொண்டாடுகின்றுர்கள். அவர் எவ்விதச் செய்யுளையும் ஒரு நொடியிற் பாடிவிடுவார். அவரை அழைத்து வருகின்றேன்." என்று எழுந்தனர். திருக்குருகைப் பெருமான் பிள்ளை "நானும் வருகின்றேன்," என்று அவருடன் சென்று அவரை அழைத்து வந்தனர். சாரசநேத்ரியின் தந்தையாராகிய சந்திரபிரகாசம் பிள்ளை முன்னே வைத்தியரை விசாரித்தது அந்த வித்துவானைப் பற்றித்தான். மஹாவீர தீர கம்பீரஸ்பாவ-திம்பிசாமிக்கவிராஜ பண்டித சிரோமணி என்பது அவர் பெயரென இதைப்படிப்போர்க்கு முன்னமே தெரிந்திருக்கலாம். திருக்குரு

கைப் பெருமாள் பிள்ளை அங்ஙனம் மதுரைப் பிள்ளையோடு வந்த அவருக்கு ஒரு நாற்காலியிட்டு அவ்வை உட்காரவைத்துப் பிறகு மதுரைப் பிள்ளையும், தாமும் அவர் பக்கத்தில் உட்கார்ந்து தமது கருத்தைத் தெரிவித்தனர்.

அவர், ஆஹா; அப்படியே செய்துவிடலாம் என்றுகூறி,

நேரிசை வெண்பா.

வாழ்வார்கள் வுலக முள்ள துணையும் வுயர்வுடனே
தாழ்வில்லா சச்சரித்ரனும் வவனது சிநேகிதனும்
பூர்க்குமலர் போல்நல்ல முகமுள்ள சதாநந்தனும்
ஏர்க்கும்பல மானத்ரேக முடனே.

என்று ஒன்றை யெழுதித் திருக்குருகைப் பெருமாள் பிள்ளையிடங்கொடுத்தனர். அதைக் கண்டதும் அவருக்கு மிகவும் நகைப்பு உண்டாயிற்று. ஆயினும் அவர் அதை அடக்கிக்கொண்டு ஆகா! இச்செய்யுளில் எதுகை நயம் விசேஷமாயிருக்கின்றது, சங்கச் செய்யுளைப் போல மோனை நயம் ஒன்றுதான் குறைவா யிருக்கின்றது" என்றார். அதைக்கேட்ட அந்தக் கவிராஜ பண்டித சிரோமணி யானவர் இதுவென்ன தாங்கள் கூறுவது அதிசயமாக இருக்கின்றதே. இதுவரையிலும் நான் எத்தனையோ நூல்களை எழுதி இருக்கின்றேன். அரேபியன் நைட், பன்னிரண்டு மந்திரிக்கதை, தேசிங்குராஜன் கதை, அல்லியரசாணி மாலை, அரிச்சந்திர நாடகம், கடலேந்திரசபா, பவழேந்திரசபா முதலிய எத்தனையோ நூல்களைப் படித்து மிருக்கின்றேன். அவற்றுளெல்லாம் யானை,சேனை என்னுஞ்சொற்களிருக்கின்றனவே அல்லாமல் மோனை என்று ஒருசொல் இருக்க நான் பார்த்ததே யில்லை" என்றார்.

அதைக்கேட்ட திருக்குருகைப் பெருமாள் பிள்ளை, "ஐயா! யான் சொன்னதைப் பற்றி மன்னிக்கவும். தங்கள் செய்யுளில் உயிரெழுத்து மெய்யெழுத்தும் சிறிதும் வித்தியாச மின்றி விரவி நின்றதைக் கண்டபோதே தங்களுடைய கல்வியின் ஆற்றல் மிகவுஞ் சிறந்ததென்று தெரிந்துகொண்டேன். அங்ஙனந்தெரிந்து கொண்டும் தங்கள்முன் யான் வாய்திறந்தது குற்றந்தான்." என்றார்.

அதைக்கேட்டு அப்பண்டிதர் "ஐயா! தாங்கள் மிகவும் நல்லவர்கள். தாங்கள் அனேக விஷயங்களைத் தாறுமாறாய்க்கிரகித்துக் கொண்டிருக்கின்றீர்கள். அதைப்பற்றி மாத்திரம் நான் சிறிது வருத்தப்படுகின்றேன். நீங்கள் உயிரெழுத்து என்று சொன்னீர்களே. அதை உங்களுக்குச் சொன்னவர் யாவர்? பிறர் சொன்னாலும் நீங்கள் யோசிக்கவேண்டாமா? எழுத்துகளுக்குங் கூட உயிரிருக்குமா? உயிரிருந்தால் எழுத்து எழுந்து நடக்காதா? உயிரிருப்பதனாலேதானே மாடு, நாய், கழுதைமுதலியவைஎழுந்து நடக்கிறதுகள். உயிரிருப்பதனாலேதானே மனிதர்களாகிய நாமும் எழுந்துநடக்கின்றோம்." இவைகளை யோசிக்கவேண்டாமா தாங்கள்? ஐயா! இன்னும் கொஞ்சநாள் நான் இந்தஊரிலேயே இருப்பதாயிருந்தால் தாங்கள் கொண்டிருக்கும் இந்தத் தப்பு அபிப்பிராயங்களை யெல்லாந் திருத்தித் தங்களைநல்ல கல்விமானாகும்படி செய்துவிடுவேன். நான் சீக்கிரமாக மதுரைக்குப்போகும்படியிருக்கின்றது; என்னசெய்வது" என்றார். திருக்குருகைப் பெருமாள் பிள்ளை "ஐயா! தங்களுக்குள்ள கருணையே எனக்குப் போதியதாகும். அதுவே எனக்குத் தாங்கள் சகல கலைகளையும் போதித்தது போலாய் விட்டது பொழுதோ அதிகமாய் விட்டது. இன்று இங்குத்தானே தாங்கள அமுதுசெய்துவிட்டுப் போதல்வேண்டும்" என்று அவ்விருவருக்கும் அன்று தமது வீட்டில் விருந்து செய்து அனுப்பிவிட்டனர். அவர்கள் சென்றபின் தாமே வாழ்த்துச் செய்யுளோடு கூடிய ஒரு கடிதத்தை அடியில் வருமாறு எழுதியனுப்பினர்.

நேரிசை வெண்பா.

வாழ்கவிய லைந்துணர்ந்த வான்புலவீர் நாற்றிசையுஞ்
சூழ்கபுவி யெங்குநுஞ் சொற்சீர்த்தி-தாழ்வின்றி
உம்மியலார் நட்புடைமை யோங்க வளர்பிறைபோற்
செம்மையுற நீர்மணமே சேர்ந்து.

எனது அன்புக்குரிய வான்கவி நாவலீர்! தங்கள் திருமுகத்தைக் கண்டவுடன் என் மனம் சந்திரனைக்கண்ட அல்லி யெனலாயிற்று. என் தருமைப் புதல்வியும் தன் துயரத்தினின்று நீங்கி மகி

ழ் வெய்தினள். மற்றையோரும் சந்தோஷமிக்கவர்களாயினர். தாங்கள் மணிபுரஞ்சேர்ந்ததைத் தெரிவிப்பதாக எழுதியுள்ள திருமுகத்தை யெதிர்ப்பார்க்கின்றேன்.

இங்ஙனம்,

தங்கள்,

சிறந்தமைந்த அன்புக்குரிய

திருக்குருகைப் பெருமாள் பிள்ளை.

சச்சரித்திரன் அக்கடிதத்தைக்கண்டு அளவில்லாத ஆனந்தம் அடைந்து அதை யனைவருக்குங்காட்டினான். மற்றையோரும் அதைக் கண்டு களிகூர்ந்தனர்.

பிறகுசச்சரித்ரன் முதலியோர் மாயவரத்தினின்று மணிபுரம் போய்ச் சேர்ந்து ஜமீன்தார் வீட்டுக்குச் சென்றனர். ஜமீன்தாரின் மனைவியாராகிய அமிர்தவல்லியம்மாள் சாரசநேத்ரியைக்கண்டதும் ஓடிவந்து கட்டித் தழுவிக்கொண்டு ஓவென்றலறினர். சாரசநேத்ரியும் அங்ஙனமே தன்னருமை அன்னையாரைக் கட்டிக்கொண்டு அரற்றினாள். அங்குள்ள அனைவரும் வருவதும் அப்பொன்னிளம்பாவையைக் கட்டிக்கொள்வதும், "அம்மா! நீயெப்படி இத்தனைநாள்வரையிலும் உன் அருமைப்பெற்றோரைப் பிரிந்திருந்தனையோ" என்று கேட்பதுமாக இருந்தனர். வைத்தியரது மனைவியார்வந்து சாரசநேத்ரியைக் கட்டித் தழுவிக்கொண்டு அவரது தந்தையாராகிய ஜமீன்தாரரும் அழைத்துச் சென்றனர். அவரைக்கண்டதும், சாரசநேத்ரி "அண்ணா! என்னைமோசஞ்செய்து விட்டீர்களோ! ஐயோ நான் என்னசெய்வேன்" என்று அலறலானாள். வைத்தியர் உடனே அங்குச்சென்று படுக்கையில் பேச்சுமூச்சற்றுக்கிடக்கும்சந்திரபிரகாசம் பிள்ளையைக்கண்டு திடுக்கிட்டு உடனே கையைப்பற்றிப் பார்த்துத் தம்மிடம் இருந்தவேதோ ஒருமாத்திரையை எடுத்துத் தேனிலிழைத்து மெதுவாக அவரது வாயைத்திறந்து வாயிலுறட்டினர். சிறிதுநேரத்திற்கெல்லாம் ஜமீன்தார்சிறிது ஸ்மரணைவரப் பெற்றுச் "சாரசே! மீண்டும் உன்னை யொருமுறைக் காணும் பாக்கியமின்றி இதோ யான் போகின்றேன்." என்று ஈனசுரத்துடன் கூறிக் கண்ணீர் பெருக்கினர்.

உடனே வைத்தியர், "இதோவந்துவிட்டாள் உங்கள் அருமைச் செல்வி" என்று கூறினர். உடனே கண்திறந்து சாரசநேத்ரியைக் கண்டு அணைத்துக் கொண்டனர். அவரது கண்களிலிருந்து நீர்தாரை தாரையாகப் பெருகியோடிற்று. அப்போது அங்கிருந்தோரிற் கன்னெஞ்சம் படைத்தோருங் கரைந்துருகிப் போயினர்; எனின் மற்றையோரைப் பற்றிக் கேட்பானேன். பிறகு வைத்தியர் அனைவரையுஞ் சமாதான மொழிகளைக் கூறித் தேற்றினர். ஜமீன்தார் மற்றுஞ் சிறிது தெளிவுற்று வைத்தியரைக் கட்டித் தழுவிக் கொண்டனர். வைத்தியர் மீண்டும் ஏதோ ஒரு மருந்தைக் கொடுத்தனர். அன்று மாலைக்குள் ஜமீன்தாருக்குத் தேகஞ் சௌக்கியமடைந்து விட்டது. பிறகு வைத்தியர் எல்லா வறலாறுகளையுங் கூறிச் சச்சரித்ர சுதாநந்தர்களையும் சச்சரித்ரனது பெற்றோரையும் வனஜாக்ஷியையுங் காட்டினர். அவர் அவர்கள் அனைவரையுங் கண்டு அவர்களுக்கு அன்புடைய இன்மொழிகளைக்கூறி யுபசரித்தனர்.

பிறகு சாரசநேத்ரிக்குஞ் சச்சரித்ரனுக்கும் விவாகஞ் செய்வதென்று நிச்சயித்துக்கொண்டு ஜோசியரை அழைத்து நாள் பார்க்கச்சொல்லினர். இதற்குள் சென்னையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் கஜகர்ணனுக்கு ஐந்து வருஷமும் மணிகண்டனுக்கும், பண்டாரமானுக்கும், இவ்விரண்டு வருஷமுந் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக எழுதப்பட்டிருந்தது.

உடனே ஜமீன்தாரும், வைத்தியரும் சென்னைக்குச் சென்று மீண்டும் வழக்குத் தொடுத்து மிக்க பணச் செலவு செய்தனர். அதனால் கஜகர்ணனுக்கு இரண்டு வருஷமும், மற்றிருவருக்கும் ஒவ்வொரு வருஷமுமாகத் தண்டனை குறைக்கப்பட்டது.

ஜமீன்தாரும், வைத்தியரும் அதற்குமேற் பயன்படாமையினால் திரும்பிவந்து விட்டனர். அவர்கள் வந்தபின் அமிர்தவல்லியின் மூத்த சகோதரராகிய கனகசபைப் பிள்ளையும், அவர் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும் அவர்களால் தமது புதல்வனாகிய கஜகர்ணனது செய்தியை யுணர்ந்து மிகவும் வருந்தினர். ஜமீன்தார் அவர்களைச் சமாதான மொழிகளைக்கூறித் தேற்றினர். பிறகு வைத்தியன் ஜமீந்தாரது தங்கைபுருஷராகிய வைத்தியநா

ப் பிள்ளைக்கும் மற்றையோருக்கும் கடிதம் எழுதியனுப்பினர். சச்சரித்ரன் திருக்குருகைப் பெருமாள் பிள்ளைக்கும், சத்திய நாதப் பிள்ளைக்கும் கடிதமெழுதினான். அனைவரும் அவரவர் குடும்பத்துடன் வந்துசேர்ந்தார்கள்.

அனைவரும் வந்து சேர்ந்தபின் சாரசநேத்ரிக்கும் சச்சரித்ரனுக்கும் ஒன்றாகவும், கிருஷ்ணவேணிக்கும் சதாநந்தனுக்கும் ஒன்றாகவும், சத்தியநாதப் பிள்ளையின் குமாரத்தியாகிய அம்புஜத்திற்கும் செல்வமணிக்கும் ஒன்றாகவும் ஆக மூன்று கலியாணம் செய்யவேண்டுமென்று தீர்மானித்து அவ்வாறே மிக்க சம்பிரமத்துடன் அம்மூன்று கலியாணங்களையும் யாதொரு குறைவுமின்றிச் செய்து முடித்தனர்.

அப்போது அங்கோர் ஏழைப் பிராமணர்வந்து வைத்தியரை நோக்கி "ஐயா! மிக்க ஏழையாகிய எனக்குத் தாங்கள் ஏதேனும் உதவுதல் வேண்டும்" என்று வேண்டினர். அவரைக்கண்ட வைத்தியர் மிகவும் ஆச்சரியமெய்தி "ஐயா! தாங்கள் மாயவரத்தில்தலைமைச் சேவக (ஹெட்கான்ஸ்டேபில்) உத்தியோகத்திலிருந்த சுப்பண்ணு வையரல்லீரோ! தாங்கள் இந்தக்கோலத்தை யடைதற்கு நியாயமென்னை" என்றனர்.

அவர் "ஐயா! யான் செய்த தீவினையின் பெருக்கால் எனது பொருளையும், மனைவி மக்களையும் இழந்து உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி அலைந்து திரிகின்றேன்." என்றார்.

அதைக்கேட்ட வைத்தியர் மிகவுமனமிரங்கி அவரின்னாரென்பதை அனைவர்க்குந் தெரிவித்து,

"இன்னு செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்றபடி அவருக்குச் சந்தோஷமுண்டாகும்படி நல்லஆடைகளையும், சால்வைகளையும், இரண்டு சவரன்களையுங் கொடுத்தனுப்பினர். சச்சரித்ரனை அரவந் தீண்டியபோது உதவிபுரிந்த இடைச்சிறுவனை வருவித்து அவனைப் பாடசாலைக்கு அனுப்பிக் கல்வி கற்கும்படி செய்தனர்.

பிறகு மற்றையோரும் தக்கபடிசன்மானிக்கப் பெற்றவர்களாய்த் தங்கள் தங்கள் ஊரைச் சென்றடைந்தார்கள். சச்சரித்ரனும் சதாநந்தனும் உயர்தர உத்தியோகங்களை அடைந்து தத்தம் மனைவியரோடு சுகமாக வாழ்வாராயினர். கஜகர்ண மணிகண்டர்களும் தண்டனையாகவிதித்தகாலம் கழிந்ததுஞ்சிறையினின்றும்விடுபட்டு வந்து பழைய தீயகுணங்களை முற்றும் விட்டொழித்துத் தங்கள் தங்கள் மனத்துக்குகந்த பெண்களைமணந்து சச்சரித்ர சதாநந்தர்களோடு கூடிச் சுகமாக வாழ்வாராயினர். சுபம்.

கதை,

முற்றுப் பெற்றது.

சித்தியகல்யாணி சீரிஸ்—3.

வெகு சீக்கிரத்தில் வெளிவரும்

மனமோஹன மாணிக்கம்

என்னும்,

மஹா விநோதமான மாயக்கதை.

வெகு அற்புதமானது ! **மிகச் சிங்காரமானது !!**

இதுவரையிலும் ஒருவரும், இதைப்போல், சிங்கார நடையி லெழுதப்பட்ட சிறப்பான நாவலைக் கண்டிருக்கமாட்டார்கள்.

கதை வெகு ஆச்சரியமானது ! **நடை மிகச்சிறப்பானது !**

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் உயர்தரக் கலாசாலை வகுப்பு களிலொன்றுவிடாமல் தமிழ்ப்பாஷா நிபுணத்வ பரிசுபெற்றவரும், ஆங்கிலதத்துவசாஸ்திர பரிசுபெற்றவரும், யூனிவர்ஸிடி பி. ஏ. பரீக்ஷையில் தமிழ் முதல்வகுப்பு கௌரத பட்டம்பெற்றவரும், பண்டிதராலும் பத்திரிகைகளாலும் மிகவும் சிலாகிக்கப்பட்டு சென்னை யூனிவர்ஸிடி பி. ஏ. பட்டப் பரீக்ஷைக்குப் பாடபுத்தகமா யமைக் கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சரித்திர நூலாசிரியரும் ஆங்கில "சேஜ் ஆப் நாராயணவனம்" என்னும் கிரந்தத்தை யியற்றினவரும், மதுரைத் தமிழ்ச்சங்க மஹா வித்வானும் ஆகிய

T. பக்தவத்ஸலம்,

பி. ஏ., எம். பி. பி. ஐ.

அவர்களாலியற்றப்பட்டு,

மெண்டு பத்மநாபநாயுடு அவர்களால்

பதிப்பிக்கப்படுவது.

இந்தக் கதைப்புத்தகம் வெகு சுலபமான இனிய செந்தமிழ் நடையில், கற்றோரும் மற்றோரும் பெண்களும் பிள்ளைகளும் தெரிந்துகொள்ளும்படி விருப்பத்தோடு, ஆச்சரியப் படும்படியான கற்பனாலங்கார சாதுர்யத்தோடு எழுதப்பட்டுள்ளது.

நல்ல காகிதத்தில், டிம்மி 320 பக்கங்கொண்டுள்ள இவ்வரிய பெரிய நூலை எல்லோரும் வாங்கி வாசித்தல் மிக்க அவசியம்.

விலை ரூபா 1—4—0; வி. பி. சார்ஜ் முதலியன பிரத்தியேகம்.

வேண்டுவோர், அடியிற்கண்ட விலாஸதாருக்கு எழுதிப்பெற்றுக்கொள்வார்களாக.

மெண்டு பத்மநாப நாயுடு,

நெ. 23. ஜெனரல் முத்தியாமுதல் தெரு,

சௌகார்பேட் போஸ்ட், மதிராஸ்

அம்பாலிகை.

என்னும்

ஓர் இனிய செந்தமிழ் நாவல்

செந்தமிழ் பாஷையில் வெளிப்பட்டுலாவும் பற்பல சிறந்த
நாவல்களினு லொன்றாக நவீனமாய் அறம்பொ ளின்பமென்னு
முப்பாலொழுகவியற்றி விற்பனைக்குத் தயாராயிருக்கும் இஷ் மகு
டம்பூண்ட நாவலானது வாசிப்பவர்களின் மனதை ஆனந்தசாகரத்
திலாழ்த்தி மகிழ்வெய்துவிக்கவல்ல கதாலங்காரமாய் எத்திறத்த
வரும் எளிதில் வாசித்தின்புறுமாறு இனிய செந்தமிழ் வசனநடை
யைச் சொன்னயம் பொருணயங்களா லலங்கரிக்கப்பட்டுள்ளது
இந்நாவலின் கதாரசத்தினிமையை வாசிப்பவர்களே சுவையறிதல
வசிய மென்பதைக்கருதி இங்ஙனம் அதிகமாய் சிறப்பித்தெழுதல்
அநாவசியமென தவிர்க்கப்பட்டது கதாலங்காரத்தின் முக்கியபா
வங்களை கண்காக்ஷியாய் ரூபிகரிக்கும்படியான அழகியபடத்தையும்
அநுபந்தித்து உயர்ந்தகிளேஸ் கடிதத்தில் முத்தும்போன்ற எழுத்
துக்களாற் பதிப்பித்து டிம்மி எட்டுபக்கம்கொண்ட சைசில் 106-
பக்கங்களுள்ள புத்தகமாய் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலபாஷாவல்லபு பி. ஏ பட்டதாரண மதுரை தமிழ்ச்சங்
கப் புலவர்களிலொருவரும், முத்தமிழ்வித்வான் அஷ்டாவதான
மதுரை சங்கப்புலவரும், கலாசாலைத்தமிழ் போதகாசிரியராகிய
சிறந்த தமிழ்ப்பண்டிதர்கள் சிலராலும் நல்லபிப்பிராயங்கள் பெற
பட்டுள்ளது.

சொற்பகாப்பிகளே கையிலிருப்பதால் வேண்டிய நண்பர்கள்
துரிதமாகவே ஆர்டரனுப்பி பெற்றுக்கொள்வார்களெனக் கோரப்
படுகிறது.

இதன் விலை அணா 0 12 0

மனமோஹன மாணிக்கம்

என்னும்

மஹா விந்தையான மாயக்கதை.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் உயர்ந்தரக்கலாசாலைவகுப்புகளிலொன்று விடாமல் தமிழ்ப்பாஷாநிபுணத்வ பரிசு பெற்றவரும், ஆங்கில தத்துவ சாஸ்திர பரிசுபெற்றவரும் சென்னையூனிவர்ஸிடி பி. ஏ. பரீக்ஷையில் தமிழ் முதல்வகுப்பு கௌ. தாபட்டம் பெற்றவரும், பண்டிதராலும் பத்திரிகைகளாலும் மிகவும் சிலாகிக்கப்பட்டு சென்னை யூனிவர்ஸிடி பி. ஏ. பட்டப்பரீக்ஷைக்குப் பாடபுத்தகமாயமைக்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ண சைதன்ய சரித்திர நூலாசிரியரும் ஆங்கில "சேஜ்ஆப் நாராயணவரம்" என்னுங்கிரந்தத்தை இயற்றினவரும், மதுரைத் தமிழ்ச் சங்கம் மகா வித்துவானும் ஆகிய,

T. பக்தவத்ஸலம், பி. ஏ., எம். பி. பி. ஐ.,

அவர்களால் இயற்றப்பட்டது.

ஒப்புயர்வில்லாத உயர்வுடைய இந்த அற்புத சிங்கார நவாஸாலங்கார நாவலில் ஒவ்வொன்றும் உண்மையைப்போதிப்பதாயும் அறிவை விளங்குவதாயும் நகைப்பை உண்டாக்கி ஆச்சர்யத்தைக் கொடுப்பதாயும் அழகாக விளங்குகின்றது.

மாரியாத்தாள் செய்யும் மாஜாலப்புரட்டுகளும், பிரமராக்ஷதன் செய்யும் பிரமாத தடபிடல்களும் ஆடம்பராச்சாரி ஆர்பாட்டமும் அற்புத முதலியார் புதுமைக்காட்டுவதும், இங்கித முதலியார் ஏமாந்து விழிப்பதும், ஜகன்மோகன சிங்காரம் தைரியமும் கஷ்டமும், மனமோஹன மாணிக்கம் மாறுவேடம்பூண்டு, சாமார்த்தியம் விளக்குதலும் வனஜாஸன் பிரபுதாஸ் இவர்களுடைய சமயோசித நடத்தைகளும் சொல்லமுடியாத ஆச்சர்யத்தையும்வெல்லமுடியாத நகைப்பையும் விளைவிக்கும்

இந்தக் கதைப்புத்தகம் வெகு சுலபமான இனிய செந்தமிழ் நடையில் கற்றோரும் மற்றோரும் பெண்களும் பிள்ளைகளும் தெரிந்துக்கொள்ளும்படி விருப்பமோடு ஆச்சரியப்படும்படியானகற்பனாலங்கார கவிதா சாதுர்யத்தோடு எழுதப்பட்டுள்ளது. நல்ல காகிதத்தில் டிம்மி 320-பக்கங்கொண்டுள்ள இவ்வரிய பெரிய நூலையெல்லோரும் வாங்கி வாசித்தல் மிக்க அவசியம்.

இதன் விலை ரூபா 1 4 0

T. A. V. Press, Madras.


தீரமொழியை நேரில்முடித்த

வீரவல்லிக் கதை.

ஓர் இனிய தமிழ் நாவல்

ஐயா சுதாநேய நண்பர்க்குழாங்களே இதனை முழுமையும்வாசிக்கும்பொருட்டாகக் கோருகின்றேன் அஃதேனெனில் சதுர்வேதத்தைத் தழுவியதே கதையாகையினாலே உலகத்திலுலாவும் படியானக் கதைகளைப்போல இதுவுங்கதைதானேயென்று அலட்சியஞ் செய்யாமற்படிக்க தீரமொழியை 'நேரில்முடித்து உத்தமியென்று பலரும் புகழ்ந்துப் போற்றும்படியான வீரவல்லியென்னும் பட்டப்பெயரைசூட்டிக்கொண்டுவெளிப்பட்ட இக்கதாநாயகமானவள் இவ்வாழ்க்கைக்குரியமாதர்களின் கற்பிற்குக்காவல்வேலியாகவும் கல்விகற்கும் மாணாக்கர்கட்கு உபதேச அம்மானாகவும் அருணனுதயம்போலப் பிரகாசிப்பதுமன்றி இக்கதையினுள் அறம்பொருள் இன்பம்வீடு என்னும் நாற்பொருளும் கன்னிகளுக்குரிய மார்க்கம் என்னிலையிலும் நன்னிலையைப் பாராட்டி முன்னோர்மொழியைப்போல சொன்னச்சொல்லை மன்னர்கள் முன்னிலையில் முடித்துவெற்றிப் பட்டங்கட்டி கற்பைக்காப்பாற்றின இந்த வீரவல்லியின் சரித்திரத்திற்கிணையாகிய சரித்திரங்களொன்றுமில்லையென்று நிடச்சித்தமாக எம்புலவராகிய கதாரத்நாகரமவர்களின் சார்ந்தாலெழுதிமுடித்து லோகவுபகாரமாக குறைந்தவிலைக்கு விற்பனைச்செய்து வருகின்றபடியால்தற்போது சுற்பகாபிகள்தானகை யிருப்பு இருக்கின்றது வேண்டியவர்கள், அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரியப்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம் இல்வாவிட்டதின்பின்பு மனஸ்தாப முறவேண்டாம் இக்கதையினிலடங்கியக் கருத்துகளை விரித்துநாண்பிக்க இவ்வேடுயிடங்கொடாதபடியால் சுருக்கினம் இக்கதையொருமுறை வாசிப்பீர்களாயின் "இதற்காக அம்பானப்பத்திரந் தருவீர்களென்றே குறைந்தவிலைக்கு விற்பனைச் செய்கின்றேன். இப்புத்தகம் டிம்மி 8-பக்கங்கொண்ட கிரௌன் கடிதத்தில் 136-பக்கங்களுள்ள அழகாகிய பயிண்டுசெய்த புத்தகமாய் தயாரிக்கப் பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா 0 12 0



இரத பந்தம்.



பதுமபந்தம்.